భారతేభగవద్గీతా పురాణేషుచవైష్ణవం॥

(ஆ) మన్వర్థవిపరీతాతు యాస్మృతిస్సానశస్యతే॥

(இ) విధయశ్చవైదికాస్త్వదీయగమ్భీరమనోఽనుసారిణః॥

இதுக்கும் (அ) உண்டு.

(அ) வேதாலங்காரங்கள்.

ஸ்வரவிசேஷங்கள்.

க. உதாத்தம். உ. அநுதாத்தம். ங. ஸ்வரிதம்.

வேதாலங்காரங்கள்.

க. க்ரமம். உ. ஜடா. ங. பஞ்சாதி. ச. ப்ரச்நாஷ்டகங்கள்.

உபப்ரும்ஹண - அலங்காரங்கள்.

க. அம்சம். உ. பர்வம். ங. ஸ்கந்தம்.

வேதங்களுக்கும் - உபப்ரும்ஹணங்களுக்கும்
சாதாரண அலங்காரங்கள்.

க. பதம். உ. வாக்கியம். ங. பாதம். ச. வ்ருத்தம். ரு. காண்டம்
சு. அத்தியாயம்.

திராவிடவேத அலங்காரங்கள்.

எழுத்து.

குற்றெழுத்து - ரு.
நெட்டெழுத்து - எ.
ஒற்றெழுத்து - கஅ.

அசை.

க. நேரசை. உ. நிரையசை.

சீர்.

ஆசிரியவுரிச்சீர் - ச.
வெண்பாவுரிச்சீர் - ச.
வஞ்சியுரிச்சீர் - ச.
பொதுச்சீர் - கசு.
அசைச்சீர் - உ.

அடிகள்.

க. குறளடி. உ. சிந்தடி. ங. அளவடி. ச. நெடிலடி. ரு. கழிநெடிலடி.

தொடை.

க. மோனை. உ. இயைபு. ங. எதுகை. ச. முரண். ரு. அளபடை.
அடி. மோனை முதலாக ஒவ்வொன்றிலும் எவ்வெட்டாகத் தொடை. ச0.
க. அந்தாதித்தொடை. உ. இரட்டைத்தொடை. ங. செந்தொடை.

நிரை.

க. நேர் நிரை. உ. நிரை நிரை. ங. நிரை நேர். ச. நேர் நேர்.

ஓசை.

க. செப்பல் ஓசை. உ. அகவல் ஓசை. ங. துள்ளல் ஓசை. ச. தூங்கல்
ஓசை.

தளை.

க. நேரொன்றாசிரியத்தளை. உ. நிரையொன்றாசிரியத்தளை. ங. வெண்சீர்
வெண்டளை. ச. இயற்சீர் வெண்டளை. ரு. ஒன்றிய வஞ்சித்தளை.
சு. ஒன்றாதவஞ்சித்தளை. எ. கலித்தளை.

இனம்.

க. தாழிசை. உ. துறை. ங. விருத்தம்.

(எ0) வேதத்திலும், உபப்ருஹ்மணங்களிலும், பரத்வ வியூக விபவ அந்தர்யாமித்வ அர்ச்சாவ தாரங்களைச் சொல்லுவது போல், இவ்வாழ்வாரும் த்ராவிடமாகச்சொன்னார். ஆனால் இவருக்கு நோக்கு பரத்வம்.

(எக) வேதந்தான் (அ) நருந்தம்படித் தபிப்ராயம் அறியாமல் ப்ரதிபந்நங்களைச் சொல்லும் அல்பஶ்ருதர், ஒருவாக்கியத்திற்கு அர்த்தஞ்சொல்லப்புக்கால், அது தன்னிலே நின்று விப்ரதிபத்திபண்ணி, த்வைதம் என்றும், அத்வைதம் என்றும், த்வைதாத்வைதம் என்பராய், இப்படிக்கலக்கக் கலங்கிநிற்கும். அப்படிப்பட்ட வேதம் இவ்வாழ்வார் பக்கலில் வந்து, முன்புற்ற கலக்கம் தீர்ந்து, (ஆ) தெளிவை அடை-

---

யாப்பு.

ப்ரபந்தரூபமாயிருக்கை.

பா.

க. வெண்பா. உ. ஆசிரியப்பா. ந. வஞ்சிப்பா. ச. கலிப்பா.

பண்.

க. நட்டபாடை. உ. தக்கராகம். ந. பழந்தக்கராகம். ச. தக்கேசி. ரு. குறிஞ்சி. சு. வியாழக்குறிஞ்சி. எ. மேகராகக்குறிஞ்சி. அ. யாழ்மூறி கூ. இந்தளம். க0. சீக்காமரம். கக. காந்தாரம். கஉ. பியந்தைக் காந்தாரம். கந. நட்டராகம். கச. செவ்வழி. கரு. காந்தாரபஞ்சமம். கசு. கொல்லி. கஎ. கொல்லிக்கௌவாணம். கஅ. கவுசிகம். ககூ. பஞ்சமம். உ0. சாதாரி. உக. பழம்பஞ்சுரம். உஉ. புறநீர்மை. உந. அந்தாளிக்குறிஞ்சி, முதலானவை.

இசை.

க. குரல். உ. துத்தம். ந. கைக்கிளை. ச. உழை. ரு. இளி. சு. விளரி. எ. தாரம்.

தாளம்.

க. கஜகர்ணம். உ. சோரகதி. ந. மகரத்வஜம்.

பாவிளம்.

க. தாழிசை. உ. துறை. ந. விருத்தம்.

பத்து.

அத்தியாயங்கள் - நூற்றினுடைய அவாந்த்ரபரிச்சேதங்கள்.

நூறு.

ப்ரதான பரிச்சேதங்கள்.

ஆயிரம்.

மஹாபரிச்சேதம்.

(அ) బిభేత్యల్పశ్రుతాద్వేదో మామయం ప్రతరిష్యతి ।

(ஆ) தெளிவுற்றவாயிரம் (எ-ம் பத்து ரு-ம் திருவாய்மொழி கக-ம் பாட்டு.)

ந்து, அகாதமாய் பரமரஹஸ்யமான அர்த்த (அ) விசேஷங்களை யெல்லாம், தோன்றுவித்தது.

(௭௨) கீர்வாணவேதத்திற்கு அத்யயந காலநியதியும், அதிகாரிநியதியுமுண்டு; இதற்கு இரண்டும் (ஆ) இல்லை. சர்வகாலமும், ஸர்வருக்கும் உபஜீவியம்.

(௭௩) மட்குடம்போ லன்றே, பொற்குடம்.

(௭௪) ப்ரமேயபூதனான சர்வேஸ்வரனுடைய ஆவிர்பாவ பரம்பரையினுடைய சரமாவஸ்தையானது அர்ச்சாவதாரம். ப்ரமாண பூதமான வேதத்தினுடைய ஆவிர்பாவ பரம்பரா சரமாவஸ்தையானது திருவாய்மொழி யென்கை. இத்தால் ப்ரமாண ப்ரமேயங்களுடைய ஒளியும், எளிமையும், இனிமையும், துடக்கமான சத்துண சாஹித்தியம் சொல்லப்பட்டது.

(௭௫) ப்ரமாண வக்தாவான ஆழ்வாருடைய ஜன்ம நிருபணமும், த்ரவ்விய, பாஷா நிரூபணமும், அர்ச்சாவதாரத்தில் த்ரவ்ய நிரூபணம்போலே, மாத்ரு யோனி பரிக்ஷை (இ) யோடொக்கும்.

(அ) அறிவித்தேன் ஆழ்பொருளை (இயற்பா, நான்காம் திருவந்தாதி - முதற்பாட்டு.)

(ஆ) అధ్యేతవ్యం ద్విజశ్రేష్ఠై ర్వేదరూపమిదం కృతమ్।
స్త్రీభిశ్శూద్రాదిభిశ్చైవ తేషాం ముక్తిః కరేస్థితా॥

(இ) க. విష్ణోరర్చావతారేషు లోహభావం కరోతి యః।
యో గురౌ మానుషం భావ ముభౌ నరకపాతినా॥

உ. అర్చావతారోపాదానం వైష్ణవోత్పత్తిచింతనం।
మాతృయోనిపరీక్షాయా స్తుల్య మాహుర్మనీషిణః॥

௩. యో విష్ణుప్రతిమాకారే లోహభావం కరోతి యః।
గురౌ చ మానుషం భావ ముభౌ నరకపాతినా॥

௪. హరికీర్తిం వినైవాన్య ద్బ్రాహ్మణేన నరోత్తమ।
భాషాగానం న గాతవ్యం తస్మాత్పాపం త్వయా కృతం॥

௫. కిమప్యత్రాభిజాయంతే యోగినస్సర్వయోనిషు।
ప్రత్యక్షితాత్మనాథానాం నైషాం చిన్త్యం కులాదికమ్॥

௬. శూద్రం వా భగవద్భక్తం నిషాదం శ్వపచం తథా।
వీక్షతే జాతిసామాన్యా త్స యాతి నరకం నరః॥

(எசு) வக்தாவின் பிறவியைப்பார்த்து, த்ரவிடவேதத்தை யிகழு மளவில், மச்சகந்தா சுதனான வியாஸன் சொன்ன பஞ்சம வேதமான மஹாபாரதத்தையும், கோபஜன்மா வான கிருஷ்ணன்சொன்ன கீதோபநிஷத்தையும், த்யஜிக்க வேண்டும்.

(எஎ) "ஒருத்தி மகனாய்ப் பிறந்தோரிரவில் ஒருத்தி மகனான" கிருஷ்ணனுடையவும், கன்னியாசுதனான வியாஸனுடையவும் உத்பத்திபோலன்றே, கிருஷ்ணவிஷய த்ருஷ்ணைதான் ஒருவடிவு கொண்டாற்போலிருக்கிற (அ) ஆழ்வாருடைய அவதாரம்.

(எஅ) கிருஷ்ணனைப்பெற்ற தேவகியும், அவனுடைய பால்யரஸம் ஒன்றும் அநுபவிக்க வில்லை; வியாஸனை ப்பிள்ளையாக ப்பெற்ற மச்சகந்தியும், அவனாலுள்ள ரஸமொன்றும் அநுபவிக்க வில்லை. கிருஷ்ணனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களடியாகத் தானும் பிறரும் சங்கிக்கும்படியான மாத்ருவத்தையுடைய யசோதையும், சிரகாலம் ஆஸ்ரித சுலபனான கிருஷ்ணன் திருவடிகளை ஆஸ்ரயித்து, இவளைப் பெற்றாள். பகவல்லாப க்யாநாதிகளை, திவாராத்ர விபாக மற, வாசா மகோசரமான கிருஷ்ணனுடைய முக்த வசநாதிகளை, அநுபவித்தவராகியும் சொன்ன ஆழ்வாரைப்பெற்றவர்களுக்கு, மேற்சொன்ன தேவகி முதலானார்கள், சத்ருஸரன்று.

(எகூ) மீன்வெடி நாறுகிற ஸ்தலம் வியாஸோத்பத்திஸ்தலம். வெண்ணை முடை நாறுகிற ஸ்தலம் கிருஷ்ணோத்பத்திஸ்தலம். திருத்துழாய் மணம் நாறும் ஸ்தலம் ஆழ்வார் உத்பத்திஸ்தலம்.

(அ0) அசிஷ்ட பரிக்ரஹமுடைய கங்கையாற்றில் உத்பத்தியுடையவர் வியாஸர். அவர் ஊர் வலைச்சேரி. கிருஷ்ண ஜல ப்ரவாஹ யமுனையின் காளியவிஷதூஷிதமான துறையில் உத்பத்தி யுடையவன் கிருஷ்ணன். அவன் ஊர் இடைச்சேரி. விலக்ஷணமான தாம்ப்ரபர்ணீ தீரத்தில் திருச்சங்கணித்துறை ஆழ்வார் உத்பத்தி ஸ்தலம். அவர்ஊர் திருக்குருகூர்.

(அக) பரமபதத்தில் பகவத் கைங்கர்யாநுகுணமாக ப்பரிக்ரஹிக்கும் தேஹத்தோபாதி, சேஷவஸ்துவான இவ்வாழ்வாருடைய ஆத்மாவுக்கு, தேஜஸ்கரம்.

(அ) కృష్ణతృష్ణాతత్త్వమివోదితం॥

(அ௨) ஜனககுலத்துக்குப் (அ) பிராட்டி கீர்த்தி யுண்டாக்கினாப் போலும், தசரதகுலத்திற்கு (ஆ) பரதன் கீர்த்தி யுண்டாக்கினாப் போலும், வசுதேவர் குலத்திற்குக் (இ) கண்ணன் கீர்த்தியுண்டாக்கினாப் போலும், (ஈ) இவரும் தான் பிறந்த ஊருக்குப் புகழ் உண்டாக்கி, அம்மூவர் செய்தவையும் இவர் ஒருவரே ஸ்வரூபாநுகூலமாய்ச் செய்தத்தால், இவர் பிறவி மிகவும் பரோபகார மாயிற்று.

(அ௩) இவர் லோகத்துக்கும் ஸ்வப்ரபந்தங்களாலே நன்மைகளை அருளிச்செய்து, சூரியனைப்போல அஜ்ஞாநமான இருளை நீக்கினார்.

(அ௪) இவர் வர்ணத்ரயத்தில் அவதரிக்காதது, அஹங்காரஹேது வென்று.

(அ௫) மிலேச்ச ஜாதியனாயுள்ளவனும் (க) பக்த ஜனங்கள் பக்கல் வாத்சல்யமும், (௨) ஈச்வர ஆராதநத்தில் உகப்பும், (௩) தானே ஆராதிக்கையும், (௪) ஈச்வரன் பக்கல் டம்பம் அற்றிருக்கையும், (௫) பகவத்கதையைக் கேட்கும் இடத்தில் பக்தியும், (௬) பக்திகாரணமான அங்கவிகாரமும், (௭) ஈச்வரனை எப்போதும் நினைக்கையும், (௮) அவனிடத்தில் ப்ரயோஜநாந்தரம் கொள்ளாதொழிகையும், என்கிற (உ) எட்டுவித பக்திகளை உடையனானால், சர்வ உத்

(அ) జనకానాంకులేకీర్తి మాహరిష్యతి మేసుతా।
సీతాభర్తారమాసాద్య రామందశరథాత్మజం॥

(ஆ) రాజ్యఞ్చాహఞ్చరామస్య ధర్మ్యంవక్తుమిహార్హసి।
కథందశరథాజ్జాతో భవేద్రాజ్యాపహారకః॥

(இ) மக்க ளறுவரைக் கல்லிடைமோத வீழ்ந்தவள் தன்வயிற்றில் சிக்கெனவந்து பிறந்து நின்றாய் (முதலாயிரம், பெரியாழ்வார் திருமொழி, ௫-ம் பத்து ௩-ம் திருமொழி முதற்பாட்டு.)

(ஈ) மலிபுகழ் வண்குருகூர் (௪-ம் பத்து, ௨-ம் திருவாய்மொழி, கக - ம் பாட்டு.

(உ) మద్భక్తజనవాత్సల్య మ్పూజాయాఞ్చానుమోదనమ్।
స్వయమభ్యర్చనఞ్చైవ మదర్థేడమ్భవర్జనమ్।
మత్కథాశ్రవణేభక్తి స్వరనేత్రాఙ్గవిక్రియా।
మమానుస్మరణంనిత్యం యచ్చమాంనోపజీవతి।
భక్తిరష్టవిధాహ్యేషా యస్మిన్మ్లేచ్ఛేపివర్తతే॥

கிருஷ்டனாய், உத்கிருஷ்ட வர்ணரான **சதுர்வேதிகள்** (அ) அநுவர்த்திக்கைக்கு விஷயமாய், அவர்களுக்கு க்யாநப்ரதானம் பண்ணிக், (ஆ) குலதெய்வத்தோடொக்கப் (இ) பூசைகொண்டு, அவர்கள் திருவடிகளை விளக்கின (ஈ) தீர்த்தமும், அமுதுசெய்த ப்ரசாதங்களின் சேஷமும், பாவனமாகையால், சர்வ விதத்திலும் பூஜ்யர். (உ) இவ்விடத்தில் அடியிற்கண்டவர்களுடைய வ்ருத்தாந்தங்களை **ஸ்மரிப்பது.**

௧. சோமசருமன்.
௨. ஸ்ரீகுஹப்பெருமாள்.
௩. ஸ்ரீசபரி.
௪. ஸ்ரீவிதுரர்.
௫. அநுமார்.
௬. தர்மபுத்திரருடைய யாகத்திலே ஸ்ரீகிருஷ்ணர்.
௭. பெரும்புலியூர் அடிகள் யாகத்திலே திருமழிசை ஆழ்வார்.
௮. ஸ்ரீவிதுரருடைய ஸம்ஸ்காரம்.
௯. பெரியஉடையார் ஸம்ஸ்காரம்.
௧௦. மாறனேரி நம்பிஸம்ஸ்காரம்.
௧௧. குறும்பறுத்த நம்பியை முடிமன்னனான தொண்டைமான் சக்கிரவர்த்தி அநுவர்த்தித்த க்ரமம்.
௧௨. திருக்கச்சிநம்பியை உடையவர் அநுவர்த்தித்த க்ரமம்.
௧௩. திருப்பாணாழ்வாரை லோகஸாரங்க மஹாமுனிகள் அநுவர்த்தித்த க்ரமம்.
௧௪. பிள்ளைஉறங்காவில்லி தாஸர்ஸ்பர்சத்தாலே காயசுத்தி.

(அ) సవిప్రేన్ద్రో మునిశ్శ్రీమా౯ సయతిస్సచపణ్డితః।
తస్మై దేయం తతో గ్రాహ్యం॥

(ஆ) మమనాథం మమకులదైవతం॥

(இ) సచపూజ్యోయథాహ్యహమ్॥

(ஈ) తత్పాదామ్బ్వతులం తీర్థం తదుచ్ఛిష్టం సుపావనం॥

(உ) பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள் (முதலாயிரம். திருமாலை. ௪௨-ம் பாட்டு.)

(அஉ) ஜனககுலத்துக்குப் (அ) பிராட்டி கீர்த்தி யுண்டாக்கினாப் போலும், தசரதகுலத்திற்கு (ஆ) பரதன் கீர்த்தி யுண்டாக்கினாப் போலும், வசுதேவர் குலத்திற்குக் (இ) கண்ணன் கீர்த்தியுண்டாக்கினாப் போலும், (ஈ) இவரும் தான் பிறந்த ஊருக்குப் புகழ் உண்டாக்கி, அம்மூவர் செய்தவையும் இவர் ஒருவரே ஸ்வரூபாநுகூலமாய்ச் செய்தத்தால், இவர் பிறவி மிகவும் பரோபகார மாயிற்று.

(அ௩) இவர் லோகத்துக்கும் ஸ்வப்ரபந்தங்களாலே நன்மைகளை அருளிச்செய்து, சூரியனைப்போல அக்யாநமான இருளை நீக்கினார்.

(அச) இவர் வர்ணத்ரயத்தில் அவதரிக்காதது, அஹங்காரஹேது வென்று.

(அரு) ம்லேச்ச ஜாதியனாயுள்ளவனும் (க) பக்த ஜனங்கள் பக்கல் வாத்ஸல்யமும், (உ) ஈச்வர ஆராதநத்தில் உகப்பும், (௩) தானே ஆராதிக்கையும், (ச) ஈச்வரன் பக்கல் டம்பம் அற்றிருக்கையும், (ரு) பகவத்கதையைக் கேட்கும் இடத்தில் பக்தியும், (சு) பக்திகாரணமான அங்கவிகாரமும், (எ) ஈச்வரனை எப்போதும் நினைக்கையும், (அ) அவனிடத்தில் ப்ரயோஜநாந்தரம் கொள்ளாதொழிகையும், என்கிற (உ) எட்டுவித பக்திகளை உடையனானால், சர்வ உத்

(அ) జనకానాం కులే కీర్తిమాహరిష్యతి మే సుతా।
సీతాభర్తారమాసాద్య రామం దశరథాత్మజం॥

(ஆ) రాజ్యఞ్చాహఞ్చ రామస్య ధర్మం వక్తుమిహార్హసి।
కథం దశరథాజ్జాతో భవేద్రాజ్యాపహారకః॥

(இ) மக்க ளறுவரைக் கல்லிடைமோத வீழ்ந்தவள் தன்வயிற்றில் சிக்கெனவந்து பிறந்து நின்றாய் (முதலாயிரம், பெரியாழ்வார் திருமொழி, ரு-ம் பத்து ௩-ம் திருமொழி முதற்பாட்டு.)

(ஈ) மலிபுகழ் வண்குருகூர் (ச-ம் பத்து, உ-ம் திருவாய்மொழி, கக-ம் பாட்டு.

(உ) మద్భక్తజనవాత్సల్యం పూజాయాఞ్చానుమోదనమ్।
స్వయమభ్యర్చనఞ్చైవ మదర్థే డమ్భవర్జనమ్।
మత్కథాశ్రవణే భక్తిః స్వరనేత్రాఙ్గవిక్రియా।
మమానుస్మరణం నిత్యం యచ్చ మాం నోపజీవతి।
భక్తిరష్టవిధా హ్యేషా యస్మిన్మ్లేచ్ఛేఽపి వర్తతే॥

கிருஷ்டனைப், உத்கிருஷ்ட வர்ணரான **சதுர்வேதிகள்** (அ) அநுவர்த்திக்கைக்கு விஷயமாய், அவர்களுக்கு க்யாநப்ரதாநம் பண்ணிக், (ஆ) குலதெய்வத்தோடொக்கப் (இ) பூசைகொண்டு, அவர்கள் திருவடிகளை விளக்கின (ஈ) தீர்த்தமும், அமுதுசெய்த ப்ரசாதங்களின் சேஷமும், பாவநமாகையால், சர்வ விதத்திலும் பூஜ்யர். (உ) இவ்விடத்தில் அடியிற்கண்டவர்களுடைய வ்ருத்தாந்தங்களை ஸ்மரிப்பது.

க. சோமசருமன்.
உ. ஸ்ரீகுஹப்பெருமாள்.
ங. ஸ்ரீசபரி.
ச. ஸ்ரீவிதுரர்.
ரு. அநுமார்.
சா. தர்மபுத்திரருடைய யாகத்திலே ஸ்ரீகிருஷ்ணர்.
எ. பெரும்புலியூர் அடிகள் யாகத்திலே திருமழிசை ஆழ்வார்.
அ. ஸ்ரீவிதுரருடைய ஸம்ஸ்காரம்.
கூ. பெரியஉடையார் ஸம்ஸ்காரம்.
க௦. மாறனேரி நம்பிஸம்ஸ்காரம்.
கக. குறும்பறுத்த நம்பியை முடிமன்னனை தொண்டைமான் சக்கிரவர்த்தி அநுவர்த்தித்த க்ரமம்.
கஉ. திருக்கச்சிநம்பியை உடையவர் அநுவர்த்தித்த க்ரமம்.
கங. திருப்பாணாழ்வாரை லோகஸாரங்க மஹாமுனிகள் அநுவர்த்தித்த க்ரமம்.
கச. பிள்ளைஉறங்காவில்லி தாஸர்ஸ்பர்சத்தாலே காயசுத்தி.

(அ) సవి(ప్రేన్ద్రో)మునిశ్శ్రీమాన్ సయతిస్సచపణ్డితః।
తస్మైదేయం తతోగ్రాహ్యం॥

(ஆ) మమనాథం మమకులదైవతం॥

(இ) సచపూజ్యోయథాహ్యహమ్॥

(ஈ) తత్పాదామ్బ్వతులం తీర్థంతదుచ్ఛిష్టంసుపావనం॥

(உ) பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள் (முதலாயிரம். திருமாலை. சஉ-ம் பாட்டு.)

கரு. பிள்ளை ஏறுதிருவுடையார்தாஸர் கரஸ் பரிசத்தாலே அன்னசுத்தி.

கசு. பிள்ளைவான மாமலைதாசர் ஸஞ்சரணத்தாலே க்ருஹ சுத்தி.

(அசு) நாலுவேதங்களையும் அதிகரித்து சர்வேச்வரனை அறியாதவன், ப்ராம்ஹணனாலும் குங்குமம் சுமந்த (அ) கழுதையென்றும், (ஆ) சுபசனிலும் தணியனென்றும், (இ) செருப்புக் குத்தக்கற்றவன் என்றும், (ஈ) பஸ்மாஹுதி, சவ (உ) விதவா (ஊ) அலங்காரம்போலும், என்றும் நினைக்கப்படுவன்.

அழகிய மணவாளப்பெருமாள்நாயனார் திருவடிகளேசரணம்.

(அ) చతుర్వేదధరో విప్రో వాసుదేవం న విన్దతి।
వేదభారభరాక్రాన్తస్స వై బ్రాహ్మణగర్దభః॥

(ஆ) శ్వపచోఽపి మహీపాల విష్ణుభక్తో ద్విజాధికః।
విష్ణుభక్తివిహీనస్తు యతిశ్చ శ్వపచాధమః॥

(இ) తత్కర్మ యన్న బన్ధాయ సా విద్యా యా విముక్తయే।
ఆయాసాయాపరం కర్మ విద్యాన్యా శిల్పనైపుణమ్॥

(ஈ) ఆమ్నాయాభ్యసనాన్యరణ్యరుదితం వేదవ్రతాన్యన్వహం।
మేదశ్ఛేదఫలాని పూర్తవిధయస్సర్వే హుతం భస్మని।
తీర్థానామవగాహనాని చ గజస్నానం వినా యత్పదద్వన్ద్వా।
మ్భోరుహసంస్మృతిర్విజయతే దేవస్స నారాయణః॥

(உ) ௧. యస్యాఖిలామీవహభిస్సుమఙ్గలైర్వాచో విమిశ్రా గుణకర్మజన్మభిః।
ప్రాణన్తి శుమ్భన్తి పునన్తి వై జగద్యాస్తద్విముక్తాశ్శవశోభనా మతాః-
௨. విష్ణుభక్తివిహీనస్య వేదశాస్త్రం జపస్తపః।
అప్రాణస్యేవ దేహస్య మణ్డనం లోకరఞ్జనమ్॥

(ஊ) ప్రాదుర్భావైస్సురనరసమో దేవదేవస్తదీయాజా।
త్యావృత్తైరపి చ గుణతస్తాదృశో నాత్రగర్హా।
కిన్తు శ్రీమద్భువనభవనత్రాణతోఽన్యేషు విద్యా।
వృత్తప్రాయో భవతి విధవాకల్పకల్పప్రకర్షః॥

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆசார்ய ஹ்ருதயசார சங்க்ரஹம்.

உ-ம். ப்ரகரணம்.

(க) பகவத் விஶ்லேஷாஸஹ மானத்தாலே, நித்ய ஸூரிகள், திர்யக்ஸ்தாவர ஜன்மங்களைப் (அ) பரிக்ரஹிக்கை ப்ராப்தம். ஸ்ரீ சுகர், உத்தவர், ஸ்ரீ குலசேகரப்பெருமாள், பெரியமுதலியார், முதலான முமுக்ஷுக்களும், இப்படிப் பிரார்த்தித்தார்கள்.

(உ) ப்ராப்தசேஷியுடைய சேஷத்வத்துக்குப் புறம்பான த்யாஜ்ய மயத்வத்தாலே ஶ்லாக்யமாயிருக்கும் ஆத்மாவையும் ஸஹியாதவர்கள், த்யாஜ்யமாய் ஔபாதிகமான வர்ணத்தை விரும்பமாட்டார்கள்.

(ங) க்ஷத்ரியனான விச்வாமித்ரன், சுக்ருத விசேஷத்தாலே, அந்தச் சரீரந் தன்னோடே ப்ரம்ஹரிஷியானான்; மற்றொரு க்ஷத்ரியனான த்ரிசங்கு, துஷ்க்ருத விசேஷத்தாலே, அந்தச்சரீரம் தன்னோடே சண்டாளனானான். க்ஷத்ரியத்வம் போய்ப் ப்ரம்மரிஷியான விச்வாமித்ரன், தான் ப்ரம்மரிஷியாவதற்கு முன்னே க்ஷத்ரியவேஷம் போய்ச் சண்டாள வேஷமாய் நிற்கிற த்ரிசங்குவை, அந்த வேஷம் தன்னோடே யஜிப்பித்து, சுவர்க்கத்தில் ஏற்றுகையாலே, வர்ணத்தின் கர்மோபாதிகத்வம், விசதமாய்த் தோன்றும்.

(ச) சாங்கமாகச் சகல வேதங்களையும் அத்யயநம் பண்ணி, ததிய சிரோஷ்ட ருமாய் உத்க்ருஷ்ட ஜந்மாக்களுமாய் இருந்தார்களே யாகிலும், ஸ்ரீ வைஷ்ணவர்களை ஜன்மாதிகளையிட்டு நிந்திப்பார்களாகில், காலாந்தரோ, தேசாந்தரோ

(அ) న దేహం న ప్రాణాన్న చ సుఖమశేషాభిలషితం।
న చాత్మానం నాన్య త్కిమపి తవ శేషత్వవిభవాత్।
బహిర్భూతం నాథ క్షణ మపి సహే యాతు శతధా వినాశం।
తత్సత్యం మధుమథన విజ్ఞాపనమిదమ్॥

அன்றி, (அ) அப்போதே, அவ்விடந் தன்னிலேயே, சண்டாள ராவர்கள். இவர்கள் ஒருகாலும் கரையேறப் போகிறதில்லை.

(ரு) ஆழ்வார் பிறப்பு, ஈஶ்வரன் பிறப்போபாதி, ஒரு அவதார விசேஷம்.

(சு) க்ருதயுகத்திலே, அத்ரியும், ஜமதக்கினியும், ஆகிற ப்ராம்ஹணோத்தமர்களுக்குப் பிள்ளையாய், தத்தாத்ரேயனும், பரசுராமனுமாய்; த்ரேதாயுகத்திலே, க்ஷத்ரியனான தசரத சக்ரவர்த்திக்குப் பிள்ளையாய்; த்வாபரயுகத்திலே, யயாதி சாபத்தாலே அபிஷேக ப்ராப்தியற்றயது குலோத்பவ ராகையாலே, க்ஷத்ரியரில் தண்ணியராய், வைஶ்யப்ராயரா யிருக்கிற வசுதேவர்க்கும், கோரக்ஷணாதி தர்மத்தையுடைய சாக்ஷாத் வைஶ்யரான ஸ்ரீநந்த கோபாலர்க்கும் புத்திரனாய்; இப்படி க்ருதாதியுக க்ரமத்திலே, ப்ராம்ஹணாதி வர்ண க்ரமேண, அவதரித்துவந்த சர்வேஶ்வரன், சதுர்த்தமான கலியுகத்திலே, சதுர்த்த வர்ணத்தில், பக்தரூபேண (இ) வந்தவதரித்தார்.

(எ) இவ்வாழ்வாரை இங்ஙனே சங்கிக்கைக்குஹேது, இவரைக் கண்ட க்யாதாதிகர், இவரை இன்னதென்று நிர்ணயிக்க மாட்டாமையால்.

(அ) இவருக்கிந்த ப்ரபாவத்துக் கடி, பகவன் (ஈ) நிர் ஹேதுக கடாக்ஷம்.

(அ) க. అనాచారాన్ దురాచారాన జ్ఞాతౄన్ హీనజన్మనః।
మద్భక్తాన్ శ్రోత్రియో నిన్దన్ సద్యశ్చణ్డాలతాం వ్రజేత్॥

உ. அமரவோரங்கமாறும் (முதலாயிரம்-திருமாலை, ௪௩-ம் பாட்டு.)

(ஆ) క్రూరే కలియుగే ప్రాప్తే నాస్తికైః కలుషీకృతే।
విష్ణోరంశాంశసమ్భూతో వేదవేదార్థతత్త్వవిత్।
స్తోత్రం వేదమయం కర్తుం ద్రావిడ్యాపి చ భాషయా।
జనిష్యతి సతాం శ్రేష్ఠో లోకానాం హితకామ్యయా॥

(இ) కృతే యుగే త్రిసూనుస్స్యా త్త్రేతాయాం రఘునన్దనః।
ద్వాపరే నన్దసూనుస్స్యాత్ కలౌ దేవః పరాంకుశః॥

(ஈ) నాసౌ పురుషకారేణ న చాప్యన్యేన హేతునా।
కేవలం స్వేచ్ఛయైవాహం ప్రేక్షే కఞ్చిత్ కదాచన॥

(௯) பகவத்கடாக்ஷம், அநுபவ விநாச்யமான சகல பாபங்களும், நிவர்த்தமாம்படி பண்ணும். சபரி, விதுரர், ரிஷிபத்நிகள் த்ருஷ்டாந்தங்கள்.

(௧௦) ஆழ்வாரை, த்தன்னோடொத்த ஜ்ஞானசக்திகளை உடையராம்படிபண்ண, இப்படி அவனாலே திருத்தின இவர், ஊரும், நாடும், உலகமும், தன்னைப்போலவென்று, தம்மோடு அந்வயித்த இந்தலோகத்தி லுள்ளவர்களைப், பகவத் ஏகபர ராகும்படி பண்ணும்படி யானார்.

(௧௧) அதெங்ஙனேயென்னில், மயர்வறமதிநலம் அருளுகையாலே.

(௧௨) அதாவது, அஜ்ஞானத்தைச் சவாசநமாகப் போக்கி, ப்பக்திரூபா பந்நஜ்ஞாநத்தைக்கொடுத்து, பரபக்தி தசாபரியந்தமாம்படி பண்ணுகை.

(௧௩) கர்மஜ்ஞாந சாத்யையாய்ப் பகவத்ப்ராப்தி சாதன பூதையாய், இருக்கும் உபாசகர் பக்தியிலும், ப்ரபந்நர் பகவான் பக்கல் அர்த்தித்துப்பெறும், கைங்கரியோபகரண பக்தி மேலானது.

(௧௪) ப்ரபந்நனுடைய பக்தி சரீரவியோக சமநந்தரம், பகவத்ப்ராப்தி பண்ணுவதற்கு முன்னே, சித்திக்கும்.

(௧௫) இதுதான் பரமப்ரயோஜநமாகப் பண்ணுமதாகையாலே, அவனுக்குப் போகமாயிருக்குமதானவிது, கைங்கர்ய வ்ருத்திக்கு உபகரணமாயிருக்கும்.

(௧௬) இந்தப்பரமபக்தி, இவருக்குப் பூர்வஜந்மத்தின் அப்யாசத்தால் உண்டானதல்ல.

(௧௭) "இப்பிறப்பே சிலநாளி லெய்தினன் யான்" என்கையாலே. (அ)

(௧௮) இவ்வாழ்வாருக்கு, ஸ்வவிஷய பக்தியை விளைக்கைக்கு க்ருஷி பண்ணித்திரியும், சர்வேச்வரனுடையக்ருஷி, பலம்.

(௧௯) இத்தால், ஆழ்வாருடையபக்தியும், ஈச்வரனுடைய நிர்ஹேதுக விஷயீகாரமும், இப்படிப் பலிக்கக்காண்கிறது.

(௨௦) நிரங்குச சுதந்த்ரனானவன், ஈச்வரத்வச்செருக்காலே செய்யும் அவற்றிற்கு, அடி ஆராயப்படாது.

(அ) இப்பிறப்பே சிலநாளிலெய்தினன்யான் (௨-ம் பத்து, ௩-ம் திருவாய்மொழி, ௮-ம் பாட்டு.)

(உக) இவர் வசநங்களில் அக்யாதமான தொன்றில்லை; கேவலம் **நிர்ஹேதுக ப்ரகாசக** வசநங்கள் பலவும்.

(உஉ) இவருக் குண்டான அத்வேஷமும், ஆபி முக்யமும், அவ னாலே உண்டாயிற்றல்லது, சத்கர்ம மடியாக வந்ததன்று.

(உ௩) ஈச்வர குணுதிக்யம் சொன்ன இத்தனை போக்கி, ப்பரி கணனைக்குத் தம்மோ டந்வய மில்லாமல் காரியங்கள் பலித்தன.

(உச) அவைதான் வேண்டுமோ என்னில், அவையும் அவனாலே யுண்டானது யத் நித்த ஈச்வரனுடைய க்ருஷிபலம்.

(உரு) இவையொன்று மில்லையாகிலும் "மாதவனென்றும்" திரு மாலிருஞ்சோலைமலை" யென்றும் சொன்ன **உக்தி மாத்திரங் களை** ப்பற்ருசாகக் கொண்டு விஷயீகரித்தானே வென் னில், அவை பேற்றுக்கு **அடியாகச்** சொல்லத்தக்கவை **அன்று.**

(உசா) ஆனால் இவரை இப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரிக்க வேண்டுவானென் என்றும் அபேக்ஷயிலே, இவரை அங் கீகரித் தல்லது நிற்கவொண்ணுதபடி வளர்ந்துகொண்ட **க்ருபை.**

(உஎ) தம்பேற்றுக்கு மூல சுகர்தமாக இவரருளிச்செய்த ஈச் வரன் தன்னையொழிய, வேறு கல்பிக்கலாவதொரு சுக்ருத மில்லை.

(உஅ) இவருக்குப் பக்திகாரணமாகச்சொன்ன **க்ருபையே, ப்ராப் திக்கும் சாதநம்.**

(உகூ) ஞாநபக்திகளை வளர்த்தது, ப்ராப்திசாதந தயா அன்று.

(௩0) ஆந்தராநுபவமும் அடிமண்டியோடே கலங்கும்படி பிறந் த, அந்தஃகரண **சைதில்யம்.**

(௩க) புண்ணிய பாபரூபமான ப்ரபல கர்மங்களை, விரகர் நெடுஞ் சுவர் தள்ளுமாப்போலே, தான் போக்குகையாலே, அவை யிரண்டும் அற்றிருக்கிற இவர்க்கு, ப்ரியபரனும் ஹிதபர னுமான **ஈச்வரன்** தான் ஞாநபக்திகளை வளர்க்கையில் நினைவாலே, விபூதிரக்ஷணத்தைப் பற்றவரும் அந்யபரதை கலவாதபடி, அத்தை ஒருங்க, விட்டுக்கொண்டு வந்து, இனிப்போராதபடி **இவருள்ளேபுகுந்து,** அத்தாலே விகசித

ஸஹஜ சார்வஜ்ஞனுமாய், நடுக்கமும் தீர்ந்து, இவருக்கு ப்ரத்யக்ஷ போக்யனுமாய், நாச்சிமாரையும் புரிந்து பாராமல், இவரையே பார்த்துக்கொண்டு, இதனாலே திருக்கண்கள் ப்ரஸன்னமாய், இவர் அதிப்ரீதராம்படியாகக், கலந்திருந்தான்.

(௩௨) இவர்க்கியாநதசையில், தாமான தன்மையில் நின்று பேசுவர், ப்ரேம தசையில், அவஸ்தாந்தராபந்நராய்ப் பெண்பேச்சாகப் பேசுவர்.

(௩௩) தெளிந்த தசையோடு, கலங்கிய தசையோடு, வாசியற உபயாவஸ்தையிலும் சேஷத்வரூபமான ஸ்வரூபம், நிலைகுலையாது.

(௩௪) ஸ்வரூபத்திலும், ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தி ப்ரார்த்தனையிலும், பேதமில்லை.

(௩௫) ஸ்த்ரீத்வம் ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாகையாலே, அத்தையுள்ளபடி தர்சித்தவிவர்க்கு, தத்ப்ரயுக்தமான பேச்சு சுவாபாவிகம்.

(௩௬) ஸ்த்ரீஸாம்யமே யன்றி, ப்பிராட்டியோடே சாம்யமும் பரிசுத்த ஆத்மஸ்வரூபத்துக்கு உண்டு.

(௩௭) பெரிய பிராட்டியாரோடுள்ள சாம்யமே யன்றி, தம்முடைய பாவ விசேஷங்களாலே பகவதபிமத திவ்ய மஹிஷிகளான பிராட்டிமார் மூவரோடும், இவர்க்குசாம்யமுண்டு.

(௩௮) அவனுக்கு அபிமதைகளான திருவாய்ப்பாடிப் பெண்களுடையவும், ஸ்ரீமதுரையில் பெண்களுடையவும், நரகவதானந்தரம் பரிக்ரஹித்த ஸ்ரீமத் த்வாரகையில் பதினாறுயிரம் தேவிமாருடையவும் பாவங்கள், இவர்க்குண்டு.

(௩௯) ஜநக குல சுந்தரியான பிராட்டியோடே, யிவர்க்குச் சர்வதாசாம்யம்.

(௪௦) பிராட்டியோபாதி, பின்தொடர்ந்துபோன இளையபெருமாளோடும் இவர்க்குச் சாம்யம்.

(௪௧) பகவத் அநந்யராய் ஸஹஜ பக்தராயிருக்கும் லக்ஷ்மண பரத, சத்ருக்நர் படியும் பகவத் ப்ரத்யாஸந்நராய் தத்

பக்தி யுக்தரான தசரத, யசோதா, ப்ரஹ்லாத, விபீஷண, மாருதி, பார்த்தர் படிகளும் இவர் பக்கலிலேயுண்டு.

(௪௨) லக்ஷ்மண தசரதாதிகளிலும் இவர்க்கு ஆதிக்யமுண்டு.

(௪௩) இப்படிப்பட்ட நெஞ்சையும், சுவையையும், உடைய இவர் அபினிவேசத்தாலே, அவன்பிறவிகளுக்கு அநுகுணமாகப் பிறந்து, அநேகாநுவ்ருத்திகளைப்பண்ணும் பிராட்டிமாரையும், அசேஷ சேஷதைக ரதிகராய் அநேகவித கைங்கரியங்களைப் பண்ணும் அநந்த வைநதேயாதிகளையும், அவர்கள் தான் என்றால், ஆம்படி பாவிப்பர்.

(௪௪) த்ரௌபதி, கௌசல்யைகள் படிகளை, இவர்க்கு திருஷ்டாந்தமாகச் சொல்லுகை, யிதுக்கு ஸ்தூலம்.

(௪௫) இவருடைய பக்திவைபவம் உக்தவக்ஷ்யமாண வஸ்தைகளுக்கு எல்லாம் உடலாயிருக்கும்.

(௪௬) கரை அழியச்செல்லுகிற இவர்பக்தி, சாஸ்த்ர மரியாதையின்கீழ் அடங்காது.

(௪௭) இவர் பெண்பேச்சாகப் பேசுமிடத்தில், சம்பந்தோபாய பலங்களில் உணர்ச்சி, துணிவு, பதறலுமாகிற ப்ரக்யா அவஸ்தைகளுக்கு, த்தோழி, தாய், மகள், என்றும்; ஈஶ்வரனோடு ஆத்மாவுக்குச் சொல்லப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வாதி சம்பந்த (அ) க்யானமே, தோழியென்றும்; நாயக விஷயத்தில் அதிமாத்ர ப்ராவண்யத்தாலே, அவன் இருந்தவிடத்தே போகவேண்டுமென்று பதறுமளவிலும், அவன்தானே வரக்கண்டிருக்கையொழிய, படிகடந்து புறப்படுகை குலமரியாதைக்குப் போதாதென்று, நிஷேதித்துப்

(அ) க. அங்கோர்கள்ளுமிறைச்சியும் தூவேல்மின் (௪-ம் பத்து, ௬-ம் திருவாய்மொழி, ௩-ம் பாட்டு.)

௨. உணங்கல்கெடக்கழுதையுதடாட்டம் கண்டென்பயன் (௪-ம் பத்து, ௬-ம் திருவாய்மொழி, ௭-ம் பாட்டு.)

௩. தீர்ப்பாரை யாமினியெங்ஙனம் (௪-ம் பத்து, ௬-ம் திருவாய்மொழி, க-பாட்டு.)

௪. துவளில்மாமணி (௬-ம் பத்து, ௫-ம் திருவாய்மொழி, க-பாட்டு.)

௫. கருமாணிக்க மலைமேல் (அ-ம் பத்து, ௯-ம் திருவாய்மொழி, க-பாட்டு.)

பொருமவளாகையாலே, மத்யமபத ப்ரதிபாதித உபாயாத்ய வஸாயமாகிற (அ) ப்ரக்யா அவஸ்தையை த்தாயாரொன்றும், இயற்கையில் புணர்ந்து, நாயகன் வைலக்ஷண்யத்திலே யீடுபட்டுக் குலமரியாதைகளேயும் பாராதே, கிட்டியல்லது தரியேனென்னும், பதற்றத்தை உடையளாகையாலே, சரமபத ப்ரோக்தமான, ஸ்வரூப ரூபகுண விபூதிகளால் வந்த வைலக்ஷண்யத்தை, அநுசந்தித்து த்ததநுபவ விளம்பா க்ஷமத்வத்தாலே, ததேகோபாய த்வாத்யவஸாயத்தையும், அதிக்ரமித்துக்கிட்டி அநுபவித்தல்லது, தரியாதபடிநடக்கிற, ப்ராப்யத்வரையாகிற ப்ரக்யா அவஸ்தையை, மகளென்றும், பெயரிட்டுச் சொல்லுவர்.

(சஅ) **தலைமகள் பேச்சான பதினேழு திருவாய் மொழியிலும் ப்ராப் யத்வரை (ஆ) தோன்றும்.**

(அ) க. பாலனுயேழுலகுண்டு (ச - ம் பத்து, உ - ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

உ. கண்ணன்கழல்துழாய், பொன்செய்பூண் மென்முலைக்கென்றுமெலியும் (ச-ம் பத்து, உ-ம் திருவாய்மொழி, க0-ம் பாட்டு.)

ந. **மண்ணையிருந்து துழாவியிலே,** பெண்கொடியேறியபித்தே (ச-ம் பத்து, ச-ம் திருவாய்மொழி, சு-ம் பாட்டு.)

ச. கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கொலோ (ரு-ம் பத்து, சும்- திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

ரு. **மாலுக்குவையத்திலே,** கர்ப்புடையாட்டியிழந்ததுகட்டே (சு-ம் பத்து, சு-ம் திருவாய்மொழி, க0-ம் பாட்டு.)

சு. **உண்ணுஞ்சோற்றிலே,** இன்றெனக்குதவாதகன்ற (சு-ம் பத்து, எ-ம் திருவாய்மொழி, சு-ம் பாட்டு.)

எ. **கங்குலும் பகலிலே,** சந்தித்துன்சரணம்சார்வதே வலித்ததையலை (எ-ம் பத்து, உ-ம் திருவாய்மொழி, ரு-ம் பாட்டு.)

அ. முறையோ, அரவணைமேல்பள்ளிகொண்ட முகில்வண்ணனே (இயற்பா, திருவிருத்தம் சுஉ-ம் பாட்டு.)

(ஆ) க. **அஞ்சிறையமடநாராய்.** (முதற்பத்து, ச-ந் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

உ. **வைகல்பூங்கழிவாய்.** (சு-ம் பத்து, க-ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

ந. **பொன்னுலகாளீரோ.** (சு-ம் பத்து, அ-ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

ச. **எங்கானல் -** (கூ-ம் பத்து, எ-ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

(௪௯) சம்பந்த க்யாநத்திற்கும், உபா்த்யவஸாயத்திற்கும், விஷய பேதத்தாலே, வ்யக்தி பேதமுண்டாகையாலே, தோழி

(இவைகளிலேதூதுவிட்டு.)

௫. **வாயும் திரையுகளிலே** (சகலபதார்த்தங்களையும் சமதுக்கிகளாகக் கொண்டு அழுது.) (உ-ம் பத்து, க-ம் திருவாய்மொழி.)

௬. **ஏறாளுமிறையோனில்.** மாறாளன் கவராதமணிமாமை குறைவிலமே. (௪-ம் பத்து, அ-ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

௭. **மாசறுசோதியிலே.** குதிரியாய்மடலூர்தும். (௫-ம் பத்து, ௩-ம் திருவாய்மொழி, ௯-ம் பாட்டு.)

நாடுமிரைக்கவே. (௫-ம் பத்து, ௩-ம் திருவாய்மொழி, க0-ம் பாட்டு.)

(என்று ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி மடல்ஊர்ந்து.)

அ. **ஊரெல்லாம் துஞ்சியிலே.** பின்நின்றகாதல்நோய் நெஞ்சம் பெரிதடுமால், முன்நின்றிராவூழி கண்புதையமூடிற்றால் (௫-ம் பத்து, ௪-ம் திருவாய்மொழி, ௯-ம் பாட்டு.)
(போக்கடியற்று.)

௯. **எங்ஙனேயோவிலே.** சோதிவெள்ளத்தினுள்ளே, எழுவதோருருவென்னெஞ் சுள்ளெழும். (௫-ம் பத்து, ௫-ம் திருவாய்மொழி, க0-ம் பாட்டு.)

(அப்ராக்ருதவிக்ரஹம் உருவெளிப்பாடாய் நெஞ்சிலே ப்ரகாசிக்க.)

க0. **மானேய்நோக்கிலே** திருவல்லவாழுறையும் கோனாரை அடியேனடி கூடுவதென்றுகொலோ (௫-ம் பத்து, ௯-ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

(அவனைக்கூடும் நாளைப்ப்ரார்த்தித்து.)

கக. **மின்னிடை மடவாரிலே** போகுநம்பீ. (௬-ம்பத்து, உ-ம் திருவாய்மொழி, க-ம் பாட்டு.)

(ப்ரணயரோஷத்தாலேயூடி.)

கஉ. **வெள்ளைச்சுரி சங்கிலே.** என்நெஞ்சினாருமங்கே ஒழிந்தார், உழந்தினியாரைக் கொண்டென்னுசாகோ. (எ-ம் பத்து, ௩-ம் திருவாய்மொழி, ௪-ம் பாட்டு.)

(உசாத்துணையுமின்றி.)

க௩. **ஏழை யராவியிலே.** கண்ணன்கோளிழைவாண் முகமாய் கொடியேனுயிர் கொள்கின்றதே. (எ-ம் பத்து, எ-ம் திருவாய்மொழி அ-ம் பாட்டு.)

(பாதகவர்க்கம் ஒருமுகமாய்நலிய.)

க௪. **நங்கள்வரிவளையிலே.** காலம்பலசென்றும் காண்பதாணை யுங்களோடெங்களிடையில்லையே. (அ-ம் பத்து, உ-ம் திருவாய்மொழி, எ-ம் பாட்டு.)

மார்களென்றும், அன்னேயர், என்றும் பகுவசந ப்ரயோகம்.

(௫௦) தலைமகளாகிற ப்ராப்யத்வரைக்கு, ஏழவஸ்தைக ளுண்டு. அவையாவன.

க. அபிலாஷை, அதாவது அநுபாவ்யவிஷய ப்ரதம தரிசநத்தில் பிறக்கும் ஆசை.

உ. ஸ்மரணம், அதாவது அவ்விஷயத்தில் உண்டான சிந்தனை.

௩. அநுஸ்ம்ருதி, அதாவது அந்தஸ்மரணம் அநவரதம் நடையாடுகிற ஸ்மரணம்.

௪. இச்சை, அதாவது அவச்யம் அநுபவித்தே நிற்கவேண்டும் என்கிற ஆசை.

௫. ருசி, அதாவது அவ்வாசைதான் ரஸாந்தரத்தால் மாற்றவொண்ணுதபடி முதிருகை.

௬. பாபக்தி, அதாவது அவ்விஷயத்தில் சம்ச்லேஷ விச்லேஷங்களே சுகதுக்கங்களாகிற பரபக்தி.

௭. பரமபக்தி, அதாவது அவ்விஷயத்தினுடைய விச்லேஷத்தில் சத்தைகிடவாதொழிகை. இவ்வவஸ்தைகள் தான்:—க. பேதை. உ. பெதும்பை. ௩. மங்கை. ௪. மடந்தை. ௫. அரிவை. ௬. தெரிவை. ௭. பேரிளம் பெண். என்கிற ஏழுபருவங்கள்.

(இதஞ்சொல்லுகிற தாய்மார் தோழிமாரை அதிக்ரமித்து.)

க௫. இன்னுயிச் சேவலிலே. இழைநல்லவாக்கையும் பையவே புயக்கற்றது. (௬-ம் பத்து, ௫-ம் திருவாய்மொழி, க௦-ம் பாட்டு.)

க௬. மல்லிகைகமழ் தேன்றலிலே. (௯-ம் பத்து, ௯-ம் திருவாய்மொழி.)

(கண்ணனை சந்தியாகாலத்திலே பசுக்களில் முற்கொழுந்தில்வரக்காணுமல் நலிவுபட்டு கூப்பிட்டு.)

க௭. வேய்மருதோளிணையிலே. (க௦-ம் பத்து, ௩-ம் திருவாய்மொழி.) (ப்ராதக் காலத்தில் கிருஷ்ணன் பசுமேய்க்கப்போனுக அதிசங்கைபண்ணி அவன்முகத்தைப்பார்த்து, நீ பசுமேய்க்கப்போனல் நலியக்கடவ பாதக பதார்த்தங்கள் நலியாநின்றதென்று கூப்பிடும்.)

(௫க) இவ்வாழ்வாருக்குத் தோழி, தாய், மகள், என்கிற மூன்றவஸ்தையும் உண்டாகையாலே, தத் அவஸ்தைகளோடு சேர்ந்த வேஷத்தாலே அவயவவர்ணனையை, ஆத்மஸ்வரூப பரமாகச் சொன்னார். எங்ஙனேயெனில்.

க. "மயில்" என்று ஸ்திரீகளைச் சொல்லுகிறது. இத்தால் ஆத்மாவினுடைய **க்யானவிகாசத்தைச்** சொல்லுகிறது.

உ. "பிறை" என்று நெற்றியைப் பிறையாகச் சொல்லுகையாலே அதின் தாவள்யத்தையிட்டு ஸ்வாதந்த்ரய அந்ய சேஷத்வங்களாகிற தோஷ ஸ்பரிச மற்றிருக்கும் சுத்தியைச் சொல்லுகிறது.

௩. "விற்புருவக்கோடி" என்று புருவத்தை வில்லாகச் சொல்லுகிறது வளைவையிட்டு, ப்பாஹ்யாந்தர கரண நியமந ரூப தாந்தியைச் சொல்லுகிறது.

ச. "அம்பன்னக்கண்ணாள்" என்று கண்ணை அம்பாகச்சொல்லுகையாலே தனக்கடைத்த விஷயத்தை அவலம்பித்த க்யாநத்தைச் சொல்லுகிறது.

௫. "முத்தன்ன வெண்முறுவல்" என்று முறுவலை முத்தாகச் சொல்லுகையாலே, அவ்விஷயாநு பவத்தால்வந்த ஆநந்தத்தைச் சொல்லுகிறது.

௬. "பவளவாயாள்" என்று அதரத்தை ப்ரவாளமாகச் சொல்லுகிறது சிவப்பை யிட்டாகையாலே, அவ்விஷயத்தைப்பற்ற உண்டான அநுராகத்தை சொல்லுகிறது.

எ. "செப்பென்ன மென்முலை" என்று பரிணதமான முலையைச் செப்பாகச் சொல்லுகையாலே, சேஷி விரும்பி மேலே விழும்படி பரிணதையான பக்தியைச் சொல்லுகிறது.

அ. "மின்னனைய நுண்மருங்குல்" என்று இடையை மின்னாகச் சொல்லுகிறது நுண்மையை யிட்டாகையாலே, க்யாநாவஸ்தா விசேஷங்களுக்கெல்லாம் ஆதாரமான ஆத்ம ஸ்வரூபத்தின் அணுத்வத்தைச் சொல்லுகிறது.

௬௯. "தோணங்கல்தல்" என்று நிதம்ப வைலக்ஷண்யம் போக்தாவுக்குப் போக்யமா யிருக்கும தாகையாலே, "தேனும் (அ) பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து" என்கிற படியே சேஷிக்கு மிகவும் ரஸாவஹமாம்படி யிருக்கிற ஆத்மவஸ்துவின் போக்யதையைச்சொல்லுகிறது.

(௭0) "அன்னமன்னநடையாள்" என்று அன்னத்தை யொப்பிடுகிறது நடை அழகுக் காகையாலே, சேஷியும் ததீயரும் ச்லாகிக்கும்படி ஸ்வரூபானு ரூபமான நடக்கையாகிற கதியைச் சொல்லுகிறது.

(௫௨) சம்பந்தக்யானம்,உபாயாத்யவஸாயம், ப்ராப்யத்வரை, இவைகளுடைய வ்ருத்தி விசேஷங்களை, ஸர்வரும்அறிந்து அநுசந்திக்கும்படி தரிசிப்பித்தார்.

(௫௩) இவர் "தாயாரோன்ற" உபாயாத்ய வஸாயதசையில் சத்நுக்களாகவும் பந்துக்களாகவும் சொல்லும் சித்த சாதந நிஷ்டப்ரதி கூலரான சாத்ய சாதன நிஷ்டரையும், அநுகூலரான சித்த சாதன நிஷ்டரையும்; "மகளேன்ற" ப்ராப்யத்வரா தசையில் அந்தரங்க சத்ருக்களாகவும்; ஸ்வ ஸமான சுக துக்கிகளாகவும் சொல்லும்; பகவத் ஏகபரரா யிருக்கச் செய்தே, ததுபாய ப்ரவர்த்தியிலே யூன்றிநின்று த்வரை பாரத தந்த்ரயத்திற்குச் சேராதென்று நிஷேதிக்கும், சித்த சாதன பரரையும், தன்னைப்போலே உபாய பாவத்திலே உடன்பாடராயிருக்கும் சாத்யபரரையும், சொல்லும்.

(௫௪) "நாலயலாரும் அயற்சேரியாரும்" என்கையால் கர்ம, க்யாந, பக்தி, ப்ரபத்தி, ஆகிற உபாய சதுஷ்டயத்திலும் ஊன்றியிருக்குமவர்களும், அர்ச்சாவதாராதி சாபேக்ஷதை அற்றுத் தேவதாந்தர்யாமித்வத்திலே யூன்றியிருக்கு மவர்கள்.

(௫௫) கர்மயோகமும்,க்யாநயோகமும்,பக்தியோகமும் சித்தசாதநபரர்க்குப் புறவசலாயிருக்கும்.

(௫௬) "ஊரார்" என்பது ஆத்மப்ராப்தி காமரான கேவலரை. "நாட்டா" ரென்பது புத்ர பச்வந்நாதிகளான இஹலோக

(அ) தேனும் பாலும் கன்னலு மமுதுமாகித் தித்தித்து (அ-ம் பத்து அ-ம் திருவாய்மொழி ௬-ம் பாட்டு.)

ஐஶ்வரி யகாமனை. "உலகர்" என்பது சுவர்க்காதி பரலோக ஐஶ்வரிய காமரான ஸ்வதந்தரனை.

(௫எ) கேவலனை, ஊராரகச் சொன்னது, சிர்ஷ்டி ஸம்ஹாரங்களுக்குக் கர்மீபவிக்கும் ப்ரகுர்தி மண்டலத்திற்கு அவ்வருகான பரமாகாசத்தில், இருந்தநுபவிக்க வேண்டுகையாலே.

(௫அ) "சிறுசுளகாவது" தேஹாத்ம விவேகத்திற்குப் பரிகரமான ப்ரமாணம். "சீரார்சுளகாவது" தேவதாந்தரங்க ளென்றும் சர்வேஶ்வர னென்றும், விவேகிக்கிற த்திற்குப் பரிகர மான ப்ரமாணம்.

(௫௯) "மாலை" யாவது ராஜஸ க்யாநம். "கங்குலாவது" தாமஸ க்யாநம். காலை யாவது ஸாத்விக க்யாநம். "பகலாவது சுத்த ஸத்வ க்யாநம்.

(௬0) "நிலாமுற்றமாவது" சரமாவதியான புருஷார்த்த க்யாநம்.

(௬௧) "கலையும்வளையு" மாவன அஹங்கார மமகாரங்கள்.

(௬௨) "பட்டம்" "சூடகம்" முதலான ஆபரணங்களாவன, ப்ரதமத்தில் இவ்வாத்மாவை அங்கீகரித்த, ஆசாரியன் உண்டாக்கும் நாமரூப பகவத்வந்த நாதிகளும், பின்பாசார்ய வைபவத்தை யுணர்த்தி, அவனுக்குண்டாக்கும் சேஷத்வக்யாநாதிகளும் ஆகிற ஆத்ம அலங்காரங்கள்.

(௬௩) "பந்தாவது" போகஸ்தானமானதேஹம். "கழலாவது" போகோபகரணமான பஞ்சேந்திரியங்கள்.

"பாவைதுழ மணங்களா" வன லீலோபகரண விசேஷங்கள்.

"யாழ்," "தென்றல்," "மதியம்," "அடிசில்," போக்யங்களான சப்தாதி விஷயங்கள். "சாந்தம்," "பூண்," "அகிலா" வது ரூபகந்தங்கள் "சிற்றிலாவது" போகஸ்தானம். "தூதை" யாவது சிறுசோறு அடுகைக்கு உபகரணம்.

அழகியமணவாளப்பெருமாள் நாயனர் திருவடிகளேசரணம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஆசார்ய ஹ்ருதயசார சங்க்ரஹம்.

௩ - ம். ப்ரகரணம்.

(க) பகவத் விஷயத்தில் கடகராம் அவர்களைப் பக்ஷிகளாக ப்ரதிபத்தி பண்ணி, அவர்களுடைய க்யாநகர்மங்களைச் சிறதுகளாகச் சொல்லிக்குருக்களுடையவும், சப்ரம்ஹ சாரிகளுடையவும், புத்ரர்களுடையவும், சிஷ்யர்களுடையவும் ஸ்தானத்திலேநின்று பேசுவர்.

(உ) சாம் சாரிக சகல சங்கமும் அற்று, உத்தமாச்ரமிகளாய், ப்பரமஹம்ஸ சப்தவாச்யரான ஸ்ரீநாதமுநிகள், ஸ்ரீயாமுனமுநிகள், போல்வாரையும் இந்தக் குணசாம்யதையிட்டு அன்னமென்று சொல்லுவர்.

(௩) திருவாய்மொழி இசையே தங்களுக்குப் போக்யமாயிருக்கிற தம்பிரான்மார் போல்வாரை, இக்குண சாம்யத்தாலே "வண்டே"ன்றும், "தும்பி" யென்றும் சொல்லுவர். இவ்விடத்தில் ஸ்ரீநாரதரையும், திருப்பா ணாழ்வாரையும், த்ருஷ்டாந்தமாகக். கொள்வது.

(ச) கிளி, பூவை, குயில், மயில், என்றது பாகவதர்களுக்கு ப்பாததூளிபோலே பரதந்திரராய் இதுவே நிருபகமான ஸ்ரீதொண்டரடிப்பொடி ஆழ்வார், ராமாநுஜனுடையார் என்றே நிருபகமாம்படி உடையவருக்குப் பரதந்த்ரரான ஆழ்வான், ஆண்டான், எம்பார், அருளாளப்பெருமாள் எம்பெருமானர், போல்வாரை.

(ரு) நாரை, கோக்கு, குருகு, என்றது தங்கள் பக்கல் உபஜீவித்த சிஷ்யர்கள் உபகார ஸ்மிர்தியாலே சிரஸா வகிக்கை யாகிற ப்ரம்ஹ ரதம் பண்ணிச் சாதகமாக சமர்ப்பித்தவையை அங்கீகரித்துப் பாகவத கைங்கரியத்துக்கு உறுப்பான யோக்யதையு, ம்சம்ஸார வெக்காயமடியான பயத்தாலே ஐஸ்வரியத்தை உபெக்ஷிக்குமவர்களாயுள்ள, ஸ்ரீதல

சேகரப்பெருமாள், ஆசார்ய பதஸ்தரான நம்முதலிகள் போல்வாரை.

(சா) மேகமென்றது மேகஸத்ருசராய்க் கொண்டு க்ருபையை வர்ஷிக்கும் முதலாழ்வார்கள், எம்பெருமானர் போல்வாரை.

(எ) ப்ராப்யத்தில் த்வரை தோன்றப் பலகாலும் தூது விடுவர். தூதுநால்வகைப்பட்டிருக்கும் எங்ஙனே என்னில் க. பரத்வத்வயத்திலும். உ. வியூகத்திலும். ங. விபவத்திலும். ச. அர்ச்சாவதாரத்திலும். "அஞ்சிறை," "வைகல்," "பொன்னுலகு," "எங்கானல்"கள் நாலுதூதுக்கும்விஷயம்.

(அ) பரத்வாதிகளில்ஸ்தல பேத மொழிய, வஸ்து பேதம் இல்லை, ஆகையால் பலவிடங்களிலும் தூது விட்டால் ப்ராப்ய வஸ்துவின் ஐக்கியம் குலையாது திருமலை முதலான தேசங்களில்ரஸோத்தரமாக வஸிக்கையும், பாற்க்கடலில் யோக நித்திரை செய்வதும், ரக்ஷணார்த்தமாக வந்து பல இடங்களில் அவதரிப்பதும், அந்தர்யாமியாய் "உள்ளுவார்(அ)உள்ளித்தெல்லாம்" அறிகையும், கோயில்முதலான இடங்களிலே ரஸோத்தரமாக வசிக்கையும், இவை ஐந்தும் ஒன்றேயாகக் காணலாம்.

(கூ) பரத்வாதிகளில் அநுபாவ்யமான குணங்களெல்லாம் பூர்ணமாய்க் கரைவிழுந்தவிடமான அர்ச்சாவதாரத்திலே இவர் மண்டியிருப்பர்.

(கo) கோயில், வியூஹ சௌஹார்த ப்ரதானம்.

(கக) திருமலை, அந்தர்யாமிப்ரதானம்.

(கஉ) திருக்குருகூர், பரத்வ லக்ஷணமான ஈச்வரத்வ ப்ரதானம்.

(கங) திருக்குறுங்குடி, விபவப்ரதானம்.

(கச) ஸ்ரீவரமங்கலம், திருவடிகளையே உபாயமாகக்கொடுக்குமிடம்

(கரு) திருக்குடந்தை, ரக்ஷகாந்தரப்ரதிபத்தி நிவ்ருத்தி பிறந்தாரைச் சிதலராம்படி பண்ணுமிடம்.

(கசா) திருவல்லவாழ், அவனே ரக்ஷகனென்று அத்யவஸிகக்ப்பண்ணுமிடம்.

(அ) உள்ளுவார் உள்ளித்தெல்லாம்(முதலாயிரம், திருமாலை ஙச-ம்பாட்டு.)

(௧௭) திருவண்வண்டூர், அநுகூலராலும் சலிப்பிக்க வொண்ணாத படி யிருக்கும் அவனுடைய ஸ்தைரிய குணம் தோற்று மிடம்.

(௧௮) திருவிண்ணகரம், விளம்பிக்கையாலேவந்த ப்ரணயரோஷத்தை அழிக்கவும், விருத்தங்களைக் கடிப்பிக்கவும் வல்லசாமர்த்திய முள்ள இடம்.

(௧௯) திருந்துலைவில்லிமங்கலம், தந்தைதாயான பந்துத்வம் இரட்டித் திருக்கும் இடம்.

(௨0) திருக்கோளூர், ப்ராப்ய ருசிபிறந்தார்க்கு ப்ராவேஷ்டவ்யமாயிருக்குமிடம்.

(௨௧) தென்திருப்பேரை, நெஞ்சை அபகரிக்கும் சவுந்தரியமுள்ள இடம்.

(௨௨) திருவாறன்விளை, பரத்வத்தில் விழகாரகப்பண்ணு மிடம்.

(௨௩) திருக்குளந்தை, ஸ்திரீத்வப்ரகாரமான லஜ்ஜாதிகளை அழிக்குமிடம்.

(௨௪) திருவண்பரிசாரம், ஶ்ரமத்தைக்கண்ட மநசானது ப்ரமிக்கும்படியான சவுகுமார்யம் தோன்றுமிடம்.

(௨௫) திருச்செங்குன்றூர், பய சங்கிகளானவர்கள் நிர்ப்பயராய் ஹ்ருஷ்டராம்படியான சவுர்யாதிகள் தோன்றுமிடம்.

(௨௬) திருக்கடித்தானம், க்ருதக்யதா பரிமளம் தர்ய ப்ராப்தமான குணம் தோன்றுமிடம்.

(௨௭) திருப்புலியூர், நாயகனுடைய லக்ஷணம் காட்டுமிடம்.

(௨௮) திருப்புளிங்குடி, திருவரகுணமங்கை, திருவைகுந்தம், பரமபக்தியாகிற பாகம்பிறக்குமளவும் அவனுக்கு உண்டான த்வரை தெரியும்படி செய்யுமிடங்கள்.

(௨௯) திருக்காட்கரை, போகத்தில் தட்டுமாறும் சவுசீல்ய குணம் தோன்றுமிடம்.

(௩0) திருமூழிக்களம், ஆஶ்ரிதருக்கு ஸம்பத்தான ஸ்வபாவம் காட்டுமிடம்.

(௩௧) திருநாவாய், ஆஶ்ரிதவிஷயத்தில் க்ருபை தோன்றுமிடம்.

(௩உ) திருக்கண்ணபுரம், சரண வரணார்ஹனுடைய மோக்ஷப்ரதத்வம் தோன்றுமிடம்.

(௩௩) திருமோகூர், தாபஹரமான குளிர்ச்சி யுண்டாகுமிடம்.

(௩௪) அநந்தசயனம், தாரதம்யம் பாராதே காட்டுகிற ஸாம்யம் தோன்று மிடம்.

(௩௫) திருவாட்டாறு, ஆஶ்ரிதனுக்குப் பாதந்த்ரனைக் காணுமிடம்.

(௩௬) திருமாலிருஞ்சோலை, அத்யாநங்களைக்கடியு மிடம்.

(௩௭) திருப்பேர்நகர், அங்கீகரிக்கப்பார்க்கும் ஸ்வாமித்வம் தோன்று மிடம்.

(௩௮) இவ்வாழ்வாருக்குப் பதினறு திருநட்சத்திரம் பூர்ணமானவாறே, அர்ச்சாவதார ஸ்தலங்களில் ப்ராவண்யம் திருவாய்மொழியில் வ்யாவர்த்தமான மார்த்வத்தை யுடைத்தான சப்தமாக, இவர் ஶ்ரீகோத்கதமாயிற்று.

(௩௯) இது பக்திபலாத்காரத்தாலே பிறந்த அநாதியான ஆயிரம்.

(௪0) ஸம்சாரிகளுக்கு, உஜ்ஜீவநார்த்தோபதேசம்பண்ணின இப்ரபந்த ப்ரதிபாத்ய அர்த்தஸாம்யத்தாலே, பகவத் ப்ரணீத கீதோபநிஷத்துக்குச் சமமாகச் சொல்லப்படும்

(௪௧) அதற்கும் இது ஆதிக்யமுள்ளது, மத்யஸ்த மாகநின்று தத்வைபவத்தை உபதேசிக்கையாலே இது மந்தமதிகளுக்கும் விஶ்வஸநீயம்.

(௪உ) கீதை மோக்ஷசாஸ்த்ரமேயாகிலும், அதற்கு உதிக்கிறபோது அந்யார்த்தமாக உதித்தகுறையுண்டு. திருவாய்மொழிக்கு மோக்ஷார்த்தமாகவே உதித்த ஏற்றமுண்டு.

(௪௩) அர்ஜுநன் யுத்தே ப்ரவ்ருத்தனனமாத்ர மொழிய, ச்சித்த தர்மபர்யந்தம் உபதேசம் ஸப்ரயோஜனமாயிற்றில்லை அங்கு; அது ஸப்ரயோஜனமாயிற்று இங்கு.

(௪௪) அதில் விதிமாத்ரம் ப்ரதிபாத்யம்; இதில் விதி, அநுஷ்டானம் இரண்டையும் ப்ரதிபாதிக்கும்.

(௪௫) ஆக கீதையில் இதுக்குண்டான ஆதிக்ய ஹேதுக்கள் சொல்லிற்றாயிற்று.

(சசு) ஸம்ஸாரிகளோடும், க்யாநிகளோடும், சர்வக்யனை ஈச்வர னோடும் வாசியற, ஸர்வருக்கும் வேண்டும் அம்சங்களை, இவர் உபதேசித்துத் திருத்துவர்.

(சஎ) ஆக அறிவுகேடரை உபாயத்தில் மூட்டுவர்; உபாயத்திலே ஊன்றுவாரை ப்ராப்யபராக்குவர்.

(சஅ) ப்ராப்யத்தில் இழிந்தவர்களுக்கு ஆழங்கால் அறிவிப்பர்; ப்ராப்தியை உண்டாக்கும் அவனுக்கு த்யாஜ்யத்தை அறி விப்பர்.

(சகூ) ப்ரதம சரமோக்தரான, அந்ய ஸ்ர்வக்யர்களுக்கு, ஹிதா ஹிதங்கள் பலகாலும் சொல்லுவர்.

(ருo) தம் உபதேசத்தாலே பகவத்பக்தியை ஜனிப்பிப்பது, தத் சம்பந்தமடியாக அவர்களைவிட மாட்டாதே திருத்தித்தம் மோபாதி பகவத் அநுபவ பராக்க வேணுமென்கிற க்யா நம், இதற்கு ஹேது.

(ருக) க்யாந, ப்ரேமங்கள் இரண்டும், பரதுக்கா ஸஹிஷ்ணுத்வத் தை யோழிந்திராது.

(ருஉ) இவரை அவன் தனக்கு ஆத்மாவாக நினைத்திருக்கிற ஆகா ரம், இவர் பாசுரத்தில் தோன்றும்.

(ருஙு) இவருக்கு ஈஶ்வரனிடத்தில் சச்சிஷ்யத்வம் பரிபூர்ணமா யிருந்த ஓபாதி, அவனுக்கும் ஆசாரியத்வம் இருந்தது.

(ருச) இவருக்கு ஈஶ்வரன் கைவிட்டவர்களையும், திருத்தியல்லது நிற்கமாட்டாத கரைபுரண்ட காருண்யம்.

(ருரு) இவருக்குள்ள குணங்கள் எம்பெருமானுர்க்குமே உண்டு.

(ருசு) இப்ரபந்தத்தில் அந்வயித்தவர்களை த்தனக்கு ச்சேஷிக ளாய் நினைத்திருக்கையால் ஸபலமாயிற்று.

(ருஎ) உபதேச சுத்தியாலே ஸர்வரும் திருந்தி, இவருடைய இழ வுகளெல்லாம் தீர்ந்ததென்று கொள்ள வேண்டும்.

(ருஅ) இவருடைய பரோபதேச விஷயங்களும், உபதேச, ஹேது க்களும், உபதேச ஸாபல்யமும், உபதேசந்தான் அநுப வத்தை விட்டிராதென்பதும், சொல்லிற்று.

(ருகூ) இவர் ப்ரபந்தம் நாலும், ரஹஸ்ய த்ரயார்த்த ப்ரதி பாதக மாயிருக்கும்.

(சூ0) (அ) "உயிரளிப்பான்" என்று ப்ரணவத்தில் ப்ரதமாக்ஷரமான அகாரத்தில், தாத்வர்த்தமான பகவத் ரக்ஷகத்வத்தையும், "அடியேன்" என்று தத்ரக்ஷ்யபூதமாய்ச் சதுர்த்தி உகாரங்களில் சொல்லுகிறபடியே, ததநந்யார்ஹ சேஷமாய், ப்ரக்ருதே:பரமாய், ஜ்ஞாநாநந்த லக்ஷணமாக த்ரிதீயாக்ஷரமான மகாரத்தில் சொல்லப்படுகிற ஆத்ம ஸ்வரூபத்தையும், ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தி ஸம்ப்ரதானத்திலேயாய் ப்ரணவத்துக்கு ஆத்ம சமர்ப்பணமும் அர்த்தமாகையாலே, விரோதி பயத்தாலே கலங்கின தசையிலே (ஆ) "அடியேனடியாவியடைக்கலம்" என்று அந்த ஆத்ம சமர்ப்பணத்தையும், (இ) "திருமால்திருப்பேர்வல்லா ரடிக்கண்ணிசூடியமாறன்" என்று ப்ரணவோக்தமான பகவதநந்யார்ஹ சேஷத்வம் ததிய சேஷத்வ பரியந்தமா யிருக்குமென்று நமஸ்ஸில் அர்த்தமாகச் சொல்லப்படுகிற ததீய சேஷத்வத்தையும், (ஈ) "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்" (உ) "யாதானுமோராக்கையில் புக்கங்காப்புண்டு மாப்பவிழ்ந்தும்" என்று சஷ்ட்யந்தமான மகாரத்தால் சொல்லப்பட்ட அஹங்கார மமகாரங்களாகிற அநாத்மந் யாத்ம புத்தியாதி ரூபாவித்யையையும், தத்கார்யமான அக்ருத்திய கரணாதிகளையும், தத்காரியமாய்வரும் தேவ மநுஷ்யாதி ரூபமான ப்ரக்ருதி சம்பந்தத்தையும், (ஊ) "வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்து அழுந்தார்" என்று தன் நிஷேதவாசியான நஞ்ஞாலே சொ

(அ) உயிரளிப்பான். (இயற்பா-திருவிருத்தம், க-பாட்டு.)

(ஆ) அடியேனடியாவியடைக்கலம். (இயற்பா - திருவிருத்தம், அரு-ம் பாட்டு.)

(இ) திருமால்திருப்பேர் வல்லாரடிக்கண்ணிசூடியமாறன் (இயற்பா-திருவிருத்தம், க00-ம் பாட்டு.)

(ஈ) பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பும் (இயற்பா-திருவிருத்தம், க-ம் பாட்டு.)

(உ) யாதானுமோரார்க்கையில் புக்கங்காப்புண்டு மாப்பவிழ்ந்தும் (இயற்பா-திருவிருத்தம், கரு-ம் பாட்டு.)

(ஊ) வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே (இயற்பா. திருவிருத்தம் க00-ம் பாட்டு.)

ல்லப்பட்ட அவித்யை முதலாக ஸம்ஸாரகர்த்தமமீருக உள்ள விரோதி நிவ்ருத்தியையும் சொல்லுகையாலே, ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ சேஷமாய்க் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய்த் ததீயசேஷத்வபரியந்தமாயிருக்கும் ஆத்மஸ்வரூபத்தையும், ஸம்ஸார ஹேது பூதாவித்யாதிகளான விரோதிகளுடையநிவர்த்தியையும், ப்ரதிபாதிக்கிற திருவிருத்தம், ப்ரதம, மத்யம, பதங்கள் இரண்டோடும் சேர்ந்திருக்கையாலும், (அ) "தாமரையுந்தித்தனிப்பெருநாயக" என்று துடங்கி (ஆ) "எம்பெருமாமாயன்" என்று தலைக்கட்டுகையாலே, நாராயணபதத்தில் சொல்லப்படுகிற உபய விபூதி யுக்தமான ப்ராப்யவஸ்துவையும், (இ) "தனிமாத்தெய்வத்தடியவர்க்கினிநாமாளாகவேயிசையுங்கோல்" என்றும் (ஈ) "ஊழிதோறூழி யோவாதுவாழியவென்றுயாந்தொழவிசையுங்கோல்" என்றும் அந்தப்பதத்தில் சதுர்த்தி அர்த்தமான பலஸ்வரூபத்தையும், காட்டுவதால் இவர் ப்ரபந்தங்கள் திருமந்த்ரத்தோடுசேரும். (உ) "நெறிகாட்டிநீக்குதியோ" என்று உபாயாந்தரங்களைக் காட்டி என்னை அகற்றப் பார்க்கிறாயோ வென்கையாலே "ஸர்வதர்மான்பரித்யஜ்ய" என்கிற உபாயாந்தரங்களினுடைய பரித்தியாஜ்யதையும் (ஊ) "வெங்கோட்டேறேழுடனேகொன்றானையே மனத்துக்கொண்டு" என்று "மாமேகம் சரணம் வ்ரஜ" என்கிற மாநஸாத்யவஸாய ரூபமான உபாயஸ்வீகாரத்தையும், (எ) "சீரார்மனத்தலைவன்

(அ) தாமரை யுந்தித் தனிப்பெரு நாயக (இயற்பா-திருவாசிரியம், க-ம் பாட்டு.)

(ஆ) எம்பெருமாமாயன் (இயற்பா-திருவாசிரியம், எ-ம் பாட்டு.)

(இ) தனிமாத்தெய்வத்தடியவர்க்கினி நாமாளாகவேயிசையுங்கோல் (இயற்பா-திருவாசிரியம், கூ-ம் பாட்டு.)

(ஈ) ஊழிதோறூழியோவாது வாழியவென்று யாந்தொழவிசையுங்கொல் (இயற்பா-திருவாசிரியம், ச-ம் பாட்டு.)

(உ) நெறிகாட்டிநீக்குதியோ (இயற்பா-பெரியதிருவந்தாதி, சூ-ம் பாட்டு)

(ஊ) வெங்கோட்டேறேழுடனே கொன்றானையேமனத்துக்கொண்டு (இயற்பா-பெரியதிருவந்தாதி, சஅ-ம் பாட்டு.)

(எ) சீரார்மனத்தலைவன் (இயற்பா-பெரியதிருவந்தாதி, உரு-ம் பாட்டு.)

துன்பத்தை மாற்றினேன் வானேரினத்தலைவன் கண்ணனல் யான்" என்றும் "அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி" என்று உபாயபூதன் பண்ணும் ஸர்வபாபவி மோசநத்தையும், விரோதிகளானவை போனவிடம் தெரியாதபடி தன்னடையே விட்டுப்போயிற்றென்கையாலே "மாசுச:" என்கிற பதத்தாலே பலிதமான நிர்பரத்வாநுசந்தானத்தையும் சொல்லுகையாலே, திருவந்தாதி சாமசுலோகத்தோடு (அ) சேரும்.

(சுக) திருவாய்மொழி பத்து பத்தாலும் த்வயத்தின் (ஆ) பத்தர்த்தங்களும் விசதம்; அவையாவன:—

க. ஸ்ரீய:பதித்வமும்.

உ. நாராயணத்வமும்.

ந. நாராயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரணாரவிந்த யுகளமும்.

ச. அதினுடைய ப்ராபகத்வமும்.

ரு. சேதனகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநா கர்ப்ப விச்ரம்பமும்.

சூ. லக்ஷ்மீதத்வல்லபநுடைய நிகிலாத்ம கைங்கர்ய ப்ரதாநார்த்த நித்திய ஸம்பந்தமும்.

எ. கைங்கர்ய ப்ரதிசம்பந்தியான ஈச்வரனுடைய நிரதிசய போக்யதையும்.

அ. ஸர்வஸ்வாமித்வமும்.

சூ. நித்யகைங்கர்யமும்.

கo. கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணமும்.

(அ) சரமஸ்லோகம் இரண்டுவாக்யமாய், பதினொரு பதமாய், முப்பத்திரண்டு திருவக்ஷரமா யிருக்கும்.

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ
அஹம்த்வா ஸர்வபா பேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாசுச:.

(ஆ) த்வயம் இரண்டுவாக்யமாய், ஆறுபதமாய் இருபத்தைந்து, திருவக்ஷரமாயிருக்கும். அதில் பூர்வவாக்யம் பதினைந்து அக்ஷரமுள்ளதாயும் உத்தரவாக்யம் பத்தக்ஷரமுள்ளதாயு மிருக்கும்.

ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம:

(௬௨) மந்த்ர ச்லோகங்களில் சுருக்கமான அர்த்த விசேஷங்களை த்வயத்திலே விவரிக்குமாறுபோலே, பூர்வ ப்ரபந்த த்ரயத்திலும் சங்க்ரஹேண சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தையும், இருபது திருவாய்மொழியில் ப்ரதிபாதித்து, மற்ற எண்பதில் அதை விஸ்தரித்து, உபேயம் ஒன்றுமே, இதற்கு ப்ரமேயமென்று சொல்லும்.

(௬௩) மற்றும் வேதாந்த சங்க்ரஹ தாத்பரியங்களான அர்த்தங்கள் பலவும் இவற்றிலே உண்டு.

(௬௪) லோகத்தைத் திருத்தக்கோலுகிற ஸர்வேஸ்வரன் நினைவாலே, சர்வ லக்ஷணோ பேதமாய்த் தலைக்கட்டின ப்ரபந்தமாகையாலே, மங்களாசாரங்களும், கோல் விழுக்காட்டாலே பலித்தன.

(௬௫) வாச்சியனான ஈஸ்வரனோடு பல படியாலும் சாம்யத்தை உடைத்தாகையாலே, அவன்தான் லோகரக்ஷணார்த்தமாகப் பத்தவதாரமாய் அவதரித்தாற்போலே, இதுவும் லோக ரக்ஷணார்த்தகமாகப் பத்து பத்தாக அவதரித்தது.

(௬௬) ஆயிரத்தையும் சேரச்சொன்னது, பத்துக்கள் தோறும் வெவ்வேறு கருத்தாயும், ஆயிரத்துக்கும் சேர ஒருகருத்தாயும் இருக்கும்படி நினைத்து.

(௬௭) பாட்டுகளுக்கு க்ரியையிலும், பத்துப்பாட்டுக்கு நிதானஞ் சொல்லும் பாட்டிலும், தாத்பர்யமா யிருக்குமோ பாதி, நூறு பாட்டுக்கும், பரோபதேச பரமான பத்துப் பாட்டிலே, தாத்பர்யமா யிருக்கும்.

(௬௮) பகவத்பரங்களாயும், தத்பக்தரான ஜீவபரங்களாயும் அவ், வக்குணங்களை ப்ரதிபாதிக்கிறவை ஆச்ரயணவிஷயத்தையும், ஆச்ரயண கர்த்தாவையும், சொல்லுகிறதாகையாலே, ஆச்ரயணவிதிக்குச் சேஷங்கள் இத்தனை.

(௬௯) பரத்வாதி குணவிசிஷ்டனான ஈஸ்வரன், தமக்குப் பண்ணிக்கொடுத்த பேறுகளைப் பலரும் அறிந்து, வாழவேண்டுமென்று பத்து பத்தாலும் ப்ரகாசிப்பித்தருளுகிறார்; எங்ஙனேயென்னில், ஈஸ்வரன் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே அஜ்ஞானத்தை ப்போக்கி ப்பக்திரூபா பந்நஜ்ஞானத்தை த்தந்து, இன்னும் இவர் நம்மை விஸ்மரிக்கக்கூடும்

என்று தன்பக்கல் அவனுக்குண்டான ஸ்நேஹத்தாலே நிரந்தரவாசம்பண்ண, அத்தாலே ஸம்சய விபர்ய விஸ்ம்ருதி ரஹிதமான தத்வக்யாநத்தை உடையரான ஆழ்வார், அவனுடைய குணங்களைத் தம்முடைய திருவுள்ளத்தோடே அநுபவிக்கவொண்ணாமையாலே, ஸம்ஸாரிகளையும் பார்த்து, த்யாஜ்யமான ஸம்ஸாரத்தின் தோஷத்தையும், உபாதேயமான பகவத்விஷயத்தின் குணத்தையும், தம்பஜநப்ரகாரத்தையும், பஜநாலம்பநமான மந்த்ரத்தையும், உபதேசித்து, ப்பஜனீயனனவனுடைய சவுலப்யம், அபராத ஸஹத்வம், சீலவத்தை, ஸ்வாராததை, ஆச்ரயணரஸ்யதை, ஆர்ஜவம், சாத்மிய போக ப்ரதத்வம், பரபக்தி பரிகணைகளுக்கு ஒக்க முகம் காட்டும் சாம்யமாகிற குணங்களைத் தரிசிப்பியாநின்றுகொண்டு, அவ்வழியாலே பஜநத்தினுடைய சுகரத்வ ரஸ்யதைகளையும், பஜிக்கவே ஸர்வபலங்களும் சித்திக்கு மென்னுமத்தையும், பஜநோபக்ரமத்திலே பஜநவிரோதிகளடைய நசிக்குமென்றும் அத்தையும் அறிவித்து, ஆனபின்பு ஸ்ரீகீதையில் அவன் அருளிச்செய்த பக்திமார்க்கத்திலே நின்று, தேவதாந்தரங்கள் பக்கல் பரத்வ சங்கா நிவர்த்திபூர்வகமாக அவன்விஷயமான க்யாநத்தைக்கொண்டு, அவன்பக்கலிலே அநந்யப்ரயோஜந பக்தியைப் பண்ணுங்களென்று, தமக்கவன் மயர்வற மதிநலமருளினற்போலே, தாமும் இவர்களுக்கு அக்யாநநிவர்த்தி பூர்வகமாக க்யாநபக்திகளை உபதேசத்தாலே யுண்டாக்கிப் பஜநத்திலே மூட்டுகிறார்.

அழகிய மணவாளப்பெருமாள்நாயனர் திருவடிகளேசரணம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஆசார்ய ஹ்ருதயசார சங்க்ரஹம்.

ச-ம் ப்ரகரணம்.

(க) முதல்பத்தில், ஸர்வேஸ்வரன் மயர்வற மதிநலம் அருளினாற்போலே, சம்சாரிகளுக்குத் தம்முடைய கிருபையாலே தத்வ ஹித புருஷார்த்த விஷயமான அக்யாநத்தைப் போக்கி, க்யாநபக்திகளை யுபதேசித்துப் பகவத் பஜநத்திலே மூட்டுகிறார்.

(உ) இரண்டாம்பத்தில், ஸர்வகாரண பூதனை ஸர்வேச்ரன் கிழில் பத்திலே தமக்கு அக்யாத க்யாபநம் பண்ண, வவனாலே தத்தக்யாநரான இவர், அந்தக்யாநத்திற்குப் பலமான மோக்ஷத்தை அப்போதே பெற வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பெருமையாலே, யவஸந்நராக; இவருடைய வவஸாத மெல்லாம் தீரும்படி அவன் வந்து சம்ச்லேஷித்து, அந்த ஸம்ச்லேஷத்தால் வந்தப்ரீதியை யுடையனாய், அந்த ப்ரீதி இவர் ஒருவர் அளவில் பர்யவஸியாதே இவரோடு பரம்பரையாய்ச்சம்பந்தமுடையா ரளவும் வெள்ளமிட்டு, அந்த ப்ரீதியாலே பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தை இவற்கு அவன் கொடுக்கத்தேட, அந்த மோக்ஷத்தை அவனுடைய சேஷித்வத்துக்கும் தம்முடைய சேஷத்வத்துக்கும் அநுகுணமாம்படி நிஷ்கர்ஷித்தவர், ஆஸ்ரயணீயனை அவனுக்கு க்கீழ் உக்தமான பரத்வத்தை நிலைபெறுத்துவனவான லக்ஷணங்களை வெளியிட்டு, ததநுகுணமான வசந ப்ரத்தி யக்ஷங்களையும் தரிசிப்பித்து, ஆஸ்ரயிப்பார்க்கு ருசி பிறக்கை க்காகத்தியாஜ்ய மான ஸம்ஸாரத்தினுடையதுக்கமும், ப்ராப்யமான மோக்ஷத்தினுடைய ஆநந்தமும், ஸம்ஸார நிவர்த்தி பூர்வக மோக்ஷ ப்ராப்திக்கு உறுப்பான சாதநத்தினுடைய ரஸமும், முன்னாக விதிக்

கிற சகுண ப்ரம்ஹோபாசநத்தை நிஷித்தா நுஷ்டானங் களுடைய த்யாக பூர்வகமாக க்ஷேத்ரவா ஸாத்யங்கங்களு டனே கூட்டுகிருர்.

(௩) மூன்றம்பத்தில், இப்படித் தம்முடைய உபதேசத்தாலே நிஹீந தரதையாலே ஸ்வவ்ருத்தியாகச் சொல்லப்பட்ட அப்ராப்த விஷய சேவையை மாற்றி, இவ்விஷயத்தைச் சேவிப்பா னென்றும், எத்தைப்பற்றி இவ்விஷயத்தைச் சேவிக்கப்படா தொழிகிற தென்றும், விதிக்கும்படி ப்ரா ப்தமான இவ்விஷயத்திலே தம்முடைய வாசிக வ்ருத்தி யிலே மூட்டுகிருர்.

(௪) நாலாம்பத்தில், ப்ரயோஜநாந்த்ர, தேவதாந்த்ர, பாஹியகு துர்ஷ்டி மதங்களில் விரக்தி பூர்வகமாக, ஆச்ரயணத்தை ருசிப்பிக்கிருர்.

(௫) அஞ்சாம்பத்தில், ப்ராப்ய வைலக்ஷண்யத்தை விஷயீகரி த்த பக்தியை உபதேச முகேந உண்டாக்கிருர்.

(௬) ஆறம்பத்தில், தம்முடைய உக்தியாலும், அநுஷ்டாநத் தாலும், தமக்கிந்தச் சித்தோபாயத்திலுண்டான நிஷ்டை யை ப்ரகாசிப்பிக்கிருர்.

(௭) ஏழாம்பத்தில், ப்ராப்யத்தினுடைய அவதி ததீயவிஷயமே ன்றும் ப்ராபகத்தினுடைய அவதி அர்ச்சாவதார சுலபனான வனே என்றும் இவ்வார்த்தையைத் தம்முடைய உகப்பா லே வெளியிட் டருளுகிருர்.

(௮) எட்டாம்பத்தில், ப்ராப்யமாக உபதேசித்த அர்ச்சாவதார பூமியே, துக்க நிவர்த்தகமு மென்கையாலே, ப்ராப்யமான விஷயமே ப்ராபகமேன்று தரிசிப்பித்து பிராப்யவிஷயமொ ன்றிலுமே தத்பர ராக்குகிருர்.

(௯) ஒன்பதாம்பத்தில், சேதநருடைய ருசிக்கநுகுணமான உபா யங்களெல்லா வற்றையும் உபதேசித்தாற்போலே, இவ ரும் ப்ராப்தி அணித்தான வாறே ஸம்ஸாரிகள் ஒருவரும் இழக்க வொண்ணுது என்கிற க்ருபையாலே, எல்லாம் எடுத்துரைத்து, அவ்வோருடைய அதிகா ராநுகுணமாக உபாயங்களை யெல்லாம் உபதேசித் தருளுகிருர்.

(௧0) பத்நாம்பத்தில், தமக்கு பரதந்த்ரனாய்த் தம்மைப் பரமபதத்திலே கொண்டுபோவதாக அத்யாதரம் பண்ணுகிறவனை, அநாதிகாலம் தம்மை ஸம்ஸாிக்கவிட்டு உபேக்ஷித்திருந்ததற்கு ஹேதுவேதென்று மடியைப்பிடிக்கத் தாமும் விசாரித்து, ஸர்வக்யரான இவருக்குப் போக்கடி சொல்லுகை அரிதென்று, அர்ச்சராதி மார்க்கத்தையும், அங்குள்ள

க. ஸ்ரீகுஹப்பெருமாள்.
உ. சபரி.
௩. ஸ்ரீஜடாயுவு.
௪. மஹாராஜர்.
௫. வாநரவர்க்கங்கள்.
௬. சிந்தயந்தி.
௭. ததிபாண்டர்.
௮. தயிர்த்தாழி.
௯. கூனி.
௧0. ஸ்ரீமாலாகாரர்.
௧௧. கண்டாகர்ணன்.
௧உ. ருஷிபத்தினிகள்.
௧௩. ஸ்ரீப்ரஹ்லாதன்.
௧௪. ஸ்ரீவிபீஷணாழ்வான்.
௧௫. ஸ்ரீகெஜேந்த்ரஆழ்வான்.
௧௬. சுமுகன்.
௧௭. கோவிந்தசுவாமி.
௧௮. மார்க்கண்டேயன்.

இவர்களாகிற நாநாஜாதிதையாலும், இப்படிப் பதினெட்டாக எண்ணலாம்படி யிருக்கையாலும், பதினெட்டு நாடன் பெருங்கூட்டம்போலே இருந்துள்ளவித்திரளினுடைய ஸத்காரத்தையும், அவ்வழியாலே போய்ப் பெறும் ஸ்வசரண கமல ப்ராப்தி பரியந்தமாகக் காட்டிக்கொடுக்க, அதுமானஸா நுபவ மாத்ரமாய்ப், பாஹிய கரண யோக்யமல்லாமையாலே, அத்தை யதாவாக ப்ராபிக்க வேண்டுமென்றுபதறி, அவனுக்கு அறுக்கவொண்ணாத திருவாணையிட்டுத்தடுத்து, அது பெறுவாணை யல்லாமைக்கு ஹேதுக்களையும் சொல்லும்படியான தம்முடைய பரம பக்தியெல்லாம், குளப்படி யாம்படியான அபிநிவேசத்தோடே வந்து, தம்முடைய தாபங்களைப்போக்கின ப்ரகாரத்தை வெளியிடுகிறார்.

(௧௧) ஆர்த்தி பரம்பரை யை விளைத்து பரமபக்தி பரியந்தமான அதிகார பூர்த்தியை உண்டாக்குகையே ப்ரதானம்.

(௧உ) பரம ஆர்த்தியாலே யிறே ப்ரபத்தி யதிகாரம் பரிபூர்ணமாவது; ஆகையாலே ஹேத் வந்தரங்க ளெல்லாம் அப்ரதானங்கள்.

(கங) ஆசைப்பட்டபடியே, அர்ச்சிராதி கதியாலே தேசவிசேஷத்திலே போய்ப் பகவத் ஸ்வரூபாதிகளைப் பரிபூர்ணநுபவம் பண்ணுகிற, நித்ய சூரிகள் திரளிலே கூடியிருந்தாராக த்தரிசித்து ப்பேசின "சூழ்விசும்பணிமுகில்" பூர்ணமான பாக்யானம்.

(கச) பக்தியினுடைய சரமாவதி யானது பரமபக்தி.

(கரு) சாக்ஷாத் கரித்தவனை அப்போதே கிட்டி அநுபவிக்கப்பெறுவிடில் முடியும்படியான பரம பக்தி ப்ராப்ய அவஸ்தையாகவும் சொல்லப்படும்.

(கசு) க்யான ப்ரதமான பகவத் ப்ரஸாதமே மோக்ஷ ப்ரதமென்பது இப்ரபந்தத்துக்குத் தாத்பரியம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.
அழகியமணவாளப்பெருமாள்நாயனார்திருவடிகளேசரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.
அண்ணன்திருவடிகளேசரணம்.

தந்தருள வேணுந் தவத்தோர் தமப்பனாய்
வந்தமு டும்பை மணவாளா—சிந்தையினால்
நீயுரைத்த மாறன் நினைவின் பொருளனைத்தென்
வாயுரைத்து வாழும் வகை.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆசார்ய ஹ்ருதயசாரசங்க்ரகம்.

அநுபந்தம்.

(க)

திருவாய்மொழி பாட்டுகளின் விஷயஸூசிகை.

க-ம் பத்து.

பகவத் கைங்கர்யம் புருஷார்த்த மென்றறுதியிட்டார்.

க-ம் திருவாய்மொழி—உயர்வு

எம்பெருமானது கல்லியாண குணங்களையும் பர்த்வத் தையும் அருளிச்செய்கிறார்.

க. கல்யாணகுண யோகத்தையும் நித்தியவிபூதி யோகத்தையும், விக்கிரஹவை லக்ஷண்யத்தையும், சொல்லுகிறார்.

உ. இவற்றுக்கு ஆஸ்ரயமான திவ்யாத்மஸ்வரூபம் சேதநாசேதந விலக்ஷணமென்கிறார்.

ங. நித்யவிபூதியோபாதித தீயத்வாகாரத்தாலே அவனுக் கந்தரங்கமாய்த் தோற்றுகிற லீலாவிபூதியோகத்தை அநுபவித்தார்.

ச. அந்த லீலாவிபூதியினுடைய ஸ்வரூபம் அவனதீநமென்றார்.

ரு. அதினுடைய ஸ்திதியும் அவனதீனையென்றார்.

சு. ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் பகவததீனமென்றார்.

எ. சரீர சரீரிகளுக்குண்டான லக்ஷணம்ஜகத்துக்கும் ஈஸ்வரனுக்கு முண்டாகையாலே இதற்கும் அவனுக்கும் சொன்ன வைக்யத்துக்கு நிபந்தனம் சரீராத்மபாவ மென்றார்.

அ. குதுருஷ்டிகளை நிரசித்தார்.

கூ. சூன்யவாதியை நிரசித்தார்.

க0. வ்யாப்திஸௌகர்யத்தை அருளிச்செய்தார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியில் அன்வயித்தவர்களுக்குத் தாம் பெற்றபேறே பேறென்னுமிடத்தை அருளிச்செய்கிறார்.

௨ - ம். திருவாய்மொழி—வீடு

அப்படிப்பட்ட பரத்வத்தில் ஸகலரும் ப்ரதிபத்திபண்ணி உஜ்ஜீவியுங்களென்றருளிச்செய்கிறார்.

௧. வ்யதிரிக்தவிஷயங்களைவிட்டுச் சர்வேஶ்வரன் பக்கலிலே ஆத்மாவை சமர்ப்பிக்க இசையுங்கோ ளென்றார்.

௨. வ்யதிரிக்த விஷயங்களினுடைய தோஷதர்சநம் பண்ணவே விடலா மென்றார்.

௩. த்யாஜ்யாம்ஶத்தைச்சுருங்க வருளிச்செய்தார்.

௪. பற்றப்படுகிற விஷயத்தினுடைய நன்மையை அருளிச்செய்தார்.

௫. பற்றுமிடத்தில் வருமந்தராய பரிஹாரத்தை அருளிச்செய்தார்.

௬. அவன்சங்கஸ்வபாவ னென்றார்.

௭. சம்பந்தக்யாநம் உண்டாகவே பொருந்தலாமென்றார்.

௮. வேறுபகரணம் தேடவேண்டா அவன்தந்த கரணங்களை அவனுக்காக்க வமையுமென்றார்.

௯. அப்படிசெய்யவே பஜநவிரோதிகள் தன்னடையே விட்டுப்போமென்றார்.

௧௦. பஜநத்துக்காலம்பனமானமந்திர மின்னதென்றார். இதுதான் வாய் வந்தபடிச் சொல்லிற்றொன்றல்ல, சேதனருடைய ஹிதத்துக்கி டாக ஆராய்ந்து சொல்லப்பட்டதென்னுதல், அன்றிக்கே இது தான் ஹிததமமா யிருப்பதொன்றாகையாலே யெப்போது மொக் கவோரப்படுவதொன் றென்னுதல்.

௧௧. நிகமத்தில்,பகவத்குணங்களைத் தொடுத்தவாயிரந் திருவாய்மொழியினு மாராய்ந்து சொல்லப்பட்டன இவைதன்னை நெஞ்சிலே சேரொன் கிறார்.

---

௩ - ம். திருவாய்மொழி—பத்துடை.

ஸர்வேஶ்வரனை அதிநீசனான சேதநன் ஆஶ்ரயிக்கும் படி எங்ஙனேயெனில், அடியார்களிடத்தில் அவ னுக்கிருக்கும் சௌலப்யகுணத்தை யருளிச் செய்கிறார்.

௧. ஈஶ்வரன் சுலபனென்றார்.

௨. கிஂப்ர ஸ்துதமான சௌலப்யத்தை ஸப்ப்ரகாரமாக அருளிச்செய் தார்.

௩. அவனுடைய வவதாரரஹஸ்யம் ஒருவர்க்கும் அறிய நிலமல்லவென் றார்.

௪. அப்படிகள்தான் ஆஸ்ரிதருக்கு அறியலாய் அநாஸ்ரிதருக்கு அறியப் போகாதென்றார்.

௫. இப்படிப்பட்டவனை அவனருளிச்செய்த பக்திமார்க்கத்தாலே ஆஸ்ர யியுங்கோளென்றார்.

௬. ஆஸ்ரயணீயவஸ்து இன்னதென்றும் ஆஸ்ரயிக்கும் ப்ரகாரம் இன்ன தென்று மருளிச்செய்தார்.

௭. நீங்கள் மந்தாயுஸ் ஸுங்களாகையாலே விளம்பிக்க வொண்ணாது கடு கவாஸ்ரயியுங்களென்றார்.

௮. ஆஸ்ரயிக்கவே விரோதிகள் அடங்கலும் நசிக்குமென்றார்.

௯. ப்ரம்ஹேசாநாதிகளுக்கும் காரண பூதனானவன் வந்தவதரிக்கைக்கு ஹேதுவருளிச்செய்தார்.

௧0. இப்படிச் சுலபனானவனை த்ரிவிதகரணங்களாலும் அனுபவிக்கப் பாரித் தார்.

௧௧. நிகமத்தில், இதை அப்யஸித்தார்க்குப் பலஞ்சொன்னார்.

---

௪ - ம். திருவாய்மொழி—அஞ்சிறை.

பிராட்டி தன்மையையடைந்து, ஈஶ்வரனுடைய அப ராத ஸஹத்வமே ஹேது வாகக்கொண்டு, பட்சி களைத்தூது விடுகிறார்.

௧. ஒரு நாரையைத் தூது விட்டாள்.

௨. அங்குப்போனால் சொல்லும் பாசுரத்தைச் சிலகுயில்களுக்குச் சொன் னாள்.

௩. நான் பண்ணினபாபமேயோ மாளாததென்று சொல்லுங்களென்று சிலவன்னங்களை யிரந்தாள்.

௪. சிலவன்றில்களைப் பார்த்து என்தசையை அங்கே சென்று சொல்ல வல்லீர்களோ மாட்டீர்களோ வென்றாள்.

௫. சிலகுருகுகளைப் பார்த்துத் தன்னுடைய நாராயணத்வம் ஒருவாய்ப் போகாமே நோக்கிக்கொள்ளச் சொல்லுங்களென்றாள்.

௬. ஒருவண்டை குறித்துத் தம்முடைய நாராயணத்வத்துக்கு ஒரு ஹாநி வாராமே யெங்கள் சத்தையுங் கிடக்கும் படி இத்தெருவே யெழுந்தருளச் சொல்லென்றாள்.

௭. ஒரு கிளியைக்குறித்து இத்தலையில் அபராதத்தையே பார்க்குமத்த னையோ; தம்முடைய வபராதஸஹத்வத்தையு மொருக்கால் பார் க்கச் சொல்லென்றாள்.

அ. தானுருவினவாறேமுன் கையிலிருந்த பூவையும் முருவ நானே முடியாநின்றேன் நீயுனக்கு ரக்ஷகனைத் தேடிக்கொள்ளென்றாள்.

௯. ஒருவாடையைக் குறித்து என்தசையை அங்கே சென்றறிவித்தால் அவன் "நமக்கவள் வேண்டா" என்றானாகில் என்னை வந்து முடிக்கவேணு மென்றிரந்தாள்.

௧௦. தன்னெஞ்சைக் குறித்து நங்கார்ய மோரறுதி பிறக்குமளவும் நீயவனை விடாதே கொள்ளென்று போகவிட்டாள்.

௧௧. நிகமத்தில், இத் திருவாய்மொழியை அப்யஸித்தார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

---

௪ - ம். திருவாய்மொழி—அஞ்சிறை.

(ஸ்வாபதேசம்.)

௧. ஆசாரியனுடைய ஜ்ஞாநவைபவத்தை அருளிச்செய்தார்.

௨. மதுரபாஷியா யிருக்குமென்றார்.

௩. சாராசார விவேகஜ்ஞனென்றார்.

௪. விக்ரஹசவுந்தரியத்தை யநுசந்தித்தார்.

௫. நினைத்தது கிட்டுமளவும்சலியாத சுத்தஸ்பாவ னென்றார்.

௬. பகவதேகபோகனாயிருக்கும் ரூபவானுமாய் க்ருபாவானுமாய்க் கம்பீர ஸ்வபாவனுமா யிருக்குமென்றார்; மதுகரமிறே.

௭. தான் ஸர்வஜ்ஞனாகிலும் ஆசார்யர்கள் பக்கல்கேட்ட வார்த்தையல்லது அருளிச்செய்யானென்று அவனுடைய ஆப்தியை அநுசந்தித்தார்.

அ. ஆசார்யனுடைய தேஹயாத்ரையே யிவனுக்கு ஆத்மயாத்ரை யென்றார்.

௯. ஆசார்யசம்பந்தமாத்ரமே சத்தாதாரகம், இதர ஸ்பரிசம் சத்தாபாதகமென்கிறார்.

௧௦. இப்படி ஜ்ஞாநவானுமாய் மதுரபாஷியுமாய்ச் சாராசார விவேகஜ்ஞனுமாய் தர்ஶநீயனுமாய்ச் சுத்த ஸ்வபாவனுமாய் க்ருபாகாம்பீர்யங்களையு முடையவனாய்ச் சிரோபாசித சத்வ்ருத்த சேவ்யனுமாய் ஸச்சிஷ்ய னாகையாலே; யேவம்பூதனான ஆசார்யனுடைய தேஹயாத்ரையே தனக்கு ஆத்மயாத்ரையாய் இதரஸ்பரிசமும் தனக்குப் பாதகமாய் இப்படிச் சதாசார்ய சேவை பண்ணுகையாலே பகவத் கைங்கரியத்திலே ப்ரவணமாய் "நின்னிடையே னல்லேனென்று நீங்கி ஓர்கோலநீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பான்நாண்மலர்ப்பாதம்" அடைந்தது தன் திருவுள்ளமென்று தலைக்கட்டினார்.

ரு-ம் திருவாய்மொழி—வளவேழ்.

ஈஸ்வரன் தன்னுடைய சீலகுணத்தாலே, ஆழ்வாருடைய விச்லேஷத்தை ஸஹிக்கமாட்டாமல் சேர்த்துக் கொண்டதை யருளிச்செய்தார்.

க. "அயோக்கியன்" என்றகன்றார்.

உ. அகலுகைக்குத்தானு மதிகாரியல்லே னென்றார்.

ந. சீலகுணத்தைக்காட்டித் துவக்கத் துவக்குண்டார்.

ச. அகலவோட்டுவர்களோ உடையவர்கள் என்றார்.

ரு. உடைய உன்திருவடிகளைக் கிட்டும்படி பார்த்தருள வேணுமென்றார்.

சு. அவன் அனைக்ஷணம் தாழ்க்கமுடியப்புகா நின்றே னென்றார்.

எ. அவ்வளவிலவன் வரக்கொள்ள, அயோக்கியனென் றகன்றார்.

அ. திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி யும்மோட்டை ஸம்ச்லேஷம் தாரகமென் றானவன்.

கூ. அப்படியல்ல இது நஞ்சென்ன, நஞ்சுதானே நமக்குத் தாரகமென்றார்.

க0. தம்மை இசைவித்துப் பரமபதத்தைக் கொடுக்கத்தொடங்கினா னென்றார்.

கக. நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

சு-ம். திருவாய்மொழி—பரிவதில்.

ஈஸ்வரனிடத்தி லிப்படிப்பட்ட குணமிருப்பதை யறியாமல், ஆத்மாக்கள் நரகத்தையடைவத நியாயமென்று, ஈஸ்வரன் துராராத்யனன்று, எல்லாரு மாஸ்ரயித்து உஜ்ஜீவியுங்க ளென்றார்.

க. ஆஸ்ரயிக்குமவனுக்கு த்ரவ்யநியதியில்லையென்றார்.

உ. அதிகாரிநியதியில்லை யென்றார்.

ந. தம்முடைய கரணத்ரயமும் பகவத்விஷயத்திலே ப்ரவணமானபடியை அருளிச்செய்தார்.

ச. நித்யஸூரிகளைப்போலே அதுதானே யாத்ரையாயிற் றென்றார்.

ரு. தன்னையே ப்ரயோஜனமாகப்பற்றினார்க்கு, அவன்நிரதி சயபோக்ய னென்றார்.

சு. இப்படி போக்யபூதனனவனை விட்டு ப்ரயோஜனத்தைக்கொண் டகலுவதே! யென்று ப்ரயோஜனாந் தரபரனை நிகர்ஹித்தார்.

எ. இவனையே ப்ரயோஜனமாகப் பற்றினார்க்குக் காலக்ஷேப மின்னதென்றார்.

அ. ப்ராப்திவிரோதிகளையு மவன்றானே போக்குமென்றார்.

கூ. இதுகூடுமோ! வென்று ஶங்கையாக; வெறுமவன்படியையோ பார்ப்பது, அருகிருக்கிறார்படியையும் பார்க்கவேண்டாவோ வென்றார்.

கo. இவர்கள் எத்தனைகாலம்கூடி விரோதிகளைப்போக்குவதென்ன, க்ஷண காலத்திலே யென்றார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யசிக்கவே ஸம்ஸரிக்கவேண்டாவென்றார்.

எ-ம். திருவாய்மொழி—பிறவி.

ஸ்ராராத்யனான ஈஸ்வரனுடைய ஆராதனம் ஸுகரூபமாயிருக்கு மென்றருளிச் செய்தார்.

க. கேவலனை நிந்தித்தார்.

உ. அநந்யப்ரயோஜநர் திறத்திலிருக்கும்படியைச் சொன்னார்.

ந. இவ்விரண்டுகோடியிலும் நீரானென்ன, உன்னை அநுபவியாசிற்க விரோதிகழிந்தவன், நானென்றார்.

ச. என்னை இவ்வளவாகப் புகிரநிறுத்தினவனை, என்ன ஹேதுவாலே விடுவதென்றார்.

ரு. திருவாய்ப்பாடியில் பெண்கள் கிருஷ்ணனை விடுமன்றன்றே! நானவனை விடுவதென்றார்.

சு. அவன்தான் விடிலோவென்ன, அவன்போக்கை யிசையேனென்றார்.

எ. நீர்தாம் விடிலோ வென்ன, அவனென்னைப் போகவொட்டா னென்றார்.

அ. இந்நாள்வரைபோக விட்டிலனேவென்ன, நப்பின்னைப் பிராட்டிபுருஷகாரமாகப்பற்றின வென்னை, இனியவனாலும் விடவொண்ணாதென்றார்.

கூ. இப்ரஸங்கந்தானென், ஒரு நீராகக்கலந்தத்தை யொருவராலும் பிரிக்கவொண்ணா தென்றார்.

கo. அவனுடைய கல்யாணகுணங்களை ஸர்வகாலமு மநுபவித்து ஶ்ரமமுடையே னல்லேனென்றார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யசித்தார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

அ - ம் திருவாய்மொழி—ஓடும்.

ஸுகரூபமான ஆஸ்ரயணமுடைய ஈஸ்வரன், கரணத்ரயத்தாலும் கிட்டமாட்டாத சேதநரிடத்தில், ஆர்ஜவகுணத்தோடே ஆஸ்ரித ஸம்ஶ்லேஷம் பண்ணிக்கொண்டிருப்பரென்று அருளிச்செய்தார்.

க. நித்ய விபூதியிலுள்ளாரோடு செவ்வையனாய்ப் பரிமாறும்படியை அருளிச் செய்தார்.

உ. லீலாவிபூதியிலுள்ளாருடன் செவ்வையனாய்ப் பரிமாறும் படியை அருளிச் செய்தார்.

ங. இரண்டு விபூதியிலுள்ளார்க்கும் முகங்கொடுக்கைக் காகத்திருமலையிலே நிற்கிறபடியை அருளிச்செய்தார்.

ச. அவ்வார்ஜவகுணம் தம்மளவிலே பலித்தபடியை யருளிச்செய்தார்.

ரு. நானவன் குணங்களை விரும்புமாப்போல அவனு மென்தேஹத்தை விரும்பா நின்றானென்றார்.

சு. என்னுடைய தேஹத்தினளவன்றி என்னுடைய வாத்மாவையும் கைக்கொண்டானென்றார்.

எ. அவ்வளவுமல்ல நித்யவிபூதியில் பண்ணுமாதரத்தை யென்பக்கலிலே பண்ணினானென்றார்.

அ. என்னைச் சுட்டி அவன்பிறந்த பிறவிகளுக்கு முடிவில்லை யென்றார்.

கூ. இப்படிப் பிறந்த பிறவிகள்தோறுந் தன்னை ஶ்வர்யத்தோடே வந்தவதரித்தானென்றார்.

கO. அவனுடைய ஆர்ஜவகுணத்தைப் பேசும்போது வேதமே பேசவேண்டுமென்றார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி ஸம்ஸாரிகளுக்கெப்போது மொக்கவநுசந்திக்கப்படு மென்றார்.

கூ - ம். திருவாய்மொழி—இவையும்.

ஆர்ஜவகுணாநுஸந்தானம் பண்ணின தம்மிடத்தில், ஈஸ்வரன் ஸாத்மிக்க ஸாத்மிக்க, ஸர்வாவயவஸம்ஶ்லேஷம்பண்ணின அநுபவரஸத்தை யருளிச் செய்தார்.

க. என்னுடைய பர்யந்தத்திலேவந்து நின்றானென்றார்.

உ. அதுஸாத்மித்தவாறே அருகேநின்றானென்றார்.

ந. தம்முடனேகூட நின்றானென்றார்.
ச. ஒக்கலையிலே வந்திருந்தானென்றார்.
ரு. நெஞ்சிலேவந்து புகுந்தானென்றார்.
சு. தோளிலேவந்து இருந்தானென்றார்.
எ. நாவிலேவந்து புகுந்தானென்றார்.
அ கண்ணுள்ளே நின்றானென்றார்.
கூ. நெற்றியிலே நின்றானென்றார்.
கo. திருமுடியிலே நின்றானென்றார்.
கக. நிகமத்தில், ஆக இத்தால் தம்முடனே சாத்மிக்கும்படி கலக்கையாலே அவனை விரஸாவஹித்தார், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

கo-ம். திருவாய்மொழி—பொருமா.

ஸர்வேச்வரன் பண்ணின ஸர்வாங்க ஸம்ச்லேஷத்துக்கு ஹேது வேதாகிலும் தம்மிடத்திலே யுண்டோவென்று விசாரித்து, ஒரு ஹேதுவு மில்லாமையாலே ஈச்வரனுடைய நிர்ஹேதுக உபகாரகத்வத்தையு மருளிச்செய்தார்.

க. மேல்பரக்க அருளிச்செய்யப் புகுகிறவர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்தார்.
உ. பரமபக்திக்கும் பரிகணேக்கு மொக்கமுகங் காட்டுமென்றார்.
ந. கண்டாயே அவன்ஸ்வரூப மிருந்தபடி நீயுமுன் ஸ்வரூபத்துக்குச்சேர நிற்கப் பாராயென்றார்.
ச. ஸ்வரூபாநுரூபமாக நெஞ்சுதொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடினார்.
ரு. கீழ் "எண்ணிலும்வரும்" என்றது பலத்தோடே வ்யாப்தமானபடியை நெஞ்சுக்கருளிச் செய்தார்.
சு. நாமிருவரும் இப்படியேநிற்கப்பெறில் நமக்கொரு அநர்த்தமும் வாராதென்றார்.
எ. கீழ்இவரஞ்சினபடியே விடிந்தபடிச் சொன்னார்.
அ. திருநாமஸ்ரவணத்தாலே தம்முடைய கரணங்களுக்குப் பிறந்த விக்ருதியைச் சொன்னார்.
கூ. விக்ருதராகாதே மறந்தாலோவென்ன, மறக்கவொண்ணாதென்றார்.
கo. வருந்தியாகிலும் மறந்தாலோ வென்ன, என்ஹிருதயத்திலே இருக்கிறவனை மறக்கப்போமோ வென்றார்.
கக. நிகமத்தில், கற்றார்க்குப் பலஞ்சொன்னார்.

உ - ம் பத்து.

கைங்கர்யத்தில் களையறுக்கிறூர்.

க-ம். திருவாய்மொழி—வாயுந்திரை.

பரத்வ ஸௌலப்ய ஸௌந்தர்யங்களை அநுபவித்து, அந்த வஸ்து பாஹ்ய ஸம்ச்லேஷயோகமாக வேண்டுமென்று ஆசைப்பட்டு, அது அகப்படாமையால் ஆர்த்திமிகுந்து, ஆழ்வார் தாமொருபிராட்டி அவஸ்தையை யடைந்து, அசேதநங்களையும் திர்யக்குகளையும் தம்மோடே சமதுக்கிகளாக வெண்ணித்தந் நிமித்தமாகப் ப்ரலாபித்ததை யருளிச்செய்தார்.

க. நாரையைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
உ. அன்றிலைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
ங. கடலைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
ச. காற்றைகுறித்து அநுசோகிக்கிறூர்.
ரு. மேகத்தைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
சு. சந்திரனைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
எ. இருளைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
அ. கழியைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
கூ. விளக்கைக்குறித்து அநுசோகிக்கிறூர்.
க0. மிகவுந்தளர்ந்தவளவிலே அவன் வந்து முகங்காட்ட, இனியென்னை விடாதொழிய வேண்டும் என்கிறூர்.
கக. நிகமத்தில், இந்திருவாய் மொழிகற்றூர்க்குப் பலத்தை சொல்லித்தலைக்கட்டினர்.

உ-ம். திருவாய்மொழி—தீண்ணன்.

இந்தஆர்த்தி போக்குகைக்கு ஈஶ்வரன் ஸாந்நித்யம்பண்ணி நிற்கையாலே, அந்த ஆர்த்தியெல்லாம்போய் ஸகல கல்யாணகுண ஸமர்த்திஹேதுவான பரத்வம், அவதாரத்தி லுண்டென்று பரோபதேசம் பண்ணினதை யருளிச்செய்தார்.

க. மேல்பரக்க வருளிச்செய்கிற வித்திருவாய்மொழியில் அர்த்தத்தைச் சங்ரஹேண வருளிச்செய்தார்.

உ. ங. ச. ரு. சு. எ. அ. கூ. ௧0. துக்கநிவர்த்தக னுகையாலும், சீலவானுகையாலும், சுகுமார னுகையாலும், புண்டரீகாக்ஷ னுகையாலும், ஆபத்ஸகனுகையாலும், அகடிதகட நாஸமர்த்தனுகையாலும், சிருஷ்டிஸ்திதிகளைப் பண்ணுகையாலும், ஸம்ஹாரமாகிற செயலைச் செய்கையாலும், ஈஶ்வராபிமானிகளா யிருக்கிறவர்களுடைய ஸ்தோத்ராதிகளாலும், இப்படி பஹுப்ர காரங்களாலே அவனுடைய பரத்வத்தை அருளிச்செய்கிறார்.

௧௧. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

ங-ம். திருவாய்மொழி—ஊனில்.

ஈஶ்வரன் ஸாந்நித்யம் பண்ணுகையில் ப்ரகாசமாகப் பரத்வத்தையும் அருளிச்செய்து, இந்த பகவதநுபவத்துக்கு ஸம்ஸாரிகள் ஸஹாயரன்றென்று, இதற்கு ஸஹாயபூதரான நித்ய சூரிகளோடே எப்போது கூடப்போகிறே மென்கிற ப்ரார்த்தனையை யருளிச்செய்தார்.

௧. திருவுள்ளத்தைக்கொண்டாடினார்.

உ. அத்தையும் இசைவித்த ஸர்வேஶ்வரனைக் கொண்டாடினார்.

ங. தம்நெஞ்சிற் பட்டதொரு உபகாரத்தைச் சொன்னார்.

ச. அதற்குப் ப்ரத்யுபகாரமாகவாத்ம ஸமர்ப்பணம் பண்ணி அது தனக்கனுசயித்தார்.

ரு. எனக்கு ப்ரதமசுக்ருதமும் நீயேயானபின்பு உன் திருவடிகளைக் கிட்டினேனேயன்றோ வென்றார்.

சு. இன்றோ கிட்டிற்று தேவரெனக்கு விசேஷகடாக்ஷம் பண்ணின்வன்றே பெற்றேனே யல்லேனோ வென்றார்.

எ. அவனுடைய போக்யதையை அநுஸந்தித்து உன்னைப்பிரியில் தரியேனென்றார்.

அ. இப்படி நிரதிசயபோக்யனானவனை யெளியதொரு விரகாலே லபிக்கப்பெற்றே னென்றாராதல்; அன்றியே அநேககாலங்கூடிப்பண்ணி லபிக்கக்கடவ தபப்பலத்தை அவனைப் பின்சென்று எளிதாக லபித்தேனென்னுதல்.

கூ. என்னுடைய சகல க்லேசங்களும் போம்படி அநுபவித்துக் களித்தேனென்றார்.

க0. இப்படி இவனை அநுபவித்துக்களிப்பார் திரளிலே போய்ப் புகப்பெறு வதெப்போ தென்றார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியைச் சாபிப்பிராயமாக வப்யசித்து நாலுநாளும் நால்வரிருவர் உள்ளார் கூடியிருந்து அநுபவிக்கப் பாருங்கோளென்றார்.

சு-ம். திருவாய்மொழி—ஆடியாடி.

பிரார்த்தனை சித்தியாதபடியினாலே, இந்த ஆழ்வார் ஒருபிராட்டி அவஸ்தயை யடைந்து மோஹித்திருக்கையில், அந்த நாயகியினுடைய அவஸ்தையைத் தாய்சொல்லுகிறதாக வருளிச்செய்கிறார்.

க. ஆஸ்ரிதர் ஆபத்தேச் செப்பேடாக உதவும் ஸ்வபாவனுனவன் இவருடைய ஆபத்துக்கு வந்து தவுகிறில னென்றாள்.

உ. "விரோதியுண்டே" என்று நினைவாகவாணனுடைய பாஹுவனத்திலும் வலிதோ இவள் விரோதி யென்றாள்.

ந. இப்படிச்செய்ய நினைத்த நீர் முன்பச்செயலை யென்றிய செய்தீரென்றாள்.

ச. அது பொறுக்கமாட்டாமல் அது தன்னையே உபகாரமாகச் சொல்லாநின்று னென்றாள்.

ரு. அவ்வளவிலும் வாராமையாலே நிர்தய னென்றாள் திருத்தாயார்.

சு. அது பொறுக்கமாட்டாமல் கெடுவாய் ஆகரத்தில் தகவு மறுக்குமோ அது நங்குறை காணென்கிறளென்கிறாள்.

எ. அவன் குணஹானிதன்னையே குணமாகக் கொள்ளும்படி இவளை வஞ்சித்தா னென்றாள்,

அ. உம்மை அபாஸ்ரயமாகப் பற்றின விவள்படும் பாடேயிது வென்றாள்.

கூ. இவள் பேற்றில் நீர் செய்தருள நினைத்திருக்கிறதென் என்றாள்.

க0. சேஷித்தது நோக் கொன்றுமே யாயிற்று, இதொன்றையும் நோக்கிக் கொள்ளீரென்றாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யசித்தார்க்குப் பலஞ் சொல்லித்தலைக் கட்டினார்.

ரு-ம். திருவாய்மொழி—அந்தாமத்து.

இவ்வார்த்தி போக்குகைக்கு ஈஶ்வரன் ஸம்ச்லேஷிக்கையாலே, அந்தத்தாபம் நிவர்த்தாமய், ஈஶ்வரனுடைய திவ்ய பூஷண திவ்யாயுத திவ்யாவயவ ஸௌந்தர்யத்தையும் நித்ய ஸூரிசேவையையும் அநுஸந்தித்ததை யருளிச்செய்கிறார்.

க. இவராசைப்பட்டபடியே அடியார்கள் குழாங்களோடேவந்து கலந்தபடி சொன்னார்.

உ. தம்மோடே கலந்தபின்பு அவன்திருமேனியும் திவ்யா வயவங்களும் நிறம்பெற்ற தென்றார்.

ங. தம்மோடேகலந்து தன்சத்தைப்பெறுதல் இல்லையாகி லில்லையாம்படியாய்வந்து கலந்தானென்றார்.

ச. கீழிவனுக்கு த்ருஷ்டாந்தமாகச் சொன்னவை நேர்நில்லாமையாலே அவற்றைச் சிக்ஷித்துச்சேர்த் தநுபவித்தார்.

ரு. அதுதானும் உபமானமாக நேர்நில்லாமையாலே அவற்றைக் கழித்து உபமேயந்தன்னையே அநுபவித்தார்.

சு. இப்படி விலக்ஷணனானவன் முக்தன் தன்னை அநுபவிக்குமாறுபோலே தானென்னை அநுபவித்தா னென்றார்.

எ. தமக்காக ராமகிருஷ்ணாத் யவதாரங்களைப் பண்ணினானென்றார்.

அ. அவனை யென்னாற்பேச முடியாதென்றார்.

கூ. துணைதேடிக்கொண்டு திரியவும் பேசுகையிலே உபக்ரமித்தார்.

க0. "இப்படிகளா லென்னோடேகலந்த விம்மஹாகுணமொன்றையும் பேச" என்றால் சாலமிறுக்குடைத்தென்றார்.

கக. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

சு-ம். திருவாய்மொழி—வைகுந்தா.

ஸாந்நித்யம் பண்ணின எம்பெருமானிடத்திலே ஆழ்வார் அதிசைச்சியஞ் செய்ய, அதைப்பார்த்து ஆழ்வார் தம்மை விட்டுப் பிரிவரோ வென்று ஈஶ்வரனதிசங்கை பண்ண, ஆழ்வார் உம்மை ஒருக்காலும் விடத்தக்கதில்லை யென்ற பின்பு, ஈஶ்வரனுக் கதிசங்கை நீங்கினதை யருளிச்செய்கிறார்.

க. எம்பெருமான் "இவர் நம்மை விடிற் செய்வதென்" என்கிற அதிசங்கையைப் போக்கினார்.

உ. அது போனபின்பு அவனுக்குப்பிறந்த புதுக்கணிப்பைச் சொன்னார்.
ங. தமக்கவன் பண்ணின வௌதார்யத்தை அநுசந்தித்து வித்தரானார்.
௪. அவன் உமக்குப்பண்ணின வௌதார்யமேதென்ன, இதர விஷய வைராக்ய மென்றார்.
ரு. இதரவிஷய வைராக்ய பூர்வகமாக ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிகரித்த நான் இனியொருநாளும் விடேனென்றார்.
சு. ஆஶ்ரிதருக்கு உதவு வாயானபின்பு எனக்கொரு குறையுண்டோ வென்றார்.
எ. என்னுடைய சம்பந்தி சம்பந்திகளுக்கு மொருகுறையில்லையென்றார்.
அ. இதற்குத்தா மநுஷ்டித்த உபாயமின்ன தென்றார்.
௯. "இவரகவாயறிய வேண்டும்" என்றோரடி பேரநிற்க, இனிப்போக வொண்ணாதென்றார்.
௧0. நாம் போகாதொழிகிறோம் நீர் தாம் போகாதொழிய வேண்டுமே யென்னக், காலத்ரயத்திலும் ஸர்வவித பந்துவுமான உன்னை விடச்சம்பாவனையில்லை யென்றார்.
௧௧. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ் சொல்லித் தலைக்கட்டினார்.

எ-ம் திருவாய்மொழி—கேசவன்.

ஈஶ்வரனுக்குத் தம்முடைய விஷயத்தி லுண்டான ப்ரீதியானது, தன்னுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளிலும் உண்டானதுகண்டு மிகவும் ப்ரீதராய், த்வாதச நாமப்ரதிபாத்யனை ஸர்வேஶ்வர னுடைய ஸம்பந்தத்தாலே, தம்முடைய ஏழேழு தலைமுறையோரும் க்ருதார்த்தரானார்களென்கிறார்.

௧. தம்மோடு சம்பந்தி சம்பந்திகளுமெல்லாரும் தம்மைப்போலே விஷயீக்ருத ரானார்களென்றார்.
உ. அதற்கடி நாராயணனுகையாலே என்றும் அந்நாராயண சப்தார்த்தத்தையு மருளிச்செய்தார்.
ங. இப்படி விஷயீகரிக்கைக்கு ஹேதுசொன்னார்.
௪. ஸர்வகாலமும் தன்னையே அநுபவிக்கும்படி பண்ணினானென்றார்.
ரு. இப்படி தம்மை அநுபவிப்பித்ததாலே அவன்வடிவில் புகரைச்சொன்னார்.

கூ. இப்படி யென்னை விஷயீகரிக்கைக்கு அடிநிர்ஹேதுகக்ருபையென்றார்.

எ. தன்னையே ஸர்வகாலமும் அநுபவிக்கும்படியான நெஞ்சைத் தந்தானென்றார்.

அ. தந்தவளவின்றி விரோதியான நெஞ்சையும் போக்கினனென்றார்.

கூ. தன்னுடைய கல்யாணகுணங்களையே நான் அநுபவிக்கும்படி என் ஹ்ருதயத்திலே புகுந்தா னென்றார்.

க0. அநுபவவிரோதியான இந்திரியங்களையும் தன்வழி யாக்கிக்கொண்டானென்றார்.

கக. ஏவம்பூதனானவன் என்னையல்ல தறியானானனென்றார்.

கஉ. என்னைப்போலே காண்பார்க்குக் காணலாமதொழிய ஸ்வயத்னத்தால் அறியப்போகா தென்றார்.

கங. நிகமத்தில், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்-

அ-ம். திருவாய்மொழி—அணை.

ஈஶ்வரன் தன் ஸம்பந்தி ஸம்பந்திகளிலும் வ்யாமோஹம் பண்ணினதுகண்டு, ஸம்ஸாரிகளையும் தன்னுடைய ஸம்பந்திகளாகப் பண்ணவேண்டுமென்று, அவர்களுக்கு மோக்ஷப்ர தத்வத்தை உபதேசித் தருளுகிறார்.

க. இத்திருவாய்மொழியில் பரக்கச்சொல்லுகிற "வர்த்தத்தைச் சங்க்ரஹேணவருளிச் செய்யாநின்று கொண்டு ஸம்ஸாரமாகிற விக்கடலைக் கடக்கவேணும்" என்றிருப்பார்க்குக் கடத்திக் கொடுக்குமென்றார்.

உ. அவன்வேண்டுமோ அவனோட்டைச் சம்பந்தமே கடத்து மென்றார்.

ங. அவனுடைய வதிமாநுஷ சேஷ்டி தங்கள் ப்ரத்யக்ஷிக்கலா மென்றார்.

ச. "அந்தமில் பேரின்பத்தைப் பெறவேண்டும்" என்றிருப்பார் அவனையாஶ்ரயியுங்கோளென்றார்.

ரு. கீழ் "இணைவனுமெப்பொருட்கும்" என்றத்தை விவரித்தார்.

கூ. இவ்வுத்கரஷ மெல்லா மவனுக்குண்டோ வென்ன நாமாராய வேண்டாதபடி அர்ஜுநன் பண்டே தெரிந்து அறுதியிட்டா னென்றார்.

எ. ஒருவன நுவர்த்தனங் கொண்டறியவேண்டுமோ அவனுக்கிஷ்ட ஸர்வ சேஷ்டா விஷயமாயன்றே ஜகத்திருக்கிற தென்றார்.

அ. வ்யாப்தி தொடக்கமான அவனுடைய அபதானங்கள் ஒருவராலும் பரிச்சேதிக்கமுடியாதென்றார்.

கூ. அவனுடைய வ்யாப்தியை இசையாதார் ஹிரண்யன் பட்டது படுவரென்றார்.

க0. ஏவம்பூதனானவனை நான்கண்டநுபவிக்கப் பெற்றேனென்றார்.

கக. நிகமத்தில், இதுகற்றார்க்குப் பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

கூ-ம். திருவாய்மொழி—எம்மா.

ஸர்வேச்வரன் ஆழ்வாருக்கும் அவருடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் மோக்ஷம் ப்ரஸாதிக்கிறதற்கு உத்யோகமாயிருக்கையில், என்ப்ரீதிக்காக மோக்ஷம் ப்ரஸாதிக்கவேண்டாம், உம்முடைய ப்ரீதியினாலே மோக்ஷம் ப்ரஸாதிக்க வேண்டுமென்று கைங்கர்ய நிஷ்கர்ஷம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

க. காயிகமானபேற்றை அபேக்ஷித்தார்.

உ. மாநஸமானபேற்றை அபேக்ஷித்தார்.

ங. வாசிகமானபேற்றை அபேக்ஷித்தார்.

ச. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை நிஷ்கரித்தார்.

ரு. நீராராய் இப்பேற்றை அபேக்ஷித்தீரென்ன, நானாராய்டுக உன்னை அநுபவித்து மகிழும்படி பண்ணியருளவேண்டு மென்றார்.

சு. த்ரிவித கரணங்களாலு முன்னை ப்ரீதி புரஸ்ஸரமாக அநுபவிக்கும்படிப்பண்ணியருள வேணுமென்றார்.

எ. அப்படிச் சடக்கெனச் செய்யாமையாலே இன்னாதானார்.

அ. ஸ்வரூபாநுரூபமாக க்ஷணகாலமென்னோடே அநுபவிக்கப் பெறில் பின்புள்ளகாலமெல்லாம் வேண்டேனென்றார்.

கூ. உன்னை அநுபவிக்க இட்டுப்பிறந்து வைத்து அது கிடையாதபடி நானே யனர்த்தத்தைச் சூழ்த்துக் கொண்டேனென்றார்.

க0. எனக் கொருநாளும், க்யானவிசேஷத்தைப் பண்ணித்தந்தோமிறே "என்று என்னை யென்கையில் காட்டித்தாரா தொழியவேணு" மென்றார்.

கக. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலஞ்சொல்லித்தலைக் கட்டினார்.

க0-ம். திருவாய்மொழி—கிளரொளி.

முன்நிஷ்கர்ஷித்த கைங்கர்யஸித்திக்குத் திருமா லிருஞ்சோலைத் திருமலையை ஆஶ்ரயிக்க வேண்டுமென் றருளிச்செய்கிறார்.

க. கடுகத்திருமலையாழ்வாரை யாஶ்ரயியுங்களென்றார்.

உ. திருமலையோடு சம்மந்தித்த ஸ்ரீபதியையாஶ்ர்யிக்கச்சொன்னார்.

ங. அத்தோடுசேர்ந்த அயன்மலை யமையுமென்றார்.

ச. "திரிதந்தாகிலும்" என்கிறபடியே திரியவும் திருமலையை யாஶ்ரயிக் கச் சொன்னார்.

ரு. அத்தோடுசேர்ந்த புறமலையை யாஶ்ரயியுங்களென்றார்.

சு. திருமலைக்குப்போம் மார்க்கசிந்தை பண்ணவமையு மென்றார்.

எ. அவ்வழியோடுசேர்ந்த திருமலையை யாஶ்ரயிக்கச்சொன்னார்.

அ. நித்தியசூரிகளுக்குங்கூட ப்ராப்யமாகையாலே திருமலையே பரமப் ராப்யமென்றார்.

கூ. "திருமலையைத் தொழக்கடவோம்" என்கிறதுணிவே வேண்டுவதென் றார்.

க0. எல்லாப்படியாலும் திருமலைஆழ்வாரை யாஶ்ரயிக்கையே புருஷார்த்த மென்று தலைக்கட்டினார்.

கக. நிகமத்தில், இது கற்றார்க்குப் பலமருளிச்செய்தார்.

ரு-ம் பத்து.

விரோதிகழிந்த கைங்கர்யவேஷம் பாகவதஶேஷத்வ பர்யந்த மான பகவத்கைங்கர்ய மென்றார்.

க-ம். திருவாய்மொழி—முடிச்சோதி.

திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கிற அழகருடைய திவ்யமங்கள விக்ரஹதிவ்யாபரண திவ்ய ஸௌந்தர்யங் களை அநுபவித்ததை யருளிச்செய்கிறார்.

க. அழகருடைய திருவணிகலங்களுக்கும் திருமேனிக்கு முண்டானசுகடி தத்வத்தை அநுசந்தித்தார்.

உ. அதற்கு நாட்டார்த் ருஷ்டாந்த மிட்டுச் சொல்லு மவையெல்லாம் உப க்கவத்யத்தை விளக்குமென்றார்.

ங. நாட்டாரை விடும் "மயர்வற மதிநல மருளப்பெற்ற நீர் சொல்லீ ரென்ன" என்னுற் சொல்லிமுடியா தென்றார்.

ச. இப்படி விலக்ஷணனாய் நிரதிசயபோக்யனா யிருக்கிற உன்னை நாட்டார் இழந்துபோம்படி அவர்களை மதிகேடராக்கிப் பரமங்களைப் பண்ணினாயென்றார்.

ரு. நாட்டாரில் வ்யாவ்ருத்தரல்லீரோ உம்மால் பேச வொண்ணுமைக்குக் குறை யென்னென்ன, என்னை வ்யாவ்ர்த்தனாக்கின வோபாதி உன்னைச் சாவதியாக்கிற்றில்லையே யென்றார்.

சு. வேதங்களும் நீரும் கூடப்பேசினாலோ வென்ன, அவையும் உன்னைப் பரிச்சேதிக்க மாட்டாதென்றார்.

எ. வேதங்கள் கிடக்கிடும் வைதிக புருஷர்களென்று சிலர் உண்டே அவர்களைத்தக் குறை யென்னென்ன, அதுவும் உனக்கு நிறக்கேடென்றார்.

அ. கர்ம பாவனையின்றிக்கே ப்ரமஹ பாவனையேயா யிருப்பானொரு ப்ரம்ஹாவை யுத் ப்ரோக்ஷித்து அவனேத்திலும் தேவர்க்கு அவத்தியமென்றார்.

கூ. மேன்மை பேசவொண்ணு தென்கைக்கு நீர்மையோதான் பேசலாயிருக்கிற தென்றார்.

க0. உன்னாலே ஸ்ருஷ்டனான ப்ரம்ஹாவாலே ஸ்ருஜ்யரானவிவர்கள்உன்னையேத்துகையாவது உனக் கவத்யமன்றோ வென்றார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி தானே ப்ராப்யத்தைத் தருமென்றார்.

உ-ம். திருவாய்மொழி—முன்னீர்.

அழகருடைய திவ்ய ஸௌந்தர்யத்தைப் பரிச்சேதித்து அநுபவிக்கைக்கு அசக்தராய், அந்த அசக்திக்கு ஹேது தம்முடைய கரணஸங்கோசமென்று ஆழ்வார் வ்யாமோஹப்பட்டுநிற்க, ஸர்வேஶ்வரன் (யதோவாசோ நிவர்த்தந்தே) என்று நித்யசூரிகளுக்கும் அபரிச்சேத்யமான தென் ஸ்வபாவம், இதற்கு ஹேதுகரண ஸ்ங்கோசமென்று வ்யாமோஹப்படவேண்டாம். திருமலையிலே ஸர்வஸுலபனாய் நிற்கிறவென்னை யனுபவியுமென்று வ்யாமோஹந் தீர்த்தத்தை யருளிச்செய்கிறார்.

க. நீ தந்தகரணங்களைக்கொண்டு அநர்த்தத்தை விளைத்துக்கொண்ட நான் உன்னைவந்து கிட்டுகை என்றேன் றுண்டோ வென்றார்.

உ. இப்படிச் சூழ்வித்துக்கொண்ட பாபங்களைப் போக்கித் தேவரீரை நானெப்போது வந்து கிட்டக் கடவேனென்றார்.

ந. இதுக்கு முன்புன்னைப் பெறுகைக்குத் தந்த கரணங்களைக்கொண்டு நான் சூழ்ந்துகொண்ட பாபங்களை "நான் போக்கிவர" என்னுல் அது செய்யப்போகாது, இனி நான் அறியாததாய் நீயறிந்திருப்ப தொரு உபாயத்தை அருளிச்செய்ய வேண்டுமென்ருர்.

ச. உன்னை யொழிந் தவ்யதிரிக்தங்களிலே என்னுடைய தாழ்ச்சியைத் தவிர்த்து, உன் திருவடிகளிலே வாழ்ச்சியே யாம்படி பண்ணவேண்டுமென்ருர்.

ரு. அப்படி செய்யப் பார்த்திலையாகி லுன் போக்யதையை எனக்கென் றறிவியா யென்ருர்.

சு. இல்லாதவன் றுண்டாக்கின வருமையுண்டோ, உண்டாக்கின விதுக் கொரு குணுதானம் பண்ணவென்ருர்.

எ. நம்படி அறியாதே நாமவனை வெறுக்கிறதென் னென்ருர்.

அ. தீரக்கழியச்சாத நானுஷ்டானம் பண்ணினேனே! நான் இங்ஙனம் கூப்பிடுகைக் கென்ருர்.

கூ. அந்தத்தா விக்ரமாப தானத்துக்குத் தப்பின நான் இனி யெங்கே கிட் டப்போகிறே னென்ருர்.

க0. அவ்வளவிலே வந்து அவன் முகங்காட்டித் தரிப்பிக்கத் தரித்தார்.

கக. நிகமத்தில், பலஞ்சொல்லித் தலைக்கட்டினர்.

ந-ம். திருவாய்மொழி—ஒழிவில்.

திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸகலவிதகைங்கர்ய ப்ரார்த்தனையை யருளிச்செய்கிருர்.

க. திருவேங்கட முடையான் திருவடிகளிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எப்பேர்ப்பட்ட வடிமைகளுஞ் செய்யவேண்டுமென்று மனோரதித்தார்.

உ. அதொரு தேசவிசேஷத்திலே போனுல் பெறுமதன்றோ வென்ன; அங்குள்ளாரு மிங்கேவந்து அடிமை செய்கிற தேசமன்றோ நமக்கிங் கேபெறத்தட் டில்லை யென்ருர்.

ந. நிறைவாளர்க்குத் தன்னைக்கொடுத்தவன் குறைவாளர்க்குத் தன்னைத் தரச்சொல்ல வேண்டுமோ வென்ருர்.

ச. அவர்களுக்குத் தன்னைக் கொடுத்தானென்றதோ றேற்றமோ எனக்குங் கூடத் தன்னை தந்தவனுக்கென்ருர்.

ரு. எனக்குத் தன்னைத் தந்தானென்றதோ றேற்றமோ என்னிலும் தண்ணியானைத் தேடிக் கிடையாமே நிற்கிறவனுக் கென்ருர்.

௬. அவ் வடிமையிலே யிழிய விரோதிகளும் தன்னடையே போமென்றார்.

௭. இக் கைங்கர்யத்தை திருமலையாழ்வார் தாமே நமக்குத் தருவரொன்றார்.

௮. அத்திருமலையாழ்வார் தாமே நம் விரோதிகளைப் போக்கித் தம்மையும் தருவரொன்றார்.

௯. திருமலை யாழ்வார் எல்லாம் வேண்டுமோ நமக்கு ப்ராப்யத்தைத் தருகைக்கு, அவரோட்டை சம்பந்தமுடையார் அமையுமென்றார்.

௧0. ஶேஷிக்குத் தேஶ்யமாகையாலே ஶேஷபூதராறு ரெல்லாரும் திருமலை யாழ்வாரை ஆஶ்ரயியுங்க ளென்றார்.

௧௧. நிகமத்தில், பலஞ்சொல்லித் தலைக்கட்டினார்.

௪-ம் திருவாய்மொழி—புகழும்.

ஸகலவித கைங்கர்ய உத்யோகத்துக்கு அநுகுணமாக ஸர்வேஶ்வரன் ஸர்வாத்ம பாவத்தைக் காட்ட, அங்கே ஸர்வவித கைங்கர்யத்தையும் பண்ணு கைக்கிச்சித்து, அதற்கு அசக்தராய், ஸர்வேஶ்வரன் பண்ணினமாத்திரமே போது மென்கிற வார்த்தையாலே வாசிககைங்கர்யம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

௧. அவனுடைய குணங்களையும் விபூதிகாரணமான பூதபஞ்சகங்களையும் சேரப்பிடித்து இத்திருவாய் மொழியிலே மேல்பரக்கச் சொல்லுகிற வர்த்தத்தைச் சங்ரஹேண அருளிச்செய்கிறார்.

௨. கீழ்சொன்ன பூதபஞ்சகங்களினுடைய கார்யங்களை க்ரமத்திலே பேசுகிறார்.

௩. ஜகத்சரீரனாய் நின்றதோடு அசாதாரண விக்ரஹயுக்தனாய் நின்றதோடு வாசியற் திருக்கையாலே ஜகதாகாரனாய் நின்ற நிலையோடே அஸாதாரண விக்ரஹத்தைச் சேர்த்தநுபவிக்கிறார்.

௪. உஜ்வலமான மாணிக்யாதி பதார்த்தங்களை விபூதியாக உடையவனென்றார்.

௫. ரஸவத் பதார்த்தங்களை விபூதியாக உடையனா யிருக்கிறபடியை அருளிச் செய்கிறார்.

௬. வேதம் துடக்கமான இயலும் இசையுமான ஶப்தராசியை விபூதியாக உடையனென்கிறார்.

௭. ஐஶ்வர்யாதி புருஷார்த்தங்களை விபூதியாக உடையனென்கிறார்.

௮. ஜகத்தில் ப்ரதானரான ப்ரம்ஹருத்திராதிகளை விபூதியாக உடையனென்கிறார்.

௯. அவனுடைய விபூதி விஸ்தாரங்கள் தனித்தனியே பேசமுடியாமையாலே காரியகாரண ரூபமான சேதநா சேதநங்க ளவனுக்கு விபூதி என்று ப்ரயோஜகத்திலே சொல்லலா மித்தனை என்கிறார்.

௧0. இவற்றுக்கு மந்தராத்மாவாய் வ்யாபித்து நின்றால் தத்கத தோஷை ரஸம்ஸ்ப்ருஷ்ட னென்றார்.

௧௧. நிகமத்தில், இது கற்றவர்கள் நித்திய கைங்கர்யத்தைப் பெற்று அயர்வறு மமரர்களாலே விரும்பப்படுவர்க ளென்கிறார்.

ரு-ம் திருவாய்மொழி—மோய்மாம்.

பகவத்கைங்கர்யத்தில் ஆதரமுடைய ஆழ்வார், பகவத்கைங்கர்யம் பண்ணுகிறபேரைக் கொண்டாடினதும், அல்லாத பேரை நிந்தித்ததும், அருளிச் செய்கிறார்.

௧. ஆஶ்ரிதனிடர் பட்ட மடுவின் கரையிலே கலங்காப் பெருநகரில் நின்று மரைகுலையத் தலைகுலைய வந்துவிழுந்த நீர்மையை அநுஸந்தித்தால் விக்ருத ராகாதார வஸ்துக்க ளென்கிறார்.

உ. ஸ்ரீ கஜேந்திராழ்வானுக் குதவினது சூரிகளுக்குதவிற் றென்னலாம்படியன்றோ "தங்களுக் கிடருண்டு" என் றறியாத சம்சாரிகள் விரோதியைப் போக்கும் நீர்மையென்று அநுசந்தித்தால் அவிக்ருதரா யிருப்பார், மஹா பாப மநுபவிக்கப் பிறக்கிறவாக ளென்கிறார்.

ங. உபகார மறியாத பசுக்களுக்கும், தத்ப்ராயர்க்கும் வந்தவாபத்தை நீக்கின மஹா குணத்தை யநுசந்தித்து அவிக்ருதரா யிருக்குமவர்கள் நித்திய சம்சாரிகளாய்ப் போவர்க ளென்கிறார்.

ச. நப்பின்னைப் பிராட்டிக்காக வெரு தேழடர்த்து அவளோடே சம்ஶ்லேஷித்த ப்ரண்யித் வகுணத்தை அநுசந்தித் தீடுபடாதவர்கள் ஸ்ரீ வைஷணவர்கள் நடுவே என்ன ப்ரயோஜனத்துக்காகப் பிறந்தார்க ளென்கிறார்.

ரு. ஆஶ்ரித விரோதி நிரசநார்த்தமாக அசாதாரண திவ்யரூப விசிஷ்டராய்க் கொண்டு திருவவதாரம் பண்ணின குணத்தை அநுசந்தித்தால், விக்ருதராகாதார் அவஸ்துக்க ளென்கிறார்.

சு. ஈஶ்வரபோக்யதையை அநுசந்தித்தால் விக்ருதராவர்களாகில் அவர்கள் எல்லா அறிவின்பலமும் கைவந்தாரென்கிறார்.

எ. ஆஶ்ரித பக்ஷபாதமாகிற மஹாகுணத்திலீடுபடாதே சரீரபோஷணபரராய்த் திரிகிறவர்கள் வைஷ்ணவர்களுக் கெதிக்குறுப் பாகப் பிறந்தார்களென்கிறார்.

அ. திருவேங்கடமுடையானுடைய நீர்மைக் கீடுபடுவாரை நித்திய ஸூரிகள் அன்றே கொண்டாடுவார்களென்கிறார்.

கூ. கைவல்லிய புருஷார்த்தனை நிந்தித்துப், பகவத்குணங்களை அநுசந்தித்து விக்ருதராய் ஆடுவது பாடுவதாகுங்கோள், இதுவேகர்த்தவ்யம் என்கிறார்.

க0. அநந்ய ப்ரயோஜனராய்க் கொண்டு அவன்குணங்களை யநுசந்தித்து விக்ருதராகுங்கோள் உங்களுக்கிதுவே புருஷார்த்தமென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பகவத்குணாநுசந்தானம் பண்ணிறுல் அவிக்ருதராயிருக்கைக்கடியான மஹாபாபத்தை யிது தானே நிஶ்ஶேஷமாக போக்குமென்றார்.

ரு-ம். திருவாய்மொழி—செய்யதாமரை.

கைங்கர்யத்துக்கு பரவ்யூஹவிபவாந்தர்யாமிகளைக் காட்டில், அர்ச்சாவதாரமே சுலபவிஷயத்வ மென்றதை யருளிச்செய்கிறார்.

க. ஜகத்காரணத்வ புண்டரீகாக்ஷத்வாதி குணங்களையுடையவனே ஶ்ரயணீயன், அவனை ஆஶ்ரயியுங்களென்கிறார்.

உ. அப்படிப்பட்டவன்தானே உங்களோடு சஜாதியனாய்ச் சக்ரவர்த்தித் திருமகனாய்வந் தவதரித்தான், அங்கே ஆஶ்ரயியுங்க ளென்கிறார்.

ங. மேற்சொன்ன ராமாவதாரம் பரத்வமென்னும்படியான க்ருஷ்ணாவதாரத்திலே ஆஶ்ரயியுங்க ளென்கிறார்.

ச. பிரம்ஹருத்திராதிகளுக்கும் தடையின்றிப் புக்காஶ்ரயிக்கலாயிருக்கிற சீலவத்தையைப் பேசுகிறார்.

ரு. வாத்சல்லியத்தாலே யெப்போதும் ஐஶ்வர்யாதிகளோடுவந் தவதரிக்குமென்கிறார்.

சூ. நிரதிசய போக்கியனான நரசிம்ஹத்தை யொழிய வேறொருவனைத் தாரகாதிகளாக உடையேனல்லேன் காலதத்வமுள்ளதனையு மென்கிறார்.

எ. அவனை ஆஶ்ரயுங்கோள் உங்களுடைய ஸர்வதுக்கங்களும் போம்படியென்கிறார்.

அ. ஸம்சாரிகளுக்கும் ருசிபிறக்கைக்காக நான் சக்ரவர்த்தித் திருமகனை அல்லது ஆபத்தனமாகப்பற்றி யிரேனென்று ஸ்வசித்தாந்தத்தை அருளிச்செய்கிறார்.

கூ. அவதார திருமேனியையே அப்ராக்ருததிவ்ய ஸம்ஸ்தானத்தோடொக்க விரும்பும் அர்ச்சாவதாரத்தை ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

௧0. தன்துறையான கிருஷ்ணவதாரத்திலேபோய் நான் கண்ணாலேகண்டனுபவிக்கப் பெறுவதென்றோவென்னுமாவாப்தியோடே தலைக்கட்டுகிறார்.

௧௧. நிகமத்தில், இதை அப்பியசிக்கவே பகவத்ப்ரேம முண்டாம் இத்தை அப்பியசியுங்க ளென்கிறார்.

எ - ம். திருவாய்மொழி—பயிலும்.

பகவத் கைங்கர்யம் பண்ணுகிற பேர்கள் நமக்கு ஸ்வாமி களென்று பாகவத சேஷத்வமருளிச் செய்கிறார்.

௧. வடிவழகிலும் குணங்களிலும் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எனக்கு ஸ்வாமிகள் என்று இத்திருவாய்மொழியின் அர்த்தத்தை ஸங்கிரஹேண அருளிச்செய்கிறார்.

௨. அவனுடைய வவயவ சோபைக்குத் தோற்றிருக்குமவர்கள் எனக்கு நாதரென்கிறார்.

௩. தோளும் தோள்மாலையுமான வழகிலே தோற்றிருக்கு மவர்களுக்கு ஶேஷபூதரானவர்க ளெனக்கு ஸ்வாமிகளென்கிறார்.

௪. அவனுடைய வாபரண சோபையிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஶேஷபூதரானவர்க ளெனக்கு ஸ்வாமிக ளென்கிறார்.

௫. ப்ரயோசநாந்தர பரர்க்கு மபேக்ஷித ஸம்விதானம் பண்ணுமவன் ஔதார்யத்திலே தோற்றவர்கள் ஸ்வபாவத்துக்குத் தோற்றவர்க ளெனக்கு ஸ்வாமிகளென்கிறார்.

௬. அவன் சவுந்தர்யாதிகளைத் திரள வநுபவிக்குமவர்கள் எனக்கு ரக்ஷகரென்கிறார்.

௭. ஆஶ்ரித விஷயத்தில் அவன் பண்ணும் மஹோபகாரங்களிலே வித்தரானவர்களுக்குத் தோற்றிருக்குமவர்கள் கிடீரெனக்கு எற்றைக்கும் ஸ்வாமிக ளென்கிறார்.

௮. அவனுடைய ஸ்ரீ:பதித்வத்திலே தோற்றிருக்குமவர்கள் எனக்கு நாதரென்கிறார்.

௯. கையும் திருவாழியுமான வழகிலே தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஶேஷபூத ரானவர்கள் எனக்கு ஸ்வாமிக ளென்கிறார்.

௧0. அவனுடைய அகடிதகட நாஸாமர்த்தியத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய சேஷத்வத்தி னெல்லை நிலம் நான் யென்கிறார்.

௧௧. நிகமத்தில், பாகவத ஶேஷத்வ ப்ரதிபாதகமான இத்திருவாய்மொழியை அப்பியஸித்தவர்கள் இப் புருஷார்த்தத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்தைக் கடப்பர்கள் என்கிறார்.

அ-ம். திருவாய்மொழி—முடியானே.

பாகவதசேஷத்வம் ப்ரதிபாதித்த ஆழ்வார், இந்தப் பாகவதசேஷத்வம் பரஸ்பரபோதநத்துக்கு உபயுக்தமாகாமல், பகவத்குணஸ் மாரகமாய், அக்குணாநுபவத்தில் ஓரோரிந்த்ரியமே பஞ்சேந்த்ரிய க்ருத்யங்களை யாசைப்பட்டதென்றருளிச் செய்கிறார்.

க. தம்முடைய திருவுள்ளத்துக் கவன் பக்கலுண்டான சாபலாதிசயத்தைச் சொல்லுகிறார்.

உ. மநஸுக் கனந்தரமான வாக்கு மநோவ்ருத்தியையும் தன் வ்ருத்தியையு மாசைப்படா நின்றதென்கிறார்.

ங. கைகளானவை வாக்வ்ருத்தியையும் தன் வ்ருத்தியையும் ஆசைப்படா நின்றன வென்கிறார்.

ச. கண்களானவை கைகளின் வ்ருத்தியையும் ஸ்வவ்ருத்தியையும் ஆசைப் படாநின்றதென்கிறார்.

ரு. செவிகளானவை கண்ணினுடைய வ்ருத்தியையும் தன்னுடைய வ்ருத்தியையும் ஆசைப்படா நின்றன வென்கிறார்.

சு. என்னுடைய ப்ராணனானது உன்னுடைய கீர்த்தியைத் தன்செவியாலே கேட்க வாசைப்படாநின்றதென்கிறார்.

எ. கரணங்க ளொழியத் தம்முடைய விழவு சொல்லுகிறார்.

அ. உம்முடைய வபேக்ஷிதம் செய்கைக் கொருகால மில்லையோ, அது வருங் கிடீரென்ன ; அதுவும் நீயிட்ட வழக்கன்றோ வென்கிறார்.

கூ. ரக்ஷணோபாய ஜ்ஞனுமாய் விரோதி நிரசன சீலனுமான உன்னை நான் கிட்டுவதென்றென்கிறார்.

க0. உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே கிலேசப்படுகிற நான், இன்னம் எத்தனை காலங் கூப்பிடக் கடவேனென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஶப்தமாத்ரத்தாலே பரமபதத்தைச் செல்லப் பெறுவரென்கிறார்.

கூ-ம். திருவாய்மொழி—சொன்னல்.

பகவத் குணாநுபவத்திலே ஆசையுடைத்தான ஆழ்வார், லௌகிகரைப்பார்த்து இதரஸ் தோத்ரம் பண்ணினாலே துண்டாகிறது, என்னோடே கூட ஸ்ரிய:ப்பதியை ஸ்தோத்ரம் பண்ணினால் ஸர்வாபீஷ்டங்களு முண்டாகுமென்றதை யருளிச் செய்கிறார்.

க. க்ஷுத்ர விஷயங்களைக் கவிபாடுகை உங்களுக்கு ஹிதமல்ல வென்று உபதேசிக்கையிலே ப்ரவ்ருத்தரானவர் அவர்களுக்கு ருசிபிறக்கைக்

காக நானிருக்கிறபடி கண்டிகோளே யென்று தம்முடைய மதத்தை அருளிச் செய்கிறார்.

௨. க்ஷுத்ரனைக் கவிபாடி என்ன ப்ரயோஜன முண்டென்கிறார்.

௩. விலக்ஷணனாய் உபகாரகனாயிருக்குமவனை யொழிய க்ஷுத்ர மநுஷ்யனைக் கவிபாடி யென்ன ப்ரயோஜன முண்டென்கிறார்.

௪. மந்தாயுஸ்ஸுக்களான க்ஷுத்ரனைக் கவிபாடிப் பெறுவ தென்னென்கிறார்.

௫. ஸமஸ்த கல்யாண குணத் மகனுமாய் ஸர்வாபேக்ஷித ப்ரதனுமான ஸர்வேஶ்வரனைக் கவிபாட வாருங்களென்கிறார்.

௬. மநுஷ்யாதிகளைக் கவிபாடி ஜீவிப்பதிலும் உடம்பு நோவப் பணிசெய்து ஜீவிக்கை நன்றென்கிறார்.

௭. பகவத் விஷயத்தை யொழிய வேறு சிலனைக் கவிபாடுகைக்கு நான் க்ஷமன்னறிக்கே ஒழியப் பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

௮. நான் பிறனைக் கவிபாடுவேனென்னிலும் என் வாக்கான தவனை யொழியப்பாடா தென்கிறார்

௯. இதரஸ் தோத்திரத்துக்கு அதிகாரி அல்லேனென்கிறார்.

௧௦. சர்வேஶ்வரன் கவியான வெனக்கு இதரஸ் தோத்ரகரண மநுரூபமன் றென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழியி னியல்மாத்ரத்தை அப்யசித்தவர்களுக்குப் பிறனைக் கவிபாட யோக்யமான நீச ஜன்மமில்லை என்கிறார்.

---

௧௦ - ம். திருவாய்மொழி—சன்மம்.

இதர ஸ்துதிபண்ணுகிற கவிகளைப் பகவத்விஷயத்திலே ப்ரவர்த்திக்கும்படி உத்யோகித்து, அவர்கள் புத்தி திரும்பாதபடியாலே, அவர்கள்போலன்றி, ஸகல ப்ரகாரத்தாலும் ஸர்வேஶ்வரனை ஆஶ்ரியிக்கையாலே தமக்கொரு குறையின்றி ஸர்வாபீஷ்ட முண்டாச்சுதென்றளிச் செய்கிறார்.

௧. இத்திருவாய் மொழியில் சொல்லுகிற அர்த்தத்தைச் சங்க்ரஹேண வருளிச் செய்கிறார்.

௨. ஆஶ்ரித விரோதிகளை அழியச்செய்த கிருஷ்ணனுடைய புகழைப் பேசப்பெற்ற எனக் கொரு தட்டில்லை யென்கிறார்.

௩. அவனுக்கு அடிமை செய்கையிலே ப்ரவ்ருத்தனான எனக்கு க்ஷுத்ர விஷய ப்ராவண்ணியத்தால் வரும் ஹ்ருதய துக்கமில்லை யென்கிறார்.

௪. தேவதாந்தரங்களைப் பற்றினார்க் கவர்கள் தஞ்சமல்ல வென்னு மிடத்தையும் தன்னைப் பற்றினார்களைத் தான் விட்டுக்கொடானென்னு மிடத்தையும் காட்டின இவனை பற்றின எனக்கொரு துக்கமில்லை யென்கிறார்.

௫. வைதிக புத்ராநயநத்தை அநுசந்தித்து இவனைப்பற்றின எனக்கொரு துக்கமுமில்லை யென்கிறார்.

௬. கிருஷ்ண குணங்களை அநுபவிக்கப்பெற்ற வெனக்கொரு துக்ககந்த மில்லை யென்கிறார்.

௭. அகர்மவஶ்யனாகையாலே ஈஶ்வரனுக் கிவ் விபூதியிலுள்ளது லீலா ரசமாத்ரமாகையாலே அத்தை அநுசந்தித்த எனக்கு கர்ம வஶ்யதையு மில்லை; இந்த லீலா விபூதியில நர்ப்ப விக்கவும் வேண்டா வென்கிறார்.

௮. ஜகத்ரக்ஷணம் பண்ணும் நீர்மையை அநுசந்திக்கப்பெற்ற எனக்கொரு துக்கமில்லை யென்கிறார்.

௯. அகடிதகடநா சமர்த்தனான வடதள சாயியை யநுபவிக்கப் பெற்ற எனக்கு ஒரு தளர்வுமில்லை யென்கிறார்.

௧௦. அவனைப்பற்றின எனக்கொரு கேடில்லை யென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய் மொழியை அப்யசித்தார் சர்வலோக ப்ரசித்தமாம்படி ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயிலே நடத்தி, மேலே பரமபதத்திலேசென்றால் தன் ஐஶ்வர்ய மிவர்களிட்ட வழக்காகு மென்கிறார்.

௪-ம். பத்து.

கைங்கர்யத்துக்கு விரோதி, ஐஸ்வர்ய கைவல்யமென்றார்.

௧-ம். திருவாய்மொழி—ஒருநாயகம்.

பகவதாஶ்ரயணத்தாற்றமக் கொருகுறையில்லை யென்ற ஆழ்வார், அன்யருடைய குறையையுந்தீர்க்க உத்யோகித்து, இஹலோக ஐஸ்வர்யமும் ஸ்வர்க்காதி போகமும் அஸ்திரம், கைவல்யாநுபவ மல்பம், பகவதநுபவமே நிரபாயமான பரம புருஷார்த்த மென்று பரோப தேசம் பண்ணினதை அருளிச்செய்கிறார்.

௧. சார்வ பௌமராய்ப் போந்த ராஜாக்கள் அந்த ராஜ்ய ஸ்ரீயை யிழந்து இரந்து ஜீவிக்க வேண்டும்படி துர்கத ராவர்கள். ஆனபின்பு நித்ய ஸ்ரீயான ஸர்வேஸ்வரனைப் பற்றப் பாருங்கோ ளென்கிறார்.

௨. ராஜ்யம் பண்ணுகிறநாளில் போக்யைகளாகப் பரிக்ர ஹித்த ஸ்ரீகளையும் சத்துருக்களுக்குக் கொடுத்து எளிமைப்படுவ ரென்கிறார்.

௩. ராஜாக்கள் தங்கள் காலிலே விழுந்து கிடந்தால னுதரித்திருக்கும் மதிப்பை யுடையவர்கள் "ஒரு சேதனன்" என்று நினையாத படி மதிப்பறுவர்கள் என்கிறார்.

௪. போக்தாக்களுடைய நிலையாமையாலும் அவனைப் பற்றவேண்டு மென் கிறார்.

௫. செல்வக்கிடப்போபாதி அங்கநா பரிஷ்வங்கமு மஸ்திரமென்கிறார்.

௬. வைத்தியர்கள் பிழைத்தாரை எண்ணுமாப்போலே முடிந்தவர்களை யெண்ணுகிறதென், ஜீவித்தவர்களும் சிலர் இல்லையோ வென்னச் அதிருந்தபடி கேட்கலாகாதோ பின்னை யென்கிறார்.

௭. ஐஸ்வரியத்துக்கு நீர் சொல்லுகிற தோஷமுண்டேயாகிலும் அன்ன பாநாதிகள் தாரகமுமாய்ப் போக்கியமுமாயிருக்கிற ஆகாரமுண் டே! என்ன; அதுவும் நிலை நில்லா தென்கிறார்.

௮. ராஜ்யஸ்ரீ அவற்றின் ஸ்வபாவத்தாலே நிலை நில்லா, ஆனபின்பு அவன் றன்னையே பிரயோஜனமாக ஆஸ்ரயுங்கோ ளென்கிறார்.

௯. காயிகக் லேசாத்மகமான தபஸ்ஸைப் பண்ணி அந்த தபபலம் ஸ்வர்க்க மாகக்கொண்டு சுவர்க்கத்தை ப்ராபிக்கும்போது பகவத் பிரசா தம் வேணும் அதுண்டாய் ப்ராபித்தாலும் அது தன்னின் ஸ்வ பாவத்தாலே நிலைநில்லா தென்கிறார்.

௧௦. இவைபோ லன்றிக்கே ஆத்மலாபம் நிலைநின்ற புருஷார்த்தமே யென் னில்; கீழ்ச்சொன்னதைக் குறித்தொரு நன்மையுண்டே யாகிலும் பகவதா நந்தத்தைப்பற்ற இது ஏகதேசமா யிருக்கையாலே அது வும் தண்ணிது, ஆனபின்பு அவனைப் பற்றப் பாருங்கோ ளென்கி றார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி பத்துங்கற்றார் ஐஶ்வர்யாதி க்ஷுத்ர புருஷார்த்தத்தைத் தவிர்ந்து பகவத் கைங்கர்யைகபோகராவ ரென்கிறார்.

உ - ம். திருவாய்மொழி—பாலனாய்.

முன்சொன்ன பரோபதேசம் வ்யர்த்தமாய்ப் போகையாலே, தாம் பகவத் விஷயத்தில் மிகவும் அபிநிவேசத்தையடைந்து, முன்பு செய்த அவதாரங்களெல்லா மிப்பொழுது தமக்குக்காட்ட வேண்டு மென்கிறதை யருளிச்செய்கிறார்.

௧. வடதளசாயியினுடைய திருவடிகளில் சாத்தின திருத்துழாயைச் செவ் வியோடே யிப்போதே பெறவேணுமென்று ஆசைப்படா நின்று ளென்கிறாள்.

௨. என் பருவத்தில் பெண்களுக் குதவின விடத்திலே எனக்குதவத் தட் டேன் னென்னா நின்று ளென்கிறாள்.

௩. ஒரு ஊருக்காக உதவினதேயன்றிக்கே ஒரு நாட்டுக்காக உதவினவன் பக்கல் உள்ளது பெறத் தட்டென் னென்று நின்றாள் என்கிறாள்.

௪. என்றுமொக்கவேகரூபமா யிருக்கிற பரமபத நிலயன் திருவடிகளில் திருத்துழாய் பெறத் தட்டென் னென்று நின்றா ளென்கிறாள்.

௫. ஆறுல் இங்கே என்றேட்டையா ளொருத்திக்காகத் தன்னைப் பேணாதே எருதேழடர்த்த கிருஷ்ணன் திருவடிகளிற் சாத்தின திருத்துழாய்பெறத் தட்டென் னென்று நின்றா ளென்கிறாள்.

௬. நப்பின்னைப் பிராட்டிக்கு உதவினப்போ லன்றிக்கே ஸ்ரீபூமிப் பிராட்டிக்காகத்தன்னை அழிய மாறியுமுதவினவனுடைய திருவடிகளின் திருத்துழாயை ஆசைப்படா நின்றா ளென்கிறாள்.

௭. பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே வைத்தருளினவ னுடைய திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை ஆசைப்படா நின்றாளென் கிறாள்.

௮. ஸ்ரீஜனகராஜன் திருமகளுடைய விரோதியைப் போக்கின சக்ரவர்த்தித் திருமகன் திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை ஆசைப் படாநின்றா ளென்கிறாள்.

௯. "அவனுடைய ஆயுதாதிகளைக் காணவேணும்" என்று சொல்லப்புக்கு முடியச் சொல்லமாட்டாதே நோவுபடா நின்றா ளென்கிறாள்.

௧௦. உன் மகள் நீயிட்ட வழக்கன்றோ அவளுக்கு ஹிதம் சொல்லி மீட்கத் தட்டென் னுனக் கென்றவர்களைக் குறித்து; நான் சொல்லிற்றுக் கேளாதே அவனையே யாசைப்பட்டு மிகவும் அவசன்னையாகா நின்றாளென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்பியசிக்க வல்லார் நித்திய சூரிகளுக்குச் சத்ரு ஶராவ ரென்கிறார்.

௩-ம் திருவாய்மொழி—கோவைவாயாள்.

ஆழ்வார்ர்த்தித்தபடியே ஏககாலத்தில் அவதாரங்களையெல்லாங் காட்ட ப்ரீதியடைந்ததை யருளிச்செய்கிறார்.

௧. ஆச்ரித விரோதிகளை நிரசிக்கிற விடங்களில் அவ்வவ் சமயங்களில் வந்து முகங்காட்டி அடிமைசெய்யப் பெற்றிலேன் நான், இங்ஙனேயிருக்கவு மென் ஹ்ருதயத்தையே யுனக்குப் போக்கியமாகக் கொள்ளுவதே யென்கிறார்.

௨. என்னுடைய கரணகார்யமான ஸ்மருதியாதிகளே பரிபூர்ண ஞானவனுக்குப் போகோப கரணங்கள் எல்லா மாயிற்றென்கிறார்.

ங. இத்தலையை யுனக்காக்கி அத்தாலே க்ருதக் ருத்தியனு யிருக்கிறயே யென்கிறர்.

ச. உன்சுகுமாரமான திருமேனிக்குச் சாத்தும்மாலையென் சத்தையேயாய் விடுவதே யென்கிறர்.

ரு. தம்முடைய சிநேகாதிகளோ ரொன்றே ஆபரணுதி சர்வபரிச்சதங் களு மாயிற்றவனுக் கென்கிறர்.

சு. அவன் ப்ரணயித்வாதி சயம் தம்மையும் ப்ரணயியாக்கிற் றென்கிறர்.

எ. என் சத்தையே உனக்கு ஜீவன ஹேதுவாவதே யென்கிறர்.

அ. ஒருவனையொழிய ஒருவர்க்குச் செல்லாதபடி பிறந்தகலவி, பேச்சுக்கு நிலமன் றென்கிறர்.

கூ. உன் ப்ரணயித்வப்ரகர்ஷம் என்னுடைய பேச்சுக்கு நிலமன் றென்கி றர்.

க0. நானும் சமஸ்தலோகங்களும் ஸர்வேஶ்வரனும் ஏககண்டராய் ஏத்தினு லும் ஏத்தப்போகாத விஷயத்தை என்செல்லாமையாலே ஏத் தினேனென்கிறர்.

கக. நிகமத்தில், ஈஸ்வரனுடைய உபய விபூதியும் இத்திருவாய்மொழி அப் பியஸித்தாரிட்ட வழக்கென்கிறர்.

சு - ம். திருவாய்மொழி—மண்ணையிருந்து.

அவதாரங்களைக் காட்டி மறைந்தபடியாலே, ஆழ்வார் நாயகி தன்மையை யடைந்து, மோஹித்து, ஸம் பந்தி ஸத்ரு ஶவஸ்துக்களைப் பார்த்துக் கத றுகிறளென்று, தாய் சொல்லுவதாக வருளிச் செய்கிறர்.

க. வினவ வந்தவர்களுக்குத் தன்மகள் செய்தியை அறிவியா நின்றுகொ ண்டு; இப்படி இவளை எம்பெருமான் பிச்சேற்றினுன், நானிதுக் கென்செய்வேன் என்கிறள்.

உ. அப்ராக்ருதரூபையான விவள் செய்கிறன வொன்றும் தெரிகிறதில்லை யென்கிறள்.

ங. இவளுடைய அதிப்ரவ்ருத்திகளைச் சொல்லப்புக்கு அவற்றுக் கென் ணில்லை யென்கிறள்.

ச. வ்யசனசஹை அல்லாத விவளை இப்படி நோவு படுத்துவதே யென் கிறள்.

ரு. இவளுக்கு இவ்வவசாத மெவ்வளவாய் முடியக் கடவதென் றறிகிறிலே னென்கிறள்.

௬. நன்மகள் பிச்சுக்கு நிதானத்தையும் அதடியாக வந்த பிச்சு தன்னையும் சொல்லுகிறாள்.

௭. தேறின போதோடு தேறாத போதோடு வாசியற எப்போதும் அவன் திறமல்ல தறியாளே என்கிறாள்.

௮. அத்யந்த தூர்தசைவர்த்தியா நின்றாலு மிவள் தத்தேகபராயா யிருக்கு மென்கிறாள்.

௯. பெறுதற்கரிய விவள் தன்னையே வாய்வெருவி மோஹிக்கும்படி பண்ணுகின்றா னென்கிறாள்.

௧௦. சத்ரு ரூபதார்த்தங்களை அநுசந்திக்க க்ஷமமல்லாத வ்யசநாதிசயத்தாலே இவளுக்குப் பிறந்த விக்ருதிகளைச் சொல்லி நானென் செய்வே னென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் சம்சார துரிதமும் போய், பகவத் விஸ்லேஷகந்த மில்லாத் திருநாட்டிலே யெல்லாரும் சிரசாவகிக்கு மேன்மையோடே இருக்கப்பெறுவ ரென்கிறார்.

௫-ம். திருவாய்மொழி—வீற்றிருந்து.

அந்தமோஹந்தீரும்படி ஸர்வேஸ்வரன் நித்திய சூரிகளோடே கூட ஸாந்நித்யம் பண்ணுகையில், மங்களாசாஸநம் பண்ணிப் ப்ரீதியடைந்ததை யருளிச் செய்கிறார்.

௧. கிருஷ்ணனைக் கவிபாடப் பெற்ற வெனக் கொருநாளுமொரு குறையில்லை யென்கிறார்.

௨. இம்மஹைஸ்வரியத்துக்கு அடியான ஸ்ரீயঃ பதித்வத்தை அருளிச்செய்கிறார்.

௩. ஸர்வேஸ்வரனைக் கிட்டிக்கவிபாடுகையாலே அவனுடைய வாநந்தத்தையும் விளாக்கொலை கொள்ளும் படியான வாநந்தத்தை உடையனானேன் என்கிறார்.

௪. நித்ய சம்சாரியான வென்பக்கல் பண்ணின மஹோபகார மென்னால் பரிச்சேதிக்க வொண்கிறதில்லை யென்கிறார்.

௫. எனக்குத் தன் படிகளைக் காட்ட, கண்டநுபவித்து நான் என்னுடைய ப்ரதி பந்தங்களெல்லாம் போம்படி திருவாய்மொழி பாடி நிரதிசயாநந்தியானே னென்கிறார்.

௬. இதுக்கு முன்புப் பெறாததா, இனிப்பெறவேண்டுவது ஒன்றுண்டோ வென்கிறார்.

௭. "அரியதுண்டோவெனக்கு"என்கிற இப்பூர்த்தி உமக்கெத்தாலே வந்ததென்ன, பகவத் கிருபையாலே வந்த தென்கிறார்.

அ. எம்பெருமான் சௌகுமார்யத்துக்குத் தகுதியாகக் கவிசொல்ல வல்ல வெனக்குத் திருநாட்டிலும் நிகரில்லை யென்கிறார்.

கூ. ஸர்வேஸ்வரனை யெங்கும் புக்குக் கவிபாடப்பெற்ற என்னோ டொப் பாருண்டோ வென்கிறார்.

க0. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆநந்தாவஹனனே னென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றாைப் பெரியபிராட்டியார் தமக் கே பரமாகக்கொண்டு சமஸ்த துக்கங்களையும் போக்குவ ரென் கிறார்.

கூ - ம். திருவாய்மொழி—தீர்ப்பாரை.

ஸாந்நித்யம் பண்ணின ஈஶ்வரனந்தர் ஹிதனுகையாலே ஆழ்வார் மோஹிக்க, இதர தேவதா வேசமென்று க்ஷுத்ரதேவதா ராதநம் பண்ணுவதைப் பரிஹரித்து, ப்பகவந்நாம ஸங் கீர்த்தநமும், ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூட்களும், இதற்குப் பரிஹாரமென்று, ஆப்தஸகி சொ ல்ல, வப்படியே பரிஹாரம் பண்ண, மோஹந் தீர்ந்ததை யருளிச் செய் கிறார்.

க. தோழி இவள் நோய்க்கு நிதானத்தைச் சொல்லி நீங்கள் செய்கிறவை பரிஹார மன்றென்று விலக்குகிறாள்.

உ. க்ஷுத்ரதேவதா சாந்தியா லிந்நோய் போக்குகை அறிது பகவத் விஷயத்தைச் சொல்லி லிவளைப் பெறலாமென்கிறாள்.

ந. அயுக்தங்களைச்செய்யாதே அவன் திருவடிகளை யேத்துங்கோள் அதுவே இந்நோய்க்கும் பேஷஜ மென்கிறாள்.

ச. ஆபத்ஸகனுன ஸர்வேஶ்வரனுடைய திருநாமத்தைச் சொல்வல்லி கோளாகில் இவளைக் கிடைக்கு மென்கிறாள்.

ரு. நோய்க்கு யோக்கியமான பரிஹாரத்தைப் பண்ணுங்கோ ளென்கிறாள்.

சு. "தவளப்பொடி" என்று சொன்னது இன்னதென்று விசேஷித்து அத்தைச் செய்ய உத்தியோகிக்கவே இவள் நோய் தீருமென்கி றாள்.

எ. இவள் பிழைக்கவேண்டி யிருந்திகோளாகில் ஸ்ரீவைஷ்ணவர்களை ஆஶ்ர யியுங்கோ ளென்கிறாள்.

அ. க்ஷுத்ர தேவதாஸ மாஶ்ரயணம் உங்களுக்குக் கீழ்மையை விளைக்கு மென்கிறாள்.

கூ. கிருஷ்ணன் திருவடிகளை நினைத்து வாழ்த்துங்கோள் இவள் பிழைக்க வேண்டி யிருந்திகோளாகி லென்கிறாள்.

௧௦. இவருக்கு கிருஷ்ணன் திருவடிகளிலுண்டான ஐகாந்தியத்தை அநுசந்தித்து அவனையேபத்துங்கோள் இவன் உஜ்ஜீவிக்குமென்கிறாள்.

௧௧. நிகமத்தில், பலம் சொல்லித் தலைக் கட்டுகிறார்.

௭-ம். திருவாய்மொழி—சீலமில்லா.

மோஹந்தெளிந்து, திவ்யமங்கள விக்ரஹத்தைக் காட்ட வேண்டுமென்று அஹோராத்ரம் விழித்தமையை யருளிச்செய்கிறார்.

௧. நெடுங்காலம் கூப்பிடச்செய்தேயும் விஷயீகரியாதபடியாக நான் பண்ணின பாபத்தின் மிகுதியிருக்கிறபடி யென்னென்கிறார்.

௨. பண்டுபண்ணின உபகாரங்களைச்சொல்லி; அப்படி உபகரித்துன் சுவட்டை அறிவித்து இப்போது நான் கூப்பிட, முகங்காட்டாதே யெழுவாங்கி யிருக்கைபோருமோ என்கிறார்.

௩. எனக்குன்னைக் காட்டாதொழிந்தால் “நீ என்னைக் காண்கைக்குப் பாக்கியம் பண்ணிற்றில்லை” யென்றாகிலும் என்கண்முகப்பேவந்தொன்று சொல்லுகிறிலை யென்கிறார்.

௪. நாம் காணும்படியாக வரவேண்டு மென்கிறார்.

௫. ப்ரம்ஹாதிகளுக்குங் காணமுடியாதிருக்கிற உன்னுடைய வடிவழகைக் காணவேணுமென்று ஆசைப்படாநின்றேன் என் சாபலமிருந்தபடியென் னென்கிறார்.

௬. “என்பக்கலிலேசதாசந்நிஹிதனாயிருந்தே யுன்னைக்காட்டாதொழிகிறது நீ நினையாமை” என்றறிந்துவைத்தேகாண வாசைப்படா நின்றேன்; அதுக்கடி என்னறிவுகேடென்கிறார்.

௭. எனக்கு நீர் சிறிதுசெய்தமையுண்டு இவ்வம்சம் பெற்றேன், எனக்கித்தால் போராதென்கிறார்.

௮. பெற்றவம்சம் சொன்னாய்ப் பெறாதவம்ச மிதுவென்கிறார்.

௯. உபாயங்களொன்றுமின்றிக்கே யிருக்கிற நான் “காணவேண்டும்” என்றாசைப்பட்டால் காண்கைக் குபாய முண்டோ வென்கிறார்.

௧௦. காணப்பெறாவிட்டால் மறந்துபிழைக்க வொண்ணாதபடி எனக்குத்தக்கதொரு ஞானதிருஷ்டி எங்ஙனே உண்டாயிற் றென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் எம்பெருமானோடே நித்திய ஸம்ஶ்லேஷம் பண்ணலாந் திருநாட்டிலே செல்லப்பெறுவ ரென்கிறார்.

அ - ம் திருவாய்மொழி—ஏறாளும்.

கூப்பிட்டும் வராதபடியாலே, இந்த ஸர்வேஸ்வரனுக்கு உபேக்ஷா விஷயமான ஆத்மாத்மியங்கள் தமக்கு வேண்டாமென் றருளிச்செய்கிறார்.

க. எம்பெருமான் விரும்பாத சிலாக்கியமான நிறங்கொண்டெனக் கொரு கார்யமில்லை யென்கிறாள்.

உ. அவன் விரும்பாத பவ்யமான நெஞ்சால் என்னகார்ய முண்டென்கிறாள்.

ந. அவன் விரும்பாத வடக்கம் எனக்கு வேண்டா வென்கிறாள்.

ச. பெண் பிறந்தாரைப் பேணும் க்ருஷ்ணன் விரும்பாத நிறமெனக்கு வேண்டா வென்கிறாள்.

ரு. தசரதாத்மஜன் விரும்பாத அறிவினால் என்ன ப்ரயோஜந முண்டெனக் கென்கிறாள்.

சு. அவன் விரும்பாத லாவண்யத்தால் என்ன கார்ய முண்டென்கிறாள்.

எ. நான் ஆபரணம்பூண் டொப்பித்திருக்கிற விவ்வொப்பனை யார்க்கென் கிறாள்.

அ. அவன் என்னை யுபேக்ஷிக்குமாகில் என்னுடைய மேகலையாலென்ன ப்ரயோஜந முண்டென்கிறாள்.

கூ. அவன்விரும்பாத உடம்புகொண்டு கார்யமென் னென்கிறாள்.

க0. சீலகுணத்தையும் விரோதிநிரசநத்தையுஞ்சொல்லி அவன் விரும்பாத சத்தையாலென்ன கார்யமுண்டென்றுப க்ரமத்தோடேசேர உப ஸம் ஹரிக்கிறாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குப்பலம் பரமபதமென்கிறார்.

கூ-ம். திருவாய்மொழி—நண்ணாதார்.

உன்விஸ்லேஷமானாலும் ஸஹிக்கிறோமொழிய, உன்னிடத்தில் விமுகரான ஜீவனைப்பார்க்கமாட்டோம், இந்த தேஹம் விடும்படி செய்யவேண்டுமென்று ஸ்வாமியை ப்ரார்த்தித்ததை யருளிச்செய்கிறார்.

க. நானுன் திருவடிகளிலேவந்து கிட்டும்படி எனக்கு இச்சரீர விஸ்லேஷத்தைப்பண்ணித் தந்தருள வேணுமென்கிறார்.

உ. இவர்கள் துக்கத்தைப் போக்காயாகில் என்னை யுன் திருவடிகளிலே அழைத்தருள வேணுமென்கிறார்.

௩. அக்ககர்மமில்லாத உன் திருவடிகளிலே அடிமை கொள்ளவேண்டு மென்கிறார்.

௪. என்னை முன்னம் சம்சாரிகள் நடுவில்நின்றும் வாங்கவேணு மென்கிறார்.

௫. ஜன்மஜரா மரணாதிகள் நடையாடாததேசத்திலே அழைத்துக்கொண் டருளவேணு மென்கிறார்.

௬. ஜீவநார்த்தமாக பரஹிம்சைபண்ணுகிற ஸம்சாரிகள் நடுவினின்று மென்னையுன் திருவடிகளிலே அழைத்தருளவேணு மென்கிறார்.

௭. சகலபதார்த்தங்களும் த்வததீநமானபின்பு நீயே யுன்னைக்கிட்டும் வழி பார்த்தருள வேணுமென்கிறார்.

௮. நாமே செய்யப்புக, நீர் "வேண்டா" என்றவாறே யன்றோ தவிர்ந்தது; இதுக்கு நம்மைக்காற் கட்டவேணுமோ வென்ன; செய்யக்கடவ தாகி லதென்று செய்வதென்கிறார். "எம்மா வீட்டுத்திறமும் செப்பம்" என்றாரே.

௯. திருநாட்டிலிருந்த விருப்பைக் காட்டியருளக் கண்டநுபவிக்கப் பெற் றேனென்று த்ருப்தராகிறார்.

௧0. விட்டதிது பற்றின திதுவென்று வ்யக்தமாக வருளிச்செய்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யசித்தாரை இதுதானே அவன் திரு வடிகளிலே சேர்க்கு மென்கிறார்.

௧0-ம். திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்.

பின்னும் தேவதாந்த்ரபரரான சேதனரிடத்தில் க்ருபையாலே, ஸ்ரீமந்நாராயணனே பரத்வமாகையாலே, தேவதாந்த்ரத்தைவிட்டு ஜகத்காரண பூதனான ஸர்வேஸ்வரனை, யாஸ்ரயியுங்களென்று பரோபதேசம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

௧. "ஏகோஹவை நாராயண ஆஸீத்" என்கிற காரணவாக்ய ப்ரக்ரியையை அநுசந்திக்கிறார்.

௨. எல்லாரையும் உண்டாக்கினவன் நின் றருளுகையாலே ப்ராப்யமான திருநகரியை ஆஸ்ரயியுங்கோ ளென்கிறார்.

௩. ஜகந்நிகரணாதி திவ்யசேஷ்டி தங்களாலு மிவனே பரன், இதிசையாதா ரொன்றேனும் வந்து கலந்து பேசிக் காணுங்கோ ளென்கிறார்.

௪. சகலோப நிஷத் ப்ரசித்தனான நாராயணனே பரதத்வம் என்று நிஷ்க ரிஷிக்கிறார்.

ரு. லிங்கபுராணம்துடக்கமான குதிர்ஷ்டி ஸ்ம்ருதிகளையும் பாஹியாஸ்ம்ருதிகளையும் ப்ரமாணமாகக் கொண்டு வந்தவர்களை நிஷேதிக்கிறார்.

௬. எம்பெருமானைச் சமாப்ஸ்ரயித்து அவன் வஞ்சனத்தைத் தப்புங்கோளென்கிறார்.

எ. தேவதாந்தரசமாஸ்ரயணம் செய்து கண்டிகோளீரோ இனிப் பகவத் சமாஸ்ரயணத்தால் அமையு மவற்றைக் காணுங்கோ ளென்கிறார்.

அ. இதர தேவதாசமாப்ஸ்ரயணம் பண்ணியன்றே மார்க்கண்டே யாதிகள் ஸ்வாபிலஷிதம் பெற்றதென்ன; ஆகில திருந்தபடியைக் கேட்கலாகாதோ வென்கிறார்.

௯. அவன் வர்த்திக்கிற திருநகரியை உங்கள் த்யாநத்துக்கு விஷயமாக்கவமையு மென்கிறார்.

௧0. பொலிந்து நின்ற பிரானுக்கடிமை செய்கையே உசிதமென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய் மொழி கற்றார்க்கு பரமபதம் சுலப மென்கிறார்.

ரு-ம். பத்து.

விரோதியைப் போக்குவானுமவனே யென்றார்.

க-ம். திருவாய்மொழி—கையார்.

பக்தியில்லாமல் பக்தன்போல வஞ்சகோக்திகள் சொல்லிப் பாஹ்யவிஷயங்களிலே ப்ரவணனான வெனக்கு, ஸ்வாநுபவத்தை யுபகரித்தானென்று, உபகார ஸ்ம்ருதி பண்ணினதை யருளிச்செய்கிறார்.

௧. என்பக்கலுள்ள தஹ்ருதயமான வுக்தியாயிருக்க இத்தை ஸஹ்ருதயமாகக்கொண்டு விரும்பி, "இனியிதுக்கவ்வருகில்லை" யென்னும்படியானபேற்றைப் பண்ணித் தந்தானென்கிறார்.

௨. ஸர்வஞ்யனனவ னத்தை மெய்யாகக்கொண்டு தன்விபூதியோடேகூட நானிட்ட வழக்கானனென்கிறார்.

௩. இப்படி வாங்மாத்திரத்தாலே உன்னைப்பெற்ற நான் உன்னையொழிய வேறொன்றை ஆசைப்படேனென்கிறார்.

௪. நீயேயென் விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக்கொண்டருளவேணு மென்கிறார்.

ரு. நீர் "நீர் மலினம்" என்கிற தெத்தையென்ன, இன்னதென்கிறார்.

௬. வடிவழகைக்காட்ட அதைக்கண்டவாறே தம்முடம்பை மறந்து ப்ரீதராய்க் கண்டுகொண்டே னென்கிறார்.

௭. பகவத் க்ருபை நடையாடாநிற்கச் சிலர்க்கு "நானயோக்கியன்" என் றிழக்கவேண்டாகிடிகோ ளென்கிறார்.

௮. நான் நித்யஸூரிகளைப்போல நித்யசம்சாரத்தை விட்டு அவனையே யெல்லா உறவுமுறையுமாகப்பற்றப் பார்த்தே னென்கிறார்.

௯. என் க்லேசமெல்லாம் தீரும்படி தன் க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து கலந்தா னென்கிறார்.

௧௰. அவன் தன்பக்கலிலே ருசியைப் பிறப்பித்த மஹோபகாரத்தை அநுசந்தித்த க்ருதஜ்ஞதையே பற்றாசாகவந்து என்னோடே நிரவதிக ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணினா னென்கிறார்.

௧௧. நிகமத்தில், இதை அப்யசித்தவர்கள் நிரவதிக ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையராய் அவன் திருவடிக்கீழே புகப்பெறுவ ரென்கிறார்.

௨-ம். திருவாய்மொழி—பொலிகபொலிக.

தம்முடைய உபதேசத்தால் சிக்ஷிதராய்ப், பகவத்பரரான சேதநரையும், தம்முடைய ப்ரபாவத்தைப் பார்க்க வந்த நித்யசூரிகளையும், பார்த்து, மங்களாஶாஸநம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

௧. ஸ்ரீவைஷ்ணவ சமூர்த்தியைக்கண்டு மங்களாஶாஸனம் பண்ணுகிறார்.

௨. இவ்வைஷ்ணவ சமூர்த்தியை அநுபவிக்கைக்கு அநுகூல ரெல்லாரும் வாருங்கோ ளென்கிறார்.

௩. நித்ய சூரிகளுக்கும்புகுந்து பரிமாறலாம்படி சம்சாரமடைய ஸ்ரீவைஷ்ணவர்களே யாயிற் றென்கிறார்.

௪. அவிசால்லியமான பாஹ்ய சமயங்களை வேரோடே அறுப்பானைப் போலே யெங்கும் வைஷ்ணவர்களே யாய்ப் பகவத் குணாநுபவ ஜநித ஹர்ஷத்தாலே களித்துத் திரியாநின்றார்க ளென்கிறார்.

௫. ஸ்ரீவைஷ்ணவர்கள் அசுரராக்ஷசரான உங்களையும் முடித்து யுகத்தையும் பேர்ப்பர்க ளென்கிறார்.

௬. சகல துக்கங்களையும் போக்குகைக்காக ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள், அவர்களோடே நீங்களு மவனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

௭. நாங்கள் நெடுநாள் தேவதைகளுக்குப் பச்சையிட்டு ஆஶ்ரயித்துப் போந்தோம், அதின் முடிவுகண்டு பின்னைப் பகவத் ஸமாஶ்ரயணம் பண்ணுகிறோமென்ன; நீங்கள் ஆஶ்ரயிக்கிற தேவதைகள் உங்களை ரக்ஷிப்பதும் அவன் பக்கலிலே கொண்டு சென்று காட்டிக்கொடுத்தாயிற்று, ஆன பின்பு அவனையே ஆஶ்ரயிக்கப் பெறி

லழகிது, அதுவும் மாட்டிகோளாகில் நீங்கள் அவர்களுக் கிடுகிற வற்றை "இவர்கள் அவனுக்குத் தநுபூதர் இவர்கள் முகத்தாலே நாம் பகவத் ஸமாராதனம் பண்ணுகிறோம்" என்று புத்திபண்ணி யாகிலும் இடப்பாருங்கோ ளென்கிறார்.

அ. அவனுடைய வசாதாரண விக்கிரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள். அவர்களைப்போலே நீங்களும் அவனை ஆஶ்ரயிக்கப் பாருங்கோ ளென்கிறார்.

௯. பகவத்குண நிஷ்டரும் கைங்கரிய நிஷ்டருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமி யெங்கும் பரந்தார்கள். நீங்களும் அவர்களோடொக்க அநந்நிய ப்ரயோஜநராய் ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

௧0. நீங்களா ஶ்ரயிக்கிற தேவதைகள் செய்கிற வித்தை, நீங்களும் செய்திகோளாகில் யுகப்ரயுக்தமான தோஷங்களும் போமென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குத் தேவதாந்தரங்கள் பக்கலுண்டான பரத்வசங்கையும், எம்பெருமான் பக்கல் ப்ரயோஜநாந்தர பரதையுமானசதோஷம் போமென்கிறார்.

௩-ம். திருவாய்மொழி—மாசறுசோதி.

எங்கும் பகவத்விஶ்லேஷத்தை ஸ்மரித்துக்கொண்டு அதனாலே நாயகி தன்மையையடைந்து, லோகத்தார் நிந்திக்கும்படியான மடலூரும்படியை, உத்யோகித்ததை யருளிச்செய்கிறார்.

௧. "சவுந்தரியத்தாலும் சீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்றதொருவிஷயமாயிற்று அது. நீ செய்யப்புகுகிறவிது, அவ்விஷயத்திற்குப் பழிப்பைவிளைக்கப் புகுகிறாய்கிடாய்" என்று தோழிசொல்ல; நான் அவ்விஷயத்துக்குப் பழிப்புவிளைக்கப் புகுகிறேனல்லேன், பழிப்பறுக்கப் புகுகிறேன்காண் என்கிறாள்.

௨. கீழே வடிவழகை அநுசந்தித்து அநந்தரம் பாஹ்யஸம் ஶ்லேஷ பேக்ஷை பிறந்து அப்போதே பெறுமையாலே வழியில்லா வழியே மடலூர்ந்தாகிலும் பெறப்பார்க்கிறாள்.

௩. என்செய்யும் "ஊரவர்கவ்வை" என்றாள். அவர்கள் சொல்லுகிறத்தை சொல்லுகிற தோழியான நீதான் எவ்வளவிலே நிற்கிறாயென்கிறாள்.

௪. அவனிப்போது வந்து முகங்காட்டிற்றிலனாகிலும் தான் முகங்காட்டாத போதும் தன்னை யொழிய நமக்கு மற்றொன்றால் பொருந்தாதபடி பண்ணினானே! அவன் செய்தபடி பொல்லாதோ வென்கிறாள்.

௫. நீயவனுக்குக் குணஹாநி சொல்லுவது என்னை மீட்கைக்காகவிறே அதுவும் நான் அவனைப்பற்றுகைக்கு உறுப்பாகச் சொன்று யான வித்தனை யென்கிறாள்.

௬. நீயிப்படி வ்யவஸிதையானபடி அறிந்தால் அவள் ஜீவியாள் கிடாய் பெண்ணே; அவள் ஜீவிக்கிலென் முடியிலென் என்கிறாள்.

௭. அவன் குணஹாநி சொல்லுகிற ஸ்ரீகள் வாயடங்கும்படி நாமவனை வரக்கண்டு அந்த உபகாரத்துக்காகத் தலையாலே வணங்கவல்லோமே யென்கிறாள்.

௮. அவன் தன்சத்தையை யுண்டாக்கி நம்சத்தையைத் தந்தான்; நாமவன் சத்தையாலுண்டான பலம்பெறுவதென்றோ வென்கிறாள்.

௯. தன் ஸ்ரீத்வத்தாலே யிதுக்குமுன்பு மறைத்துக்கொண்டு போந்தாள்; இனி "அவனை அறிக்கட்புகுகிற நாமார்க்கு மறைப்பது" என்று அதுதன்னையே சொல்லுகிறாள்.

௰. ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி மடலூர்ந்தாகிலும் நிரதிசய போக்யனானவனைக் காணக்கடவே னென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யசிக்க வல்லாரிருந்த தேசத்தே அவன் தானேவந்து நித்ய ஸம்ஶ்லேஷம் பண்ணுமென்கிறார்.

௪-ம் திருவாய்மொழி—ஊரெல்லாம்.

மடலூர்தற்கு அசக்யமாய் அந்த காராக்ராந்தமான இரவில், ஆழ்வார் அத்யந்தம் துக்கப்பட்டதை யருளிச்செய்கிறார்.

௧. ப்ரளயாபத்திலேவந்து உதவினவன் என்னை விரஹப்ரளயங் கோக்க வந்துதவாதபின்பு இனி நான் ஜீவிக்கையென்றொரு பொருளுண்டோவென்று தன் ஜீவநத்திலே நசையறுகிறாள்.

௨. இத்தசையில் க்ருஷ்ணனும் வருகிறிலன்; என்னோட்டை சம்பந்தத்தாலே அவனைப்போலே நெஞ்சே நீயும்பாங்கன்றிக்கே யொழிந்தா யென்கிறாள்.

௩. பரதந்த்ரை யாகையாலே முடியவும் விரகறிகிறிலே னென்கிறாள்.

௪. வரையாதே ரக்ஷிக்கும் ஸ்ரீவாமனனும் வருகிறிலன் என் சிந்தாவ்யசநத்தைப் போக்குவார் யார் என்கிறாள்.

௫. க்ருஷ்ணனும் வருகிறிலன் நான் சப்தாவசேஷை யானேன் என்கிறாள்.

௬. முடியப்பெறாத ப்ராணனை ரக்ஷிப்பார் ஆரென்கிறாள்.

௭. உறங்காத தெய்வங்களைக்குறித்து நானென்செய்வேனென்கிறாள்.

அ. ஏகராத்திரி அநேகயுகமாய் மிகவும் நலியாநின்றது, எம்பெருமானும் வருகிறிலன், அதுக்குமேலே தென்றலும் நலியாநின்றதென்கிருள்.

கூ. ரக்ஷகனானவனும் தோற்றுகிறிலன் என் மனோதுக்கத்தை இனிப்போக்குவார் ஆரென்கிருள்.

கo. இந்தராத்திரியில் என்னுடைய வ்யசநத்தைக் கண்டுவைத்து அவன் திரமாக ஒருவார்த்தை சொல்லாதே லோகமாக உறங்குவதே! யென்கிருள்.

கக. நிகமத்தில், இவர் பாசுரங்கேட்டார்க்குப் பரமபதம் ப்ராப்தி யென்கிருர்.

ரு-ம் திருவாய்மொழி—எங்ஙனேயோ.

அதன் பின் சூர்யோதயமாய் திருக்குறுங்குடி நம்பி பகவான் ப்ரத்யக்ஷ மாகா நிற்க, தத்ப்ரவணரான ஆழ்வாரைப் பார்த்து தாய் விலக்கியும், அவனிடத்தில் தன் மனதுலக்நமா யிருக்கிறது, நீ கோபிக்கவேண்டாமென் றருளிச் செய்கிருர்.

க. திருக்கையில் ஆழ்வார்களோடே சேர்ந்த நம்பி திருமுகத்தி லழகிலே என் அந்தக்கரணம் மிகவும் பரவணமாகா நின்றதென்கிருள்.

உ. நம்பியுடைய தோளழகு மாபரண ஸ்ரீயும் ஸர்வ தோமுகமாக நின்று நலியா நின்ற தென்கிருள்.

௩. நம்பியுடைய திவ்யாயுதவர்க்கம் உள்ளும் புறம்புமொக்க நிரந்தரமாகத் தோற்றுநின்ற தென்கிருள்.

ச. ரக்ஷணத்துக்குக் கவித்த முடியும் தனிமாலையும் பரிவட்டப் பன்பும் பார்ஶ்வத்திலே நின்று என்னை நலியாநின்றன வென்கிருள்.

ரு. ஒன்றுக்கொன்று தகுதியான நம்பியுடைய திருமுகத்தி லழகுகள் என்னுயிர் நிலையிலே நலியா நின்றன வென்கிருள்.

சூ. நம்பியுடைய திவ்வியாவயவ சோபைகள் என்னெஞ்சு நிறையப் புகுந்து நலியா நின்றன வென்கிருள்.

எ. நம்பியுடையதிருமேனியி லழகுவெள்ளம் என்னெஞ்சிலே வேர்விழுந்த தென்கிருள்.

அ. ஸார்வத்ரிகமான அங்கசோபை என் முன்னே நின்று நலியா நின்ற தென்கிருள்.

கூ. நம்பி போக்யதைகள் எல்லாவற்ருேடுங்கூட என்னெஞ்சிலே புகுந்து விடுகிறிலன் என்கிருள்.

௧௦. நம்பியுடைய திருமேனி என்னெஞ்சிலே ப்ரகாசிக்கிறபடி ஒருவருக்கும் கோசரமன் றென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யஸிக்க வல்லார் ஸம்ஸாரத்திலே யிருந்தே வைஷ்ணவர்க ளென்கிறார்.

௬-ம். திருவாய்மொழி—கடல் ஞாலம்.

பாவநாப்ரத்யக்ஷம் போகையால், மிகவும் ஆர்த்தியை யடைந்து, கோபிகைகள் க்ருஷ்ண லீலைகளை யநுபவித்தாப்போல், பகவத்லீலைகளை யநுகரித்துத் தரித்ததை யருளிச் செய்கிறார்.

௧. என்மகள் ஜகத் ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரங்க ளெல்லாம் பண்ணினேன் நான் என்னா நின்றாள்; எம்பெருமான் தன் பக்கலிலே ஆவேசித்துச் சொல்லுகிறாள் போலே யிராநின்ற தென்கிறாள்.

௨. ஸகல வித்யாவேதனமும் அவ்வித்யா ப்ரவர்த்தகத் வாதிகளும் நானிட்ட வழக்கென்கிறாள்.

௩. காரணமான ப்ருதிவ்யாதி பூத பஞ்சகங்களும் நானிட்ட வழக்கென்னா நின்றா ளென்கிறாள்.

௪. காலத்ரயத்திலு முண்டான க்ரியாஜாதமெல்லாம் நானிட்ட வழக்கென்னா நின்றா ளென்கிறாள்.

௫. ஜகத்ரக்ஷண ப்ரமுகமான சேஷ்டிதங்களுமெல்லாம் பண்ணினேன் நான் என்னா நின்றாள் என்கிறாள்.

௬. கோவர்த்த நோத்தரணம் முதலான க்ருஷ்ண சேஷ்டிதங்களெல்லாம் பண்ணினேன் நான் என்னா நின்றாள் என்கிறாள்.

௭. எம்பெருமான் ஆஸ்ரித விஷயத்தில் இருக்கிற விருப்பைத் தன்படியாகப் பேசாநின்றாள் என்கிறாள்.

௮. ஜகத் ப்ரதானரான ப்ரம்ஹாதிகள் நானிட்ட வழக்கென்னா நின்றா ளென்கிறாள்.

௯. அகர்மவஸ்யத்வப்ரமுகமான பகவதுக்தி களைத்தன் நினைவாகப் பேசாநின்றா ளென்கிறாள்.

௧௦. ஸ்வர்க்க ப்ரமுகமான பதார்த்தங்க ளெல்லாம் நானிட்ட வழக்கென்னா நின்றா ளென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸிக்க வல்லவர்கள், ஸ்ரீ வைஷ்ணவர்களுக் கடிமைசெய்யப் பெறுவர்கள் என்கிறார்.

எ. அவன் திருவடிகளிலே நித்யமாகப் பூவை அணிந்து தொழவல்லோமே யென்கிறாள்.

அ. அவன் திருவடிகளிலே சர்வகாலமு மிடைவிடாதே அடிமைசெய்யக் கூடவற்றே யென்கிறாள்.

கூ. அவனைக் கண்டு தொழும்படி அவன் அருள்கூடவற்றே யென்கிறாள்.

க0. அவன் திருநாமங்களைச் சொல்லக் கூடவற்றே யென்கிறாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யசிக்க வல்லார் சம்சாரத்திலே இருந்துவைத்தே பகவத் குணாநுபவத்தாலே யெல்லாரிலும் சிறந்தவர்க ளென்கிறார்.

க0 - ம். திருவாய்மொழி—பிறந்தவாறு

அர்ச்சாவ தாரத்தில் பலசித்தியாகாமையாலே, அவதாரங் களில் ப்ரவேசித்துக் குணாநுபவத்தில் மநச்சைதில்யம் வராமற் செய்யவேண்டுமென்று, எம்பெருமானை ப்ரார்த்தித்ததை யருளிச் செய்கிறார்.

க. சைதில்லியம் நீங்கி உன்னைத் தரித்து நின்று நான் அநுசந்திப்ப தெப் போ தென்கிறார்.

உ. வளர்ந்தவாறுதானிருக்கிறபடி சொல்லுகிறார்.

ஙு. உன்பாலசேஷ்டிதங்கள் என்னை நலியாநின்ற தென்கிறார்.

ச. பவுத்தாவதார வ்ருத்தாந்தம் மிகவும் என்னை நலியாநின்ற தென்கிறார்.

ரு. நீ பண்ணின சேஷ்டிதங்களை அநுசந்திக்குந்தோறும் மநஸ்ஸுமிகவும் அழியாநின்ற தென்கிறார்.

சு. உன் சேஷ்டிதங்களை அநுசந்திக்க வல்லேனும்படி பண்ணி யென்னை ரக்ஷிக்க வேணு மென்கிறார்.

எ. கண்ணாலேகண்டநுபவிக்க வல்லேனும்படி பண்ணி யருளவேணுமென் கிறார்.

அ. உன் குணசேஷ்டி தாதிகளைக் கேட்ட கேட்டபோது தோறும் சிதில னாகா நின்றேன் என்செய்கேனென்கிறார்.

கூ. நானுன்னைத் தரித்துநின்று அநுபவிப்பதென் றென்கிறார்.

க0. சமுத்திரமதனவை சித்திரியத்தை அநுசந்தித்து சிதிலனாகாநின்றேன், உன்னைத் தரித்துநின்று அநுசந்திக்க வல்லேனும்படி விரகு சொல்லவேணு மென்கிறார்.

கக. நிகமத்தில், இப்பத்தும் கற்றார் பரமபதத்திலே போய் நித்தியாநு பவம் பண்ணப் பெறுவரென்கிறார்.

௬-ம் பத்து.

விரோதி நிரஸநசீலனானவன் திருவடிகளிலே சரணம் புக்கார்.

௧-ம். திருவாய்மொழி—வைகல்.

அவதாரங்களாலும், இஷ்டஸித்தி யில்லாமற் பின்னையும் அர்ச்சாவதாரங்களிலே இறங்கி, திருவண் வண்டூர்ஸ்வாமி விஷயமாகப் பக்ஷிகளைத் தூது விட்டதை யருளிச் செய்கிறார்.

௧. சில குருகுகளை நோக்கி; திருவண்வண்டூரிலே சென்று எம்பெருமானுக் கென் தசையை அறிவியுங்கோ ளென்கிறாள்.

௨. ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷிதனானவனுக் கென் ஆற்றாமையை அறிவியென்றொரு நாரையை யிரக்கிறாள்.

௩. இறந்திரமாகச் சஞ்சரிக்கிற புள்ளினங்களைக்கண்டு; என் வ்யசநத்தை அறிவியுங்கோ ளென்கிறாள்.

௪. சில அன்னங்களைக்குறித்து, சரீரம் கட்டழிந்து சிதிலையாகா நின்றாளென்று சொல்லுங்கோ ளென்கிறாள்.

௫. திரியவுஞ் சில அன்னங்களைக்குறித்து; அத்தேசம் புக்கார் மறப்பிக்கும் நீங்கள் புக்கால் என்னையும் நினையுங்கோ ளென்கிறாள்.

௬. சிலகுயில்களைக்குறித்து, அவனுக்கென் தசையை அறிவித்து அங்குநின்றுமொரு மறுமாற்றங்கொண்டு வந்தருளிச் செய்யவேணு மென்கிறாள்.

௭. சில கிளிகளைக் குறித்து, அவனடையாளங்களைச் சொல்லி இவ்வடையாளப்படியேகண்டு எனக்காக வொருவார்த்தை சொல்லுங்கோ ளென்கிறாள்.

௮. சில பூவைகளைக்குறித்து; மீண்டுவந் தெனக்குச் சொல்லலாம்படி வ்யக்தமாகக் கண்டு ஒரு மறுமாற்றம் கேட்டுவந்து சொல்லவேணு மென்கிறாள்.

௯. சில வன்னங்களைக் குறித்து ; ஏகாந்தத்திலே "நகச்சிந்நாபராத்யதி" என்பார் முன்பாக என்னிடை யாட்டத்தை அறிவியுங்கோ ளென்கிறாள்.

௧௦. சில வண்டுகளைக் குறித்து, அவர் இத்தலையில் சத்தையு மில்லையென்றிருப்பர், அவளு முளளென்று சொல்லுங்கோ ளென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு ஸ்பருஹாவிஷய மாவ ரென்கிறார்.

———

உ-ம். திருவாய்மொழி—மின்னிடைமடவார்.

தூதிகோக்தியால் ஸர்வேஸ்வரன் விளம்பித்து வருகையாலே, யுமக்குவேண்டின ஸ்த்ரீகளிருக்க, இங்கே வரவேண்டாமென்று, ப்ரணய கலஹத்தாலே திரஸ்காரம் பண்ணினதை யருளிச் செய்கிறார்.

க. இப்படி வரவுதாழ்த்தது மித்தலையை யொழியச்செல்லுவதா யன்றிறே, கடுகவந்துகொண்டு நின்றான். பந்தையும் கழலையு மெடுத்துக்கொண்டான், அலப்பிய லாபமென்று தோற்றும்படி நின்றான், இத்தலையில் பண்ணக்கட வவ்யாமோஹ மடங்கலு மிவற்றின் பக்கலிலே பண்ணினான். அவன்படுகிற வலமாப்பைக்கண்டு "இவையெல்லாம் நம்மைக்குறித்துச்செய்கிறா னல்லன், தான்கலந்து பிரிந்தவர்களுடைய உபகரணங்களாகக் கொண்டுசெய்கிறா னித்தனை, இவனுடன் வார்த்தைசொல்லாதே யிருக்கிறதென்" என்று "வாராய் நீநினைக்கிறவர்க ளதன்று காணிவை உனக்கு பேக்ஷாவிஷயமான எங்களது காணிவை, இவற்றைத்தந்து அவர்கள் பக்கலி லேறப்போ" வென்கிறாள்.

உ. நொக்குப்பெறாதவன் முகம்பார்க்கப் பெற்றான், வார்த்தைகேட்கப் பெறாதவன்"போ" யென்னவும்பெற்றான், இனிஇதற்கு மேற்பட க்ருதார்த்தனுகையில்லை யிறே "போ" என்றால் அவ்வார்த்தையே யன்றிறே அவன் புத்திபண்ணுவது, அதிலகவாயி லோடுகிறது மறியுமவனிறே "இன்னமென்கை யகத்தீங் கொருநாள் வருதியேலென்சினந்தீர்வனானே" என்றித்தை உய்ந்தபிள்ளை பாடாநிற்கச்செய்தே, காலாலே யுதைப்பது கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக்காட்டினார்.

ங. "குழலூதுபோயிருந்து" என்றிறே என்னைச்சொல்லுகிறது உத்தமானதுதன்னை அநுஷ்டிக்கு மத்தனையிறே. இனித்தான் "உனக்குப் பெண்கள்படும் நீர்வாய்ப்புள்ள விடங்களிலே போயிருந்தூது" என்றிறே நீங்கள் சொல்லிற்று; அழகிது இத்தனையிறே நீர்வாய்ப்புள்ளவிடந்தான் எது அத்தைச் சொல்லலாகாதோ" என்று இரண்டடி உட்புகுரவிட்டு நற்றரிக்கவிருந்து குழலிலினிய பேச்சிலே கைவைத்தான். குழலோசைபோ லன்றிறே பேச்சினிமை யிருக்கும்படி "நான்செய்தபடி செய்கிறேன்" செவியோசை வைத்தெழ குழலூது போயிருந்து" என்று நீங்கள் சொன்ன விதுக்குக் கருத்து எனக்குப்போச்சுதில்லை இதெனக்கு ஜாத்யுசித வ்ருத்தியன்றோ" என்றான்.

௪. "நான் சொன்னவையெல்லா மிவர்க ளங்யதாவாக புத்திபண்ணுகிறது; நம்மையொழியச் செல்லாமைபிறந்து சாமனைக்ஷணம் தாழ்த்தது பொறுக்கமாட்டாமையிறே" யென்றுபார்த்து; "நீங்கள் என்னை யிப்படியே சொல்லலாமோ நான் பித்ராதிகளுக்கு பாதந்த்ர னன்றோ அவர்க ளென்கையிலே கோலேத்தந்து "நீபோய்ப்பசு மேய்த்துவா" என்றால், என்னும், "மாட்டேன்" என்னப்போ மோ" என்றான்; பித்ராதிகளுக்கு பரதந்த்ரராய்க்கொண்டு பசு மேய்ப்பார் மேய்க்கும்படி யிதுவோ. நீசெய்யும் செயல் சேர்ந் திருக்கிறதில்லை நீசொல்லும் சொலவும் சேர்ந்திருப்பது என்றாள்.

௫. "ஸ்நேஹிகளா யிருப்பார்க்குக் குற்றத்தைக் குணமாகக்கொள்ளவுமாம், நிஸ்நேஹிகளுக்குக் குணந்தன்னையே குற்றமாகக் கொள்ளவுமா ம், விஷயாநுகுணமாயிறே குணதோஷங்களிருப்பது; ஆகையா லே நான் சொன்னவையெல்லா மிப்போ தித்தலைக்குக் குறை யாய்த் தோற்றுமிறே; ஆனாலும் மத்தியஸ்தர் சொன்னதிறே அர்த்தமாய்த் தலைக்கட்டுவது" என்றான்.

௬. தங்களாகவாயிலோடுகிறது தெரியாமல் மறைத்துக்கொண்டு அநுபவ நீயைகளா யிருக்கிற விப்பிராட்டியையுந் தோழிமாரையுங்கண்டு, அவன் தன்முகமுத்திரைகளாலும் பாவகர்ப்பமான வுக்திகளா லும் அத்தை அநுவதித்தாட்போலே யிருக்கிற விலாசசேஷ்டி தங்களாலுமாக இவர்க ளபிசந்தியைக்குலைத்து இனி யிவர்கள் நான் சொன்னவையெல்லாம் "வேண்டா" என்னமாட்டாதவர் கள் என்னும்படி வாய்மாளப்பண்ணி அவ்வளவிலே சென்று இவ ளுடைய லீலோபகரணமான குழமணனை யெடுத்துக்கொண் டான்.

௭. ஸர்வோபாயங்களையு மநுஷ்டித்து ஸ்ரீபரதாழ்வான் தன் பக்கல்பட்ட தெல்லாம் தான் இவர்கள்பக்கலிலே பட்டான். "வினிவர்த்தயிது ம்பலாத்"என்று மீட்கையிலே போரவருந்தினனிறே "சேஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவன்மேன ப்ரஸீததி" தாமேயிரங்கி மீளும் படி பண்ணுகிறேன்; அதுதான் கேட்டார் வாய்கேட்கவேணு மோ புரஸ்தாத் என்றானிறே. அப்படியே இவனும் ஸர்வோபாயங் களையும் ப்ரவிர்த்திப்பித்தவிடத்திலு மணுகவொண்ணாதபடி கடு மைதோற்ற விருந்தார்கள்; இனிச் "செய்யலாவதென்" என்று பார்த்தான்; "பலத்தாலே கார்யங்கொள்ளுவோம்" என்று நிச்ச யித்து இவர்கள் பாவையை யெடுப்பானாகக் கணிசித்தான்; "ப்ரோ க்ஷித்தஞ் ஞாஸ்துகோஸலா?" என்று நினைவறியுமவர்க ளாகையா லே, எல்லாருங் கூடவைத்தபாவையைச் சென்றெடுத்துக்கொண் டார்கள்; அதுதான் "நங்கார்யம்" என்றேயிருந்தான். "ப்ருதக்ப்ர யத்நா பேக்ஷிதமின்றிக்கே யொழியப்பெற்றோம்" என்று பார்த்

தான். திருக்குரவைபோலே ஆளுக்காளாய்நின்று கைப்பிடிக்க வேண்டாவா யிருந்தது "நல்லவாய்ப்பு" என்று இவர்கள் பாவை யைச் சென்று பற்றினன்.

அ. கிட்டிநின்று இவர்களை சிலமிறுக்குக்களைப் பண்ணப்புக்கான், "இங்கே யிருக்கிலன்றே விதெல்லாம் வேண்டுவது" என்றுபார்த்து ஒருவ ரொருவராகப்போகப் புக்கார்கள்; "இதுவோ! பார்த்தபடி" என்று வழியைப்பற்றி யிருவிலங்காகக் கிடந்தான், உத்தியான மாகையாலே வழியோரடிப்பாடா யிருக்குமிறே.

கூ. "இவன் 'போக வொட்டேன்' என்று வளைத்துக்கிடந்ததுக்கு ப்ரயோ ஜந முள்ளது இவனுக்கு நினைத்தபடி பரிமாறப் பெற்றாலன்றே; இவன் முகம்பாராதே யிருக்கிறோம்" என்று அத்யவஸித்து; "பேசாதேயிருந்தவாறே தன்னை நினைத்துக்கொண் டிருந்தோ மென் றிருக்குமிவன்" என்று "அந்யபரதை தோற்றச் சிற்றி லிழைப்போம்" என்றிழைக்கப்புக; "என்னைப்பாராதே யிருப்பது மன்றிக்கே சிறிதன்னிய பரதைபண்ணுவதே" யென்று சிற்றிலை யும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே யழிக்க; அத்தாலே யவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் சங்கல்பத்தை மறந்து அவன் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்.

க0. "நின்முகவொளிதிகழ முறுவல்செய்து நின்றிலையே" என்று விழுக்கா டறியாதே வாய்தப்பச் சொல்லிக்கொண்டு நின்றார்கள்; காலா லழித்தது சிற்றிலையன்றே இவர்கள் நெஞ்சில்மறத்தையே யிறே அந்தமறம்போனவாறே மேல்நோக்கிப் பாதாதி கேசாந்தமாகப் பார்த்தார்கள், தங்களை ஜயிக்கையாலுண்டான ஹர்ஷம்வடிவிலே தோற்றும்படி நின்றான், அவ்வடிவில் பிறந்த வேறுபாட்டைச் சொல்லுகிறார்கள்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியைச் சாதரமாகச் சொல்லவல்லார்க் குப் பகவத்தாரித்திரிய மில்லையென்கிறார்.

ந-ம். திருவாய்மொழி—நல்குரவும்.

ப்ரணய கலஹத்தில் விருத்தமாயிருக்கிற தம்மை, வசீகரிக்கிற விருத்த விபூதிகனான ஸர்வேஶ்வரன், கைக் கொண்டதை யருளிச்செய்கிறார்.

க. விருத்த விபூதிகனான ஸர்வேஶ்வரனைத் திருவிண்ணகரிலே காணப் பெற்றேனென்கிறார்.

உ. ஸ்வயத்நத்தாலே யொருவர்க்கும் காணவொண்ணாத பெருமையையு டையவனாய் வைத்தென்னை அடிமை கொள்ளுகிறவனாரான திரு விண்ணகர் ஸர்வ விலக்ஷண மென்கிறார்.

௩. திருவிண்ணகரப்பனுடைய கல்யாண குணங்களை யொழிய வேறொருவருக்கும் உத்தாரக மில்லை யென்கிறார்.

௪. புண்ணிய பாபாதியாய் எம்பெருமானுக்கு விசேஷணத்வேன தோற்றுகிற விபூதியெல்லாம் அவன் க்ருபையாலே உண்டாயிற்றென்கிறார்.

௫. சிறியார் பெரியா ரென்னாதே சர்வருக்கும் ரக்ஷகன் திருவிண்ணகர்ச் சேர்ந்தபிரா னென்கிறார்.

௬. "நானல்லேன்" என்னைச் செய்தே தன்குண சேஷ்டிதங்களைக் காட்டி மறக்க வொண்ணாதபடி கலந்து அத்தாலே யுஜ்ஜ்வலனா யிருக்கிறவன் திருவிண்ணகரிலே நின்றருளின சர்வேஸ்வரன் கிடீர் என்கிறார்.

௭. எத்தனையேனு மளவுடையார்க்கும் வலியபுகலவ னல்லதில்லை யென்கிறார்.

௮. எனக்குப் புகலான மாத்திரமன்றிக்கே மற்றுமெல்லாம் திருவிண்ணகர்ச்சேர்ந்த பிரானென்கிறார்.

௯. எனக்குச் சரணமான மாத்திரமல்ல மற்றுமெல்லா மவனே யென்கிறார்.

௧௦. அவன் திருவடிகளல்லது மற்று ரக்ஷக மில்லையென்னு மிடத்தைப் புத்திபண்ணுங்கோ ளென்கிறார்.

௧௧. நிகமத்தில், இது கற்றார் நித்திய சூரிகளுக்கு நாள்தோறும் கவுரவ்யராவரென்கிறார்.

௪-ம். திருவாய்மொழி—குரவை.

அவ்வாறு கூட்டிக்கொண்ட க்ருஷ்ணனுடைய குரவை முதலான லீலைகளும், அநுஸந்தித்து ப்ரீதி யடைந்ததை யருளிச் செய்கிறார்.

௧. அஹோராத்ரம் க்ருஷ்ணகுணங்களை ப்ரீதி பூர்வகமாக அநுபவிக்கப் பெற்ற வெனக் கினி யொருகுறை யில்லை யென்கிறார்.

௨. ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே திருநாட்டிலே தான் என்னோடொப்பா ருண்டோ வென்கிறார்.

௩. க்ருஷ்ண சேஷ்டிதங்களையே அநுபவித்துக்கொண்டு காலம்போக்கப் பெற்ற வெனக்கு "இன்னது பெற்றிலேன்" என்று நோவவேண்டுவதில்லை யென்கிறார்.

௪. க்ருஷ்ணனை அநுபவிக்கப்பெற்ற வெனக் கவாப்தவ்ய முண்டோ வென்கிறார்.

ரு. கம்ஸனை மாய்த்தபடியையின்றிருந் தநுபவிக்கப்பெற்ற வெனக்கோ ரெதிரில்லை யென்கிறார்.

சு. கிருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரசந பரம்பரையை அநுபவிக்கப் பெற்ற எனக்கொரு மநோதுக்கம் இல்லை யென்கிறார்.

எ. அவனுடைய சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய வெனக்குப் பூமியில் நிகரில்லை யென்கிறார்.

அ. கிருஷ்ண சேஷ்டிதங்களையே அநுசந்திக்கும் நெஞ்சையுடைய வெனக்கொரு கலக்கமில்லை யென்கிறார்.

கூ. சர்வேச்வரனை மலக்கும் நாவீறுவுடைய வென்னோ டொப்பாருண் டோ வென்கிறார்.

க0. பரமபதத்திலே போய்புக்க படியை அநுபவிக்கப் பெற்ற வெனக்கு வேறே சில நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ நானென்கிறார்.

கக. நிகமத்தில், இதைக் கற்றார் தம்மைப்போலே கிருஷ்ணபக்தராவ ரென்கிறார்.

ரு - ம். திருவாய்மொழி—துவளில்.

பகவதநுபவத்தாலொரு ப்ரீதி விசேஷம் வந்து, அதினாலே நாயகி தன்மையடைந்து, தொலைவில்லி மங்கலஸ்வாமி யிடத்தில் அதி ப்ராவண்யம் பிறந்திருக்க, அதுகண்டு தாய்மார் கோபிக்க, இப்ராவண்யத்தைப் போக்கப் போகாது, இவளிடத்தி லாசை விடுங்க ளென்று, தோழிமார்கள் தாய்மாரோடு சொல்லுஞ் சொல்லாக வருளிச்செய்கிறார்.

க. இவள் ப்ரக்ருதி அறியாதே திருத்துலை வில்லிமங்கலத்தைக் காட்டின பின்பு உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ வென்கிறாள்.

உ. அவ்வூரில் கொடுபுக வேண்டினால் திருநாளிலே கொடுபுகுவாருண்டோ வென்கிறாள்.

ந. திருநாளிலே தான் கொண்டுபோக வேண்டினால் திருச்சோலை யுள்ளிட்டுக் கொடுபுகுவாருண்டோ வென்கிறாள்.

ச. அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களையும் யாதொரு நாள் கண்டாள் அன்று துடங்கித் தடைநிற்கை தவிர்ந்தா ளென்கிறாள்.

ரு. இவள் சுபாவத்தை அறிந்து வைத்துத் தேவபிரானுடைய வழகைக் காட்டிக் கெடுத்திகோ ளென்கிறாள்.

சு. தௌர்ப்பல்லியத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்றொ ரிடமும் பாரா ளென்கிறாள்.

௭. அவன் சின்னமும் திருநாமமும் இவள் சொல்லப்புக்கவாறே நிறம்பெற்றன வென்கிறாள்.

௮. அவ்வூரைத் தொழுதவன்று தொடங்கி யின்றளவுமுண்டான விவளுடைய சைதில்யத்தைச் சொல்லுகிறாள்.

௯. இவள் மனோவாக்காயங்கள் முதலிலே தொடங்கி அவன் பக்கலிலே ப்ரவணமாயிற்றின வென்கிறாள்.

௧௦. அவனுடைய செல்லாத விவளுடைய ப்ராவண்யாதிசயத்தைக் கண்டு பிராட்டிமாரிலே பொருந்தியோ! வென்று சங்கிக்கிறாள்.

௧௧. முடிவில், இத்தைக் கற்றவர்கள் இதுக்கநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவ ரென்கிறார்.

௩-ம். திருவாய்மொழி—மாலுக்கு.

இவ்வண்ணங் வ்யாமோஹப்பட்டாலு மநுபவம் ஸித்தியாதபடியால், அந்த விரஹார்த்தியால் மிகவும் கருசையாய், பெண்ணுக்கு ஆபரணங்களுங் காந்தியு முதலானதுகள் நழுவிப் போயிற்றென்று, தாய்சொல்லுஞ் சொல்லாக வருளிச்செய்கிறார்.

௧. இவள் ஸ்ரீவாமநட்ராதுர்ப்பாவத்தில் குணசேஷ்டிதங்களிலே அகப்பட்டு வளையிழந்தா ளென்கிறாள்.

௨. திருஉலகளந் தருளினபோதை திவ்யாயுதாதிகளி லழகிலே அகப்பட்டுத் தன்னுடைய வழகிய நிறத்தை இழந்தா ளென்கிறாள்.

௩. வடதளசாயிபடிகளிலே அகப்பட்டு இவள் தன்பெருமையை யிழந்தா ளென்கிறாள்.

௪. சதுர்முக ஸ்ரஷ்டாவான மேன்மையைப் பாராதே ஆஸ்ரிதார்த்தமான மஹாகுணத்தை யுடையவனுக்கு இவள் நீர்மையை யிழந்தா ளென்கிறாள்.

௫. வேதப்ரதாநம் முதலான உபகாரங்களைப் பண்ணினவனுக் கென்மகள் கற்பிழந்தாள் என்கிறாள்.

௬. ஏகார்ணவ சாயியானவனுடைய அவயவ சவுந்தரியத்திலே அகப்பட்டு இவள் தன்னுடைய மெய்யிழந்தாள் என்கிறாள்.

௭. க்ஷீரார்ணவ சாயியுடைய வாடரண சோபாதிகளிலே அகப்பட்டு இவள் லாவண்ணியத்தை யிழந்தாள் என்கிறாள்.

௮. கிருஷ்ணனுடைய விரோதி நிரசநத்துக்குத்தோற்று இவள் தன்னுடைய ஸ்ரீத்வத்தை யிழந்தாள் என்கிறாள்.

௯. ஸ்ரீவாமநாத்யநேகாவதாரங்களிலே அகப்பட்டு இவள் தன்னழகை யிழந்தா ளென்கிறாள்.

௧0. பரத்வமென்ன, அவதாரமென்ன, ஜகதாகாரதையென்ன, இவற்றை அடங்கக் காட்டி இவளுடைய தெல்லாவற்றையும் கொண்டானெ ன்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லவர்கள் நித்யஸூரிகள் போகத் தைப் புஜிக்கப்பெறுவ ரென்கிறார்.

எ-ம் திருவாய்மொழி—உண்ணுஞ்சோறு.

இவ்வண்ணஞ்சொன்ன தாயானவள் மூர்ச்சித்திருக் கையாலே, பெண்ணானவள் மோஹந்தெளிந் தெ ழுந்திருந்து, எனக்குத் தாரகபோஷகபோக்யமெ ல்லாங் கண்ணனேயென்று, திருக்கோளூர்க்கே போகையில், தாய் தெளிந் தெழுந்திருந்து, தன் பெண் திருக்கோளூர்க்குப் போனது நிச்சயமெ ன்று, தாய்சொல்லுஞ் சொல்லாக வருளிச் செய்கி றார்.

௧. தன் வயிற்றில் பிறப்பாலும் இவள் தன் சுபாவத்தாலு மிவளிங்கு நின் றும் போய்ப்புகுமூர் திருக்கோளூரென்று அத்யவசிக்கிறாள்.

௨. திருக்கோளூருக்கே போய்ப்புக்க என் பெண் பிள்ளை மீள வருமோ? சொல்லுகோளென்று பூவைகளைத் திருத்தாயார் கேட்கிறாள்.

௩. திருக்கோளூர் ப்ரத்யாசன்னமானால் எங்ஙனே யுடைகுலைபடக் கடவ ளென்கிறாள்.

௪. இவளைக்கண்ட நாட்டார் குணஹீனை யென்பர்களோ! குணாதிகை யென்று கொண்டாடுவர்களோ என்கிறாள்.

௫. திருக்கோளூரிற் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன் கோயிலையுங் கண்டா லெங்ஙனே யுகக்குமோ வென்கிறாள்.

௬. அவனுடைய சிநேஹ பஹுமான வீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர் ஷத்தாலே சிதிலையாகக் கடவளாகாதே யென்கிறாள்.

௭. இவள் ப்ரக்ருதிமார்தவத்தையும் பிரிவில்வந்தசைதில்யத்தையு மநு சந்தித்து; இவையெல்லா மவ்வளவும் செல்லப்போக வல்லளானு லிறே என்கிறாள்.

௮. திருக்கோளூரில் சங்கத்தாலே என்னைப் பொகட்டுப்போன வென் பெண்பிள்ளை அசங்கமே துணையாகப் போய்ப்புக வல்லளேயோ வென்கிறாள்.

௯. அவன் பக்கலிலே அத்யந்த ப்ரவணையாயிருக்கிற விவள் சேரியிலுள்ளார் சொல்லும்படியே பாதேயமாகத் திருக்கோளூர்க்கே போனாளென்கிறாள்.

௰. நங்குடிக்கு வரும் பெரும்பழியை நினையாதே திருக்கோளூரிலே புக்கு அவனை யொருகாலும் விடுகிறில ளென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இப்பத்தும் கற்றாரிட்ட வழக்குத் திருநாடென்கிறார்.

அ-ம். திருவாய்மொழி—பொன்னுலகு.

திருக்கோளூர்க்குப் போகிறோமென்று பலஹானியாலே போகமாட்டாமல், நடுவே யருகேயிருந்த பக்ஷிகளைக் குறித்து, உங்களுக்கு உபயவிபூதியுந் தருகிறோம், என்னவஸ்தையைப் பரமபத நாதனுக்குச் சொல்லுங்களென் றருளிச்செய்கிறார்.

௧. சில புள்ளினங்களைக்குறித்து, எம்பெருமானுக் கென் தசையை யறிவித்து விபூதித்வயத்தையும் நான்தர நீங்களாள வேணுமென் றிரக்கிறாள்.

௨. சில கிளிகளைக்குறித்து, என்னாற்றாமையை அவனுக் கறிவித்து வந்து நானு மென் தோழிமாருங் கொண்டாட அத்தை அங்கீகரிக்க வேணுமென்கிறாள்.

௩. சில வண்டுகளைக்குறித்து, அவனுக் கென்தசையை அறிவித்துவந்து என் தலைமேலே வர்த்தியுங்கோ ளென்கிறாள்.

௪. என்னை நோவுபடுத்திப் போய் எட்டாநிலத்திலே யோலக்கமிருக்கை தக்கோர்மையோ வென்று திருநாட்டிலே சென்று சொல்லுங்கோ ளென்று சில தும்பிகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

௫. தன்னுடைய கிளிகளைக்குறித்து, எங்கேனும் போயாகிலும் அவனைக் கண்டு, இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி என்னுங்கோ ளென்கிறாள்.

௬. ஆஸ்ரிதரோடே கரசனைகையால் நம்மபேக்ஷிதங்கள் செய்யு மவன்பாடே சென்று, இதுவோ தக்க வாறென்னுங்கோளென்று சிலபூவைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

௭. "பரமசேதநன் பொகட்டுப்போனான்; சைதன்ய லேசமுள்ள பக்ஷிகள் பறந்துபோவனவும் அன்னியபரமாவனவு மாயிற்று; இதுக்கு ஹேது, சேதநங்க ளாகையோ" என்று பார்த்து, அசேதநமான பாவையை யிரக்கிறாள்.

அ. முன்பேநின்றகுருகைக் குறித்து, நித்ய ஸூரிகளைப்போலே யும்மா லல்லது செல்லாதே யும்மைப் பிரிந்து நோவுபடா நின்றாளென்று சொல்லென்கிறாள்.

௯. சிலபுறா வினங்களைக்குறித்து, நீங்கள் சென்றாலவன்வந்திலனாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டுவந்து என்னை நித்யமாக உஜ்ஜீவிப்பிக்க வேணுமென்கிறாள்.

௧௦. சில ஹம்ச மிதுனங்களைக்குறித்துப்; பிராட்டியும் தானுமான வேகாந்தத்திலே என் தசையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் வந்து சொல்லவேணு மென்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய் மொழியிலா வாழ்வாருடைய வார்த்தியை அநுசந்தித்தார், சிதிலராவரென்கிறார்.

---

௬ - ம் திருவாய்மொழி—நீராய்.

தூதுவிட்டும் வாராமையால், தன்னழைத்தல் கேட்குமவர்களெல்லாம் நீரா யுருகும்படி, ஸர்வேஶ்வரனுக்கும் பரமபதத்தில் நிற்கவு மசக்யமாகும்படி, ஆழ்வாரழைத்ததை யருளிச்செய்கிறார்.

௧. "ஜகதாகாரனா யிருக்கிறபடியைக் காட்டித் தந்தோமிறே" என்ன; அது போராது அசாதாரணமான வடிவைக்காணவேணு மென்கிறார்.

௨. "வாராய்" என்று நிர்ப்பந்தித்தல்ல காணும் நம்மைக் காண்பது உம்மை யொரு தேசவிசேஷத்திலே அழைத்துக் காணும் காட்டுவதென்ன; அவ்வடிவு தன்னையே யிங்கே கொடுவந்து இதரஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோ வென்கிறார்.

௩. ஜகதாகாரனான வடிவுகாட்டின தெனக்குப் போராது அசாதாரணமான விக்கிரஹத்தைக் கொடுவந்து காட்டவேணு மென்றார்.

௪. தளரக்கடவீரல்லீர் உம்முடைய தளர்த்தி பரிஹரிக்கக் கடவோம் ஆனாலும் ப்ரதிபந்தகம் கநத்திராநின்றது காணுமென்ன; ஓம் அப்படியே சகடாசுரனிலும் காட்டில் வலியதிறே! என்னுடைய விரோதி என்கிறார். உன்கால்கண்டபோதே போகாதோ வென்கிறார்.

௫. ஸர்வத்ர ஸந்நி ஹிதனாய் என் ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாக ப்ரகாசித்துவைத்து என்கண்ணுக்கு விஷயமாகா தொழிந்தால் நான் தளரேனோ வென்கிறார்.

௬. உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம் அதிலொரு குறையில்லை; ஆனாலும் ப்ரயோஜநமு மதானபின்பு நீரும் சிலயத்நம் பண்ண

வேறுங்காணு மென்ன ; இந்த மரியாதையென்று அடங்கிக் கட்டிற்றென்கிறார்.

௭. "உலகில் திரிவேனோ" என்கிற உரைப்பாலுண்டான ஸ்வாதந்திரியமும்முடைய தலையிலே கிடந்ததே! என்ன ; சாதனமும் சாதகரும் த்வததீன மானபின்பு, இவ்வாற்றாமை யெனக்கு ஸ்வரூபமாய் அந்வயிக்கு மித்தனையன்றோ வென்கிறார்.

௮. "அருளாய்" என்றவாயோடே வந்தருளக் கண்டிலர் தன்பக்கல் நின்றும் பிரிந்தென்னைக் கைவிடப்பார்த்தானாகாதே யென்கிறார்.

௯. உம்மை யிங்கு கெடுத்ததென் என்ன ; கண்டகாட்சியிலே யிழுத்துக் கொள்ளக் கடவதான விஷயங்கள் பரிமாறுகிற விடத்தே வைத்தாயாகி லினிக் கெடுக்கை யென்னென்றுண்டோ வென்கிறார்.

௰. "ஐஶ்வர்யாதிகள் அல்பாஸ்திரங்கள்" என்று "வேண்டா" என்கிறீராகில் அவ்வளவன்றிறே அநந்தமுமாய் ஸ்திரமுமா யிருக்குமிறே ஆத்மாநுபவம், அத்தை அநுபவித்தாலோ வென்ன ; நீ சொன்னது உபபத்தியாகிற் செய்யலாயிற்று "அவை அல்பம் அஸ்திரம்" என்ற விடம் ஸ்வரூபகதநம் பண்ணினே னத்தனை, உன்னுடைய போக்யதையைச் சொல்லிற்றும், ஸ்வபாவ மிருந்தபடி சொன்னே னத்தனை ; "அது தீது" என்று விட்டும் "இது நன்று" என்று பற்றுகிறேனுமல்லேன், உன்னைப் பற்றிற்றும் நீயாகையாலே அவற்றை விட்டதும் நீயல்லாமையாலே யென்கிறார்.

௧௧. நிகமத்தில், இப்பத்தும் கற்றவர்கள் சர்வேஶ்வரனுக்கு அந்தரங்க கிங்கரராவ ரென்கிறார்.

௰-ம். திருவாய்மொழி—உலகமுண்ட.

ஆழ்வாரா க்ரந்தநம்பண்ண, உம்முடையபொருட்டே பரமபதத்தைவிட்டு இதுவே பரமபதமாக்கிக்கொண்டு திருமலையிலே வந்திருக்கிறோமென்ன, அலர்மேல் மங்கைநாச்சியாரை புருஷகார மாக்கிக்கொண்டு, திருவேங்கட முடையானை ப்ரபத்தி செய்ததை யருளிச்செய்கிறார்.

௧. உன்னையொழிய வேறுகதியின்றியே யிருக்கிற வென்னை உன்திருவடிகளிலே சேரும்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

உ. கூடக்கடவீர் அதுக்கொரு குறையில்லே, ஆனுலும் ப்ரதிபந்தங்கள் கனத்திராநின்றதே யென்ன; உன்கையில் திருவாழியிருக்க நீயிங்ஙனே சொல்லலாமோ வென்கிருர்.

௩. "அருளாய்" என்றீர் இங்ஙனே நினைத்தபோதாக வருளப்போமோ வென்ன ; வ்யதிரிக்த விஷயங்களில் போகாதபடியான ஜ்ஞான லாபத்தைப் பண்ணித்தந்த உனக்கு ப்ராப்திபண்ணித் தருகை பெரியபணியோ வென்கிருர்.

ச. உன்னை ப்ராபிக்கைக் குறுப்பாக நீகண்டுவைத்த சாதநங்கள் எனக்கொன்று முடலாகிறனவில்லே ; ஆனபின்பு தேவரை நான் ப்ராபிக்கைக்கு எனக்கென்ன தனியேயொருசாதநங்கண்டு தரவேணு மென்கிருர்.

ரு. நீரிங்ஙன் த்வரிக்கிறதென் உம்முடைய வபேக்ஷிதஞ் செய்கிரேமிறே யென்ன; அதென் றென்கிருர்.

சூ "என்னுள்" என்று சந்தேகிக்கிறதென், அதொரு தேசவிசேஷத்தாலே வ்யவஸ்தித மன்றேவென்ன ; அங்குள்ளாரு மிங்கே வந்தன்றே உன்னைப்பெற் றநுபவிக்கிற தென்கிருர்.

எ. "மெய்ஞ்ஞானமெய்தி" என்கிறவிந்த ஜ்ஞானலாப முமக்குண்டாயிற்றிறே அது பலத்தோடே வ்யாப்தமாயல்லது நில்லாதிறே, ஆனபின்பு அவ்வளவும் நீராறி யிருந்தாலோவென்ன; அத்தனை கிரமப்ராப்தி பார்த்திருக்கப்போகிறதில்லே யுன்போக்யதை யென்கிருர்.

அ. "உன்னைக்கிட்டுகைக் கென்தலேயிலொரு சாதநமில்லே என்று நின்றீர், இதொரு வார்த்தையோ,சாதந மனுஷ்டித்தார்க்கன்றிப் பலமுண்டோவென்ன ; தந்தாமுடைய வபிமதசித்தி சாதநாநுஷ்டாநத்தாலே யென்றிருக்கும் ப்ரம்ஹாதிகளுக்கும் கிட்டினுல் பாசுர மிதுவன்றே வென்கிருர்.

கூ. தாமபேக்ஷித்தபோதே காணப்பெருமையாலே; இப்போதே யுன்னைக் காணுவிடில் தரிக்கமாட்டே னென்கிருர்.

கo. தம்முடைய வபேக்ஷிதம் சடக்கென சித்திக்கைக்காகப் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு திருவேங்கட முடையான் திருவடிகளிலே சரணம் புகுகிருர்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றுர் பரமபதத்திலே சென்று தாஸ்யத்திலே அபிஷிக்தராய் அடிமைசெய்யப் பெறுவர்கள் என்கிருர்.

எ-ம். பத்து.

இப்படி பெரிய பிராட்டியார் முன்னிலையாக சரணம்புக்க விடத்திலும், தந்தபடக்யாயம் போலே ஸம்ஸார மநுவர்த்திக்கிற படியைக்கண்டு விஷண்ணராகிறார்.

க-ம். திருவாய்மொழி—உண்ணிலாவிய.

ப்ரபத்திபண்ணினாலும், ப்ரபந்த பரிஸமாப்தி நிமித்தமாக ஈஸ்வரன் பலத்தைக் கொடாமல் விளம்பிக்க, மிகவுமார்த்தராய், தன் திருவடிகள் சேராதபடிக்கு இன்னு மிந்த்ரியங்களாலே எத்தனைநாள் பாதிப்பிப்பனோ வென்று, ஆக்ரந்தநம் பண்ணினதை யருளிச்செய்கிறார்.

க. உன்னையல்லது செல்லாதபடியாய் உன் திருவடிகளிலே சரணம்புகுந்த என்னை இந்திரியங்களாலே நலியப் பாராநின்று யென்கிறார்.

உ. துர்ப்பலனான வென்னை இந்திரியங்களாலே சர்வகாலமும் நலிவித்து இன்றைவை யறிவிக்க வொண்ணாதபடி போதியென்கிறார்.

ங. ஜகத்துக்கு சர்வவித ரக்ஷகனாய் வைத்து என்னை யுன் திருவடிகளிலே கிட்டாதபடி யிந்திரியங்களாலே நலிவித்தா லுனக்கென்ன ப்ரயோஜன முண்டென்கிறார்.

ச. நீயே யிவ்வாத்மாவுக்கு நிரதிசய புருஷார்த்தமென்னு மிடத்தை நானறியாதபடி சப்தாதி விஷயங்களைக்காட்டி யென்னை ப்ரமிப்பித்துப் போகாநின்று யென்கிறார்.

ரு. விஷயங்களாலும் இந்திரியங்களாலும் ப்ரதிக்ரியமாம்படி நலிந்தென்னை நீ கைவிட்டால் வேறு ரக்ஷகருண்டோ வென்கிறார்.

சு. அளவுடையாரையும் நலியக்கடவ விந்த்ரியங்கள் நீயும் கைவிட்டால் துர்லபனான வென்னை என்படுத்தா வென்கிறார்.

எ. நீயுபேக்ஷித்தால் அதிகலமான விந்திரியங்களை என்னாலே வெல்ல வுபாயமுண்டோ வென்கிறார்.

அ. என் ப்ரக்ருதி சம்பந்தத்தை அறுத்து நான் மனோவாக்காயங்களாலே யுன்னை நிரந்தரமாக வநுபவிக்கும்படி பண்ணியருள வேணுமென்கிறார்.

கூ. விஷயங்களிலே ஆத்மாவைத் தள்ளுமிந்த்ரியங்கள் என்னை நலியாதபடி பண்ணவேணு மென்கிறார்.

க0. அடிமைக்கு விரோதியாய் விஷயாநுபவத்துக்குப் பாங்கான உடம்பைத் தந்தாய் அதுவே ஹேதுவாக ஐந்து இந்த்ரியங்களும் நலி

யா நின்றன, அவற்றைப் பரிஹரித்தருள வேணுமென்று ஆர்த்தி யோடே கூப்பிடுகிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யசித்தார்க்கு நிரந்தரமாக விந்திரியங்களால் ஆத்மாவுக்கு வரும் நலிவு போமென்கிறார்.

உ-ம் திருவாய்மொழி—கங்குலும்.

இவ்வண்ணமழைத்த ஆழ்வார் மோஹித்திருக்க, திருத்தாயார் பெரிய பெருமாளைக்குறித்து, இந்நாயகி விஷயமாக எது ஸங்கல்பித்திருக்கிறீரென்று கேட்டதாக வருளிச்செய்கிறார்.

க. இப்பிராட்டியுடைய பேச்சுக்கு நிலமன்றிக்கே யிருக்கிற தசையைப் பெரிய பெருமாளுக் கறிவித்து இவள் திறத்தில் செய்தருள நினைத்திருக்கிறதென் என்கிறாள்.

உ. இப் பெண்பிள்ளையுடைய தசை யென்னாய் விளையக்கடவ தென்கிறாள்.

௩. இவளிவ்வவஸ்தையை ப்ராப்தையாகைக் கிவளிடையாட்டத்தில் நீர் செய்த தென்னென்கிறாள்.

ச. உம்மையொழிய ஜீவிக்கமாட்டாத விவள் திறத்து செய்தருள நினைத்திருக்கிற தென் என்கிறாள்.

ரு. இவளுக்கு ப்ரதிக்ஷணம் பேதித் தொன்றோடொன்று சேராதே வருகிற வவஸ்தா பேதங்களை யறிவித்து இவளை யிப்படிப் படுத்துகை உம்முடைய நீர்மைக்குப் போதுமோ வென்கிறாள்.

சூ. இவ ளிவ்வளவாபன்னையாயிருக்க இவளார்த்தி தீர்த்தருளா தொழிகைக்குக் காரணம் என்னுடைய கர்மவிபாக மென்கிறாள்.

எ. ஆச்ரயங்களை அநுசந்தித்துப் பொறுக்கு மளவுகளிலே யன்றோ சுக துக்கங்களைச் சுமத்துவது; இப்படி என்னைப் படுத்தலாமோ வென்னுநின்றா ளென்கிறாள்.

அ. இவளுக்கு மென்மேலன வருகிற நோவுகள் தீர்க்கைக்கு நான் செய்வ தென்னென்கிறாள்.

கூ. இவளுடைய துக்கத்துக் கொரு முடிவுகாண்கிறிலே னென்கிறாள்.

க0. இனிக் கிட்டமாட்டாளோ! வென்னும்படி அவஸன்னையான விவள் பெரிய பெருமாள் திருவடிகளைச் சம்ச்லேஷிக்கப் பெற்றாளென்கிறாள்.

கக. நிகமத்தில், இத்தை அப்யசிக்கவல்லார் இவர் பட்ட கிலேசம் படாதே திருநாட்டிலே நிரதிசயாநந்த யுக்தராய் நித்யஸூரிகள் சூழவிருக்கப் பெறுவரென்கிறார்.

ங-ம. திருவாய்மொழி—வெள்ளைச்சுரிசங்கு.

தாய்ப்ரஸங்க வசாத்பண்ணின நம்பெருமாள் கீர்த்தனத்தால், ஆழ்வார் மோஹந்தெளிந்து கிடக்கிற திருப்பேரையில் திருப்பதிக்குப் போவேனென்று, உத்யோகிக்குமளவில் தாய்தவிர்க்க, விரைந்தாலும் போவேனென்றுசொன்னதை அருளிச்செய்கிறார்.

க. இப்பிராட்டி வாசாமகோசரமாம்படி தனக்கு வர்த்திக்கிற வியசநத்தாலே தென் திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப் பிறந்த தசையை விலக்குகிற திருத்தாய்மாருக்குச் சொல்லுகிறாள்.

உ. தாய்மாரோடு தோழிமாரோடு அயற்சேரியுள்ளாரோடு வாசியற வந்து நிரன்று ஹிதஞ்சொல்லப் புக்கார்கள். உங்கள் ஹிதவசநங் கேளாதபடி நிரவதிகமான பரத்வ சௌலப்பியங்களையுடையவன் டக்கலிலே சக்தமாய்ப்போன வென்னெஞ்சைத் தகைய மாட்டுகிறிலேன், என்னெஞ்சைக் கடல் கொண்டது காணுங்கோளென்கிறாள்.

ங. நெஞ்சுதானினிச் செய்வதென், அவயவாதி சோபைகளிலே யகப்பட்டு அதுவும் தனக்குள்ள தடங்கலும் இழந்தது காணென்கிறாள்.

ச. என்னெஞ்சு மவனாலே யபஹ்ருதமாயிற்று நான் எத்தைக்கொண்டு போது போக்குவதென்கிறாள்.

ரு. ஸ்ரீத்வம் பண்டேபோயிற்று. ப்ரயோஜநமில்லாத தசையிலே கொடுபோகநில்லாதே என்னை யேற்கவே கொடுபோய்த் தென் திருப்பேரையிலே விடுங்கோளென்கிறாள்.

சா. எனக்கிங்குத் தரிப்பதரிது, ஈண்டனை வென்னைத் தென் திருப்பேரையிலே கொம்புக்கு மகர நெடுங்குழைக்காதனை காட்டுங்கோளென்கிறாள்.

எ. என்னெஞ்சு தரிக்கைக்கு விரகு பார்த்துத் திருப்பேரையிலே புக்காற்போலே நானு மங்கே புகுமத்தனை யென்கிறாள்.

அ. நீங்களாக விசையீர்கோளாகில் தன் வேண்டப்பாடு தோற்ற வெழுந்தருளியிருக்கிற தென் திருப்பேரையிலே நான்போய்ப் புகுவேனென்கிறாள்.

கூ. நீங்களினி என்னைத்தேற்றி ப்ரயோஜநமில்லை, தென்திருப்பேரையிலே போய்ப்புகக் கடவேனென்கிறாள்.

க0. நாட்டாரன்றோ எனக்குத் தேட்டமென்கிறாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பகவத் கைங்கர்யத்திலே மிகவு மவகாஹித்தா ரென்கிறார்.

ச-ம். திருவாய்மொழி—ஆழியெழ.

விஸ்லேஷ விஸனத்திலிருக்க, ஈஶ்வரன் தன்அவதார விஜயங்களெல்லாவற்றையுங் காட்ட, தரித்தவையெல்லாம் அநுஸந்தித்ததை யருளிச்செய்கிறார்.

க. அவை யெல்லாவற்றுக்கு மடியாகத் திருவுலகளந்தருளின பெரிய விஜயத்தை அநுசந்திக்கிறார்.

உ. சமுத்திரமதநவைசித்திரியை அநுசந்திக்கிறார்.

ங. மஹாவராஹ வ்ருத்தாந்தத்தை அநுசந்திக்கிறார்.

ச. மஹாப்ரளயத்தில் ரக்ஷணப்ரகாரத்தை யருளிச் செய்கிறார்.

ரு. பாரதசமர வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

சா. ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

எ. ராமவ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

அ. பாணவிஜய வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

கூ. சிருஷ்டியும் விசஜாதீய மாகையாலே அத்தையும் விஜயமாக வநுசந்திக்கிறார்.

க0. கோவர் தநோத்தரணம்பண்ணி ரக்ஷித்தசெயலை அநுசந்திக்கிறார்.

கக. நிகமத்தில், இதை அப்யசித்தவர்களுக் கிதுதானே விஜயத்தைக் கொடுக்கு மென்கிறார்.

ரு-ம் திருவாய்மொழி—கற்பார்.

விஜயோபாதாநங்களுக்கு மூலமான ராமகிருஷ்ணாத்யவதாரங்களை விட்டு, சேதநரிதர தேவதைகளை யாஶ்ரயித்துக் கெட்டுப்போகிறார்களென் றாச்சரியப்பட்டு, தாம் பகவத் குணாநுபவத்தால் ப்ரீதரானதை யருளிச்செய்கிறார்.

க. சக்கிரவர்த்தித் திருமகனை யல்லது கற்பரோ வென்கிறார்.

உ. கீழ்ச்சொன்னதிற் காட்டில் அதிககுணத்தை அருளிச்செய்கிறார்.

ங. கேசிஹந்தாவினுடைய கீர்த்தியையொழிய வேறொன்றைக் கேழ்ப்பரோ வென்கிறார்.

ச. சிசுபாலனுக்குத் தன்னைக்கொடுத்ததோ ரேற்றமோ ப்ரளயத்திலே மங்கிக்கிடந்த ஜகத்தை யுண்டாக்கின விம்மஹா குணத்துக் கென்கிறார்.

ரு. ஜகத் சிருஷ்டிபண்ணின தோரேற்றமோ ஸ்ருஷ்டமான ஜகத்தை ப்ரளயங்கொள்ள மஹாவாரஹமாய் எடுத்து ரக்ஷித்த குணத்துக்கென்கிறார்.

௬. நீர்சொன்ன குணங்கள் நாறேரேற்றமோ அலம்புரிந்த நெடுந்தடக் கையைக் கொண்டு கோட்டங்கை வாமநனு யிந்தப் பூமியை ரக்ஷித்த மஹாகுணத்துக் கென்கிறார்.

௭. ஸ்ரீபாபதியான தன்னைத் தாழவிட்டிரந்து ரக்ஷித்தது பெரிய வேற்றமோ தேவநாதிர பஜநம் பண்ணின மார்க்கண்டேயனை விஷயீகரித்த விம்மஹா குணத்துக் கென்கிறார்.

௮. நரசிம்ஹத்வங்க ளிரண்டையு மேலிட்டுக் கொண்டாஸ்ரிதரக்ஷணம் பண்ணின மஹாகுணத்தை யருளிச்செய்கிறார்.

௯. ஆஸ்ரிதனுக்காக நரசிம்ஹமானவதிலு மதிக குணமான சாரத்ய வ்ருத்தாந்தத்தை அநுசந்திக்கிறார்.

௧0. சம்சாரம் மறுவலிடாதபடி பண்ணித் தன் திருவடிகளிலே சேர்த்துக் கொண்ட தொரு மஹோபகாரத்தை யருளிச்செய்கிறார்.

௧௧. நிகமத்தில், இதை அப்யசித்தார் சம்சாரத்துக்குள்ளே யிருந்துவைத்தே சுத்தபாவ ரென்கிறார்.

---

௬ - ம். திருவாய்மொழி—பாமரு.

குணனுபவம் பண்ணி, அப்படிப்பட்ட ஈஸ்வரனை, ப்ரத்யக்ஷீகரிக்கவேண்டுமென் றாசைப்பட்டு, லபியாமையால், எப்போழ்துமை யடைவேனென்று ஆக்ரந்தநம் பண்ணினதை அருளிச்செய்கிறார்.

௧. ஜகத்ஸ்ருஷ்டியாதிகளைப்பண்ணி யுபகரித்து நிரதிசய போக்யனுயிருக்கிற வுன்னை உன்னாலே யுபகாரங்கொண்டுன் சுவடறிந்தநான் கிட்டுவதென்றோ வென்கிறார்.

௨. உன்திருவடிகளை அனன்யபரனுயிதுவே ப்ரயோஜனமாக விருக்கிற நான்என்று பெறக்கடவே னென்கிறார்.

௩. நீ நிர்ஹேதுகமாகவந்து த்வதேகதாரகனும்படி. யென்னைப்பண்ணியருளினுய்; ஆனபின்பு நீயேகுறையும் செய்தருள வேணுமென்கிறார்.

௪. என் அபேக்ஷிதம் நீயேசெய்தருளுமதொழிய என்னுற் செய்யலாவது ஒன்றுமில்லை யென்கிறார்.

௫. உன்னைப்பெறுகைக் கொருசாதனத்தை யநுஷ்டித்துவந்து பெறுகை யென்றொன்றுண்டோ வென்கிறார்.

௬. உன்னைவந்துகிட்டும் உபாயம் அறியே னென்கிறார்.

௭. "நானிவ்விழவோடே கிடந்து முடிந்துபோ மித்தனையாகாதே" யென்கிறார்.

அ. ப்ரதிகூலவர்க்கத்தைக் கொன்றருளின ஸர்வேஶ்வரனைக்காணவல்லோமே யென்கிறார்.

கூ. ராவணாதிகளை நிரசித்த தசரதாத்மஜனை நெஞ்சேகாணவல்லோமே யென்கிறார்.

க0. இப்படி நமக்குப்பேற்றுக்குக் கண்ணழிவின்றிகேயிருந்தபின்பு அவன் தன்னை நமக்குத்தருமென் றறுதியிடுகிறார்.

கக. நிகமத்தில், இதைக்கற்றார் மதிமுகமடந்தையர் விரும்பித்திருப்பல்லாண்டுபாடிச் சிலாகிப்பர்க ளென்கிறார்.

எ-ம். திருவாய்மொழி—ஏழையர்.

இவ்வண்ணம் ஆக்ரந்தநம் பண்ணிநிற்க, ஈஶ்வரன் பாவநாப்ரத்யக்ஷம் பண்ணுகையி லந்த திவ்யாவயவ ஸௌந்தர்யந் தமக்கு பாஹ்யஸம்ஶ்லேஷார்ஹ மில்லாமையால், வருத்தமாயிருக்கிற தென்று தாய்மாரோடுந் தோழிமார்களோடுஞ் சொன்னதாக அருளிச்செய்கிறார்.

க. இம்முகத்துக்கு நேத்திரபூதர் நாமன்றேவென்று முற்படத் திருக்கண்களில் அழகு வந்து தம்மை நலிகிற படியை யருளிச் செய்கிறாள்.

உ. "இரண்டுக்கும் நடுவே நாமிருக்க விவைமுற் படுகையாவதென் அத்தனையோ நம்மூக்கு வலி" என்று திருமூக்கிலழகு நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

ந. அது தன் மூக்கு வலிகாட்ட நாம்பேசாதே யிருந்தால் "அத்தனையோ விதின் வாய்வலி" யென்று நம்மை யேசுவர்களென்று திருப்பவளத்தி னழகுவந்து நலிகிற படியை யருளிச்செய்கிறாள்.

ச. திருப்புருவத்தி லழகுவளைந்து கொடுவந்து நலிகிறபடியை அருளிச் செய்கிறாள்.

ரு. திருமுறுவலி லழகுவந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறாள்.

சு. திருக்காதி லழகுவந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறாள்.

எ. திருநுதலி லழகுவந்து நலிகிறபடியை அருளிச்செய்கிறாள்.

அ. கீழ் நலிந்தவை யெல்லாம் சேரவொரு முகமாய் வந்து நலிகிறபடி சொல்லுகிறாள்.

கூ. திருக்குழற் கற்றையி லழகுவந்து நலியாநின்ற தென்கிறாள்.

க0. திருவபிஷேகத்தி லழகுவந்து நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய் மொழியை அப்யசித்தவர்கள் நித்யஸூரிகளோடேகூடி நித்தியாநுபவம் பண்ணப்பெறுவ ரென்கிறார்.

அ-ம். திருவாய்மொழி—மாயா.

அவ்வாறுபத்ர வப்படுகிறவென்னை, இந்தலீலாவிபூதியிலே
நிறுத்தின தெப்படிப்பட்ட ஆச்சரியமோவென்ன, ஒன்று
கேட்க வேறே யொன்று சொல்லிப் பரிஹரிப்பா
ரைப்போலே, என்ப்ரகார மிவ்வளவோவென்
று, தன்னுடையவிசித்ராவிபூதியெல்லாங்
காட்ட, வதைக்கண்டாச்சரியப்பட்
டதை யருளிச்செய்கிறார்.

க. விசித்ரமான கார்யகாரணங்களை யெல்லாம் விபூதியாகவுடையனாயிருக்கிற விருப்பை அநுசந்தித்து இவையென்னபடிகளென்று ஆச்சரியப்படுகிறார்.

உ. சந்த்ரஸூர்யாதி பதார்த்தங்களுடைய தனக்கு விபூதியாக வுடையனாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

ங. யுகங்களையும் அவ்வவ்க்காலங்களிலுண்டான தேவ மநுஷ்யாதிகளையும் விபூதியாகவுடையவனென்கிறார்.

ச. நித்யாநித்யபதார்த்தங்களை விபூதியாக வுடையனாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

ரு. மயர்வறமதிநலமருளி, பின்னையும் எனக்குப் பொருந்ாதபடியான சம்ஸாரத்திலே என்னைவைத்து ஜீவிப்பித்துக் கொடுபோருகிற விவ்வாச்சரிய மிருந்தபடியை எனக்கருளிச் செய்யவேணு மென்கிறார்.

சா. விப்ரமாணுதிவிருத்த பதார்த்தங்களை விபூதியாகவுடையனு யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

எ. துக்கஹேதுவான வபிமானந் துடக்கமான விசித்ரபதார்த்தங்களை விபூதியாக வுடையனாயிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

அ. சகலஜகத்தையும் ஸ்ருஷ்டித்து, அந்தர்பஹிச்ச வ்யாபித்து, இப்படி நிர்வஹித்துவைத்துத் துர்ஜ்ஞேயனாயிருக்கிற விதென்ன வாச்சரியமென்கிறார்.

கூ. ஜ்ஞாநேந்த்ரியங்களும் கர்மேந்த்ரியங்களும் சப்தாதி விஷயங்களும் அவனுக்கு விபூதியாயிருக்கிற இருப்பை அநுசந்திக்கிறார்.

கo. வைதிக சமதிகம்யனாய்க் காரணமாய் அதி ஸூக்ஷ்மமாயிருந்துள்ள சேதநாசேதநங்களை விபூதியாகவுடையனு யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

கக. நிகமத்தில், இதைக்கற்றார் என்றைக்கும் க்ருதக்ருத்ய ரென்கிறார்.

சு-ம். திருவாய்மொழி—என்றைக்கும்.

அஸஹ்யமான லீலாவிபூதியிலென்னையேன் வைத்தாயென்று
கேட்க, ஈஸ்வரன் எனக்கு மென்னடியார்க்கும் ப்ரா
வ்யமான ப்ரபந்தம் பண்ணிவைக்க வேண்டுமென
வைத்தோமென்று சொல்ல, அந்த உபகாரத்
துக்கு ப்ரத்யுபகார மெது சொல்லப்
போகிறேனென்று தடுமாறினதை
யருளிச்செய்கிறார்.

க. என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட வுபகாரத்தை அநுசந்தித்துத் தரிக்கமாட்டுகிறிலே னென்கிறார்.

உ. தான்தன்னைக் கவிபாடி நான் பாடினேனென்று லோகத்தில் ப்ரசித்த மாக்குவதே! என்று அவனுடைய வாச்சரியத்தைக்கண்டு விஸ்மிதராகிறார்.

ஙு. ப்ரத்யுபகாரம் பண்ணுதொழியவு மாங்கிடீர்! நான்மறந்து பிழைக்சப் பெற்றேனுகிலேன்கிறார்.

சு. பாங்கன்றிக்கேயிருக்கிற வென்னைக்கொண்டு தப்பாமே கவிபாடின இவ்வுபகாரத்தை யினிமறக்க வுபாயமில்லை யென்கிறார்.

ரு. லோகமெல்லாம் கொண்டாடும்படியான கவியை என்னைக்கொண்டு பாடுவதே! என்ன ஸர்வேஸ்வரனோ வென்கிறார்.

சு. வ்யாஸ பராசர வால்மீகி ப்ரமுகரான கவிகளைக்கொண்டு கவிபாடுவித்துக்கொள்ளாதே என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடுவதே! என்று ப்ரீதராகிறார்.

எ. என்னைக்கொண்டு கவியைப்பாடுவித்துக் கொண்ட மஹோபகாரத்துக்கு இவனைக் காலதத்வ முள்ளதனையும் அநுபவித்தாலும் த்ருப்தனுகிறிலே னென்கிறார்.

அ. சமஸ்தசேதநரும் என்னுடனேகூடி நெடுங்காலமெல்லாம் நானு மவர்களுங் கூடிநின்றநுபவித்தாற்றுனர்வனோ வென்கிறார்.

கூ. சகலசேதநருடைய போக்த்ருத்வ சக்தியை யுடையேனுய்க்கொண்டு காலமெல்லாம் புஜித்தாலு மாறே னென்கிறார்.

கO. உம்மதாயிருப்ப தொருவஸ்துவை யவனுக்கு ப்ரத்யுபகாரமாகக் கொடுத்துப் பிழைத்துப்போக மாட்டீரோவென்ன; அப்படி செய்யலாயிற்றிறே ஈஸ்வரனைப்போலே நானு மெனக்குடைமையாயிருப்பதொரு வஸ்துவும் பெற்றேனுகிலேன்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி ஏதேனு மொருபடிசொல்லிலு மானந்தத்தை யுண்டாக்கு மென்கிறார்.

௧௦-ம். திருவாய்மொழி—இன்பம்.

இவ்வண்ணமென்னால் ப்ரபந்தஞ் செய்வித்தஸர்வேச்வரன்,
எழுந்தருளியிருக்கிற திருவாறன்விளை என்கிற திருப்
பதிக்குப்போய், ப்ரபந்தம் விண்ணப்பஞ்செய்ய
வேண்டுமென் றபேக்ஷித்ததை
அருளிச்செய்கிறார்.

௧. திருவாறன் விளையிலேபுக்கு ஹ்ருஷ்டராய்க் கொண்டடிமைசெய்யுங் காலமாகவற்றே! யென்று மநோரதிக்கிறார்.

௨. திருவாறன்விளையிலேமிக்க பரிமளத்தை யுடைத்தான நீரைக்கொண்டு திருநீர்விட்டு ப்ரதக்ஷிணம் பண்ணளிக்கையாலே தொழவுங் கூடவற்றே! யென்கிறார்.

௩. திருவாறன்விளையி லெம்பெருமான் பெரியதிருவடிமேலேஏறி யெழுந்தருளக்கண்டாலும், அவனைத் தவிர்ந்து திருவாறன்விளையைத் தொழக்கூடவற்றே! யென்கிறார்.

௪. அங்குப்போயநுபவிக்கவேண்டா இங்கேயிருந் தங்குத்தைப் பரிமாற்றங்களை மநோரதிக்கும் மநோரதம் நமக்கு கூடுவதுகாணென்கிறார்.

௫. திருவாறன்விளையிலே புக்கடிமை செய்கைக்கு விரோதியானவை யெல்லாம் அவனுடைய மிக்கபுகழைப்பாடப் பறந்துபோமென்கிறார்.

௬. எம்பெருமான் பக்கல்சாபல முடையார் உங்களுடைய சமஸ்த துக்கங்களும் போம்படி திருவாறன்விளையை நெஞ்சாலே நினையுங்கோ ளென்கிறார்.

௭. திருவாறன்விளையே ப்ராப்யமென்னா நின்றீர் அவனன்றோ ப்ராப்யனென்ன; அன்றென்ன வல்லேனோ என்சித்தாந்த மிருக்கும்படி கேட்கலாகாதோ வென்கிறார்.

௮. திருவாறன் விளையிலேபுக நம்முடைய சகலதுக்கங்களும்போ மென்கிறார்.

௯. எனக்கு ஸ்ரீவைகுண்டமும் திருவாறன்விளையு மிரண்டும் கிடைப்பதானால் ஸ்ரீவைகுண்டத்தைவிட்டுத் "திருவாறன்விளையே யமையும்" என்னுமென் னெஞ்சமென்கிறார்.

௧௦. திருவாறன் விளையொழிய வேறொன்றில் ப்ராப்யபுத்தியில்லையென்னுமிடம் ஸர்வேச்வர னறியுமென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்கள் அயர்வறு மமரர்களுக்கு ச்லாகநீய ரென்கிறார்.

———

அ-ம் பத்து.

"இப்படி ப்ரபந்நராயிருக்கச் செய்தேயும், தக்தபட ந்யாயம் போலே நம்மை விடாதே யநுவர்த்திக்கிறது, நம்முடைய ஆத்மாத்மீயங்களில் நசையறுதபடியாலே" என்று பார்த்து, அவற்றிலொரு நசையில்லை யென்கிறார்.

க-ம். திருவாய்மொழி—தேவிமார்.

சக்திஹாநியாலே அந்தத் திருப்பதிக்குப் போகமாட்டாமல், நடுவே நின்று, புருஷகார பூதையான பிராட்டி கிட்டவிருக்கவும், ஆஶ்ரித பாரதந்த்ர்யாதி குணங்களிருக்கையாலும், தமக்குப் பல ஸித்தியான தில்லை யென்று, குணங்கள் மேலே அதிசங்கை பண்ணுகையில், ஸர்வேஶ்வரன், விஶ்வாஸ ஹேதுவான கல்யாண குணங்களைக் காட்டுதலால், அந்த அதிசங்கை தீர்ந்து, ப்ரீதரானதை யருளிச்செய்கிறார்.

க. பிரியில் தரிக்க வொண்ணாதபடி நிரதிசய போக்யனான நீ உன்னை நான் காணும்படி க்ருபைபண்ணி யருளவேணு மென்கிறார்.

உ. காணவேணுமென்று மிகவும் நோவுபட்டிருக்கு மிருப்பேயோ என் திறத்துச் செய்தருளப்பார்த்தது நானிங்ஙன் படாமே யுன்னைக் காணும்படி க்ருபைபண்ணி யருளவேணு மென்கிறார்.

ங. ஆஶ்ரித சுலபனாயிருக்கிற நீ யின்றுவந் தென் னாபத்தை நீக்காதொழியில் உன் குணமே ஜீவனமாயிருக்கிற வாஶ்ரிதருன்னை எங்ஙனே விஶ்வஸிக்கும்படி யென்கிறார்.

ச. "உன்னை ஆஶ்ரிதரிட்ட வழக்காக்கி வைக்குதி" என்று மறிவொன்றுமே தரித்திருக்கிற நான் அதுவும் பொய்யோவென்று சங்கியாநின்றே னென்கிறார்.

ரு. "சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி" என்று பேறும்மதானால் சாதனமும் முடைய தலையிலே யாகவேண்டாவோ வென்ன ; நான் யத்னம் பண்ணிவந்து கான வென்றொரு பொருளில்லை காண் என்கிறார்.

சூ. உக்தார்த்தத்தை விஸ்தரிக்கிறார்.

எ. சகல பதார்த்தங்களு முனக்கு ப்ரகார தயாசேஷமாய் நீ ப்ரகாரியாய் நீயே அவற்றுக்கு நிர்வாஹகனென்னு மறிவொன்றுங் கொண்டு தரித்திருக்கிற நானென் பாபத்தாலே அதிலு மதிசங்கை பண்ணு நின்றே னென்கிறார்.

௮. ஆத்மாத்மீயங்களுடைய உன்னதிகளான பின்பென்னுல் செய்யலாவ தொன்றில்லை நீயே ரக்ஷிக்க வேணு மென்கிறார்.

௯. போகத்துக்கு விரோதியான ஸம்ஸாரத்தி லிருக்க வஞ்சா நின்றேன் இதுக் கநுகூலமான பரமபதத்திலே என்னைக் கொண்டுபோகவேணு மென்கிறார்.

௧0. நாம் ஸம்ஸாரநித்தபடியே திருவடிகளைத் தந்தருளின மஹோபகாரத் துக்கு ப்ரத்யுபகாரமாக இவ்வாத்ம வஸ்துவை உனக்குத் தந்தே னென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்தை அப்யஸிப்பார்க்கு ஸர்வேச்வரனை லபித்து உஜ்ஜீ விக்கலா மென்கிறார்.

உ-ம். திருவாய்மொழி—நங்கள்.

உபாயபூதனுன ஈச்வரன்வந்து, முகங்காட்டாமலிருக்கைக்கு ஹேது, ஈச்வரனறியும்படி ஸம்ஸார ஸம்பந்தமுண்டா யிருக்குமென்று, சங்கித்து, தமக்கு ஸம்ஸாரம் நைராச்யமென்று, நாயகி, ஸகி, தாய்களைக் குறித்து, உங்களோடு ஸம்பந்தமில்லை யென்று, சொன்னதாக வருளிச்செய்கிறுர்.

௧. பிறர்க்கு மறைத்துங்களுக்குச் சொல்லலாம் வார்த்தைபார்த்த விடத் தொன்றுங் காண்கிறிலே னென்கிறுள்.

௨. துக்காநுபவத்தால் வந்தவிளைப்பின் மிகுதியாலே யுங்களுக்குச் சொல் லும் பாசுரமறிகிறிலே னென்கிறுள்.

௩. காலதத்வம் முடியிலும் நான்அவனைக் கண்டல்லது விடேனென்கிறுள்.

௪. இனிநான் எத்தையிழப்ப தென்கிறுள்.

௫. அவனை ஆச்ரயிக்கையுமவனுலே விஷயீக்ருதராகையுமான விம்மரியா தை நம்மைத்தோற்றி உண்டாயிற்றோ அநாதியன்றோ வென் கிறுள்.

௬. நம்மைப்புகுர நிறுத்தினவன் வாசலிலே கூப்பிடாதே சம்பந்த மில்லா தார் வாசலிலேயோ கூப்பிடுவ தென்கிறுள்.

௭. அவன் குணங்களிலே அகப்பட்ட நான் காலமெல்லாங் கூடவாகிலும் அவனைக்கண்டல்லது விடேன், தத்விரோதிகளான உங்களோட் டை சம்பந்தமெனக்கு வேண்டா வென்கிறுள்.

௮. கிளிகள் துடக்கமான லீலோபகரணங்களில் தனக்குண்டான வநாதரத் தைச் சொல்லுகிறுள்.

௯. முன்பேயடைய விழுந்திலேனே இனியெத்தை யிழப்பதென்கிறாள்.
௧௦. நீங்கள் சொன்னவார்த்தை கேட்கைக்கு நெஞ்சுவேணுமே அதவன் பக்கல்போயிற் றென்கிறாள்.
௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் அவித்யாதி சகலதோஷங்க ளும் நீங்கி இகலோக பரலோகங்களில் தாங்களே க்ருதக்ருத் யராவ ரென்கிறார்.

ங-ம். திருவாய்மொழி—அங்குமிங்கும்.

ஸம்ஸார ஸம்பந்தமில்லை யென்றுசொல்ல, ஈஶ்வரன் யாரு ஸஸாக்ஷாத்காரம்பண்ண, அவன் ஸௌந்தர்ய ஸௌகு மார்யாதிகளைப் பார்த்துத் தாம்பட்ட துக்கமும் மறந் து, இப்படிப்பட்ட திவ்யமங்கள விக்ரஹத் தோடே யவதரித்த ஸர்வேஶ்வரனுக்கு, மங்களாசாஸன பர ரொருவரு மில்லையென்றும், தாமொருவருமே மங்களா சாசனம் பண்ணுகைக்கு இருந்தோமென்றும், இப்படி பயப்படுகையில், ஈஶ்வரன்தமக்கு மங்களா சாஸனபர ராய் நித்ய,முக்த ரிருக்க, முமுக்ஷுக்க ளிருக்க, நீரோன் பயப்படுகிறீரென்று சொல்ல, பயந்தீர்ந்ததை யருளிச் செய்கிறார்.

௧. உன்சவு குமார் யத்தையறிந்து பரிகையன்றிக்கே, தங்களுக் கிஷ்ட ப்ராப்தி சாதனமென் றிருப்பர்களென்று ஐஶ்வர்யாதிகளை க்ஷே பிக்கிறார்.
௨. ஆத்ம லாபத்துக்காக உபாசிக்கிற கேவலர் வந்து தோற்ற அவர்களை க்ஷேபிக்கிறார்.
௩. சம்சாரத்திலே தனியே வர்த்தியா நிற்கும் அங்குத்தைக்கு ரக்ஷையாக நானுதவப் பெறுகிறிலே னென்றின்னா தாகிறார்.
௪. சர்வரக்ஷகமான வஸ்துவாகாதே ப்ரளயத்திலே அகப்படப் புக்க தென்று அதுக்கு மஞ்சுகிறார்.
௫. பல விடங்களிலும் படுக்கை படுத்தது அலைச்சலின் மிகுதியென்கிறார்.
௬. நித்திய சூரிகள் பரியவிருக்கக் கடவ வவன் சம்சாரத்திலே யவ்வடி வோடே வந்துலாவா நின்றால் நானிப்படிப் படாதே செய்வதென் னென்கிறார்.
௭. இங்கே வந்து திருப்பரிசாரத்திலே யெழுந்தருளியிருக்க நானுதவப் பெறாதே அவசந்நனுனல் ஓரடியானுமுளனென்று அவனுக் கறி விப்பாரையும் பெறுகின்றிலோ மென்கிறார்.

அ. பிரளயத்தில் உன் திருவடிக்கீழே பரிகைக்கு நிலையாளாக வென்னைக் கொள்வதென்றென்று அவன் றன்னைக் கேட்கிறார்.

௯. ப்ரம்ஹாதிகள் உன்சௌந்தர்ய மறிவர்களோ வென்கிறார்.

௰. முன்பு பய ஹேதுக்களானவை தானே பயநிவர்த்திக் குடலாய், அத்தை அநுசந்தித் தினியராகிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யசிப்பார் சம் சாரத்தில் பிறவா ரென்கிறார்.

சு-ம். திருவாய்மொழி—வார்கடா.

அஸ்தானபயசங்கை பண்ணுகிற, ப்ரேமஸ்வபாவமுடைய ஆழ்வார்க்கு, இன்னம் பயமெங்கே வருமோவென்று விசாரித்து, ஈஸ்வரன் தன் வீர்யஸக்த்தியாதி குணங்களையும், மங்களாஸாஸனபர ஸமர்த்தியையுங் காட்டி, திருச்செங்குன்றூரில் ஸ்வாமிபயம் போக்கினதை யருளிச் செய்கிறார்.

க. திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறெங்களுக்கு நிர்ப்பயமான புகலென்கிறார்.

உ. திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனல்லதெனக்கு நற்றுணையில்லையென்கிறார்.

ந. திருச்செங்குன்றூரிலே நின்றவனுடைய திருவடிகளல்லது வேறு மநோரதத்திலு மெனக்கு சரணமில்லை யென்கிறார்.

ச. திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனுடைய திருவடிகளல்லது வேறெனக் கரணில்லை யென்கிறார்.

ரு. திருச்செங்குன்றூரி லல்லதெனக்கு ஹ்ருதயஞ்சேர்ந் தணையாதென்கிறார்.

சா. திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற விவனை நிர்ப்பயமான திருப்செங்குன்றூரிலே காணப்பெற்றேனென்கிறார்.

எ. திருச்செங்குன்றூரிலே நின்றருளின சீர்கொள்சிற்றாயன் தன்னழகோடே மறக்கவொண்ணாதபடி என்னெஞ்சிலேவந்து புகுந்தானென்கிறார்.

அ. சிற்றாயனுடைய விலக்ஷணமான குணங்களிலும் அழகிலுமழுந்தி அவனைச் புகழும்படி அறிகிறிலேனென்கிறார்.

௯. ஸ்ருஷ்டியாதிகளைப் பண்ணுவான் திருச்செங்குன்றூரிலே நின்றருளினவன் என்னுமிடம் அர்த்தவாதமன்று, மெய்யென்கிறார்.

௧0. திருச்செங்குன்றூரிலே நின்றருளினவனை அநுபவிக்கப் பெற்றேனென்கிறார்.

௧௧. நிகமத்தில், இதை அப்பியசிப்பார்க்கு இதுதானே முதலிலே பரமபதத்தேறக் கொடுபோய்ப் பின்னைச் சம்சாரமாகிற மஹாநாடகத்தை அறுக்குமென்கிறார்.

ரு-ம். திருவாய்மொழி—யாய்கூத்தா.

இவ்வாறு பயம்போக்கின தெல்லாம் மானஸாநுபவ மாத்ரமாகையால், பாஹ்ய ஸம்ச்லேஷா பேக்ஷையாலே, முன்புண்டான ப்ரீதியெல்லாம் போய், அப்படிப்பட்ட ஸர்வேஸ்வரனைக் குறித்து ப்ரத்யக்ஷமாக வேண்டுமென்று, தாமும் தம்முடைய இந்த்ரியமுங் கூப்பிட்டதாக வருளிச் செய்கிறார்.

௧. என் விடாயெல்லாம் தீரும்படி ஒரு தாமரைத் தடாகம்போலே வந்து தோற்றி யருளவேணு மென்கிறார்.

௨. என் விடாய் கெடும்படி அழகிய மயிர்முடியுடனே வந்து தோற்றி யருளவேணு மென்கிறார்.

௩. ஶ்ரமஹரமான வடிவோடே என் ஆர்த்தி தீரவந்து தோற்றவேணு மென்கிறார்.

௪. உன்னுடைய வடிவழகு வந்து என் மனஸ்ஸிலே நிறைந்து நலிகிறபடி என்னால் பேசிமுடிகிறதில்லை யென்கிறார்.

ரு. உன்னுடைய வழகு என் ஹ்ருதயத்திலே ஸ்மிருதி விஷயமாய் நலியாநின்றது இது மறக்க ஒரு விரகு சொல்லவேணு மென்கிறார்.

௬. உன்னுடைய சவுந்தர்யாதிகளை நினைத்து "காணவேணும்" என்று கூப்பிடுகிற நான் காணும்படி ஏதேனு மோரிடத்திலே வந்து தோன்றி யருளவேணு மென்கிறார்.

௭. இங்கேவந்து தோற்றியருளுதல் அது திருவுள்ளமல்லவாகில் அங்கே அழைத்து அடிமைகொள்ளுதல் செய்தருளவேணு மென்கிறார்.

அ. வந்து முகங்காட்டுகிறிலை இதுவோ உன் சங்கசுவபாவ மென்கிறார்

௯. இருந்ததே குடியாக ரக்ஷிக்கவந்த கிருஷ்ணன் தன்னைக் காண்கையே தேட்டமான வெனக்கென் செய்தருளுமென்று நினைக்கிறார்.

௧0. உன்னை நான் எவ்விடத்தே காண்பதென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் இஹலோகத்திலே இஜ்ஜந்மத்திலே அவனைப்பெற்று நிரந்தரமாகச் சுகிப்ப ரென்கிறார்.

ரு - ம். திருவாய்மொழி—எல்லியும்.

ஆழ்வா ரவ்வாறு கூப்பிடுகையில், ஆழ்வாரைக் காட் ஈச்வரனுக்கு ஆழ்வாரிடத்தில் த்ருஷ்ணை அதிகமாய், ஆக்ரோசம் பண்ணுகைக்கு முன்னே வந்தோமில்லையென்று லஜ்ஜித்து, ஆழ்வாரார்த்திதீரும்படி ஸகல ஸந்நாஹத்தோடே அதர்கிதமாகப் போனல், மோஹிப்பரென்று, திருக்கடித் தானத் திருப்பதியி லெழுந்தருளின தறிவித்து, ப்ரீதிஸாத்மித்தவாறே, முகங்காட்டுவோமென் றிருந்ததைக்கண் டாழ்வார் ப்ரீதியடைந்ததை யருளிச் செய்கிறார்.

க. என்னுடைய வார்த்திதீர்த்தருளுவான் ஸர்வேச்வரனே, அவனூர் திருக்கடித்தான மென்கிறார்.

உ. திருக்கடித் தானத்திலுமென் ஹ்ருதயத்திலுமொக்க அபிநிவேசித்தென்னுள்ளே வர்த்தியாநின்றா னென்கிறார்.

ங. பிராட்டியோடுகூடத் திருக்கடித்தானத்திலே நித்தியவாசம்பண்ணுகிற வாச்சர்ய பூதனை உபகாரகனநுசந்திக்குந் தோறும் இனியனாகாநின்றானென்கிறார்.

ச. திருக்கடித்தானத்தைப் பகலிருக்கை மாத்திரமாகக்கொண்டு சங்காதிசயத்தாலே என்னெஞ்சையே நிரந்தர வாசஸ்தானமாகக் கொண்டா னென்கிறார்.

ரு. என்பக்கல் ப்ரேமாதிசயத்தாலே திருக்கடித்தானத்தோடேகூட வென் ஹ்ருதயத்திலே புகுந்தருளினா னென்கிறார்.

சு. தம்முடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருக்கடித்தானத்தை யெல்லாரும் ஆச்ரயுங்கோ ளென்கிறார்.

எ. உங்கள் துக்கநிவ்ருத்திக்கு ஏத்தவேண்டா, திருக்கடித்தானத்தைநெஞ்சாலே நினைக்கவமையு மென்கிறார்.

அ. என்னுடைய நெஞ்சையும் திருக்கடித்தானத்தையும்தாயப்ராப்தமான ஸ்தானமாக விரும்பியிருக்குமென்கிறார்.

கூ. "என்னேடே கிட்டுகைக்குறுப்பானநிலம்" என்று திருக்கடித்தானத்திலே அத்தியபிநிவிஷ்டனானா னென்கிறார்.

௧0. என்னைப்பெறுமளவும் திருக்கடித்தானத்திலே நின்றான், என்னைப் பெற்றபின்பு நிற்பதுமிருப்பதும் என்னெஞ்சிலே யென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்களை இதுதானே திருநாட்டிலே கொடுபோய் விடுமென்கிறார்.

எ-ம். திருவாய்மொழி—இருத்தும்.

திருக்கடித்தானத்தில் ஈஶ்வரன் ஆழ்வார் மநோரத மெல்லாம் தீரும்படி ஸம்ஶ்லேஷிக்க, இது ஸ்வப்நமோ, மோஹமோவென்று சங்கித்து, இது ஸ்வப்நமன்று, யதார்த்தமென்று தெரிந்து, அதிப்ரீதி யடைந்ததை யருளிச் செய்கிறார்.

க. இத்திருவாய்மொழியில் தமக்குண்டான லாபத்தை சங்க்ரஹேண வருளிச் செய்கிறார்.

உ. என்னை விஷயீகரித்த உபகாரத்தோ டொவ்வாது ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய வாபந் நிவாரணமு மென்கிறார்.

ங. சர்வேஶ்வரன் தன்பக்கலிப்படி வ்யாமோஹம் பண்ணுகை கூடாத தொன்றென்று சங்கித்து இவ்வநுபவம் ப்ரமாதிகளிலே பிறந்ததோ வென்கிறார்.

ச. அவன் என்னை ப்ரமிப்பித்தானல்லன் என்னுள்ளே கலந்தருளினனே; இதிலொரு சம்சயமில்லையென்கிறார்.

ரு. அத்தால்வந்த புகழை யல்லதிவனுடைய மற்றுள்ள புகழையு மொன்றாக மதியேனென்கிறார்.

சா. என்பக்கல் அபிநிவேசத்தாலே தந்தருளின னென்கிறார்.

எ. அவன் தம்மோட்டைக் கலவியாலே ஹ்ருஷ்டனாய் அது தன்பேறாக முறுவல்செய்த திருப்பவளத்தை அநுபவித்து ப்ரீதராகிறார்.

அ. அவன் தம்மோடேவந்து கலக்கைக்கடி யவன் க்ருபையென்கிறார்.

கூ. அநுமதிமாத்திரம் பண்ணினே னித்தனை யென்கிறார்.

க0. எம்பெருமான் சபரிகரமாக வென்னுள்ளே புகுந்தான் அவனை நானினி ஒரு நாளும் விஶ்லேஷித்துத் துக்கப்படே னென்கிறார்.

கக. நிகமத்தில், இப்பத்தானது தன்னைக் கற்றவர்கள் சம்சாரத்துக்கு த்ருஷ்டி விஷமென்கிறார்.

அ-ம். திருவாய்மொழி—கண்கள்சிவந்து.

ஸ்ரீயஃப்பதியினுடைய ஸர்வஸ்வாமித்வத்தை யருளிச் செய்கிறார்.

க. அவன் தம்மோட்டைக் கலவியாலே புதுக்கணித்த திவ்ய சவுந்தர்யாதிகளோடே என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்தா னென்கிறார்.

உ. என் சரீரத்திலேயும் புகுந்து கலந்தா னென்கிறார்.

ங. என்னோடே சம்ப்ரவேசித்து சம்ச்லேஷஸ்தைர்யார்த்தமாக விலக்ஷணரூபமாய்த் தனக்குச் சரீரமான ஆத்மஸ்வரூபத்தையும் காட்டியருளினனென்கிறார்.

ச. இவ்வாத்மா தனக்கத்யந்த போக்யமென்னு மிடத்தையும் காட்டித் தந்தானென்கிறார்.

ரு. பகவத்ப்ரஸாதத்தாலே நானறிந்த இவ்வாத்ம வஸ்து வொருவர்க்கு மறியப்போகாது வருந்தியிருந்தாலும் சாக்ஷாத் கரிக்கப்போகிற தன்றென்கிறார்.

சா. யோகத்தாலே ப்ரக்ருதி விநிர்முக் தாத்மஸ்வரூபத்தைத் துக்கேந சாக்ஷாத்கரிக்கலா மென்கிறார்.

எ. நீச்சொன்ன உபாயத்தின்படியே யவ்வஸ்துவை ப்ராபிக்கமாட்டாதே அதிலே சம்சய மநுவர்த்திக்கு மவர்கள் உறுவக்லேசப்பட்டே போ மித்தனை யென்கிறார்.

அ. இப்படி துஸ்ஸம்பாத மானஜ்ஞாநம் கைவந்தாலும் அந்திமஸ்ம்ருதியில்லையாகில் செய்ததெல்லாம் வ்யர்த்தமென்கிறார்.

கூ. நித்ய சம்சாரியான சேதநனையேப்ரம்ஹமாகச் சொல்லுகிற மாயாவாதிகளை க்ஷேபிக்கிறார்.

க0. மனஸ்ஸிலே நித்யவாசம் பண்ணுகையாலே என்னுடைய சகல துரிதங்களும் போயிற்றென்கிறார்.

கக. நிகமத்தில், இப்பத்தும் கற்றாரை தன் திருவடிகளின்கீழே வைத்துக் கொள்ளு மென்கிறார்.

கூ - ம். திருவாய்மொழி—கருமாணிக்கமலை.

இதுவுமது.

க. திவ்யாவயவ சவுந்தர்யத்தைக்கண்டு மற்றொன் றறியாதபடி யீடுபட்டா ளென்கிறாள்.

உ. அவனுடைய வாபரணசோபையி லகப்பட்டாளென்கிறாள்.

ங. வீரவாசிகண்டணைக்கும் பிராட்டிபாசுரமா யன்றோ விவள்வார்த்தை யிருக்கிற தென்கிறாள்.

ச. வெறுமான்பிள்ளைத்தனமேபோராதே, ஆபத்சகனாக வேணுமேயென்ன ; அக்குறைதான் உண்டோ இவனுக் கென்கிறாள்.

ரு. வெறும் ஆபத்சகத்வமே போருமோ, இவளுக்குத்தக்கவை ஸ்வர்யமுமுண்டாக வேணுமேயென்ன ; அதுவு முண்டென்கிறாள்.

சு. ஐச்வர்யமே போருமோ உதாரனாகவேண்டாவோ வென்ன; அவனுடைய வௌதார்யகுணத்திலே அகப்பட்டு ஸம்ச்லேஷித்தமைக் கடையாளம் வ்யக்தமாக உண்டென்கிறாள்.

எ. கேவலமுதாரனாகப் போராதே, ப்ரணயித்வ குணமுண்டாக வேணுமேயென்ன; அவ்வூரில் ஸ்தாவரங்களுங்கூட பரஸ்பர மாஸ்ரயமாம்படி யன்றோ வவனுடைய ப்ரணயித்வகுண மிருந்தபடி யென்கிறாள்.

அ. வெறும் ப்ரணயித்வமே போராதேயென்ன; ஆனாலவ்வூரிலுள்ளாருடைய வாசாரமிருக்கிறபடியைக் கேட்கலாகாதோ வென்கிறாள்.

கூ. ஆசாரமே போருமோ, இதுக்குத்தக்க வேதார்த்த தத்துவ க்யாநமுண்டாகவேணுமே யென்ன; அதுக்கு மொருகுறை யில்லையென்கிறாள்.

க0. நீ சொல்லுகிறவை எல்லாங் கிடக்க இவளை அவனுக்குக்கொடுக்க வேண்டும்படியசாதாரண லக்ஷணமேதேனு முண்டாகில் சொல்லென்னச் சொல்லுகிறாள்.

கக. நிகமத்தில், இப்பத்தைக்கற்றவர் ஸ்வரூபாநுரூபமான கைங்கரியத்தைப் பண்ணப்பெறுவ ரென்கிறார்.

க0-ம். திருவாய்மொழி—நெடுமாற்கடிமை.

இதுவுமது.

க. நாட்டார் விரும்புகிற வைச்வர்ய புருஷார்த்தமும் நான்பற்றின புருஷார்த்தத்தோ டொவ்வாதென்று எடுத்துக்கழிக்கவும் போராதென்கிறார்.

உ. கீழ்ச்சொன்னவை ச்வர்யத்தோடே ஆத்மாநுபவத்தைச் சேர்த்துத் தந்தாலும் பாகவத சேஷத்வமாகிற புருஷார்த்தத்தோ டொவ்வாதென்கிறார்.

ந. ஐச்வர்ய கைவல்லியங்களில் விலக்ஷணமான பகவல்லாபமுண்டானலும் இங்கேயிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களுக் கடிமை செய்கையோ டொவ்வா தென்கிறார்.

ச. ஸ்ரீவைஷ்ணவர்களுக்குகப்பான பகவத்கையிங்கரியம் சித்திக்குமாகில் அவர்கள் சஞ்சாரத்தாலே சிலாக்கியமான விஜ்ஜகத்தி லிருப்பே புருஷார்த்த மென்கிறார்.

ரு. இப்படிப்பட்ட ப்ராப்தியும் பாகவதர்களுக்கு ப்ரியமாகத் திருவாய்மொழிபாடி அடிமைசெய்யு மித்தோடொக்குமோ வென்கிறார்.

சு. பாகவத ப்ரீதிரூபமாகத் திருவாய்மொழிபாடி அநுபவிக்கும் ரஸத்தோடொவ்வா தென்கிறார்.

எ. பாகவதர்களோடேகூடி அநுபவிக்கும் பகவதநுபவமே காலதத்வமுள்ளதனையும் எனக்குண்டாக வேணுமென்கிறார்.

அ. அவர்கள் திரளைக்கண்டாலே காணவமையு மென்கிறார்.

கூ. அவர்களுடைய சேஷத்வத்திலே முடிந்த நிலமாகவமையு மென்கிறார்.

௰. இராஜ்யம் எனக்கு மென்பரிகரத்துக்கும் என்றும் வாய்க்கவேணு மென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லார் இதிற்சொன்ன பாகவதசேஷத்வத்தைப் பெற்றுச்சபரிகரமாக வாழப்பெறுவ ரென்கிறார்.

கூ-ம். பத்து.

"இப்படி நசையற்ற பின்பும் ரக்ஷியா தொழிவாயோ" என்று அதிசங்கைபண்ண, "நான் நாராயணன், ஸர்வசக்தியுக்தன், உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களும் செய்து முடிக்கிறோம்" என்றருளிச் செய்ய, அவனுடைய சீலகுணத்திலேயாழங்காற் படுகிறார்.

க-ம். திருவாய்மொழி—கொண்டபெண்டிர்.

ஈஸ்வரனுக்குச் சேதநன் செய்யும் நித்திய கைங்கரியத்தை யருளிச் செய்கிறார்.

க. "ஔபாதிக பந்துக்களான தாரபுத்திராதிகளா லொரு ப்ரயோஜநமில்லை, நிருபாதி பந்துவானவனே ஆபத் சகன், அவனையேபற்றி உஜ்ஜீவியுங்கோள், வேறுதுணை யில்லை" யென்கிறார்.

உ. உபகாரகனைப்போலே யிருந்து, ஸ்வப்ரயோஜநங்களைத் தலைக்கட்ட நினைக்குமவிஸ்வஸநீய ரானவர்களையொழிய, நிர்ஹேதுகமாக விஸ்வாஸ ஜநகனாய், ஆபத்ஸகனானவனைப் பற்றுமதன்றி ப்ரயோஜநமில்லை யென்கிறார்.

ங. அவனை யொழிந்தார், ப்ரயோஜநமுள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை; ஆனபின்பு, நிருபாதிகமாக வாபத்ஸகனான க்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ர மாகையொழிய வேறு ரக்ஷகரில்லை யென்கிறார்.

ச. சில்வா ஆபத்ஸகரென்று அர்த்தாதிகளாலே நெடுநாள் ஆஸ்ரயித்தால், ஆபத்து வந்தவாறே கண்ணற்று பேக்ஷிப்பர்கள்; நிர்ஹேதுகமாக வந்தவதரித்த ஆபத்ஸகனானவனே ஆஸ்ரயணீய னென்கிறார்.

ரு. தங்களை பெருவிடில் தரிக்கமாட்டாதபடி ஸ்நிக்தைகளான ஸ்ரீகளா லே யாபத்துவந்தா லிகழப்படுவர்; ஆனபின்பு, யேகப்ரகாரமாக ஸ்நிக்தனானவனை ஆஸ்ரயிக்குமதொழிய வேறு சுகமில்லை யென்கிறார்.

சு. நிரதிசய புருஷார்த்தத்தை யுணராதே முன்புள்ளா ரனேகர் முடிந்து போனார்கள்; அப்படியே நீங்களும் நசியாதே ஆஸ்ரிதர்க்காக வவ தரித்து ரக்ஷிக்கு மவனையே யாஸ்ரயிக்கு மத்தனையல்லது, ஆத் மாவுக்கு ஹிதமில்லை யென்கிறார்.

எ. பகவத் ஸமாஸ்ரயணத்தினுடைய வெளிமையையு மினிமையையும் அருளிச் செய்கிறார்.

அ. அவதாரத்துக்கு நிதானத்தைச் சொல்லி, அவனையே ரக்ஷகனாகப் பற் றுமிதொழிய வேறு விலக்ஷணமா யிருப்பதோ ரபாஸ்ரயமில்லை யென்கிறார்.

கூ. இவனை யொழிய வேறே யொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டு நின்ற நிலையுங்கெட்டு அனர்த்தப்பட்டுப் போவர்கள்; ஆன பின்பு இவனல்லது சரணமில்லை யென்கிறார்.

க0. தான் சரணமென்னு மர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக அவதரித்த கிருஷ்ணன் திருவடிகளை ஆஸ்ரயுங்கோ ளென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யசிப்பா ரெனக்கு ப்ரியகர ரென் கிறார்.

உ - ம் திருவாய்மொழி—பண்டைநாள்.

என்னுடைய ஆர்த்தியெல்லாம் தீரும்படி திருக்கண்களாலே குளிரநோக்கி யருளவேணு மென்கிறார்.

க. அனன்னிய கதிகளான வடியோங்களைக் குறித்து, ஒருவார்த்தை யரு ளிச்செய்து, விடாய்கெடும்படி குளிரநோக்கி யருளவேணு மென் கிறார்.

உ. சர்வ சுலபமான உன்திருவடிகளை என்தலையில் வைத்தருளவேணு மென்கிறார்.

௩. திருஉடம்பசைய வொருபடியே கண்வளர்ந்தருளாதே, அடியோமுக்கா கப் பிராட்டியும் தேவரு மெழுந்திருந்தருளவேணு மென்கிறார்.

ச. திருப்பதிகளிலே சந்நிஹிதனா யென்னை யிவ்வளவாக்கினாற்போலே, மேலுமென்னபேக்ஷிதஞ் செய்தருளவேணு மென்கிறார்.

ரு. ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கு வந்து தோற்றினாற்போலே, வந்து தோற்றி யருளவேணு மென்கிறார்.

௬. உம்முடைய வபேக்ஷிதங்கள் செய்ய வொண்ணுதபடி ப்ரதிபந்தகங்கள் ப்ரபலமன்றோவென்னில்; மாலி, சுமாலி, மால்யவான், இவர்களிலும் வலியரோவென் ப்ரதிபந்தகமென்கிறார்.

௭. துர்பலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனான நீ நாங்கள் வாழும்படி கண்ணெதிரே ஒருநாளிருக்கவேணு மென்கிறார்.

௮. பரமபதத்திலே யன்றோ விருப்பழகு காட்டலாவதென்ன; அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே ஒருநாள் இருந்தருளவேணு மென்கிறார்.

௯. இவ்விருப்பில் வாசியறியாத சம்சாரத்திலேயிருக்கிற தென்னென்னில்; ருசியுடைய நாங்கள்கண் டனுபவிக்க வென்கிறார்.

௧௦. நிரதிசய போக்கியமான உன்னுடைய திருவடிகளிலே நானும் வந்தடிமை செய்யும்படி, என்னை அங்கே அழைத்தல், நீ யிங்கே வருதல் செய்யவேணு மென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் அவனை நிரந்தரமாக அநுபவிக்கப் பெறுவரொன்கிறார்.

ந-ம். திருவாய்மொழி—ஓராயிரம்.

அவன்சீலகுண ப்ராசுர்யத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

௧. "அவன் நாராயணனன்றோ, நம்மபேக்ஷிதஞ் செய்கைநிஶ்சிதம்" என்று திருஉள்ளத்தைக் குறித்தருளிச் செய்கிறார்.

௨. கீழ்ப்ரஸ்துதமான நாராயண சப்தத்திற்கு அர்த்தத்தை யருளிச்செய்கிறார்.

௩. வேதங்களும், வேதார்த்த வித்துக்களான ருஷிகளு மறிந்தவளவன்றிக்கே, தன்னை யெனக்கு பூரணமாக வரிவித்தானென்று ப்ரீதராகிறார்.

௪. நித்தியஸூரிகளுக்குப் போக்கியனாய்வைத்து, க்ருஷ்ணனாய் வந்தவதரித்து, நம்மையு மவர்கள் நடுவேவைப்பானாக விருக்கிறவனை, விடாதேகிடாய்யென்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

௫. நெஞ்சேயவனை விடாதேகிடாய் யென்றார் கீழ்; அவ்வார்த்தை தன்னை யோலக்க வார்த்தையாக நினைத்திராதேகிடாய் யென்கிறார்.

௬. தம்முடைய உபதேசம்பலித்து, இவ்விஷயத்திலே திருஉள்ளம் சிதிலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார்.

எ. அவன் நித்தியவாசம் பண்ணுகிற பரமபதத்தைச்சென்று காணவேணு மென்னுகின்றதென் னெஞ்சென்கிறார்.

அ. இச்சரீரசம்பந்த மற்றால்போய் அனுபவிக்கும் பரமபதம் வேணுமோ, இச்சரீரத்தோடே அநுபவிக்கும் திருமலைப்பூமியதன்றோ, ஆனாலும் நமக்கு திருமலையோடு பரமபதத்தோடு வாசியற்றதிறே யென்கிறார்.

கூ. இப்படி சுலபனை உன்திருவடிகளிலே கிட்டிப்பெற்றாலும் ஆஶ்ர யணத்தில் அபிமுக்யத்திலே சந்துஷ்டனாமுன் சீலவத்தையை அநுசந்தித்து, ஒரு ப்ரவ்ருத்தி பண்ணக்ஷமனாகிறிலே னென் கிறார்.

கo. தாஸ்யச்சுவடறியாத ப்ரம்ஹாதிகளுக்கும் சமாஶ்ரயணீயனா யிருக்கிற உன்னுடைய சீலமென்னால் புகழ்ந்து முடிக்கவொண்ணா தென் கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார் பரமபதத்தே செல்லுகை, ஆச் சரியமன்று, ப்ராப்தமென்கிறார்.

சு - ம். திருவாய்மொழி—மையார்.

தாம்பெற்ற பேற்றைப்பேசி ஹ்ருஷ்டராகிறார்.

க. "ஸ்ரீய:பதியானவனைக் காணவேணும்" என்று தம்முடைய சக்ஷுரிந் திரியத்துக்குப்பிறந்த சாபலத்தை யருளிச்செய்கிறார்.

உ. தமக்கும் தம்முடைய நெஞ்சுக்குமுண்டான சாபலத்தை யருளிச்செய் கிறார்.

ங. இப்படிக் கூப்பிடச்செய்தேயும் வரக்காணமையாலே, ஆர்த்தியே கைம் முதலாக ரக்ஷிக்கக்கடவ வுன் குணத்துக்குப் புறம்பானேனோ வென்கிறார்.

ச. நீரிங்ஙன் பயப்படுகிறதென்றென்ன; "தேவாதிகளுக்கரிய ராகையாலே யெனக்கு மரியையாகிறாயோ"என்றன் னெஞ்சுகலங்காநின்றதென் கிறார்.

ரு. நாமெளியோமான கோடியிலே யன்றோ, நீருமக்குப் பேறுகை புகுந் திருக்க நீரிங்ஙன்படுகிற தென்றென்ன ; என்னெஞ்சு காண்கை யீலேத்வரியா நின்றதென்கிறார்.

சு. காணவாசைப்பட்ட வளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடைய நெஞ்சுகந் தநுபவிக்கிறபடியை யரு ளிச்செய்கிறார்.

௭. அஸுரிலேதோற்றி ப்ரஹ்லாதனுடைய வார்த்தியைத் தீர்த்தாற்போலே தம்மார்த்தியைத் தீர்த்தபடியை அநுஸந்தித்து ஏத்துகிறார்.

௮. ஸகலபதார்த்தங்களுக்கு மந்த்ராத்மாவாய் ப்ரம்ஹாதிகளுக்குக் காரணபூதனானவனைக் காணப்பெற்றேனென்றினியராகிறார்.

௯. தன்னை அநுபவிக்கப்பெற்று, அதுக்குமேலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் போக்யமாம்படி திருவாய்மொழிபாடவும் பெற்றேனென்கிறார்.

௧0. இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி தன்போக்யதையாலே நித்யஸூரிகள் ஹ்ருதயத்தை நோவுபடுத்து மென்கிறார்.

௫-ம் திருவாய்மொழி—இன்னுயிர்.

கத்யந்தர மில்லாமையாலே, அவன் குணங்களையே அநுஸந்தித்துத் தரித்தாளாய் தலைக்கட்டுகிறார்.

௧. சில குயிற்பேடைகளைக்குறித்து, என்னை முடிக்கைக் கித்தனைபாரிப்பு வேண்டுமோ வென்கிறாள்.

௨. சிலவன்றிற் பேடைகளைக்குறித்து, உங்கள் சேவல்களும் நீங்களுமாய் ப்ரணய கூஜிதங்களாலே என்னை நலிகிறதென் னென்கிறாள்.

௩. அவ்வன்றிற் பேடைகள் தன்னையே, திரியவும் தன்செய லறுதியாலே யிரக்கிறாள்.

௪. சில மயில்களைக்குறித்து, நீங்களுச்சமாகக்கூவி என்னை நலியாநின்றிகோளென்கிறாள்.

௫. தன்னினவாயிருந்து நலிகிற பூவைகளைக்குறித்து, அவன்றான் என்னை முடிக்கைக்கு நல்லவிறகுபார்த்தான், இனி யுங்களுக் கிங்குவிஷயமில்லை யென்கிறாள்.

௬. தன் தசையறியாதே திருநாமத்தைச் சொல்லுகிற கிளிப்பிள்ளையைக் குறித்து, எனக் கஸஹ்யமான தசையிலே சொல்லவோ வுன்னை வளர்த்ததுஎன்று அத்தை நிவர்த்திப்பிக்கிறாள்.

௭. அவன்வடிவுக்குப்போலியான மேகமாலையைக்கண்டு, உங்கள் வடிவைக் காட்டி யென்னை முடியாதே கொள்ளுங்கோ ளென்கிறாள்.

௮. சிலகுயில்களைக்குறித்து, திருநாமம் சொல்லவேண்டாவென்று நானிறக்க, அத்தையேசொல்லி நலிந்திகோள், உங்களை வளர்த்த ப்ரயோஜநம் பெற்றேன்! என்கிறாள்.

௯. மதுபானமத்தமாய்ப் பாடுகிறன, சிலவண்டுகளையும் தும்பிகளையும் குறித்து, உங்கள்த்வனி எனக்குத் துஸ்ஸஹமாயிருந்தது, நீங்கள் பாடாதே கொள்ளுங்கோள், என்கிறாள்.

௧0. திரளவிருக்கிறநானாக் குழாங்கள் தன்னைமுடிக்க மந்திரிக்கிறனவாகக்கொண்டு நான் முடிந்தேன், இனிநீங்கள் திரண்டு ப்ரயோசனமென்? என்கிறாள்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழியிற் பாசுரம் ஹ்ருதயத்திலேபடில் ஆரேனுமாகிலும் தரியாரென்கிறார்.

சூ - ம். திருவாய்மொழி—உருகுமால்.

ப்ரீதிப்ர கர்ஷத்தாலே சிதிலராகிறார்.

௧. திருக்காட்கரையி லெம்பெருமானுடைய ஆச்சரியங்களான பரிமாற்றங்களை நினைதொறு மென்னெஞ்சு சிதிலமாகா நின்றதென்கிறார்.

௨. திருக்காட்கரையி லெம்பெருமானைக்குறித்து, உன்னோடு நான்பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலே னென்கிறார்.

௩. அடிமைகொள்ளவென்று புகுந்து, தன்படிகளைக்காட்டி சர்வஸ்வஹரணம் பண்ணினபடிகளை அநுசந்திக்க க்ஷமனாகிறிலே னென்கிறார்.

௪. தான் சேஷியான முறைதப்பாமே எல்லாரோடுங் கலக்கிறவன், அதிக்ஷுத்ரனான வென்பக்கல் பண்ணினவியா மோஹமெனக் கறியநிலமன் றென்கிறார்.

௫. என்னை அடிமைகொள்வானைப்போலே புகுந்து,என்சரீரத்தையும் ஆத்மாவையுங்கூட புஜித்தான், ஒருவன் வ்யாமோஹ மிருந்தபடியென்! என்று விஸ்மிதராகிறார்.

௬. "அவன் க்ருத்ரிமனென்றறிந்தால் அதிலே கிடந்து நெஞ்சாறல்படாதே அகன்றாலோ நீர்" என்ன; அவனைக்கண்டவாறே, அவ்வஞ்சனைகளை மெய்யென்றிருப்ப னென்கிறார்.

௭. அடிமை கொள்வானைப்போலேபுகுந்து, என்னுயிரை நேராகபுஜித்து, பின்னையும் புஜியாதானைப்போலே யிருக்குமென்கிறார்.

௮. நாள்தோறும் என்னை அநுபவியாநின்றாலும் பெறாப்பேறு பெற்றாற்போலே புஜிக்கிறவிவனுடைய குணவத்தை பொறுக்க வொண்கிறதில்லை யென்கிறார்.

௯. "நீரேயோவிப்படிபட்டீர், குணாநுபவமே யாத்ரையான நித்திய சூரிகளும் படும்பாடிதுவன்றோ" என்ன; அவர்கள்தான் நான்பட்டது பட்டார்களோ வென்கிறார்.

௧0. தம்மோடுகலந்த வெம்பெருமானுக்குத் தம்மிலும் அபினிவேசம் மிக்கிருந்தபடியைச் சொல்லுகிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்பிய சிப்பார்க்கு ஜன்மம் முடிந்து அதுக்கடியான சம்சாரமும் நசிக்கு மென்கிறார்.

எ-ம் திருவாய்மொழி—எங்கானல்.

வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூதுவிடுகிறார்.

க. சிலநாரைகளைக்குறித்து, அவன்தன் அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி, என்தசையை அவனுக்கு அறிவித்துவந் துங்கள்திருவடிகளை என்றலைமேலே வைக்கவேணுமென்கிறாள்.

உ. சில குருகினங்களைக் குறித்து, "தாமும் தமக்கு நல்லாருமாயிருந்த விருப்பை நானிழந்தேபோ மித்தனையோ" என்றறிவியுங்கோளென்கிறாள்.

௩. சில கொக்கினங்களையுங் குருகினங்களையும் நோக்கி, தன்னழகு காண்கைக்கு நாங்கள் யோக்கியரல்லோமோவென்றுகேளீர் என்கிறாள்.

ச. சிலமேகங்களைநோக்கி, என் வார்த்தையை அவனுக்குச் சொன்னால் உங்களை தண்டிக்குமோ வென்கிறாள்.

ரு. "எங்கள் வார்த்தையை அவனங்கீகரிக்குமோ" என்றிருந்தனவாக; பரமபதத்திற் பண்ணின வாதரத்தை யென்பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான், ஆனபின்பு எனக்காக ஒருவார்த்தைவிண்ணப்பஞ் செய்யவேணு மென்கிறாள்.

சு. சிலவண்டுகளைக்குறித்து, உங்கள் வார்த்தை விலைச்செல்லும்படி பிராட்டிசந்நிதியிலே சொல்லுங்கோளென் தூதவாக்கியத்தை யென்கிறாள்.

எ. சில குருகினங்களைக்குறித்து, சிலரோடேகலந்து அவர்களைத்துறந்து அதுவே புகழாகவிருக்கை போருமோவென்று அவர்க் கறிவியுங்கோ ளென்கிறாள்.

அ. சிலவண்டுகளையும் தும்பிகளையுங் குறித்து, அங்குத்தைக்கு பயப்படவேண்டாதபடி சுரக்ஷிதமான தேசத்திலே யிருக்கப்பெற்றோம், இனி யென்னார்த்தியை அறிவியுங்கோ ளென்கிறாள்.

கூ. ஒரு குருகைக்குறித்து, நிரதிசயபோக்யரானதாம் போம்போது தம்மைக் கொண்டுபோகை தம்முடைய தகவுக்குப் போருமோவென்று விண்ணப்பஞ்செய் யென்கிறாள்.

க0. சில அன்னங்களைக்குறித்து, நான் முடிவதற்குமுன்னே அவனுக்கென் தசையை அறிவியுங்கோ ளென்கிறாள்.

கக. நிகமத்தில், இத்திருவாய் மொழியை அப்யசித்தார்க்குப் பிரிவுக்கடியான சம்சார துரிதத்தை இதுதானே யறுத்துக்கொடுக்கு மென்கிறார்.

அ-ம். திருவாய்மொழி—அறுக்கும்வினை.

போகவிட்டதூது வரப்பற்றாமை "நாமவனிருந்தவிடத்தே போவோம்" என்று மனோரதிக்கிறார்.

க. எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு பாயமுண்டோ வென்கிறார்.

உ. திருநாவாயிலேபுகும் நாளென்றோ வென்கிறார்.

ங. திருநாவாயிற் றிருவோலக்கத்திலேபுகும் நாளென்றென் றறிகிலேனென்கிறார்.

ச. ஆத்மாந்ததாஸ்யம் பண்ணும்படிவிஷயீக்ருதனானநான், நப்பின்னைப்பிராட்டியோடேகூடவிருக்கிற விருப்பிலே அடிமைசெய்யப்பெறும் நாளென்றென் றறிகிறிலே னென்கிறார்.

ரு. திருநாவாயைக் கண்ணின்விடாய்தீரக் கண்டநுபவிப்பதென் றென்கிறார்.

கூ. ஊனையன்றிக்கே ஊரில்நின்றருளின வுன்னைக்கண்டு களிப்பதென்றோ வென்கிறார்.

எ. ஆஸ்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்தியவாஸம் பண்ணுகிற தேவர், அனன்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணி யருளவேணுமென்கிறார்.

அ. அப்போதே அபேக்ஷிதம்பெறாமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம், அக்கியான கந்தமில்லாதபடி உன்னை என்னெஞ்சிலே யிருத்தும்படி தெளிவைத்தரவேணும்" என்கிறார்.

கூ. இப்படி சொன்னவிடத்திலு மொருவிசேஷகடாக்ஷம் பண்ணாமையாலே, "நானிவ்வாசையோடே முடியாநின்றேன், என் அபிமதம் பெறப் புகுகிற பாக்யாதிகராரோ" என்கிறார்.

க0. உன்னைக்காணப்பெறாமை நெஞ்சழிந்து கூப்பிடாநின்றே னென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார், ஐஹிகாமுஷ்மிக சகலபோகங்களையும் புஜிக்கப்பெறுவ ரென்கிறார்.

கூ-ம். திருவாய்மொழி—மல்லிகை.

பாதகவர்கமடையநலிய, நலிவுபட்டவர்கள் கூப்பிட்ட்கூபீட்டை இவரொருத்தருமே கூப்பிடுகிறார்.

க. சந்தியாகாலத்தில் தென்றல் துடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியை சொல்லுகிறாள்.

உ. முன்பு தூசியேறின பேர்க்குரமாகநின்ற பேரணி உறுபூசலானவாறே திரளவமுக்குமாப்போலே தனித்தனியேநலிந்த பாதகங்கள் பலஹானி மிகமிகபலகூடிவந்து நலியாநின்ற தென்கிறாள்.

ங. கண்ணுக்கிலக்கான பதார்த்தங்க ளடங்க பாதகமாகப்புக்கவாறே அவற்றுக்கஞ்சாக் கண்ணைச் செம்பளித்தாள், அகவாயிலே அவளழகு ஸ்ம்ருதமாய் நலியாநின்ற தென்கிறாள்.

ச. அகவாயில் நலிகிறநொழிய ஸ்வரூபேணவந்து ஸ்பரிசாதிகளாலே ஸ்மாரகமாய்நின்று நலிகிறபதார்த்தங்களைச் சொல்லுகிறாள்.

ரு. சகலபதார்த்தங்களும் ஸ்வஸ்வபாவங்களைவிட்டு அந்யதாவாய் அவ்வளவிலு மவனுடைய ப்ரஸாதமிரிதாலும் தரிக்க விரலுண்டோ வென்கிறாள்.

கூ. நித்யபாநடாயிகியான பிராட்டியோடு அஸ்யபரரான ப்ரம்ஹருத்ராதிகளோடு வாசியற உடம்புகொடுக்கு மவனுடைய சௌசீல்லியம் என் ஆத்மாவை யீராநின்ற தென்கிறாள்.

எ. கீழ்ச்சொன்ன பாதகபதார்த்தங்கள் திரளவந்து கண்பாராதே நலியாநின்ற தென்கிறாள்.

அ. கீழ் தனித்தனியும் திரளவும் பாதகமானவை ஒன்றுக்கொன்று முற்கோலி நலியாநின்றன வென்கிறாள்.

கூ. பண்டே இடைப்பெண்கள் நடுவே இவன் குழலூதுகிறபோது நடுநடுவே தன்னுற்றுமையாலே சில உக்திசேஷ்டிதங்களைப் பண்ணுநின்றுகொண்டு பாடும்பாட்டைநினைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலே னென்கிறாள்.

க0. வருவதாகச் சொன்னகாலம் வந்திருக்க அவன் வருகிறிலன், பாதகங்களுடைய சந்நிதியில் அவனையொழியத் தரிப்பதெங்கே யென்கிறாள்.

கக. நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார், இத்திருவாய்மொழியைச் சொல்லி அவனைப்பெறுங்கோ ளென்கிறார்.

க0-ம். திருவாய்மொழி—மாலைநண்ணி.

ப்ரதிபந்தங்கள்போக திருக்கண்ணபுரத்தி லெம்பெருமானை ஆஸ்ரயியுங்கோ ளென்கிறாள்.

க. இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற வாஸ்ரயணத்தைச் சங்க்ரஹேண வருளிச் செய்கிறார்.

உ. "இவ்விஷயத்துக் கென்வருகிறதோ" என்றஞ்சும் சாபலமுடையார், சுரக்ஷிதமான தேசமென்று நிர்ப்பயராய் நித்யமாக வாஸ்ரயுங்கோ ளென்கிறார்.

ங. திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவன் உபயவிபூதிநாதனுய்த்து, உங்கள் துக்கங்கெட அநந்ய ப்ரயோஜனனுய்க்கொண்டா ஸ்ரயியுங்கோ ளென்கிறார்.

ச. ஆஶ்ரயிக்குமிடத்தில் நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக ஆஶ்ரயியுங்கோள், அவனுங்களுக்கு ரக்ஷகனு மென்கிறார்.

ரு. இப்படி பக்தியோகத்தா லாஶ்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினார் திறத்தவன் செய்தருளும்படியையருளிச் செய்கிறார்.

சா. தன்னை ஆஶ்ரயிப்பாருடைய ப்ரதிபந்தங்களைப்போக்கி அவர்களுக்கு மிகவும் ஸ்நேஹியா மென்கிறார்.

எ. அநந்ய ப்ரயோஜநருக்கு சுலபனாய் ப்ரயோஜநாந்தர பரர்க்கத்தைக் கொடுத்துத் தானகல நிற்குமென்கிறார்.

அ. அவனை ஆஶ்ரயியுங்கோள், உங்களுடைய துக்கத்தையும் துக்க ஹேதுவான சம்சாரத்தையும் போக்கியருளு மென்கிறார்.

கூ. உபதேச நிரபேக்ஷமாக நான் முன்னமவனை ஆஶ்ரயித்து சுகியாகப் பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

க0. ப்ரீத்யதி சயத்தாலே ஸ்வலாபத்தைச்சொல்லிப் பக்திப்ரபத்யநுஷ்டானங்களுக்கு க்ஷமரல்லாதார் திருக்கண்ணபுரமென்கிற உக்தியைச்சொல்லவே ஸமஸ்த துக்களும்போ மென்கிறார்.

கக. ப்ரதிபந்தங்கள் ஸவாசனமாகப் போகவேண்டியிருக்கில் இத்திருவாய்மொழியை ப்ரீதிபூர்வகமாகச் சொல்லிக்கொண்டு அவன் திருவடிகளை ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

க0-ம் பத்து.

ஆழ்வாருடைய பதற்றத்தைக்கண்டு, திருமோகூரிலே தங்குவேட்டையாகவந்து தங்கி, இவர்க் கர்ச்சிராதி கதியையுங்காட்டி, இவருடைய அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணினபடியை யருளிச்செய்தார்.

க-ம். திருவாய்மொழி—தாளதாமரை.

கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணத்தை அருளிச் செய்கிறார்.

க. மரணமான மஹாபயத்துக்கு விரோதி நிரசநசீலனான காளமேக மல்லது துணையில்லையென்று அவனைப் பற்றுகிறார்.

௨. போக ஹேதுவான வொப்பனையையும் உஜ்ஜீவந ஹேதுவான திருநாமங்களையு முடையவனுடைய திருவடிகளல்லது வேறு காலதத்வமுள்ளதனையும் புகலுடையோ மல்லோ மென்கிறார்.

ங. சர்வரக்ஷகனானவன் வர்த்திக்கிற திருமோகூரா, நம்முடைய சகலதுக்கமும் கெடச்சென்று ப்ராபிப்போ மென்கிறார்.

ச. நம்முடைய சமஸ்த துக்கங்களுங்கெட, திருமோகூரிலேவந்து சுலபரைய் நிற்கிறவனை ஆஶ்ரயிக்க வாருங்கோளென்று ஸ்ரீ வைஷ்ணவர்களை யழைக்கிறார்.

ரு. அவனெழுந்தருளிநின்ற திருமோகூரை ஆஶ்ரயித் தநுபவிக்க வாருங்கோளென்கிறார்.

சு. திருமோகூரிலே நின்றருளின பரமாப்ததமன் திருவடிகளல்லது வேறு நமக்கு ரக்ஷையில்லை யென்கிறார்.

எ. நம்முடைய ரக்ஷணம் தனக்கு அவர் ஜநீயமான உத்பாதகன் வர்த்திக்கிற திருமோகூரை ஆஶ்ரயிக்கவே, நம்முடைய துக்கங்க ளப்போதே போமென்கிறார்.

அ. திருமோகூரிலே நின்றருளின ஆண்பிள்ளையான தசரதாத்மஜனை ஆஶ்ரயிக்க நம்முடைய துக்கமெல்லாம் போமென்கிறார்.

கூ. நமக் கரணான திருமோகூரை நாம்ப்ராபிக்கப் பெற்றோமென்று, ஸ்வலாபத்தைப் பேசுகிறார்.

க0. சர்வ ரக்ஷகன் வர்த்திக்கிற திருமோகூரை, நமக்குப் பந்துக்களானார் ஆதரித்து நினைத்தேத்துங்கோ ளென்கிறார்.

கக. நிகமத்தில், பரமோதாரமான திருமோகூருக்குக் கொடுத்த வித்திருவாய் மொழியை அப்யசிக்க வல்லார்க்குத் துக்கநிவ்ருத்தி யுண்டாமென்கிறார்.

உ-ம். திருவாய்மொழி—கெடுமிடர்.

இதுவுமது.

க. ப்ரீதியாலே திருநாமத்தைச் சொல்லத் திருவநந்தபுரத்துக்குப் போகைக்கு விரோதியானவை யெல்லாம் போம் அங்கேபுக வாருங்கோளென்று அநுகூலரை அழைக்கிறார்.

உ. ப்ரதிபந்தகங்கள் போகைக்குச்சொன்ன திருநாமந்தானே ஆயிரம் ப்ரகாரத்தாலே ரக்ஷகமா மென்கிறார்.

ரு. ப்ரதிபந்தங்கள் போகைக்குத் தேசப்ராப்தியே யமையும், ஆயிரந் திருநாமத்திலு மேதேனு மொன்றைச்சொல்லி அநுபவியுங்கோளென்கிறார்.

ச. ஆஶ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காகத் திருவநந்த புரத்திலே புக்கடிமை செய்கிறவர்கள் என்ன பாக்கியவான்க ளென்கிறார்.

ரு. திருவநந்தபுரத்தி லாஶ்ரயிக்கு மவர்கள் நித்யசூரிகளாவர்கள், ஆகையாலே, அங்கே நீங்களும் ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

சூ. நித்தியசூரிகளும் வந்தடிமைசெய்கிற திங்கே ஆகையாலே திருவநந்தபுரமே பரமப்ராப்யம், அங்கே நாமடிமைசெய்ய வேணுமென்கிறார்.

எ. சர்வேஶ்வரன் கண்வளர்ந் தருளுகிற திருவநந்தபுரத்திலே சென்றடிமைசெய்யப்பெறில் ஒருதேசவிசேஷத்தைச் சென்றடிமைசெய்யப் பெற்றிலோமென்னும் துக்கம் போமென்கிறார்.

அ. திருவநந்தபுரத்திலே கண்வளர்ந் தருளுகிற சர்வேஶ்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோளென்று அநுகூலரை அழைக்கிறார்.

கூ. சரீராவஸாந மணித்தாயித்து, ஈண்டெனத் திருவநந்த புரத்திலே புக்கடிமைசெய்யத் தாஸ்ய விரோதிகர்மங்கள்தானே நசிக்கு மென்கிறார்.

கO. திருவநந்தபுரத்திலே புக்கடிமை செய்கிறவர்கள் பெருமைபேச நிலமன் றென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய் மொழிவல்லார் திருநாட்டிலுள்ளார்க்குப் போக்கியராவ ரென்கிறார்.

ங - ம். திருவாய்மொழி—வேய்மரு.

இதுவுமது.

க. அவன் பிரிகிறானென்கிற வ்யசநம்செல்லாநிற்க, அதுக்குமேலே, குயில் துடக்கமான பாதக பதார்த்தங்களின் த்வநியாலும் அவன் நோக்காலும் தனக்குப் பிறந்த வவசாதத்தை, தோழிமார்க்குச் சொல்லுமாப்போலே அவன் றனக்குச் சொல்லுகிறாள்.

உ. இவள் தரிக்கைக்காகப் பலகாலணைத்தருள, இஸ்ஸமஸ்லேஷ சுகமெல்லாம் நீ போகக்கடவையென்னு மிதினாலே ஸ்வப்நங்கண்டு விழித்தாப்போலேயாய் நோவுபடாநின்றே னென்கிறாள்.

ங. நீ யுபேக்ஷித்திருக்க நாங்கள் சிநேஹித்திருக்கிற வொருதலைக்காமம் நசிக்கவேணு மென்கிறாள்.

ச. இவன் போக்கைநினைத்து நோவுபடப் புக்கவாறே "உன்னைப் பிரிக்கைக்கு சம்பாவனையுண்டோ" என்று இப்புடையிலே சவிநயமாகச் சிலவார்த்தைசொல்ல இவையிறே என்னை யழிக்கிற தென்கிறாள்.

ரு. "நான் சந்நிஹிதனாயிருக்க நீ யிப்படிபடுகிறதென்" என்ன; நீ பசுமேய்க்கக் கடவையானபின்பு நீயும் போனாய் நீ போனால் நலியக்கடவ சந்தியாதி பதார்த்தங்களால் நலிவுபடுகிற வென்னை யாஸ்வசிப்பித் தருளவேணு மென்கிறாள்.

சா. உனக்குப் போனவிடமெங்குமபிமதைகள் பலருளர் உனக்கொரு குறையில்லை நாங்களுன்னைப்பிரிந்து தரிக்கமாட்டுகிறிலோம் உன்போக்கானதெங்களுக்கு அஸஹ்யமென்கிறாள்.

எ. நாங்கள் நோவுபட உன் சுகுமாரமான திருவடிகள் நோவப் பசுமேய்க்கப்போனால் அங்கே அசுரர்கள் கிட்டினாலென்னாய் விளையுமென்கிறாள்.

அ. நீபோனால் சப்ரமாதமென் றஞ்சாநின்றேன், உன்னைப் பிரியவும் மாட்டேன் பசுமேய்க்கை வ்யாஜமாக அபிமத விஷயங்களை நினைத்துப்போகிறாயாகில், என் கண்வட்டத்திலே உனக்கு அபிமதைகளோடே சஞ்சரிக்கவேணு மென்கிறாள்.

கூ. "உகக்கு நல்லவரோடு முழிதராய்" என்று நான் போகாமைக்காகச் சொன்னவார்த்தை யித்தனையொழிய, உங்கள் சந்நிதியிலே நான் சிலரோடே பரிமாறுகை யுங்களுக் கநிஷ்டமன்றோவென்ன; எங்களோட்டைக் கலவியிற் காட்டில் திரு உள்ளத்தில் ப்ரியமே யெங்களுக்கு மிகவும் சுகம், ஆனபின்பு சப்ரமாதமான தேசத்தில் போகா தொழியவேணு மென்கிறாள்.

க0. முன் கைமிடுக்கரான வசுரர்கள் கம்ஸப்பேரிதராய்ச் சஞ்சரிககிற காட்டிலே, நம்பி மூத்தபிரானையு மொழியத் தனியே திரியாநிற்றியென்று மிகவும் நோவுபடா நின்றே னென்கிறாள்.

கக. நிகமத்தில், அவனை "பசுநிரை மேய்க்கப் போகவேண்டா" என்று நிக்ஷேபித்த பாசுரமான இத்திருவாய்மொழியும் அல்லாதவற்றோடொக்க ஒரு திருவாய்மொழியே! யென்று விஸ்மிதராகிறார்.

ரு - ம். திருவாய்மொழி—சார்வே.

இதுவுமது.

க. உபயவிபூதி யுக்தனாயிருந்துவைத்து ஆஶ்ரிதசுலபனானவனுடைய திருவடிகள் பக்தியோகலப்ய மென்கிறார்.

உ. ஸர்வேஶ்வரனாய் ஶ்ரிய:பதியாயிருந்துவைத்து என்விரோதியைப்போக்கி என்னை யிங்கே அடிமைகொள்ளா நின்றானென்று, கீழ்ச்சொன்ன சௌலப்யம் தமக்குப் பலித்தபடியை யருளிச்செய்கிறார்.

ங. மறுவலிடாதபடி சம்ஸாரத்தைப் போக்கி நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனானவனுடைய திருவடிகள் சிரோபூஷணமாகப் பெற்றேனென்கிறார்.

ச. என்மனஸ்ஸிலேயிருக்கிற ஸர்வேஶ்வரனை யொருவராலும் விஸ்லேஷிப்பிக்க வொண்ணாதென்று நிச்சயித்து, அத்தாலே க்ருதக்ருத்யனா யிருந்தே னென்கிறார்.

ரு. அவன் என்திறத்தில்செய்ய நினைக்கிறவை யொருவற்கறிய நிலமன்றென்கிறார்.

சு. இன்று ஶ்ரயிப்பாரையும் நித்தியாஶ்ரிதரைப்போலே விஷயீகரிக்குமவன் திருவடிகளிலே நிர்மமனாய் விழப்பெற்றேனென்கிறார்.

எ. நம்ப்ரதிபந்தங்களையெல்லாம் தானே போக்கி அடிமைகொள்ளுமவனை நாள்தோறு மனுபவியென்று, திருவுள்ளத்தைக்குறித்து யருளிச்செய்கிறார்.

அ. "அவனைஅநுபவி" என்றவாறே உகந்தநெஞ்சைக்கொண்டாடி அவனையிடைவிடாதே அநுபவி யென்கிறார்.

௯. "ஜன்மாந்தரஸஹஸ்ரேஷு" என்கிறபடியே அநேக காலசாத்தியமான பக்தியாலே லபிக்கப்படுமவனைக் கேவலமவன் ப்ரஸாதத்தாலே காணப்பெற்றேனென்கிறார்.

௧௦. ப்ரயோஜநாந்தரபரரோடு சாதநாந்தரபரரோடு ப்ரபந்நரோடு வாசியற அவனே யுபாயமென்று உக்தத்தை நிகமிக்கிறார்.

௧௧. நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குக் கிருஷ்ணனுடையதிருவடிகள் சுலபமா மென்கிறார்.

ரு-ம். திருவாய்மொழி—கண்ணன்கழலிணை.

இதுவுமது.

௧. பக்தியுக்தராய்க்கொண்டு அவனை அநுசந்திப்பார்க்கு ஆலம்பநமான திருமந்திர மின்னதென்கிறார்.

௨. இதனுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறார்.

௩. ஸ்வாமித்வ ப்ரயுக்தமான ஸர்வவித ரக்ஷணங்கள் பண்ணும்படி சொல்லுகிறது.

௪. "ஆபோநாராஇதி ப்ரோக்தா:" என்று மொருநிர்வசந ப்ராகாரமுண்டிறே யிதுக்கு அவ்வழியாலே திருமந்திரத்தை நிர்வசித்துத் திருமந்திரத்தைச் சொல்லிக்கொண்டு புஷ்பாஞ்சலியைப்பண்ணி ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

ரு. இப்படி செவ்வி மாறாத புஷ்பத்தைக்கொண்டு அவன் திருநாமத்தை ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகச் சொல்லுங்கோள், அப்படிசெய்யவே, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைப் பெறலா மென்கிறார்.

சு. நீர்சொன்னபடி செய்யலாவது ஆஶ்ரயணீயனைக் கண்டாலன்றே, கண்டாஶ்ரயிக்க வேண்டாவோவென்ன; பிற்பாடரான நமக்

காகத் திருமலையிலே நின்றருளினான் அவனை ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

எ. ப்ரீதிப்ரேரிதராய் ஆஶ்ரயிக்கவும் இனிமையோடே திருநாமமுஞ் சொல்லவும்மாட்டாதார், அந்தப்புரபரிகரமானார் வார்த்தையைச் சொல்லவே பூர்ணோபாசநத்தில் பலம் சித்திக்கு மென்கிறார்.

அ. அதிகாரிநியதியில்லை ஆரேனுமாகத் திருநாமத்தை நிரந்தரமாகச் சொல்லுவார் நித்தியஸூரிகளோ டொப்பர்கள் என்கிறார்.

௯. ஜன்மாதிகள் அப்ரயோஜகமானாலும் ப்ரயோஜநாந்தர பரதாஹேது வானபாபங்கள் செய்வதென்றென்னில்; ப்ரயோஜன ஶூந்யராய்க் கொண்டாஶ்ரயிக்கவே அவைதானே போமென்கிறார்.

க0. அவ்வளவேயன்றிக்கே கைங்கரிய ப்ரதிபந்தங்களும் போம், ஆனபின்பு, அவனை ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

கக. நிகமத்தில், இப்பத்தும் அப்யசித்தவர்களை ஆழ்வார் தம்மைப்போலே பகவத்விஷயீகார பாத்ரமாக்கு மென்கிறார்.

கூ - ம். திருவாய்மொழி—அருள்பெறுவார்.

இதுவுமது.

க. ஈஶ்வரன் நம்மை விஷயீகரிக்கையிலே யொருப்படாநின்றான், அது தானும் நாம் விதித்தபடி செய்வானா யிராநின்றா னென்கிறார்.

உ. "விதிவகையே" என்று, கேவல பகவத் க்ருபையாலே வந்ததாகச் சொல்லுகிறதென், அடியிலே "இன்னின்ற நீர்மையினியாமுறாமை" என்றிலோமோ நாமென்ன; நாமபேக்ஷித்தவளவோ பெற்றதென்கிறார்.

ங. நெஞ்சே, நம்மை விஷயீகரிக்க வல்லனே யென்று நாமிருக்க, அவ்வளவன்றிக்கே பலிக்கிறபடி யென்னென்கிறார்.

ச. சர்வேஶ்வரன் நாம் விதித்தபடியே செய்வானாகச் சொன்ன விது சம்பவிக்குமோ வென்னில்; அவனுடைய வாஶ்ரித பாரதந்திரயத்தை அநுசந்தித்தால் கூடாததில்லைகாண் என்கிறார்.

ரு. அவன் பரமபதத்திற்குப்போக வாஶ்ரிதருக்கு வைத்த அர்ச்சிராதி கதியாலே போகப்பெறா நின்றேன், நித்தியாஶ்ரிதனாப்போலே என்னை விஷயீகரிக்கவும் பெற்றே னென்கிறார்.

சு. திருவாட்டாற்றிலே சந்நிதிபண்ணி என்னைச் சர்வதோ முகமாக விட மாட்டாதவனுடைய திருவடிகளைக் கிட்டப் பெற்றேமென்கிறார்.

எ. "குறுகினம்" "என்றவிதென் கொண்டறிவ தென்னில்; பார்க்கலாகா தோ உடம்பு கோயிற்சாந்து நாறுகிறபடி யென்கிறார்.

அ. அத்யந்த விலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலேவந்து சுலபனாய் என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நானென்ன நன்மைசெய்தே னென்கிறார்.

கூ. அத்யந்தம் பூர்ணனான தானிகழாதே என்மனஸ்ஸை சர்வகாலமும் விடு கிறிலன், ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார்.

க0. மஹாபுருஷர்களை அடைந்தால் எதிர்த்தலை பாராதே தங்கள்தரத்தைக் கொடுப்பர்களென்னு மிவ்வர்த்தத்தைத் திருவாட்டாற்றில் நாய னாரொன் பக்கலிலே காட்டினாரென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அநுபவிக்க வுரியார் நித்திய சூரிக ளென்கிறார்.

எ-ம். திருவாய்மொழி—செஞ்சொல்.

இதுவுமது.

க. "திருவாய்மொழிபாடுவிக்க" என்றொருவியாஜத்தாலேபுகுந்து தம்பக் கலவன்பண்ணின வ்யாமோஹத்தைக்கண்டு, அவனுக் கடிமைசெ ய்வார் சீலாதிகளிலே யகப்படாதே கொள்ளுங்கோ ளென்கிறார்.

உ. தம்மோடு கலந்தபின்பு அவனுக்குப்பிறந்த சமுர்த்தியைக் கண்டினிய ராகிறார்.

ங. அவனுக்குத்தம்பக்கலுண்டான வபிநிவேசத்தினுடைய வெல்லையில்லா மையை யருளிச்செய்கிறார்.

ச. தம்முடைய திருமேனியிற் காட்டிலும் தம்மோடே பரிமாறலாம் நில மென்று அவனுக்குத் திருமலையிலுண்டான வ்யாமோஹத்தை யருளிச்செய்கிறார்.

ரு. அவன் தம்மோடேகலந்து தம்வாயாலே திருவாய்மொழிகேட்ட ப்ரீதி யுள்ளடங்காம லானந்தித்து ஆளத்திவையா நின்றானென்கிறார்.

சு. ஸ்ரீயஃபதியானவன் திருமலையிலே நின்றருளி என்னை யாளுகையிலே வ்யாமுக்தனானு னென்கிறார்.

எ. தம்முடைய விஸ்ஸமுர்த்திக்கெல்லாமடி திருமலையானபின்பு, இத்தே சந்தானே நமக்கு ப்ராப்யமென்று திருமலையைக் கொண்டாடு கிறார்.

அ. திருமலை தொடக்கமான கோயில்களெல்லாவற்றிலும் பண்ணும்பிரிவேசத்தை என்னவயவங்களிலே பண்ணி ஒருக்ஷணமும் பிரிகிறிலன் இவன்படி யிருந்தபடியென்! என்கிறார்.

௯. நமக்கிந்த சம்பத்தெல்லாம் திருமலையாலே வந்ததாயித்து, திருமலையைக் கைவிடாதேகொள்ளென்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

௧௦. இப்படி இவர் நிர்ப்பந்திக்கச்செய்தேயும் ஆனைக்குப் பாடுவானைப்போலே கேளாதிருந்தான்; அதுக்கடி "சார்ந்துபூசுவார் பரணியையுடைத்தோ பூசுவது, இதென் சொன்னீரானீர்" என்ன; திரியவும், மங்கவொட்டென்கிறார்.

௧௧. நிகமத்தில், மஹாதஹங்கார விஷயமான வித்திருவாய்மொழி திருமலையிலே சொல்லிற்றென்கிறார்.

அ - ம். திருவாய்மொழி—திருமாலிருஞ்சோலை.

இதுவுமது.

௧. யாத்ருச்சிகமாகத் திருமலையைச் சொல்லுங் காட்டில் நிரபேக்ஷனான தான் பிராட்டியோடே கூடவந்து என்னுள்ளே புகுந்தருளினான் என்கிறார்.

௨. தான் ஸர்வேஸ்வரனாய் வைத்து என்னோடு கலக்கப் பெறுமையாலே குறைவாளனானவன் இன்றுவந்து நிர்ஹேதுகமாக வென் ஹ்ருதையத்திலே புகுந்து பூர்ணனானா னென்கிறார்.

௩. அவன் தம்மோடே நிர்ஹேதுகமாகவந்து ஸம்ஸ்லேஷித்தபடியை யநுசந்தித்து, இவன் திருவடிகள் எனக் கிங்ஙனே யெளிதாவதே யென்கிறார்.

௪. தமக்குப் பரமபதத்தைத் தருவானா யிருக்கிறவனுடைய நீர்மையை யநுசந்தித்து என்கரணங்களும் களிக்க நானும் களியா நின்றேனென்கிறார்.

௫. திருப்பேர்நகரான் பரமபதத்தை எனக்குத்தருவானாக என்னோடே பூணித்து, தானே விரோதிகளையும் போக்கினா னென்கிறார்.

௬. தனக்கிருப்பிடமான கோயில்க ளநேகமுண்டாயிருக்க ஓரிடமில்லாதானைப்போலே என் ஹ்ருதயத்திலே நிர்ஹேதுகமாக ப்ரார்த்தித்து வந்து புகுந்தானென்று ப்ரீதராகிறார்.

௭. அவனுடைய வாதரத்தாலே தமக்குண்டான கார்தார்த்யத்தை யருளிச் செய்கிறார்.

௮. நிரதிசய போக்கியபூதனான திருப்பேர்நகரான் என்பக்கலிலே வ்யாமோஹத்தைப்பண்ணி ஒருநாளும் போகாதபடி என்னெஞ்சிலே வந்துபுகுந்தா னென்கிறார்.

௯. "இன்றென்னை விஷயீகரிக்கைக்கும் முன்பென்னை யுபேக்ஷிக்கைக்கும் காரணமென்" என்றுகேட்கவேண்டி யிருந்தே னென்கிறார்.

க0. இவர்கேட்ட விதுக்கொரு ஹேதுகாணாமையாலே நிருத்தரவாய், "உமக்குமேல் செய்யவேண்டுவதென்" என்ன; ப்ரதிபூர்வகமாக வடிமைசெய்யப்பெற்றேன், இதுவே யின்னம் வேண்டுவதென்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்யசிக்க வல்லாரிட்டவழக்கு பரமபத மென்கிறார்.

௯-ம். திருவாய்மொழி—சூழ்விசும்பு.

அர்ச்சராதிமார்க்கம்.

க. பரம பதத்துக்குப்போக உபக்கிரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்ட ப்ரீத்யதிசயத்தாலே ஸ்தாவர ஜங்கமங்களுக்குண்டான விக்ருதியை யருளிச்செய்கிறார்.

உ. மேலுண்டான லோகங்கள்பண்ணின சத்காரங்களை யருளிச்செய்கிறார்.

ந. ஆதிவாஹிக லோகங்களிலுள்ளா ரெதிரேவந்து புஷ்ப வ்ருஷ்டியைப் பண்ணிக்கொண் டாடுகிறபடியை யருளிச்செய்கிறார்.

ச. மேலில்லோகங்களில் தேவர்கள் இவர்கள் போகிற வழிகளிலே தங்குகைக்குத் தோப்புகள் சமைத்தும் வாத்தியாதி கோஷங்களைப் பண்ணியும் கொண்டாடுகிறபடியை அருளிச்செய்கிறார்.

ரு. ஆதிவாஹிக கர்த்தாக்களான வருணேந்திராதிகளும் மற்றுமுள்ளாருமிவர்களுக்குப்பண்ணும் சத்காரங்களை யருளிச்செய்கிறார்.

சு. சத்கார பூர்வகமாகத் தேவஸ்திரிகளுகந்து இவர்களை ஆசீர்வசனங்களைப் பண்ணினர்க ளென்கிறார்.

எ. மருத்கணங்களும் வசுகணங்களும் தங்களெல்லைக்கப்பாலும் துடர்ந்து சென்று இவர்களை ஸ்தோத்திரம் பண்ணினர்கள் என்கிறார்.

அ. ப்ரக்ருதிமண்டலத்துக் கவ்வருகே பரமபதத்துக்குப் புரம்பாக நித்திய சூரிக ளிவர்களை யெதிர்கொள்ளுகிறபடியை யருளிச்செய்கிறார்.

௯. பரமபதத்திலேசென்று திருவாசலில் முதலிகளாலே சற்க்ருதராய், அங்குள்ள நித்யசூரிகள் "பரமபதத்திலேவருவதே!, இதென்னபாக்கியபலம்!" என்று விஸ்மயப்பட்டார்களென்கிறார்.

க0. நித்தியசூரிக ளிவர்களைக் கொண்டாடும்படியை யருளிச்செய்கிறார்.

கக. நிகமத்தில், இத்திருவாய்மொழியை அப்ய சித்தவர்கள் நித்தியசூரிகளோ டொப்பரென்கிறார்.

௧0-ம். திருவாய்மொழி—முனியே.

இதுவுமது.

௧. நிர்ஹேதுகமாக உன்னுடைய சவுந்தர்யாதிகளைக்காட்டி எனக்குன்னை யொழியச்செல்லாதபடிபண்ணி என்னை துஸ்ஸஹமான சம்சாரத்திலேவைத்து, நீபோய்ப் பண்டுபோலே யொருகுண விஷ்காரத்தைப்பண்ணிவிட வொண்ணுதென்கிறார்.

௨. தம்முடைய வபேக்ஷிதஞ் செய்தல்லது நிற்கவொண்ணுதபடி அவனுக்குத் திருவாணையிடுகிறார்.

௩. பெருமிடுக்கரான ப்ரமஹாதிகளுடைய ஸ்வரூபஸ்தித்யாதிகளுக்குமெல்லாம் நிர்வாஹகனை நீ, உன்னாலல்லது ஜீவிக்க விரகின்றியேயிருக்கிற வென்னை, ஐயோ !, வந்து விஷயீகரித்தருளா யென்கிறார்.

௪. சர்வ நிர்வாஹகனை நீ, என்கார்யம், நானேபண்ணிக் கொள்வேனுகப் பார்த்தருளினையாகில், என்னைக்கைவிட்டாயல்லையோ வென்கிறார்.

௫. சர்வரக்ஷகனை நீ யுபேக்ஷித்தால், என்கார்யம் நான்செய்யவோ, பிறர் செய்யவோ, முடிந்தேனிறே யென்கிறார்.

௬. பெரியபிராட்டியார் பக்கல்போலே என்பக்கலத்யந்தாபிநிவிஷ்டனுய், என் ப்ரக்ருதியிலு மாத்மாவிலு மத்யாதரத்தைப்பண்ணி, புஜித்த நீ, என்னை யுபேக்ஷியாதே ஈண்டென விஷயீகரித்தருளா யென்கிறார்.

௭. (நான் பெரியபிராட்டியார் பரிக்கிரஹமாகையாலே,) ப்ரளயார்ணவமக்னையான ஸ்ரீபூமிப்பிராட்டியை யெடுத்து அவளோடே ஸம்ஸ்லேஷித் தருளினுற்போலவும், கடலைக்கடைந்து பெரியபிராட்டியாரோடே ஸம்ஸ்லேஷித் தருளினுற்போலவும், சம்ஸாரார்ணவமக்னனை வென்னையெடுத் தென்னோடே ஸம்ஸ்லேஷித்தருளி என்பக்கலிலே அதிவ்யா மோஹத்தைப்பண்ணின உன்னைப் பெற்றுவைத்து யினித் தப்பவிடுவனே வென்கிறார்.

௮. அத்யந்த துர்ஞேயனை உன்னைப்பெற்றுவைத்து இனிவிட வுபாயமில்லை யென்கிறார்.

௯. "'தானிசர்வாணிதத்வபுః' 'யஸ்யாத்மா ஶரீரம், யஸ்யப்ருத்வீசரீரம்' 'தத்ஸர்வம் வைஹரேஸதநுః' என்னும்படியே, எங்கும் வந்து முகங்காட்டலாம்படி ஜகத்சரீரனுயிருக்கிற விருப்பைக்காட்டித் தந்தோமிறே" என்ன ; அது உகந்தார்க்கு முகவாதார்க்கும் பொதுவாயிருந்தது, ஆகாராந்தர மில்லையாகிலன்றே "அதுவேயமையும்" என்றுறி யிருக்கலாவது, திருநாட்டிலே வ்யாவ்ருத்தமாகப் பரிபூர்ணமாயிருக்கிற விருப்பைக் காணவேணு மென்கிறார்.

க0. எம்பெருமானுக்கிவ ரபேக்ஷிதம் செய்தல்லது நிற்கவொண்ணாதபடி பெரியபிராட்டியா ராணையிட்டுத் தடுத்துப் பெரியவார்த்தியோடே கூப்பிட்டிவர் ப்ரார்த்தித்தபடியே பரிபூர்ணனாய்க் கொண்டுவந்து சம்ஸ்லேஷித்தருளக்கண்டு, அபரிச்சேத்யமான ப்ரக்ருதி தத்வத்திலும் ஆத்மதத்வத்திலும் உன்னுடைய சங்கல்ப ரூபக்யானத்திலும் பெரிதானவென்னுடைய விடாயெல்லாந்தீரவந் தென்னோடே கலந்தாய் என்னுடைய மநோரதமு மொருபடி முடியப்பெற்றே னென்கிறார்.

கக. நிகமத்தில், அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதானக்யானாநந்தைகஸ்வரூபனாய், உயர்வற உயர்நலமுடையனாய், சௌந்தர்யாதி விசிஷ்டமான நித்தியமங்கள விக்கிரஹயுக்தனாய், அபரிமித திவ்ய பூஷணபூஷிதனாய், சர்வாயுதோபேதனாய், லக்ஷ்மீபூமிநீளாநாயகனாய், அஸ்தானேபய சங்கிகளான அநந்தவைநதேயாதிகளாலே அநவரதப ரிசர்யமாணசரண நளினனாய், ஸ்ரீவைகுண்டநிலையனாய், ஸர்வேஸ்வரனாய், ஸ்வவிபூதிபூதரான ப்ரம்ஹ ருத்திராதிகளுக்கந்த ராத்மாவாய், தன்னை காணவேணுமென்று விடாய்த்தாஸ்ரயிக்குமவர்களுடைய விடாய்தீர ஸம்ஸ்லேஷிக்கும் ஸ்வபாவனான வெம்பெருமானை, காணவேணுமென்று கூப்பிட்டு அவனைப்பெற்று நிர்துக்கராய், நிரஸ்தசமஸ்த ப்ரதிபந்தகரான ஆழ்வாருடைய பக்திபலாத்கார பூர்வகமாகப்பிறந்தது ஆயிரந் திருவாய்மொழியும்; அவற்றில் வைத்துக்கொண்டு கீழ்ச்சொன்னவைபோலன்றிக்கே பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடியான பரமபக்தியாலே பிறந்தவந்தாதியான வித்திருவாய்மொழி வல்லார் ஸம்ஸாரத்திலே பிறந்துவைத்தே அயர்வறு மமரர்களோடொப்பரென்கிறார்.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஜீயர் திருவடிகளேசரணம்.

அண்ணன் திருவடிகளேசரணம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஆசார்ய

ஹ்ருதயசார சங்க்ரஹம்.

அநுபந்தம்.

(உ)

பகவத்விஷயஐதிஹ்யங்கள்.

க-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—உயர்வற.

க-ம். பாட்டு - உயர்வற.

க. (அஹமஸ்யாவரோப்ராதாகுணைர்தாஸ்யமுபாகத:) என்னுமாப்போலே திருவடி இளையபெருமாளை "நீயிவர்க்கென்னுவீர்"! என்ன "பெருமாளுமொருபடி நினைத்திருப்பர், நானுமொருபடி நினைத்திருப்பேனென்றார்"; அவர் "நினைத்திருக்கும்படியென், நீர் நினைத்திருக்கும்படியென்" என்ன; "அவர் தம்பின் பிறந்தவனென்றிருப்பர், நான் அவர்குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்" என்றாரிறே.

உ. (உடையவன்) குணங்கள்தன்னை அஸ்தியென்று விடுமளவன்றிக்கே இவற்றையிட்டு நிரூபிக்கவேண்டும்படியா யிருக்கும். அதாவது ஆகந்துகமன்றிக் கேஸ்வரூபாநு பந்தியாயிருக்குமென்றபடி. ஆழ்வான் பிள்ளைப்பிள்ளையைப்பார்த்து "நிர்குணமென்பார் மிடற்றைப் பிடித்தாப்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே" என்றுபணித்தான். இத்தால் "சமஸ்த கல்யாண குணாத்மகோசௌ" என்றபடி.

ங. (மயர்வறவித்யாதி) ஜ்ஞாநாநுதயம், அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், என்கிறவிவை வாசனையோடே போம்படியாக. "ஜ்ஞாநாநுதயமாவது, தேஹாத்மாபிமானம், அன்யதாஜ்ஞாநமாவது, தேவதாந்தர சேஷமென்றிருக்கை. விபரீதஜ்ஞானமாவது ஸ்வதந்த்ரமாகவும்

ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலருடைய ஜ்ஞானம், என்று நம்பிள்ளையருளிச்செய்வர், தம்வாயாலே. "'மயர்வற' என்று சொல்லலாம்படி காணுமவன்றான், இவர்க்கு அஜ்ஞானத்தை வாசனையோடு போக்கினபடி".

ச. (மதிநலம்) "ஜ்ஞானபக்திகளிரண்டையும் தந்தான்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; அன்றிக்கே "நலமானமதியைத் தந்தான் என்றாய் முளைக்கும்போதே வயிரம்பற்றி முளைக்கும் பதார்த்தம்போலே பக்திரூபா பன்னஜ்ஞானத்தைத் தந்தானென்கிறார்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி. கர்மஜ்ஞாநாநு க்ருஹீதையானபக்தி ஸ்தானத்திலே பகவத்ப்ரசாதமாய் அனந்தரம் கைங்கரியத்துக்கு பூர்வ க்ஷணவர்த்தியான பக்தியாயிற்றிவரது "ஆழ்வார்ப்ரபன்னரோ? பக்திநிஷ்டரோ? என்றெம்பாரைச் சிலர்கேட்க, "ஆழ்வார் ப்ரபன்னர், பக்தி இவர்க்கு தேஹயாத்ராசேஷம்" என்றருளிச்செய்தார்; என்போல வென்னில்; நாமுமெல்லாம் ப்ரபன்னரா யிருக்கச்செய்தே ஆண்டாறுமாசத்துக்கு ஜீவனந் தேடுகிறாப்போலே, உண்ணுஞ்சோறும் பருகுநீர்த்தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனிறே இவருக்கு.

கூ-ம். பாட்டு - நின்றனர்.

ரு. (நின்றனர்யித்யாதி) ப்ரவ்ருத்தியவனதீனையாகிறது வேணுமாகில் நிவ்ருத்திக்கவன் வேணுமோ?" என்றெம்பாரைக்கேட்க "ஸ்வர்க்கத்திநின்றும்விழுகிற த்ரிசங்குவை சக்திமான் நிற்கச்சொல்ல நிற்கவேண்டிற்றுக் கண்டாயே, அப்படியே நிவ்ருத்திக்குமவன் வேணுங்காண்" என்றருளிச்செய்தார்.

உ-ம். திருவாய்மொழி—வீடுமின்முற்றவும்.

ப்ரவேசம்.

சு. "ஒருவனுக்கு வைஷ்ணவத்வமுண்டு, இல்லையென்னுமிடந்தனக்கே தெரியுங்காண்" என்று ஜீயர்பலகாலு மருளிச்செய்வர்; பிறர் அனர்த்தங்கண்டால் ஐயோ! என்றிருந்தானாகில் "நமக்கு பகவத்சம்பந்தமுண்டு" என்றிருக்கவடுக்கும்; இத்தனையும் பட்டிடுவானுக்கென்றிருந்தானாகில், "நமக்கு பகவத்சம்பந்த மில்லையென்றிருக்க வடுக்கு" மென்று.

எ-ம். பாட்டு - அடங்கெழில்.

எ. (சம்பந்தஜ்ஞானமே வேண்டுவது) என்பதற்கோர் த்ருஷ்டாந்தம், ஒரு வ்யாபாரி, ஸ்ரீ, கர்பிணியான சமயத்திலே அர்த்தார்ஜனம் பண்ண வேணுமென்று போவது; அவளும் பிள்ளைபெற்று, அவனும் பக்வ

ளும் தனக்கும் தம்பஹுவுடைய வ்யாபாரமே யாத்ரையாய், அ... தும்போய் இரவைம் சரக்கு பிடித்துக்கொண்டுவந்து ஒரு பக்... கிலே தக்குமது; அவிருவருக்குமிடம் போராமையாலே அப்பறு... தெய்யவேண்டும்படி விவாதம் ப்ரஸ்துதமான சமயத்திலே, இ... வனை புதிவா மெழுகல்வந்து "இவனுன்பிதா, நீயவன்புத்ரன்" என்றறிவித்தால், பிழுந்தனிக்கு சோகித்து, இருவர் சரக்... பொன்றும், அவன் ரக்ஷகனும் இவன் ரக்ஷ்யமாய் அன்வயித்து விடுமிறே.

௮. (பத்தெழுபிருத்தாந்தம்) ஒரு ராஜபுத்ரன் ஒரு உத்யானத்தைக்கண்... புகவுற்றினால் "உன்தமப்பனதுகாண்" என்னவே நினைத்தபடிபு... குப் பரிமாறலாமிறே.

௯-ம். பாட்டு - ஓடுங்கவவன்கண்.

௯. (ப்ராப்திகைப்புகுந்தநாய தெட்டோதோ என்று விரல் முடக்கியிரு... கும்) பென்றதுக்கு சம்வாதமாகவோனைத்ய மருளிச்செய்... ரர். ஓரயனத்தினன்று குன்றத்துச் சியர், எம்பெருமானார் ஸ்ரீப... தத்திலேபுக அவருடைய சிறுபெயனைச்சொல்லி "சிங்கப்பிரா... இன்றபனங்கிடாய்" என்ன, திருவுள்ளத்தி லோடுகிற தின்... தென் றறியாமையாலே அவர் பேசாதிருக்க "இத்தேஹசமன... நரத்திலே ப்ராப்தி கண்ணழிவற்றபின்பு நடுவு விரோதியாய்... செல்லுகிறநாளிலே ஓராண்டு கழியப்பெற்றவிது, உனக்கொன்... யிருந்ததில்லையோ! என்றருளிச்செய்தார்.

௧௦. எம்பார் ஒருருவிலே "பின்னு மாக்கை விடும்பொழு தெண்ணே" ெ... ன்று, இங்ஙனே காரணமானது கழிந்தபோதே கார்யமுந் த... னைடையே கழிந்ததேயன்றே! ப்ராப்தியு மினிக்கைப்புகுந்த... யன்றே! இனி சிந்தாவிஷயமுண்டோ?" என்றருளிச்செய்தா...

௧௦-ம். பாட்டு - எண்பெருக்கன்னலத்து.

௧௧. இப்பாட்டாலே திருமந்திரத்தை சார்த்தமாக வருளிச் செய்கிற... ஆழ்வானிப்பாட்டளவும் வரப்பணித்து இப்பாட்டளவிலே வந்... வாறே "இத்தையுந்தம்மாசார்யர்கள் பக்கலிலே கேட்டுக்கொ... ள்ளுங்கோள்" என்ன, பட்டரும், சிராமப்பிள்ளையு மெழுந்தி... ந்து போகப் புக்கவாறே அவர்களை அழைத்து "இன்னபோ தி... ளிருட்டார், இன்னார் போவார், யென்று தெரியாது இருந்... கேளுங்கோள்" என்று திருமந்திரத்தை யுபதேசித்து, இப்ப... ட்டை நிர்வஹித்து "இப்பாட்டை யிதுக்கர்த்தமாக நினைத்திரு... கோள். "என்று பணித்தான்.

௩-ம். திருவாய்மொழி—பத்துடைஅடியவர்.

ப்ரவேஸம்.

கஉ. (அரியனெளியனுகப் பெற்றோமே.) என்று ஆஸ்ரயிக்கலாம்படி யிரண்டுக்கும் பொதுவாயிறே யிருப்பது; என்பதற்கு "சர்வேஸ்வரனரியனென்றால் சம்சாரத்தில் ஆள்பற்றாதென்று அவனெளிமையை உபபாதித்துக்கொண்டு போந்தோம், அதுதானே அவர்களுக்கு "இத்தனை யெளியனோ" என்று விடுகைக் குடலாயிற்று, அவ்வெளிமைதானே ஆதரிக்கைக் குடலாயிற்ற துமக்கொருவருக்குமேயிறே" என்று எம்பாரைப்பார்த்து உடையவர் அருளிச்செய்தருளினாராம்.

க-ம். பாட்டு - பத்துடையடியவர்.

கங. (மத்துறு கடைவெண்ணெ) "கடையா நிற்கச்செய்தே பசியரா யிருக்குமவர்கள் சோருசமைப்பப்பற்றாமல் வெந்தது கொத்தையாக வாயிலிடுமாப்போலே, கடையப்பற்றாமல் நடுவே யள்ளி யமுதுசெய்யும்படியை சொல்லுகிறது" "என்று பிள்ளான்பணிக்கும்படி.

அ-ம். பாட்டு - நாளுநின்றடும்.

கச. (நந் திருவுடை யடிகள் தம்) "ஸர்வேஸ்வரனை யாஸ்ரயித்தானாகில் அவன் பலப்ரதனாகிறான், பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிறதென்" என்று நஞ்சீயர்பட்டரைக் கேட்க "'நாளுநந் திருவுடையடிகள் தந்நலங்கழல் வணங்கி' என்று, அவள்முன்னாகவாஸ்ரயிக்கவேணுமென்னா நின்றது கண்டீரோ" என்றருளிச்செய்து "அவனை யாஸ்ரயிக்குமிடத்தில் இவன் குற்றம் பாராதே தன்னிழலிலே இவனைவைத்து அவன் பக்கல் முகம்பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கு மவள்முன்னாகப் பற்றவேணும்."

சு-ம். திருவாய்மொழி—அஞ்சிறைய.

ப்ரவேசம்.

கரு. (காமினீ வாக்யத்துக்கு ப்ரசங்கமென்) என்கிற சங்கையைப் பரிஹரிக்க வேணுமென்று திருவுள்ளமாய் ஓரைதிஹ்யத்தை யருளிச்செய்கிறார். முற்காலத்திலே அல்பம் விவக்ஷிதனா யிருப்பானொருவன் "வீதராகரா யிருப்பார் பரிக்ரஹித்துப் போருகிறதொன்றாயிருந்தது, தத்வபரமாக வடுக்கும்" என்றித் திருவாய்மொழியளவும்வர வதிகரித்து, இத்திருவாய் மொழியளவிலே வந்தவாறே "இது காமுகவாக்கியமாயிருந்ததீ" என்று கைவிட்டுப் போனானும்; "நிதித்யாசிதவ்ய:" என்று விதிக்கிற பகவத்காமமென்றறிந்திலன் பாக்யஹானியாலே."

உ-ம். பாட்டு - என்செய்ய.

கசு. (இவளுல் பரிஹாரய மென்று மதுக்கும் அவளுல் பரிஹார்யமென்று மதுக்கு வைதிஹ்யம்) திருக்கோட்டியூரிலே தெற்காழ்வான் கோளரியாழ்வானுக்கு தீர்த்தத்துறையிலே சொன்னவார்த்தை “ஒரு முழுக்காலும் இரண்டு முழுக்காலும் போகாதுகாண் - தெற்காழ்வார் கையிற் திருவாழியாலே விளையை யறுத்துக்கொண்டு போலைத்தனையொழிய, ஒன்றிரண்டு முழுக்கால் போகாதுகாண் நான் பண்ணினபாபம்.”

ச-ம். பாட்டு - எங்நீர்மை.

கஎ. (ப்ராசங்கிகமாக வைதிஹ்யம்) பட்டரை யொருதமிழன் “கேட்டிரங்கியென்னுதே கண்டிரங்கி என்னைப்பெறுமோ” என்ன; “அணைத்தகை நெகிழ்த்தவளவிலே வெளுத்தபடிக் கண்டால் பிரியத்தகாதென் றிருக்கவேண்டாவோ; “இப்படி கூடுமோ” என்னில் “புல்லியித் யாதி, காதலர் தொடுவுழியித்யாதி, உனக்கித்தமிழ்ப் போகாதோ” என்றார்.

ரு-ம். பாட்டு - நல்கித்தான்.

கஅ. (அருளாயே) திரியக்கை “அருளாய்”என்கிறதே தென்ன “நம்பியேறு திருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்” என்று பட்டருக்கு விண்ணப்பஞ்செய்ய துணுக்கென் றெழுந்திருந்து “அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு, திருநாட்டுக் கெழுந்தருளினுரென்ன வேணுங்காண்” என்றருளிச்செய்தார்.

அ-ம். பாட்டு - நீயலேயே.

ககூ. (வாயலகி லின்னடி சில்வைப்பாரை நாடாய்) என்றப்ரசங்கத்திலே சம்வாதம். பெரிய திருமலை நம்பி தம்முடைய அந்திமதசையிலே தமக்கொரு வெண்ணெக்காடும் பிள்ளையாயிற்று திருவாராதனம், அவர் திருமுன்பில் திருத்திரையை வாங்கச்சொல்லி “சாயலொடுமணிமாமைதளர்ந்தே நானினி யுனது வாயலகி லின்னடி சில் வைப்பாரை நாடாயே” என்றாராம்.

ரு-ம். திருவாய்மொழி—வளவேழலகின்.

ரு-ம். பாட்டு - மானேனோக்கி.

உ0. (அமணன் றலையோடே) என்னுமாப்போலே பெருமாள் செய்தத்தையு மவன்றலையி லேறிட்டுச் சொல்லுதலென்றபடி (அமணன்றலையோடே) அதாவது, ஒருகள்ளன் ஒரு ப்ராம்ஹண க்ருஹத்திலே கன்னமிட, அது ஈரச்சுவ ராகையாலே, யிருத்திக்கொண்டு அவன்மரிக்க, அவ்வளவில், அவன் பந்துக்கள், வந்து ப்ராமஹணனை “பழிதரவேணும்” என்ன இரண்டு திறத்தாரும், ராஜாவின் பா

டேபோக, அந்தராஜாவும், அவிவேகியாய் மூர்க்கனுமாகையாலே "ப்ராமஹணு நீயிரச்சுவரை வைக்கையாலே யன்றோ அவன்மரித்தான், ஆகையாலே நீ பழிகொடுக்கவேணும்" என்ன, அவன் "எனக்குத் தெரியாது சுவர்வைத்தக் கூலியாளைக் கேழ்க்கவேணும்" என்ன, அவனை அழைத்து "நீயன்றோ ஈரச்சுவர்வைத்தாய் நீ பழிகொடுக்கவேணும்" என்ன, அவனும் "தண்ணீர் விடுகிறவன் போரவிட்டான், என்னுற் செய்யலாவதென்" என்ன, அவனை அழைத்துக் கேட்க, அவனும் "குசவன் பெரும்பானையைத்தந்தான், அதிஞலே நீரேரிற்று" என்ன, அவனை அழைத்துகேட்க, அவனும் "என்னுல் வந்ததன்று ஒருவேஸ்யை போகவரத்திரிந்தாள் அவளைப்பார்க்கிற பராக்கிலே பானைபருத்தது" என்ன, அவளை அழைத்துக்கேட்க, அவளும் "என்னுலன்று வண்ணுன் புடைவை தாராமையாலே போகவரத் திரிந்தேன்" என்ன, அவனை அழைத்துக்கேட்க, அவனும் "என்னுலன்று துறையில் கல்லிலே யோரமணன் வந்திருந்தான் அவன் போகவிட்டு தப்பவேண்டிற்று" என்ன, அந்த வமணனை தேடி பிடித்துக்கொண்டுவந்து "நீயன்றோ யித்தனையுஞ் செய்தாய் நீ பழிகொடுக்கவேணும்" என்ன அவன் மௌனியாகையாலே பேசாதிருக்க "உண்மைக் குத்தரமில்லை யென்றிருக்கிருன் இவனே யெல்லாஞ் செய்தான்" என்று ராஜா அவன் தலையரிந்தான். இக்கதையை அனுசந்திப்பது.

கூ-ம். திருவாய்மொழி—பரிவதில்.

கூ-ம். பாட்டு - அமுதமமரர்.

உக. (அமுதிலுமாற்றவினியன்) இவர்கள் இவன்வாசியறியாமல் நிரதிசய போக்யமான ஆராவமுதைவிட்டு ப்ரயோஜநாந்தரத்தைக்கொண்ட கலுவதேஎன்று தாமருளிச்செய்ததுக்கு சம்வாதமாக ஆசார்ய திவ்ய சூக்தியைக்காட்டுகிருர். நம்பிதிருவழுதிநாடுதாஸர், "இத்தேவஜாதிவெறும் மனாயோ, 'உப்புச்சாறுகி ளருவதெப்போதோ' என்று கவிழ்ந்துபார்த்துக் கிடப்பதே! இவனழகையும் போக்யதையையும்விட்டு" என்பராம்.

எ-ம். திருவாய்மொழி—பிறவித்துயர்.

ச-ம். பாட்டு. மயர்வற.

உஉ. (என்சொல்லியான் விடுவேனே) என்கிறவிடத்திலோனா தீஹ்யம்-அதாவது, ஒருப்ராம்ஹணப்பிள்ளை மாமனுர் க்ருஹத்துக்குப் போக அவன், தரித்திரனுகையாலே இவனையுங் கூட்டிக்கொண்டுபோய்,

கெட்டுப்போதேற்ற யிறைத்துக் காலோய்ந்தவளவில், "விட்டுப் போகைக்கு ஹேதுவாக மாமனாருக் கொருகோபத்தை யுண்டாக்குவாய்" என்று, இறைக்கிற மாமனார்மேலே உமிய; அவனும் "ஒரு குளிர்த்தியிருந்தபடியென்" என்ன; "சுடச்சுடவுமிவானைத் தேடிக்கொள்" என்று இறங்கிப்போனானும், இத்தால் நிரபராதருமிருக்கச்செய்தேயும் ஒருகுற்றத்தைத்தானே யேறிட்டுக்கொண்டுபோனானிறே; அப்படியேதேனுமாகிலும் குற்றத்தையிட்டுப் போகைக்கு இவனிடத்திலே யொருகுறையுண்டானாலன்றோ விடலாவதென்று கருத்து.

௭-ம், பாட்டு - யானொட்டி.

௨௩. (நானொட்டிவந்து) ப்ரதிக்ஞைபண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம் இவடத்திலேயோரை தீஹ்யமருளிச்செய்வர். அதாவது ஒருப்ராம்ஹணன், பரமதுப்தனாயிருப்பானாய், வேறொரு ப்ராம்ஹணன், அவன் க்ருஹத்திலே போஜனார்த்தமாகச்செல்ல, சிலரிருந்து "அவனொருவர்க்கும் அசனமிடான், லுந்தன்காண்" என்ன, "உங்கள் முன்னே அவனகத்திலே எப்படியு முண்டுவருகிறேன்" என்று, தன்மூர்த்தியைக்காட்டி "இத்தனை ப்ரசாதமுண்டாகிலும் ஜீவிக்கலாம்" என்ன, "அவன்தன்னாலாவதில்லை" என்ன, இவனுமிருகட்டிடிக்க, "ஆனால் இலைஇல்லை" என்ன, மடியிலிலையெடுத்துக் காட்டி, "கொண்டுவந்தேன்" என்ன, "கழுத்தறுக்கவருகிறவர் கத்தியும் கையிலேகொண்டு வாராரோ" என்று, பின்னையும் சாரசனமிட்டானுமென்று. இத்தால் "எப்படியுமவன் க்ருஹத்திலே யுண்டு வருகிறேன்" என்று, ப்ரதிக்ஞைபண்ணிவந்தானிறே யென்றபடி.

---

௯ - ம் திருவாய்மொழி—இவையும்.

௬-ம். பாட்டு - மாயன்.

௨௪. (துயக்கன்மயக்கன்) உகவாதார்க்கு ஸம்ஸயவிபர்யங்களைப் பிறப்பிக்கும் யென்கிற விடத்திலே ஓரை தீஹ்யமருளிச்செய்வர். பட்டர் திருவோலக்கத்துக்குப் பலகாலும் ஸாஸ்திரியா யிருப்பானொரு ப்ராமஹணன் சென்றுடி யிருப்பானாய் அவனைக்கண்டால் பட்டரும் "வந்தாயோ போனாயோ" என்று சாமான்னியேனவ்யவஹரித்தருளிச்செய்வர்; ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பலகாலும்சேவிக்க யெழுந்தருளுவர், அவரைக்கண்டால் மிகவும் க்ருபைபண்ணி ஆதரித்துக்கொண்டெழுந்தருளி யிருப்பர்; இத்தை பலகாலுங் கண்டிருப்பாரொருவர் பட்டரைவந்து சேவித்து, "சுவாமி தேவரீர் திருவோலக்கத்துக்கு வருகிற ஸாஸ்திரி, ப்ரசிந்தனாயிருக்கி

றவன், அவன்வந்தால் சாமான்னியமாக வ்யவஹரித்தருளுகிறது; ஒருசாது ஸ்ரீவைஷ்ணவர் வந்தாரென்றால், அவனைமிகவும் ப்ரதிபத்திபண்ணி யருளுகிறது; இிரண்டையும் எனக்கு அருளிச்செய்யவேணும்" என்ன, "ஆனால் அவர்களிரண்டுபேரு மெப்போதும்போலே நாளையும் வருவர்கள், அப்போது நீயுமெப்போதும் போலே பார்த்திரு, இரண்டுஞ்சொல்லுகிறோம்" என்ன, அவருமப்படியே பார்த்திருக்க, மற்றைநாள் வெடிவோறே அந்த ப்ராமணன் ப்ரதமம்வந்து சேவிக்க, அவனை யெப்போதும்போலே வினவியருளி, "நிராரைத்தான் பரதத்வமென்று நினைத்திருக்கிறது" என்ன, "சிறிது ப்ரமாணங்கள் ப்ரம்ஹாவை பரதத்வமென்று சொல்லுகிறது, சிறிது ப்ரமாணங்கள் விஷ்ணுவை பரதத்வமென்று சொல்லுகிறது, சிறிது ப்ரமாணங்கள் ருத்திரனே பரதத்வமென்று சொல்லுகிறது; ஆகையினாலே நம்மாலே நிச்சியிக்கப்போமோ" என்ன, "நல்லது" என்றிருந்து, அவன் போனவாறே ஸ்ரீவைஷ்ணவ ரெழுந்தருளிசேவிக்க, அவனையுங் க்ருபைசெய்தருளி, "தேவரீர் ஆரைத்தான் பரதத்வமென்றிருப்பீர்" என்ன, "தேவரீர், ஸ்ரீய:பதி நாராயணனே பரதத்வம் என் றருளிச்செய்யுமே, அதொழிய அடியேன் வேறொன்றறியேன்" என்ன, "இன்னமுமுமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பதேது" என்ன, "'எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம்' என்று ப்ரசாதித்தருளுமே, அத்தையே தஞ்சமாக நினைத்திருப்பன்" என்ன, திருவுள்ள முகந்து, "அபசாரத்தை க்ஷமித்தருள, திருமாளிகைக் கெழுந்தருள," என்றருளிச்செய்து, பார்த்திருந்தவரைப் பார்த்து, "கண்டீரோ யிருவர்க்கு முண்டான தாரதம்மியம், ஆகையாலே, இவரை வணங்கவோ! அவனை வணங்கவோ, இப்படியன்றோ ஸ்வரூப ஸ்திதி யிருந்தது" என்றருளிச்செய்ய, அவரும் க்ருதார்த்தராய் போனாரென்று, "அணியன்" என்றத்தோடே சேர வருளிச்செய்கிறார்.

உரு. (என்னினிவேண்டுவம்) அப்ரதிஷேதமே பேற்றுக்கு வேண்டுவது, அதுக்குப் புறம்பான யோக்யதா யோக்கியதைகள் கிஞ்சித்கரமென்னு மதுக்கு சம்வாதம். வேல்வெட்டி நம்பியார், நம்பிள்ளையை, "பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில், ப்ராங்முகத்வாதி நியமங்களோடே சரணம்புக்காரா யிருந்தது, இவ்வுபாயமிதர சாதனங்கள்போலே, சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ" என்றுகேட்க்க, "பெருமாள் தமக்கு, 'சமுத்திரம் ராகவோ ராஜாசரணங் கந்துமர்ஹதி' என்றுபதேசித்தான் ஸ்ரீ விபீஷ்ணாழ்வான்; அவன்றான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில், 'கடலிலே ஓரு முழுக்கிட்டு வந்தான்' என்றில்லை ; ஆக இத்தால்

சொல்லிற் ருயிற்றென்னென்னில்; பெருமாள் இக்ஷ்வாகுவம்ஶ்சியராய் ஆசாரப்ரதான ராகையாலே சில நியமங்களோடே சரணம்புக்கார், ராக்ஷசஜாதீயனுகையாலே, அவன் நின்ற நிலையிலே, சரணம்புக்கான்; ஆகையாலே யோக்யனுக்கு அயோக்யதை சம்பாதிக்கவேண்டா, அயோக்யனுக்கு யோக்யதை சம்பாதிக்கவேண்டா; ஆகையாலே சர்வாதிகார மிவ்வுபாயம்" என்றருளிச்செய்தார்.

உ-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—ஊனில்வாழ்.

உ-ம். பாட்டு - ஒத்தார்.

உசு. (அறியாதனவறிவித்து, என்றவிடத்திலே ஞேக்காக ஐதிஹ்யம், இப்பாட்டு ப்ரஸ்துதமான வளவிலே எம்பார்கோஷ்டியிலே "இவ்வாத்மாவுக்கு ப்ரதமகுருவார்" என்று பிறந்ததாய், இருந்தமுதலிகளிற் சிலர் "ஆசார்யனன்றே" என்றார்கள்; சிலர் "'ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயிக்கப்போரு' என்று அழைத்துக்கொண்டுபோய்ச் சேரவிட்ட ஸ்ரீவைஷ்ணவன் ப்ரதமகுரு" என்றார்கள்; "அங்கனன்றுகாண், அவனிவனையழைத்தாலும் இவன் அல்லேன், என்றதபடி 'இசைவித்தென்னை' என்கிறபடியே அகவாயிலே யிருந்திசைவித்த சர்வேஸ்வரன்காண் ப்ரதமகுரு" என்றருளிச்செய்தார்.

சு-ம். திருவாய்மொழி—வைதந்தா.

உ-ம். பாட்டு - சிக்கென.

உஎ. (எங்கும்பக்கனேக்கறியான்) என்கிறவிடத்தில், "பெரிய பிராட்டியார் திருமுலைத் தடத்தினாலே நெருக்கினாலு மவள்முகம் பாரான்" என்றதுக்கு சம்வாதம். இங்கே ஆளவந்தார்க்கு குருகைக்காவலப்ப னருளிச்செய்ததாக வருளிச்செய்யும் வார்த்தை. "அப்பன் ஸ்ரீ பாதத்திலே யொரு ரஹஸ்ய விசேஷமுண்டு" என்று, மணக்கால்நம்பி யருளிச்செய்ய, "அதுகேட்க வேணும்" என்று ஆளவந்தாரு மெழுந்தருள கங்கைகொண்ட சோழபுரத்தேற, அப்பனு மங்கே யொரு குட்டிச்சுவரிலே யோகத்திலே யெழுந்தருளியிருக்க, "இவரை சமாதிபங்கம் பண்ணவொண்ணது" என்று சுவருக்குப் புறம்பே பின்னேநிற்க, அப்பனும் யோகத்திலே யெழுந்தருளி யிருக்கிறவர் திரும்பிப்பார்த்து, "இங்குச் சொட்டைக்குலத்தி லாரேனும் வந்தாருண்டோ" என்று கேட்

டருள "அடியேன்" என்று ஆளவந்தாரு மெழுந்தருளிவந்து கண்டு, "நாங்கள் பின்னே தெரியாதபடிநிற்க இங்கனருளிச் செய்கைக்கு ஹேதுவென்" என்ன, "நானும் தானுமாக அநுபாவியாநின்றால், பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தாலே நெருக்கியணைத்தாலும் அவள் முகங்கூடப்பாராத சர்வேஸ்வரன். என் கழுத்தை யமுக்கி நாலுமூன்றுதர மங்கே யெட்டிப்பார்த்தான்; இப்படி யவன்பார்க்கும்போது சொட்டைக்குடியிலே சிலர்வந்தாருண்டாகவேணும் என்றிருந்தேன்காணும்" என்றருளிச்செய்தார்.

அ-ம் திருவாய்மொழி—அணைவதரவணை.
ப்ரவேஸம்.

உஅ. (நம்மோட்டை யொருசம்பந்தத்தை யுண்டாக்கி) நாமுபதேசித்து, சிஷ்யரூப சம்பந்தத்தை யுண்டாக்கி யென்றபடி. இவ்விடத்திலே பிள்ளைலோகாசார்யர், "'ஆய்க்குடி' என்கிற கிராமத்திலே பெருமாள் பறிகொடுத்தார்" என்று கேட்டுத் தாமும் பறிகொடுத்தார்; அத்தைக்கேட்டருளி பெருமாளத்யந்தம் ப்ரீதராய் பிள்ளைலோகாசார்யனைப்பார்த்து, "உமக்கும் உம்முடைய சம்பந்தி சம்பந்திகளுக்கும் மோக்ஷம் தந்தோம்" என்று திருவுள்ளம் பற்ற, அனந்தரம் பிள்ளைலோகாசார்யர் "யம்யம்ஸ்ப்ருஶதி பாணிப்யாம், யம்யம்பஶ்யதி சக்ஷுஷா ஸ்தாவராண்யபி முச்யந்தே, கிம்புநர் பாந்தவாஜநா:" என்கிற கணக்கிலே தம்முடைய பரமக்ருபையாலே எறும்புமுதலான வற்றை ஸ்பரிஸிப்பது, ஸ்தாவராதிகளைக் கடாக்ஷிப்பது முதலான க்ருபாகார்யமான செயல்களைச் செய்து, எல்லாவற்றுக்கும் சம்பந்தத்தை யுண்டாக்கி யருளினார்; அப்படிப்போலேயென்று கண்டுகொள்வது.

கூ-ம். திருவாய்மொழி—எம்மாவீடு.
உ-ம். பாட்டு-ஈதே.

உகூ. (ஈதே) என்கிற புனருக்திக்குபாவம் "கீழிற்பாட்டிலே யித்யாதி" இவ்விடத்திலே ஶ்ருதிசித்தமான நசிகேதன்கதையை அநுசந்திப்பது. அதாவது வரப்ரதானார்த்தம் அதிகாரி சோதனத்துக்காக "அந்யத்கிமபேக்ஷிதம்" இதி அசக்ருத்பப்ரச்சயம:; நசிகேதாஸ்ச "இதமேவாபேக்ஷிதம், அந்யத்கிமப்யபேக்ஷிதம்ந" இத்யுவாசே திநசிகேத:கதா.

ங0. (கியானக்கைதா) கியானத்தைக் கையாகச்சொன்னதிலே ஐதிஹ்யம், முதலியாண்டான், ஒருகால் திருநாராயண புரத்திலே யெழுந்தருளி யிராநிற்கச்செய்தே, அவருடைய ஸ்ரீபாதத்தி லொரு ஸ்ரீவைஷ்ணவர், கோயிலிலேவந்து, எம்பார்சந்நிதியிலே யிருக்க,

அப்போது எம்பார் “உமக்கு விசேஷசம்பந்தமுண்டோ” என்றந்த ஸ்ரீவைஷ்ணவனைக்கேட்க, அவரும் “தேவரீருடைய சம்பந்தமே சம்பந்தம்” என்று விண்ணப்பஞ்செய்ய அவ்வளவிலே எம்பாரும் “இவராண்டான் ஸ்ரீபாதத்திலவர்” என்றறியாதே இவர்க்கு பஞ்சஸம்ஸ்காரங்களைப்பண்ணி, யிவனைக்கொண்டு கைங்கர்யங்களும் கொண்டெழுந்தருளி யிராநிற்கச்செய்தே ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே யெழுந்தருள, அவ்வளவிலே அந்த ஸ்ரீவைஷ்ணவராண்டானை வந்து சேவிக்க, ஆண்டானு முன்புபோலே இவனைக்கொண்டு, வேண்டும் கைங்கர்யங்களைக்கொள்ள, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே எழுந்தருளி “கணக்கவபசாரப்பட்டேன்” என்றருளிச்செய்ய அப்போ தாண்டானருளிச்செய்தவார்த்தை “ஒரு கிணற்றிலே விழுந்தவனுக் கிரண்டுபேர் கைகொடுத்தால், எடுக்கு மவர்களுக்கு மெளிதாய் யேறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே ; அப்படியேயாகிறது” என்று.

௧௦-ம். திருவாய்மொழி—கிளரொளி.

௮-ம். பாட்டு - வலஞ்செய்து.

௩௧. (வலஞ்செய்து) வலஞ்செய்கை உபாயகோடியிலன்வயியாதோவென்ன; அன்வயியாதென்கைக்கு ஐதிஹ்யம் “பிள்ளைதிரு நறையூரரையரும் பட்டரும் ப்ரதக்ஷிணம் பண்ணுகிற்க பின்னே சேவித்துக்கொண்டுபோனேன் ; அல்லாதார்க்கடுங் குதிரைபோலே வாராநிற்க, இவர்கள் திருக்கோபுரங்களையும் திருமாளிகைகளையும் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வந்தார்கள் ; என்று நஞ்சீயர் அருளிச்செய்வர்.

௩-ம். பத்து.

௨-ம். திருவாய்மொழி—முன்னீர்ஞாலம்.

ப்ரவேசம்.

௩௨. (பெருவிடாய்ப்பட்டவன், சேர்ந்த குளிர்ந்ததண்ணீர் சந்நிஹிதமாயிருக்க அஸ்யம்பிஹிதமானால் துடிக்குமாப்போலே) என்கிறவிடத்திலே ஜீயர் நாயனார்கதையை யருளிச்செய்வர். அதாவது, ஜீயர் நாயனார், ஆழ்வார் ஸ்ரீ கார்யார்த்தமாக கோயிலுக் கெழுந்தருளினாராய் அவ்விடத்திலே விடிவேதுடங்கினால் அஸ்தமிப்பதுக்குள்ளே முடிப்பதான “எழுஞாயிறு படுஞாயிறு” என்கிற வ்யாதிவந்ததாய் அவ்வளவிலே தீர்த்ததாஹமாய் பல்கிட்டி வாய்திறக்கப் போகாமையாலே, “என்வயிற்றைப் பீறிதீர்த்தம் வார்ப்பாரில்லையோ” என்று ஆஸ்யம்பிஹிதமாய் துடித்தாரொன்று பரிச்சேதித்தநுபவிக்க வொண்ணுதொழிய சகல குணங்களும் சாக்ஷாத்கரித்து அநுபவிக்க வொண்ணுதொழிய வென்றபடி.

௩௩. (ஸ்ரீ பரதாழ்வானுடைய நோய்) "நோய்" என்றால் பிறவியைச் சொல்லுமோ வென்னில்; "உபகோசலவித்தையிலே உபகோசலனென்பா னொருவன் நெடுநாளா சார்யஶுஶ்ரூஷணம் பண்ணினவிடத்திலும் ஆசார்யனென்று முபதேசியாமல் யத்ருச்சயா லோரிடத்துக்குப் போவானாக, இந்த உபகோசலனை தன்னுடைய அக்னி ஶுஶ்ரூஷணம் பண்ணிக்கொண்டிருக்கச் சொல்லிப்போக, அவனுமப்படி நோக்கிக்கொண்டிருந்து 'ஆசார்ய னல்லாதார்க்கெல்லாம் க்யானோபதேசம் பண்ணுகிறவன் நமக் குபதேசித்தானில்லையே' என்று துக்கிதனாயிருக்கிற வளவிலே ஆசார்ய பத்னியானவள் 'உபகோசல ப்ரம்ஹசாரின் அப்யவஹாரார்தமாகச்ச' என்றழைக்க, அப்போது 'வ்யாதிபிஃபரிபூர்ணோஸ்மி' என்று சம்சாரத்தை வ்யாதியாகச் சொன்னானிறே" என் றருளிச்செய்வர்.

௩-ம். திருவாய்மொழி—ஒழிவில்காலம்.

ப்ரவேஶம்.

௩௪. (அஹம்சர்வம்கரிஷ்யாமி) ஆதராதிசயத்தாலே பாரிக்கு மதுக்குலௌகிக த்ருஷ்டாந்தமு மருளிச்செய்கிறார். "போஜனபரனாயிருக்குமவனிதி" ஊணத்யாயம் போஜனவிஷய வார்த்தாமாலா; இவ்விடத்திலே ஒரு ப்ராம்ஹணனை, யொருவன் ஶ்ரார்த்தத்துக்குச் சொல்லுவதாகப்போய், அவனை க்ருஹத்தில் காணாமையாலே, அவனுடைய ஸ்திரீயோடே சொல்லிவைத்துப்போனான், அவளும் தன் பர்தாவோடேயேற்கவே சொல்லாமல், போஜனவேளையிலே சொன்னாள்; அவனந்த ஸ்த்ரீயை, ப்ரஹரித்தான்; ஏற்கவேசொல்லாமல் போஜனவேளையிலே சொல்லுகிறாய் இனிமேல் மனோரதிக்க வவசரமெங்கே, புஜிக்க வவசரமெங்கே, என்றானும், அப்படிபோலே என்று நாயனாராய்யங்கார்கதையையு மருளிச்செய்வர்.

௯-ம். பாட்டு – வேகடங்கள்.

௩௫. (கடலுக்குத்தொடுத்தவம்பை) இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிஹாசமருளிச்செய்வர் "பண்டுதலையில் மயிரின்றிக்கே யிருப்பானொருவன் நெற்பரிமாறாநின்றானாய், அங்கே யொருவன்சென்று 'மயிரைப்பேணாதே நீர் தனியேநின்று பரிமாறா நின்றீரென்ன, ஏன்றான் நடந்ததீ!' என்ன; "ஒன்றுமில்லை கண்டுபோக வந்தேன்' என்ன, 'ஆகிலொரு கோட்டையை கொண்டுபோகலாகாதோவென்றெடுத்துவிட, அவனத்தைக்கொண்டு வாராநிற்கச்செய்தே, எதிரே யொருவன்வந்து 'இதெங்கேபெற்றது' என்ன 'உன்றன் மொட்டைத்தலையன் தன்தான்' என்றானாய், அவனத்தைச் சென்

நங்கே 'இன்றுணும்மை வைதுபோகா நின்றாநீ !' என்ன, 'அடா என்னெக்கலேயுங் கொண்டென்லேயும் வைதுபோவந்த' என்று தொடர்ந்து வந்தாளுய், அவன் புரிந்துபார்த்து 'ஏன்றுன் குழங்களேயலேய ஓடிவாராநின்றதே' என்ன, ஒன்று மில்லே, இன்னமொரு கோட்டை கொண்டுபோகச் சொல்லவந்தேன், என்றாளும்; அப்படியே, கடலேமுகங் காட்டுவித்துக் கொள்ளுகைக்காகக் காலேபிடிப்பது கோலேத் தொடுப்பதாகாநிற்க, அவன்வந்து முகங் காட்டினவாறே, 'உனக் கம்புதொடுத்தோம்' என்ன லஜ்ஜித்து, 'உன்விரோதிகளேச்சொல்லு நாமித்தைவிட' என்றாரிறே.

எ-ம். பாட்டு - சுமந்து.

௩௬. (ஸ்ரீபுருஷோத்தம முடையானுக்கு ராஜபுத்ரன் செண்பகப்பூ கொண்டு சாத்தினபடியை நினைப்பது) அதாவது ஸ்ரீபுருஷோத்தமமுடையான் செண்பகமுகந்து சாத்துவர்; சில ராஜபுத்திரர்கள் செண்பகங்கொண்டு சாத்தத்தேடி முன்பே பூவெல்லாம் விற்றுப்போய், ஒரு பூவிருந்தது கடையிலே; அப்பூவுக்குச் செருக்காலே ஒருவர்க்கொருவர் திரவியத்தைப்போர வேற்றி இவர்களிலொருவன் நினைக்கவொண்ணுதபடி திரவியத்தைப் போரயிட்டுக் கொண்டுவந்து சாத்தினன்; அன்றிராஅவன் சுவப்பனங் காண்கிறன்; "நீயிட்டபூவெனக்கு கனத்துச்சுமக்க வொண்கிறதில்லே" என்றருளிச்செய்தார்.

ரு-ம். திருவாய்மொழி—மொய்ம்மா.

ரு-ம். பாட்டு - சாதுசனத்தை.

௩எ. (வீதிகடோருந் துள்ளாதார்) என்கிறவிடத்தில் லௌகிகருடைய நிந்தைதான் பூஷணமென்கிறதுக்கு ஐதிஹ்யம் மிளகாழ்வான், வார்த்தையை நினைப்பது மிளகாழ்வான் "ராஜாக்ராமம் வைக்கிறன்" என்றுகேட்டு அங்கேபோய் "எனக்கு மொருபாகம் தரவேணும்" என்றுகேட்க, ராஜாவும் "உமக்குப் பங்கில்லே" என்றுன்; "அதுவென் எனக்கு வேதஸாஸ்த்ராதிகள் வாராதென்றோ, அத்தை வேணுமாகில் பரிக்ஷித்துக்கொள்ளும்" என்ன, ராஜாவும் "உமக்கொரு குறைகளுமில்லே, நீர் ஆந்தராளிக ராகையாலே யுமக்குப் பங்கில்லே" என்றுன்; அப்போது மிளகாழ்வான், "நம்முடைய நெஞ்சால் வைஷ்ணவத்வ மில்லேயேயாகிலும் பராபிப்ப்ராயத்தாலேயாகிலும் நமக்கு வைஷ்ணவத்வ முண்டாயிற்றே" என்று, புடவை முடிந்தேறீட்டுக் கூத்தாடினுன்; ஆகையால் லௌகிகர்களுடைய வுபேக்ஷதானே பூஷணங்களாய் விடுமிதி பாவ꞉; "உலகர்பழி தூற்றில் துதியாகும், தூற்று தவரிவனா போற்றிலது புன்மையேயாம்; இதிஹ்யுச்சதே; "ந்யாசவித்தைக

நிஷ்டாஞம் வைஷ்ணவாஞம் விஶேஷத: ப்ராக்ருதாபிஷ்டுநிர் நிந்தா நிந்தாஸ்து திரிதீரிதா" என்னக்கடவதிறே.

௬-ம். திருவாய்மொழி—செய்யதாமரை.

அ-ம். பாட்டு - துயரமே.

௩அ. (எம்பெருமானுரித்யாதி) அவதாராந்தரத்திலே ஈடுபட் டிருப்பாரும் ராமாவதாரத்திலேப்ரவணராயிருப்பாரென்னுமதுக்கு ஐதிஹ்யம். எம்பெருமானுர் திருவாராதனம் பண்ணிப் போருவதொருபிள்ளையிறே; இங்ஙனே யிருக்கச்செய்தே, ஒருநாளொரு ஸ்ரீவைஷ்ணவர் சக்ரவர்த்தித் திருமகனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து கொடுத்தாராய் அவனைப்பார்த்து "இந்த 'மாமேகம் ஶரணம்வ்ரஜ"என்று தேவையிடாதா ரெழுந்தருளினுர்" என்றாராம். தேவையிடாதார் அஶ்ரூகவிதான மகுர்வாணஃ.

எ-ம். திருவாய்மொழி—பயிலும்.

உ-ம். பாட்டு - ஆளும்பரமனை.

௩௯. (நான்கு) ப்ரேமயுக்தனை திருவடிக்கு நாலு தோளாகவும் தோற்றுமிறே, அத்தைப் பற்றவாதல் "நான்கு" என்கிற ப்ரஸங்கத்திலே ஐதிஹ்யம். பட்டர் திருக்கோட்டியூரிலே யெழுந்தருளி யிருக்கச் செய்தே அநந்தாழ்வான் கண்டு, "பரமபதத்தில் ஸர்வேஸ்வரன் சதுர்புஜனுயோ? த்விபுஜனுயோ வெழுந்தருளி யிருப்பது"என்ன, "ஏகாயனர் 'த்விபுஜன்' என்று நின்றூர்கள், நம்முடையவர்கள் 'சதுர்புஜன்'என்று நின்றூர்கள்"என்ன,"இரண்டிலும்வழியேது" என்ன, "த்விபுஜனு யிருந்தானுகில் பெரிய பெருமாளைப்போலே யிருக்கிறது, 'சதுர்புஜன்' என்று தோற்றிற்றுகில் பெருமாளைப் போ லிருக்கிறது" என்றருளிச் செய்தார்.

சO. சிலாத்துக்குறிபகவர், பட்டனை, "ஸ்ரீவைகுண்டத்திலே சதுர்புஜனு யிருக்கு மென்னுமிடத்துக்கு ப்ரமாணமுண்டோ" என்ன, "'தமஸ: பரமோதாதாஶங்க சக்ரகதாதர:' என்றுண்டாயிருந்ததே" என்ன, உத்தரமில்லாமையாலே விக்ருதனுக, "ப்ரமாணகதி யிதுவாயிருந்தது பொறுக்கலாகாதோ" என்றருளிச் செய்தார்.

௩-ம். பாட்டு - நாதனை.

சக. (வல்லாரைப்பணியு மவர்கண்டீர்) பாகவத சேஷத்வம் துர்லபமென்னைக்கு ஐதிஹ்யம், "பிள்ளையாத்தான் யென்று போர நல்லனு யிருப்பானொருவன், ஜீயர் ஸ்ரீபாதத்திலேவந்து 'எனக்கோருரு திருவாய்மொழி யருளிச்செய்யவேணும்' என்ன, 'உனக்கு விஶதமாவது பிள்ளையோடே கேட்டாலாயிற்று, அங்கே கேள்' என்ன, 'அவரைத் தெண்டனிடவேணுமே' என்ன, 'அதொன்றுண்டோ,

வேறுமாகிற் செட்கிறாய்' என்று என்னை அழைத்து, 'இவனுக் குட்டாக்காணட்டி, ஒருரு திருவாய்மொழி சொல்லும்' என்ன, இவ்வளவும் வரக்கேட்டவாறே என்னை மிகவு மனுவர்த்திக்கப் புகாவொட்டாதொழிய, ஜீயர்பாடே சென்று 'இவ்வர்த்தத்தி னுடைய சீர்மை அறியாமையாலே முன்பப்படி சொன்னேன் இனி நானனுவர்த்தித்துக் கிசையும்படி யருளிச்செய்யவே ணும்' என்று, ஜீயரையிட்டு நிர்பந்தித் தனுவர்த்தித்தான்" என் றருளிச்செய்வர்.

சஅ. (எம்மையாளுடையார்களே) வீரப்பிள்ளையும் பாலிகை வாளிப்பிள் ளையுமென் றிருவர், ஜீயர் ஸ்ரீபாதத்துக்கே காந்தராய், தங்க ளிலே செறிந்து போந்தார்களாய், தேசாந்தரம் போனவிடத்தே வெறுப்புண்டாய், தங்களில் வார்த்தை சொல்லாதே யிருக்க இவர்களைப்பார்த்து "பிள்ளைகாள் அர்த்தகாமங்கள் த்யாஜ்யமல் லாமையோ! பகவத் விஷய மராட்டுப் பிராட்டாயோ! ஒரு ஸ்ரீவைஷ்வனும் ஸ்ரீவைஷ்ணவனும் தங்களிலே வார்த்தைசொல் லாதே வெருத்திருக்கிறது" என்ன, இருவரு மெழுந்திருந்து தெ ண்டனிட்டு சங்கதராய்ப் போனார்கள்.

ச-ம். பத்து.

௩-ம். திருவாய்மொழி—கோவைவாயாள்.

ரு-ம். பாட்டு-கண்ணி.

சகூ. (ஏலுமாடையுமஃதே) திருவரைக்குத் தகுதியான ஆடையென்னுதல் புருஷோத்தமத்வத்துக்குத் தகுதியான வென்னுதல், ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான், திருப்பரி வட்டங்களை அழகிய தாக வாட்டிக்கொண்டுவந்து எம்பெருமானாருக்குக்காட்ட, போ ரத்ருப்தராய் அவனை பெருமாள் திருவடிகளிலே கைபிடித்துக் கொண்டுபுக்கு "நாயன்றே இவன்திருவரைக் கோம்படிவாட்டின படி திருக்கண்சாத்தி யருளவேணும்" என்றிவற்றைக் காட்டியரு ள, கண்டுகந்தருளி உடையவரை அருள்பாடிட்டருளி "இவனுக் காகராஜகன் நம்திறத்திற்செய்த குற்றம் பொறுத்தோம்" என்று திருவுள்ளமா யருளினர்.

ச-ம். திருவாய்மொழி—

க-ம். பாட்டு-மண்ணையிருந்து.

ப்ரவேஶம்.

சச. (மண்ணையிருந்துழாவி) "இவருக்குக்கிழ்ப்பிறந்த" இத்யாதி வாக்கியத் துக் கொரு இதிஹாசம், ஒரு அம்மையார், தானும் தன்னுடைய

பிள்ளையும், அத்யந்தம்ரிக்தையா யிருக்க, பிள்ளைவித்வானாய் உபயதோமுக கோதானம் பிடித்து, தனம் நிரம்பகொண்டுவர அத்தைக்கண்டு அந்த ப்ரீதியாலே சரீரம் விட்டானென்று.

அ-ம். பாட்டு - திருவுடை.

சரு. (திருவுடை மன்னரைக்காணில்) சத்ருசதரிசனத்தால் ப்ரமித்தாருண்டோவென்கிறதுக்கு சம்வாதம். நாதமுனிகள், ராஜாசாமந்தன் றலையிலே அடியையிட்டு ஆனைக்கழுத்திலே புக்கபடியைக்கண்டு, "சர்வேஸ்வரன் ப்ரம்ஹாதிகள் தலையிலே யடியிட்டு பெரிய திருவடியை மேற்கொள்ளும்படி இதுவாகாதே" என்று மோஹித்தாரென்று ப்ரசித்தமிறே; ராஜா சபரிகரமாக கங்கைகொண்ட சோழபுரத்தேறப் போகச்செய்தே, பெரியமுதலியார் மன்னனார் திருவடிகளிலே சேவித்திருக்கச்செய்தே, பெண்பிள்ளைவந்து, "நம் மகத்திலே ஒருகுரங்கு மிரண்டு வில்லிகளு மொரு பெண்ணுமாக வந்து புகுந்தார்கள்" என்றவாறே, "பெருமாளு மிளையபெருமாளும் பிராட்டியும் ஐந்திரவ்யாகரண பண்டிதனும்" என்று புத்தி பண்ணி பின்றொடர்ந்துபோய் முன்னேபோய் "போகிறார்கள், போகிறார்கள்" என்னக்கேட்டுக் கீழைவாசலிலே சென்றவாறே, "இப்படி போகிறவர்களைக்கண்டி கோளோ" என்று வாசலிலவர்களைக்கேட்க, அவர்கள் "கண்டிலோம்" என்ன, அதுவே ஹேதுவாக திருநாட்டுக் கெழுந்தருளினாரிறே.

கூ-ம். பாட்டு - விரும்பி.

சகூ. (கரும்பெருமேகமித்யாதி,) கறுத்துப்பெருத்து ஸ்ரமஹரமான மேகத்தைக்கண்டவாறே, அவ்வடிவைவுடைய க்ருஷ்ணனென்று பறப்பாரைப்போலேயிருக்க சம்ப்ரமையா னிற்கும், மேகதரிசனத்தில் சிறகெழும்போலே காணும், மேகத்தைக்கண்டவாறே ஒரு பக்ஷபாத முண்டாகக் கடவதிறே, ராஜேந்திர சோழனிலே திருவாய்க்குலத்தாழ்வாரென்று ஒருத்தருண்டு, அவர்வர்ஷாவிலே "பயிர் பார்க்க" என்று புறப்பட்டு மேகதரிசனத்திலே மோஹித்து விழுந்தார்; இவர் விழுந்தத்தைக்கண்டுநின்ற குடிமகனோடிவந்து அவரை யெடுத்துக்கொண்டுவந்து க்ருஹத்திலேவிட்டு, "இவர் ப்ரக்ருதி அறிந்திருந்து மின்னாளிலே இவரை வயல்பார்க்கப் புறப்படவிடுவாருண்டோ" என்றான்.

ரு-ம். திருவாய்மொழி—வீற்றிருந்து.

கூ-ம். பாட்டு-கரியமேனி.

சஎ. (ஸ்தோத்திரம்பண்ண யோக்கியதையில்லை) என்று "உரியசொல்லால்" என்னக்கூடுமோ வென்ன; "தம்மைப்பார்த்தால் கூடாது, அவன

டியாக வந்ததாகையாலே விரோதமில்லை" என்றருளிச்செய்வர், இதுக்கு சம்வாதமாக வவ்விடத்திலோர் ஐதிஹ்ய மருளிச்செய்வர், அதாவது "திருவேங்கட முடையான் சந்நிதியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர், 'திருமங்கையாழ்வார் தேவரீரைப் பாடினரொன்றொருவ்யாஜமாத்ரம், 'அருள்மாரி யரட்டமுக்கி அடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன் கொற்றவேல்பரகாலன் கலியன்சொன்ன' என்று துடங்கி, தம்முடைய வைபவங்களையே திரளச்சொல்லிப் பாடிக்கொண்டார்காணும்' என்ன, 'ஆனாலது கேட்டாயில்லையோ, அவர் நம்மை ஆஸ்ரயிப்பதுக்கு முன்பு தம்மை பாடிக்கொண்டாடினதொன்றில்லையே, நம்மை ஆஶ்ரயித்தபின்பு தம்மைக் கொண்டாடிற்றெல்லாம் நம்முடைய வைபவத்தைச் சொன்னபடிகாண்' என்றருளிச்செய்தான்" என்றருளிச்செய்வர்.

கூ-ம். திருவாய்மொழி—தீர்ப்பாரை.

ப்ரவேஶம்.

சஅ. கீழ்த்திருவாய் மொழியையும் இத்திருவாய் மொழியையும் அநுசந்தித்து, ப்ரீத்ய ப்ரீதிகளினுடைய வுத்கூலதை யிருந்தபடியால் இதுக்கொரு சங்கதிபிடிக்கப் போகாதென்னுமத்தை ஆப்தசம் வாதத்தணதாலே தரிசிப்பிக்கிறார். எம்பார் (மோருள்ளதனையும் சோறேறார். யோ) என்னு மாப்போலேயென்று கூட்டுவது. அதாவது ஒருவன் நாழி அரிசியைக் கொண்டுவந்தொரு பெண்டாட்டி கையிலே "எனக்கித்தைச் சமைத்திடவேணும்" என்று கொடுக்க, அப்படியே யவளும் சமைத்து இலையைப்படுத்திட, இவனு மரிகேயொரு பாத்ரத்திலே மோரைக் கொண்டுவந்திருந்து, மோரை வார்த்துக்கொண்டு, "அம்மையாரோ மோர் விஞ்சிற்று, சோறிடும்" என்றொரு காலிரு காலிங்கனே சொல்லுகையாலே அம்மையாரலுத்து, "நீ கொண்டுவந்த மோர்துலையாததாயிருந்தது, மோருள்ளதனையும் சோறிடுவேனோ" என்றாளாம்.

2-ம். பாட்டு - திசைக்கின்றதே.

சகூ. (இசைப்பின்றி யித்யாதி) பிள்ளையுறங்காவல்லிதாசர் குடிமகனொருவனுக் கையனு ரேறிவலித்து நலிந்தவாறே, "உனக்கு வேண்டுவதென்" என்று கேட்க, எனக்குப் பாலும் பழமுமாக உண்ணவேணும், சாந்தும்புழுகும் பூசவேணும், நல்ல புடவையுடுக்கவேணும், நல்லவாபரணம் பூணவேணும், தண்டேறவேணும், அணுக்கனிடவேணும்" என்ன, அவர்களும் "அப்படியே செய்கிறோம்" என்று பிள்ளை திருமாளிகையிலே வந்து, சாந்து, புழுகு,

ய ஆபரணுதிகளை வாங்கிக்கொண்டுபோய் அவற்றை யலங்கரித்து சாந்தியும் பண்ணிவிட்டுவந்த அவ்விரா, பண்டையிலு மிட்டியாக அவனை வலிக்க, "இதென்" என்றுகேட்க, "பிள்ளை சாத்து கிறவற்றையெல்லாங் கொண்டு வந்திகோள், அவர்க்குச் சாத்து
சடு கிற அனுக்களை இட்டிகோள், நான் அதின்மேலே போகிறேனு; என்னை வையிலிலே கொண்டுபோனிகோள், என்னுடம்பில் நெருப்பை வழியட்டினுப்போலே அவர் சாத்துகிறவற்றை பூசினிகோள், அறிகண்ட மிட்டாப்போலே அவர் சாத்துகிற ஆபரணத்தை பூட்டினிகோள்; நீங்கள் செய்த செயலுக்கு நினைக் கொண் டல்லது போகேன்" என்று வலித்ததாம் ஆகையால் அவற்றுக்குச் சேராது.

ரு - ம். பாட்டு - இவளைப்பெரும்.

ருo. (ப்ரபலேத்யாதி) திருநாமத்தால் திருநாமத்தைச் சொல்லி ன்ற படி இவ்விடத்திலே யோரை திஹ்ய மருளிச்செய்வர். ... பித்தோபஹதனுய்க் கொண்டு சென்று வைத்தியனை பரிஹாரம் கேட்க, அவனும் "ஒரு மண்டலம் க்ஷீரசேவைபண்ணிக்கொண்டு வாரும்" என்று சொல்ல அவனும் கொட்டத்தசலிலே யிருந்து பார்க்குடங்களுக்கெல்லாம் தெண்டனிட்டுக்கொண் டிருந்தாரும். இத்தால் தாத்பர்ய மென்னென்னில்; "திருநாமத்தா லென்று திருநாமத்தைச் சொல்லி பரிஹரியுங்கோ ளென்றபடி" என்றருளிச் செய்வர்.

சசு சூ - ம். பாட்டு - தணியும்.

ருக. (மாயன்றமரடி நீறுகொண்டு) தேவதாந்தரஸ்பரிசத்தால் வந்தவசுத்திக்கு பாகவத பாதரேணு பரிஹாரமென்றதுக்கு ஆப்தசம்வாதம். வண்டரும் சொண்டரும் என்கிறவர்களுக் கனையன் சொன்ன வார்த்தைக்கு பிள்ளையுறங்காவல்லிதாஸர் பரிஹாரம் பண்ணின படியை நினைப்பது. அதாவது அகளங்க நாட்டாழ்வான் இவர்களுக்கு அமணன்பாழியில் சிம்ஹத்தைக் காட்டி, "திருமுற்றம் திருவடி தொழுங்கோள்" என்ன அவர்களும் "மெய்" என்று திருவடி தொழுது அது "அமணன்பாழி" என் றறிந்தவாறே மோஹித்து விழ, பிள்ளையுரங்காவல்லிதாஸர் தம் ஸ்ரீபாத தூளியை அவர்களுக்கிட, உணர்ந்தெழுந்திருந்தார்கள். திருக்கொட்டாரத்தினருகே கைங்கா கட்டிக்கொண் டிருக்கிற நாளிலே ஜீயரித் திருவாய்மொழி யருளிச்செய்கிறுராய் இவ்வளவிலே வந்தவாறே,! "தேர்ப்பாகனுர்க்கு' என்று, நோவுக்கு நிதானஞ் சொன்னுளாகில், அவனை யிட்டு பரிஹரியாதே 'மாயன்றமரடி நீறு கொண்டணிய முயலில்' என்று, இத்தை பரிகாரமாகச் சொல்லு வானென்; நோவுக்கு நிதானமொன்றும், பரிஹார மொன்றுமா

யோவிருப்பது” என்று நாம் கேட்டேன்; “மோர்க்குழம் பிழியாதே மோழிந்துக் கிடந்த சமயத்தில் சுக்கிட்டுதிப் பின்பு மோர்க்குழம்பு கொடுத்து பரிஹரிப்பாரைப்போலே, ‘தேர்ப்பாகனூர்க்கு’ என்றபோதே அவனைக் கொடுவந்து காட்டப் பெருமையாலே முற்பட விவ்வழியாலே மாஸ்வஸிப்பித்துப் பின்னை அவனைக் கொடுவந்து காட்டுவதாகக் காணும்” என் றருளிச்செய்தார்.

அ - ம். பாட்டு. வேதம்வல்லார்களை.

௫௨. இதிற்பாட்டில் ஸ்ரீ வைஷ்ணவர்களை உபாயமாக வாஸ்ரயிக்கச் சொல்லி, இந்த பாட்டில் புருஷகாரமாகக் கொண்டென்ற போது விரோதியாதோமென்ன; இந்த நிஷ்டை துர்லபையென் றருளிச்செய்கிறார். (வேறாக வேத்தியென்று துடங்கி) இதுக்கு தாத்பர்யம் இந்த நிஷ்டை யுண்டானல் சீக்கிரமே பலிக்கும், இது கூடாதே புருஷகாரமாக வானுலும் பற்றுங்கோளென்று. ஸ்ரீவைஷ்ணவர்கள் அபிமானம் சீக்கிரபலப்ரதமென்றதுக் கோதிஹ்யம். திருக்கண்ணமங்கையாண்டான் பத்தராவிகைப் புடையிலே ஸ்வவ்யாபாரத்தைவிட்டுக் கண்வளர்ந்தருளினபோது அவருடைய சிஷ்யர் “நமக்கினி கதியேது” என்ன “நம்முடைய சமீபத்திலே யிரும்” என்றருளிச்செய்ய அவரப்படியே செய்து அவருக்குமுன்னே பரமபதத்துக்குப் போனூர்; திருக்கணணமங்கையாண்டான் பின்பு மூன்ரும்நாளிலே யெழுந்தருளினூர்.

எ-ம். திருவாய்மொழி—சீலமில்லா.

ரு-ம். பாட்டு. அப்பனே.

௫௩. (ஏழையென்) கிடையாததிலும் சாபலம் நடக்கைக்கு சம்வாதமாக வருளிச்செய்கிறார். ஆழ்வான் பணித்த வரதராஜ ஸ்தவத்திலே ஒரு ஸ்லோகத்தைக்கேட்டு எம்பெருமானூர் “இப்பாசுரங் கேட்டால் பெருமா ளிரங்காமையில்லை; ஆழ்வான் உன்முகத்தைக் காட்டிக்காணுய்” என்று பார்த்தருளினூர்.

அ - ம். திருவாய்மொழி—ஏறளும்.

உ-ம். பாட்டு - மணிமாமை.

௫௪. (மடநெஞ்சால் குறைவில்லம்) என்று ப்ரயோகிக்கிறவளுடைய ஹார்த பாவத்தை யாப்த ஸம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறூர். ஜீயரிவ் விடத்திலே யருளிச்செய்வ தொருவார்த்தை யுண்டு “‘பூசுஞ்சாந் தென் நெஞ்சமே’ என்கிறபடியே அன்றப்படியே யித்தை விரும்பினவ ளின்றிப்படியே யுபேக்ஷிக்கையாலே ‘நாயகன் வரவுதாழ்ந்தான்’ என்று அவன்முன்னே சாந்தைப் பரணியோடே யுடைப்

பாளைப்போலே, 'என் னெஞ்செனக்கு வேண்டா' என்கிறாள்'' என்று.

ச - ம். பாட்டு - நிறைவினல்.

ருரு. (வழிபோக்கிலித்யாதி) ஆந்தராளிக பலார்த்தமாக மேல் வரும்பலத்தை ப்ரார்த்தித்த பேருண்டோவென்ன "சாவித்ரி யித்யாதி'' அதாவது சாவித்ரி என்பாளொரு பெண்பிள்ளையை, மாதாபிதாக்கள் ஒருவனுக்குக் "கொடுக்க'' என் றுத்யோகிக்கிற வளவிலே நாரதர்வந்து, "இவனுக் காயிசுக் குறைந்திருக்கும்'' என்று சொல்ல, அவர்களுமத்தைக் கேட்டிருப்க்க, அந்த சாவித்ரியானவள் "எனக்கவனே யாகவேணும், அவனுக் கென்னைக் கொடுங்கோள், அவனுயுஸ்சுக்கு நான் கடவேன்'' என்று சொல்ல, அத்தைக் கேட்டு அவர்களு மவனுக்கவளை, நீர் வார்த்துக்கொடுக்க, சிலநாள் சென்றவாறே, இவனைக் கொண்டுபோக யமபடர் வந்து கொண்டுபோகிறவளவிலே, அவளும் கூடபோய், யமனுடைய வோலக்கத்திலே செல்ல, யமனும் தூதர்களைப்பார்த்து "இவளையேன் கூட்டிக்கொண்டு வந்திகோள்'' என்று வெறுத்து, அந்தசாவித்ரியைப்பார்த்து "உனக்கென்ன வேணும்'' என்ன, பர்தாவேணும்'' என்ன, "அவனை யொழிந்தத்தைக்கேள்'' என்ன, ஆகிலவனுக்கு நானனேகம் பிள்ளைகளைப் பெறவேணும்'' என்று வேண்டிக் கொண்டாளிறே, அவனுமப்படியே அவளபிமதத்தை தலைக்கட்டினன்.

கூ-ம். திருவாய்மொழி நண்ணுதார்.

ப்ரவேசம்.

ருசு. ஆழ்வாருடைய தயாளுதா ப்ரதிபாதகமான வின் நிர்வாஹம் பரம தயாளுவான வாழ்வான் ப்ரக்ருதிக்குச் சேருமென்கைக்காக வோளை திஹ்ய மருளிச்செய்கிறுர். ஆழ்வான்ருன் ஓரிடித்தே வழி போகாநிற்க ஒருசர்ப்பம் தப்பளையைப் பிடித்துக் கூப்பிடாநிற்க, "இதாரறியக் கூப்பிடுகிறது'' என்று மோஹித்தானும்; இவ்வாழ்வான் ப்ரக்ருதிக்குச் சேருமே அவர் நிர்வாஹமும்.

ருஎ. ஆழ்வான் திருக்காவேரியிலே குடமெடுத்து விடுவாரின்றியிலேக்லேசிக்கிற ஒரு ஸ்ரீக்கு தண்ணீர்க்குடமெடுத்துவிட்ட கதையையு மருளிச்செய்வார்.

உ - ம். பாட்டு - சாமற்றும்.

ருஅ. (சாமறும் கெடுமாறும்) சாவிலும் தனமிழந்ததுவே துக்கமா யிருக்குமென்று கருத்து - அதுக்கு ஹேது (அத்தையேயிறே யித்யாதி) தஞ்சமாக நினைத்திருப்பது என்றதற்கு சம்வாதமாக ஐதிஹ்யம்.

ஒருத்தனை "ராஜத்ரோஹி" என்று கையையும் காலையும் தெறிக்க, இவனை விலைவட் புகுந்தவர்கள், "இப்படிப்பட்ட தாகாதே" என்ன "ஆயிரம், ஐநூறென்று சிலகாசுதா' என்றதே யிவ்வளவோடே போயிற்று, உங்களநுக்கிரஹமிறே" என்றாரும்.

௬-ம். பாட்டு - கொண்டாட்டும்.

௫௯. (இதர விஷயங்களினுடைய விந்யாதி) இவரருளிச்செய்த வர்த்தத்துக்கு ஆப்த சம்வாதம் "சிற்றூள் கொண்டாரிந்யாதி" சேர்க்கைப்பல்லி, நிலைபல்லி. சேர்க்கைப்பல்லியானது ஓரிடத்தில் பலகால் சொல்லிக்கொண்டிருக்கும், அப்பல்லிபோலே யிதுபடியன்றே, வென்றிருக்க வொண்ணுதென்று ரொன்றபடி.

அ-ம். பாட்டு - காட்டி.

௬௦. ("மாமேவ யோட்ரபத்யந்தே" "தமேவ சரணம்கஸ்ச")விரோதியைப் போக்கிலு மிவனைப் பற்றவேணும் என்கிறதற்கு சம்வாதம். பிள்ளை திருநறையூரறையர், "ஒருகுருவி பிணைத்தபிணை யொருவராலவிழ்க் வொண்கிறதில்லை; ஒரு சர்வசக்தி கர்மானுகூலமாகப் பிணைத்தபிணையை அவனைக் காற்கட்டாதே இவ் வெலியெலும்பனான சம்சாரியால் அவிழ்த்துக்கொள்ளப்போமோ" என்று பணிப்பர்.

௧௦-ம். திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்.

ப்ரவேசம்.

௬௧. (தம் செல்லாமையாலே யென்றது) ஈஸ்வரன் கைவிட்டிருக்க இவர் திருத்தினால் திருந்துவர்களோ வென்னில்; "உபதேச சுத்தியாலே திருந்துவர்கள்" என்னுமதுக்கோரை திஹ்ய மருளிச்செய்வர் - அதாவது உபரிசர வசுவானவன் ருஷிசாபத்தாலே பாதாளகதனாய் அங்கே பஞ்சராத்ர நிஷ்டாதனாய் வர்த்தியாநிற்க, தத்ரத்யரான வசுரர்கள் "இவன் தேவபக்ஷபாதி" என்று ஆயுதாதிகளாலே நலிய, இவன் பகவத் பக்தனுகையாலே அவை குண்ட சக்திகங்களானமையைக் கண்டு, புரோஹிதனன சுக்ரனைக்கிட்டி "இவனை ஹிம்சிக்கும் வகையேது" என்ன, சுக்ரனும் "இவனுடைய பகவத்பக்தியைக் குலையுங்கோள்" என்ன, அவர்களும், ப்ராம்ஹண வேஷத்தை பரிக்ரஹித்து உபரிசரவசுவைக் கிட்டி, "பாதாளகதனான வாபத்தசையிலும் உபேக்ஷித்திருந்த விஷ்ணு விஷயத்திலே பக்திபண்ணுகிறதென்" என்றுப்போலே விஸ்ரம்பஹானிக்கு டலாகச் சிலவற்றை ஜல்பிக்க, "நம்முடைய பகவத் பக்தியையும் தவிர்க்கும்படி இவர்கள் துர்க்கதராவதே!"

என்று வெறுத்து, "இவர்களுக்கு மிரங்கவேணும்" என்று ஈஸ்வரனை யர்த்திக்க, அவர்க ளனுகூலராய் அப்போதே முக்தரானார்களென்ற ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில் கதையை யருளிச்செய்வர்.

௬௨. எம்பெருமானார் தரிசனஸ்தரி லெத்தனையேனும் கல்வியில்லாத ஸ்ரீப்ராயரும், தேவதாந்தரங்களை அடுப்பிடுகல்லோ பாதியாக நினைத்திருக்கிறது. ஸ்ரீப்ராயமென்றது அசளங்கநாட்டாழ்வான் பார்யையான, த்ரிபுராதேவி வ்ருத்தாந்தத்தை நினைத்து.

எ - ம். பாட்டு - ஓடியோடி.

௬௩. "முமுக்ஷுக்கள் இதரதேவதைகளை பஜியார்கள் "என்னுமதுக்கு ப்ரமாணங்காட்டி, அநுஷ்டானமுங் காட்டுகிறார். (த்வயாபிப்ராப்தமித்யாதி) அம்பரீஷன் பகவத் சமாஸ்ரயணம் பண்ணாநிற்கச்செய்தே, "இவன் சமாதிநின்ற நிலையறியவேணும்" என்று பார்த்து சர்வேஸ்வரன் இந்திரவேஷம் பரிக்ரஹணம் பண்ணி, ஐராவதத்திலேறிவந்து முன்னே நின்று, "உனக்கு வேண்டுவதென்" என்ன "ஒரு புழுவுந் தானுமாய்வந்து நிற்கிறவனார்" என்றான், "சர்வேஸ்வரன் பெரியதிருவடியை மேற்கொண்டு வந்தான்" என்னு மிடமறியானிறே, கொண்டுவந்த வேஷ மிதுவாகையாலே; அவனைப்பார்த்து; நீ யாவனொருவனை ஆஸ்ரயித்து இந்த வைஸ்வர்ய மடையப்பெற்றாய், அப்படிப்பட்டவனைக் காண்நான் ஆஸ்ரயிக்கிறது; இப்படி வழிபோவார்க் கெல்லாம் பச்சையிட்டுத் திரியுமவனல்லேன்காண், இப்போது முகங்காட்டாதே போகவல்லையே பிரானே உன்னைக் கும்பிடுகிறேன், என்றானிறே.

௬௪. பகவத் சமாஸ்ரயணம்பண்ணி க்யாநாதிகராய் இருப்பார் ஒருவர் (திருமழிசைப்பிரான்) இருந்து தம்முடைய வஸ்திரத்தைப் புரையாநின்றாராய், அவ்வளவிலே ருத்திரனும் பார்வதியுமாக போகாநிற்க, அநாதரித் திருந்தாராய், தேவியானவள், "நீர் சர்வாதிகராயிருக்க உம்மைக் கண்டவிடத்தி லிவன் அநாதரித்துக் காலை நீட்டிக்கொண்டிருந்தானே" என்ன, "அவன் பகவத் பக்தன் போலே காண்," என்ன, "அதுதா னிருக்கிறபடி யறிவோம்" என்று இருவரு மிவர்பக்கலிலேவந்து, "நீ யென்; தேவர்களை மனுஷ்யர்கள்கண்டால் அனுவாதித்து வேண்டும் வரங்களும் வேண்டிக்கொள்ளக் கடவர்களா யிருப்பர்கள், நீ நம்மைக் கண்டவிடத்தில் நீட்டினகாலை முடக்குதல், சிலவுபசாரங்களைப் பண்ணுதல், சிலவற்றை வேண்டிக்கொள்ளுதல், செய்யாதே யிருந்தாயீ!" என்ன, "அழகிது அவையெல்லாஞ் செய்யக்கடவேன், மோக்ஷந்தரலாமோ" என்ன, "அது நம்மாலே செய்யலாமதன்று பகவத் சமாஸ்ரயணம்பண்ணி அவன் ப்ரசாதத்தாலே பெறவே

னும்" என்ன "ஆகில், இன்று சாவானை நாளைச் சாவப்பண்ண லாமோ" என்ன, "அதுவும் கர்மாநுகுணமாயிறே யிருப்பது, நம்மால் செய்யப்போகாது" என்ன, "ஆகில் நீசெய்யுமது, இவ்வூசி போனவழியே நூலும் போம்படி யனுக்ரஹித்து நடக்கு மித்தனை" என்ன, தேவனும் கோபத்தாலே நெற்றியிற் கண்ணைக்காட்ட, இவரும் காலிலே அனேகங் கண்ணையுண்டாக்கிக் காட்டினர்.

௬௫. (அடிமைபுகுவது வென்கிறவிடங் விதியாயித்யாதி) மோக்ஷப்ரதத்வம் அவர்களுக்கு மில்லையேயாகிலும் ஸ்வர்காதி புருஷார்த்த ப்ரதத்வமாகிற வதிசயமுண்டே யென்ன; அவர்கள் ஸ்வாஸ்ரிதர்பக்கலருயாருக்களாகையாலே அவ்வழியாலு மவர்களுக் குத்கர்ஷ மில்லையென்னு மத்தை ஆப்த சம்வாதத்தாலே காட்டுகிருர். யயாதிசரித்திரத்தை பட்டர்வாசித்துப் போந்திருக்கச் செய்தே, பிள்ளை விழுப்பறையரும் ஆப்பான் திருவழுந்தூரறையருங் கூட "வேதோபப்ர மஹணுர்த்தமாக ப்ரவ்ருத்தமான ப்ரபந்தங்களிலிதெவ்வர்தத்தை விசதீகரிகிறது" என்று, கேட்க, "க்ஷுத்ர தேவதைகள், தந்தாமையா ஸ்ரயித்து பெற்றாலும் பிறர்பக்கலிலே யோருத்கரஷங் கண்டாவது பொறுக்கமாட்டார்க ளென்றும், சர்வேஸ்வரனே 'பிறர்வாழ்வு நம்வாழ்வு' என்று நினைத்திருப்பா னென்றுஞ் சொல்லி, ஆனபின்பு இதரதேவதைகளாஸ்ரயணீயரன்று, இவனொருவனுமே ஆஸ்ரயணீயனென்னு மர்த்தத்தைச் சொல்லுகிறது" என்றருளிச்செய்தார்.

அ-ம். பாட்டு - புக்கடிமை.

௬௬. (நாராயணனருளே) ருத்தரன் மார்க்கண்டேயனை யழைத்து "நானுமுன்னேபோதி ஸர்வேஸ்வரனை ஆஸ்ரயித்துக் காண் இப்பதம் பெற்றது, இனி ஊண்கொடுத்தல் உபதேசங் கொடுத்தலிறே" அதாவது ஒருவன் க்ருஹத்திலே ஒருபசியாளன்வந்து" எனக்குக்ஷுத்பாதையா யிராநின்றது இத்தை யாற்றவேணும்" என்றால் உண்டானு லிடக்கடவன், இல்லாவிடில் "இன்னாரகத்திலே பசியாளர் கிடவர்கள், ஆகையாலே அங்கேபோ" என்று சொல்லுவர்கள்! அத்தைச் சொல்லுகிறது.

௫-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—கையார்சக்கரம்.

க-ம். பாட்டு - கையார்சக்கரம்.

௬௭. (அறையோவென்றது) ஜயித்தவன் சொல்லும்வார்த்தை. இந்தசப்தம், நிஷேதவாசி. ஸ்வதந்திரனானவனை யிப்படி நிஷேதிப்ப தெத்தைக் கொண்டென்ன "பகவத் க்ருபையைக்கொண்டு" என்ற

வாக்கியத்திலே ஐயகளம்மாள் விஜயநகரத்திலும் மீண்டுபேரரு ளாளன் சந்நிதியிலே தெலுங்கிலே யருளிச்செய்தவார்த்தையை யநுசந்திப்பது.

எ-ம். பாட்டு - அம்மான்.

கூஅ. (யானுர்) "நித்தியசம்சாரிகளுக்கு மிவ்வருகாயிருந்தேன்நான்" என்கிற அர்த்தத்துக்கு சம்வாதமாக அபியுக்தருடைய அபிநயத்தைக்கா ட்டுகிறுர். பிள்ளையமுதனுர், "அம்மானுழிப்பிரான்" என்று மேலேகாட்டி "யானுர்" என்று குறையச் சொல்லிக் காட்டுவர்.

ங-ம். திருவாய்மொழி—மாசறுசோதி.

ரு-ம். பாட்டு - கடியன்.

கூகூ. (குணஹானி யுண்டானுலும் அதுவிடுகைக்குறுப்பன்றிக்கே பற்றுகைக் குறிப்பு) என்னுமதுக்கு சம்வாதம். அநசூயை பிராட்டியைப் பார்த்து "ஸ்ரீகளுக்கு தெய்வம் பர்த்தாவேகாணும்" என்ன, அன ந்தரம்பிராட்டி லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருந்தாள்; "நானிவர் பக்கல் ப்ரவணையாயிருக்கிற விருப்புக்கடி, பெருமாள் பக்கலுண் டான குணத்தாலே, என்றிறே நாட்டார் நினைத்திருப்பது; தைவ யோகத்தாலே அவர்க்கு குணமுண்டான வித்தனை போக்கி, குணஹீனருமாய் விருபருமானுலும் நானவரை விடமாட்டாதே யிருக்கு மிருப்பைகாட்டலா யிற்றிறே, அவரை குணங்களோடு வ்யதிரேகித்து வைக்கப் பெற்றதாகில்" என்ருளிறே.

ரு - ம். திருவாய்மொழி—எங்ஙனேயோ.

க-ம். பாட்டு - எங்ஙனேயோ.

எO. (புத்ரர்கள்) "பகவத்விஷயத்தில வகாஹனங்கொண்ட புத்ரர்கள் ஸ்லா கநீயர்" என்னுமதுக்கு ஐதிஹ்யம். கூரத்தாழ்வார் (ஆழ்வான்திரு த்தமப்பனுர்) ஓரளவிலே நங்கையார் திருவடி சார்ந்தவாறே "இன்னமு மொருவிவாஹம் பண்ணுவோமோ" என்று, விசாரித்து 'இதுதான் க்ரமத்தாலேவந்து ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலை க்கட்டும், இனிதான், 'அனுஶ்ரமிநதிஷ்டேத்' என்று, ஶாஸ்த்ரம் சொல்லாநின்றது; இஶ்ஶாஸ்த்ரார்த்தத்தை யநுஷ்டிப்போமோ! பாகவத பரிசரியையைப் பண்ணுவோமோ" என்று, விமர்ஶியா "அச்சாமான்ய தர்மத்தின்காட்டில் இவ்விசேஷதர்மமே ப்ர பலம்" என்று தவிர்ந்தார்

எ-ம். பாட்டு - நிறைந்தவன்பழி.

எக. (வன்பழி) என்றது வலியபழியை - இங்கு பழியாகச் சொல்லுகிறது, சுவாபதேசத்திலே த்ருஷ்டாத்ருஷ்ட விபாகமறவவன்கை பார்த் திருக்கை யொழிய ஸ்வயெத்னமென்று விவக்ஷித்து, ஸ்வயத்

ளைய் பழியென்னுமதுக்கைதிஹ்யம். ஆண்டாளொருநாள் பட்டரையும் ஸ்ரீராமப்பிள்ளையையும் காட்டி, "இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள், பேசாதேயிருக்கிறதென்" என்ன, "ஆகில், நாளைப் பெருமாள்பாடே போனவாறே வரக்காட்டு" என்ன, அவர்களையுங் கொண்டு திருமுன்பே நிற்கச்செய்தே, பெருமாள் அருள்பாடிட்டு, "ஒன்றுசொல்லுவாய் போலே யிருந்தாயீ!" என்று திருவுள்ளமாக, "'இவர்கள் விவாஹப்ராப்த ரானார்கள்' என்று சொல்லா நின்றார்கள்" என்ன, "நாமேசத்ருஶமான விடத்திலே சம்பந்தித்துத் தருகிறோம்" என்றருளிச்செய்ய, பிற்றைநாள்மன்னியைக் கொண்டுவந்து நீர் வார்த்தார்கள். இத்தால் ப்ரபன்னனுக்கு த்ருஷ்டார்த்தமான ஸ்வயத்தினமும் பழியென்றபோதே, ஸ்வயத்னரூபமான உபாயாந்தரங்கள் பழியென்னுமத்தை சித்தவத்கரித்து.

எ௨. (நீண்ட பொன்மேனியோடும் நிறைந்தென்னுள்ளே நின்றொழிந்தான்) என்றவிக்ரஹ வ்யாப்தி ப்ரஸங்கத்திலே ஐதிஹ்யம். ஒருநாள் ஜீயர் கோவிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக் கண்டு, "ஈஶ்வரனுச்கு ஸ்வரூப வ்யாப்தியேயோ வுள்ளது, விக்ரஹ வ்யாப்தியுமுண்டோ?" என்று கேட்க, "ஸர்வ விஷயமாக ஸ்வரூப வ்யாப்தியே யுள்ளது; உபாசக்விஷயத்தில் அவர்கள் பக்கல நுக்ரஹத்தாலே அவர்கள் ஶுபாஶ்ரயமாக பாவித்த விக்ரஹத்தோடே யெழுந்தருளியிருக்கும்; இனி ஸ்வரூப வ்யாப்திக்கு ப்ரமாணங் கண்டவிடம்—சாமான்ய விஷயமாகிறது, விக்ரஹவ்யாப்திக்குப் ப்ரமாணங் கண்டவிடம்—விசேஷ விஷயமாகிறது" என்று பணித்தானாம்.

---

௬ - ம். திருவாய்மொழி—கடல்ஞாலம்.
க௦-ம். பாட்டு - கோலங்கொள்.

எ௩. (கோலங்கொள்சுவர்க்கம்) என்றது சுகத்தையுடைய சுவர்க்கம் நிலை நில்லாததுமாய், துக்கமிஸ்ரமுமான சுகத்தையுடைத்தாகையாலே, "முகப்பில் தரஶநீயத்தைப்பற்ற" என்றதுக்கு ஆப்தசம்வாதம். "நரகத்தோடொத்திருக்கச்செய்தே வாசலிலே கழஞ்சு செம்மண் பூசியிருக்குமாப்போலேகாண்" என்று ஜீயரருளிச் செய்வர்.

எ - ம். திருவாய்மொழி—நோற்றநோன்பு.
எ-ம். பாட்டு - வந்தருளி.

எச. (வந்தருளி) என்று ஈடுபாடுதோன்ற வருளிச்செய்ததுக்கு சம்வாதம். பட்டர் ஸ்ரீபுஷ்பயாக மணித்தானவாறே நஞ்ஜீயரை பலகாலு மியல் கேட்டருளுவர்; ஒருகோடையிலே திருவீதியிலே நீரை

விட்டு யெழுந்தருளியிருந்து இப்பாட்டை இயல்சொல்லும், என்று ஜீயனா யருளிச்செய்து, தாம் யித்தை யநுசந்தித்திருந்து அனந்தரத்தே தாமு மிப்பாட்டை யியல்சொல்லி, 'யமநியமாதி க்ரமத்தாலே த்யேயவஸ்துவை மநம்பண்ணிப் புறம்புள்ள பராக்கையறுத்தநு சந்திக்கப் புக்காலும் சுக்கான்பரல்போலே யிருக்கக்கடவ நெஞ்சுகள் பதஞ்செய்யும்படி, தார்மீகராயிருப்பா ரிவை சில ஈரச்சொற்களைப் பொகட்டுப்போவதே!' என்றருளிச்செய்தார்; நஞ்ஜீய ரிவ்வார்த்தை யுருத்தோறு மருளிச்செய்வர்'' என்றருளிச்செய்வர்.

எரு. (வந்தருளி) என்கிற தாழ்ந்த ஸ்வரத்தாலே ஈடுபாடு தோற்றுமதுக்கு சம்வாதம். ஆப்பான் திருவழுந் தூரரையர், கையிலே தாளத்தை வாங்கி "வந்தருளி, வந்தருளி'' என்று மேல்போகமாட்டாதே படுவராம்.

அ - ம். திருவாய்மொழி—ஆராவமுதே.

க-ம். பாட்டு - ஆராவமுதே.

எசு. (கடலிலுப்புச்சாறித்யாதி) இந்த திருநாமத்தினுடைய போக்யதை, தேசாந் தரஸ்தராய் பாஷாந்தரஸ்தரா யிருக்குமவர்களையு மீடுபடுத்து மென்கைக்கோளாதிஹ யமருளிச்செய்கிறார். உத்தரபூமியிலே லோகஸாரங்க மஹாமுநிகள் வர்த்தியாநிற்க, இங்குத்தையான் ஒருவனங்கேறச்செல்ல, "பிள்ளாய் தக்ஷிணபூமியில் விசேஷமென்'' என்று கேட்க, "திருவாய்மொழி யென்றொரு ப்ரபந்தமவதரித்து, ஶிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக்கொண்டாடிக் கொடுபோகா நின்றார்கள்'' என்ன, "அதிலே உனக்குப் போவதொரு சந்தைசொல்லிக்காணாய்''என்ன, "'ஆராவமுதே' என்கிற வித்தனையு மெனக்குப்போம்'' என்ன, "நாராயணாதி நாமங்கள் கிடக்க, இங்கனேயு மொருநிர்தேசமுண்டாவதே!'' என்று அத்ருப்தராய், "இச்சொல்லு நடையாடுகிற தேசத்தேறப்போவோம்'' என்று அப்போதேபுறப்பட்டுப் போந்தார்.

கூ - ம். திருவாய்மொழி—மானேய்நோக்கு.

க-ம். பாட்டு - மானேய்நோக்கு.

எஎ. (லக்ஷ்மணாதிகளைப்போலே யவதரியாதே ஸ்தாவரங்களா யிருப்பானேன்) என்ன, அதிலும் "நடையாடி யித்யாதி''. உகந்தருளின நிலங்களிலுள்ள வைபோக்ய மாகைக்கு ஹேது, பகவதபிமத மாகையாலே யென்று விவக்ஷித்து அதுக்கு ஆப்தசம்வாதம். ஜநநாதப் பிரம்ஹராயர், திருமுடிக்குறையிலே யொருமரம் வெட்டப்புக, அத்தை எம்பார்கேட்டு "அல்லாளப்பெருமாளே, ஈஸ்வர விபூதியை அழிக்கப்பார்த்தாயோ'' என்ன, இவர்சொல்லும் வார்த்தைக்

கேட்கைக்காக, "ஈஶ்வர விபூதியல்லாத விடமுண்டோ" என்ன, "அவைபோலன்று காணிவை; சார்வபௌமனுன ராஜாவும் மஹிஷியுமாக முற்றூட்டாகக்கூட நீர்வார்த்து ஆக்கும் சோலைபோலே பெருமாளும் பெரிய பிராட்டியாருங்கூடக் கைதொட்டாக்குமவைகாண்" என்றருளிச்செய்தார்.

---

௧௦ - ம். திருவாய்மொழி—பிறந்தவாறும்.
ப்ரவேஶம்.

எஅ. அவதாரங்களில் பிற்பாடர்க்கும் மநுபாவ்ய மாம்படி சதாசன்னிஹிதமாகையைப்பற்ற "சத்யசங்கல்பனுடைய சங்கல்பம் குலையும்படி" என்றவிடத்திலே "கூரத்தாழ்வான், ஆர்த்தராய் சரணம் புக, பெருமாளு மிரங்கி 'மூன்றுநாளைக்குள்ளே விடைதந்தோம்' என்ன 'ஆழ்வான் திருமதிளுக்குப் புறம்பானுர்' என்று கேட்டு உடையவரோடிச்சென்று, 'ஆழ்வான், நாமிங்கே யிருக்க உமக்குப் பரமபதத்தே போகவேண்டிற்றே' என்ன, 'அடியேன் சம்சாரத்திலடிக் கொதிப்பாலே மறந்தேன்' என்ன, 'ஆகில் நாமும் சரணம், புகுந்தாலின்னஞ் சிலநாள் ஆழ்வானை இங்கே வைக்க விரங்குவர்' என்று திருவாசலளவுஞ் சென்று, 'சத்ய சங்கல்பனுடைய சங்கல்பத்தைக் குலைக்கவேண்டா' என்று, மீண்டருளினுர்" என்று ப்ரசாதிப்பர். அதாவது நானெருவன் தோன்றிப் பெருமாளை இரண்டுவார்த்தை சொல்லுவாராகப் பண்ணலாமோவென் றருளிச்செய்தவது, "ராமோத்விர்ன்னுபிபாஷதே" "ஏதத்வ்ருதம்மஃ" இத்யாதி.

எகூ. (க்ருஷ்ணுவதாரத்திலே போந்தார் ப்ரத்யாசத்தியாலே) இத்தை ஆப்த சம்வாத முகேன விவரிக்கிறுர். "இவ்வாழ்வார்க ளெல்லாரும் க்ருஷ்ணுவதார மென்றவாறே போரமண்டி யிருப்பர்கள், இதுக்கு ஹேதுவென்" என்று பட்டரை நஞ்ஜீயர்கேட்க, "ஒருவனுக்கு துக்கம் சிலநாள் கழிந்தால் பொறுக்கலாம், அணித்தானுலாறியிருக்கப் போகாதிறே; அப்படியே அல்லாத வவதாரங்களைப்போ லன்றிக்கே, சமகால மாகையாலே, 'ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப் பெற்றிலோம், பாவியேன்! பல்லிலேபட்டுத் தெறிப்பதே' என்னு மிழவாலே வயிறெரித்தலேயா யிருக்கும்" என்றருளிச்செய்தார்.

ச-ம். பாட்டு - கள்ளவேடத்தை.

அ௦. (கள்ளவேடத்தைக்கொண்டு) என்கிறதற்கு பௌத்தாவதார கதையை அருளிச்செய்கிறுர். அதாவது "சிலவசுரர்கள் ருத்திரனைநோக்கி

தபஸ்ஸைப்பண்ண, அவன் ப்ரத்யக்ஷமாய் ‘உங்களுக் கெதுவே ணும், இந்த தபஸ்ஸு யெதுக்காகப் பண்ணுகிறிகோள்’ என்று கேட்க்க, ‘எங்களுக் கொருத்தராலும் ஜயிக்கப்படாம லிருக்க மூன்றுபட்டணம் வேணும்’ என்ன, ‘அப்படியே யுண்டாகக் கடவது, அந்த பட்டணங்கள் மூன்று மொன்றோடொன்று கூடாமல் சஞ்சரித்துக்கொண்டு திரியக்கடவது. மூன்று மோரிடத்திலே கூடுகிறபோது உங்களுக்கு மஹத்தான வாபத்துவரும், பேணிக்கொள்ளுங்கோள்’ என்று, சொல்லி போய்விட்டான்; அதுக்குப் பின்பு, மூன்றுபட்டணங்களு முண்டாயிற்று, அவைகள்தான் ஒன்றிருப்புக் கோட்டையாயும், ஒன்று வெள்ளிக் கோட்டையாயும், ஒன்று பொற்கோட்டையாயு மிருந்தது; அந்த பட்டணங்களிலே அசுரர்களிருந்து தேவர்களையு மவர்களுக்கு ஹவிர்பாகங்கொடுக்க யாகாதிகள் பண்ணுகிற ப்ராமஹணர்களையும் பாதிக்கப்புகுந்தார்கள்; யாகாதிகள் நடவாதபடியினாலே தேவர்களுக்கு பலக்ஷயம் பிறந்தது; தேவர்களுக்கந்தவசுரர்களை ஜயிக்கப் போயிற்றதில்லை, பட்டணத்துக்கருகில் கிட்டவும் போயிற்றதில்லை; அதுக்குப்பின்பு ப்ரம்ஹாதிகளான தேவர்களெல்லாரும் கூடிருத்திரனருகேசென்று ‘எங்களுக்கு ஹவிர்பாகமில்லாமல் போயிற்று, யாகம் நடத்துகிற யூர்களிலே அந்தபட்டணத்தோடே சென்றிருந்து விடுகிறார்கள், அவர்களெல்லாரையும் சம்ஹரிக்கிறார்கள் ஆகையாலே அவர்களை சம்ஹரிக்கவேணும்’ என்ன, ‘நச்சுமரமாகிலும் நட்டமரங்களை வெட்டுவாருண்டோ, எனக்குச் செய்யப்போகாது’ என்ன, அதுக்குப் பின்பு திருப்பாற்கடலிலே சென்று ப்ரம்ஹாதிகள் கூப்பிட, அப்போது ஸர்வேஸ்வரன் ப்ரத்தியக்ஷமாய் பெரிய திருவடி நாயனாரிலெழுந்தருளி சேவை ப்ரசாதித்து, ‘ஏன்வந்திகோள்’ என்று கேட்க, அவர்களும் ஏவம் வ்ருத்தாந்தமெல்லா மீஸ்வரனுக்கு விண்ணப்பஞ்செய்து, ‘தேவரவர்களை சம்ஹரிக்கவேணும்’ என்ன, ‘நீங்கள்தானே யெல்லாரும் சம்ஹரிக்கவொண்ணாதோ’ என்ன, ‘அந்தவசுரர்கள் தாங்கள் சிலதர்மங்களை அனுஷ்டிப்பது, சிலயாகங்கள் பண்ணுவது, இப்படி சிலதர்ம ஶ்ரத்தை யுண்டாயிருக்கச் செய்தே, எங்களால் ஜயிக்கப்போகாது என்ன, ‘ஆனாலவர்களை ஜயிக்கிறோம், நீங்கள் ஸ்வஸ்தானங்களிலே போருங்கோள்’ என்று சொல்லிவிட்டு, ஒரு வ்ருத்த பௌத்தனாகக் கொண்டு புறப்பட்டு ஓட்டையு மிடுக்கிக்கொண்டு, கையிலே புல்லையுஞ் சுற்றிக்கொண்டு, அவர்கள் பட்டணங்களிலே சென்று, ‘தர்மநிஷ்டன்’ என்னும்படி சிலவார்த்தைகளைச் சொன்னான்; அவர்களு மிவனை, ‘தர்மநிஷ்டன்’ என்று விஸ்வஸித்து ஒருயாகம்

பண்ணத் துடங்கினார்கள், அப்போதவன்வந்து 'எது உத்தியோகிக்கப் படுகிறீகோள்' என்ன, 'யாகம் பண்ணப்போகிறோம்' என்ன, 'அதுக்கிந்த சமித்துக்க ளேதுக்கு' என்ன 'ஹோமம்பண்ண' என்றார்கள்; அப்போதவன் காஷ்டம் தின்னப் பிறக்கிறதில் புல்லைத்தின்கிற பசுவாய்ப் பிறக்கிறது நல்லதென்றும்; 'ஹவிஸ்ஸுயேதுக்கு'என்று கேட்டான், 'தேவர்களுக்கு ஹவிர்பாகங்கொடுக்க' என்றார்கள், இதுக்கவன், 'ஒருத்த னசலூருக்குப் போகிறவன் கட்டிப்போகிற சோற்றை ஒருத்தன் கையிலே யிட்டுவைத்துத் தான்போனால், அவனுக்கு அவனுண்ட சோறுவந் துதவினாலன்றோ தேவர்களுக்கு கொடுத்த ஹவிஸ்ஸுமுங்களுக் குதவும்' என்றும்; 'இந்த ஆடுகளேதுக்கு' என்று கேட்டான், 'வபையெடுத்து ஹோமம்பண்ண' என்றார்கள், 'ஆனால் ஆட்டுவாணியன் பரமதார்மீகன்' என்றும்; இப்படியே அவர்களை க்ருத்ரி மோக்திகளாலே ப்ரமிப்பிக்க, அவர்களு மவன் வார்த்தையை விஸ்வசித்து யாகம் பண்ணுகிறத்தையும் விட்டு, தர்மஸூத்ரத்தைகளும்போய் ருத்திரனையுந் தூஷிக்கத் துடங்கினார்கள்; அவ்வளவிலந்த வ்ருத்த பௌத்தன் ருத்ரனருகேசென்று 'உன்னை தூஷிக்கிறார் கண்டாயோ' என்றான், அத்தைக் கேட்டு அவனுங் கோபித்துக்கொண்டு அவர்களை ஸம்ஹரிக்க உபக்கிரமித்தான்; அப்போது பூமிதேராயிருந்தது, மஹாமேருதனுஸ்ஸாயிருந்தது, சர்வேஸ்வரன் அம்பாயிருந்தான், ருத்திரன் அந்தவசுரர்களோடே யுத்தம்பண்ணி அந்தவம்பைக்கொண்டு அவர்களை சம்ஹரித்தான்; பின்பு தேவர்களுக்கு ஹவிர்ப்பாக முண்டாயிற்று. இப்படி ஈஸ்வரன் க்ருத்ரிமத்தினாலே ஜயிக்கையினாலே "கள்ள வேடம்" என்கிறார்.

அக. (முன்பவிசித்யாதி) "தஸ்மாத்" என்றதினர்த்த சாமர்த்தியத்தாலே முன் பெடுத்துப்பார்க்க முடியாதொழிந்தது சித்தம். "இவநந்தராத்மாவாய் நிற்கையாலே செய்தான்" என்றத்தால் பலிதமான ருத்ரோச்சிராய பகவததீநத்வத்துக்கை திஹ்யம். "பண்டொரு ராஜாருத்திர தத்வமே பரதத்வம்"என்றெழுதி "எழுத்திட்டுத்தாருங்கோள்" என்ன, அப்படி பலருமெழுதி யெழுத்திடாநிற்கச் செய்தே; ஒருவர் "வாராய் நீ யிவ்வோலை கெடாமே நோக்கிவைத்தாவிறே இவனுடைய பரத்வம் சாதிக்கவாவது, நீநினைக்கிற தேவதைக்குண்டான வுச்ராயங்கள் "சர்வேஸ்வரனாலே" என்று ப்ரமாணங்கள் சொல்லா நின்றன; ஆனபின்பு, இன்று, நீசொல்ல, நானெழுத்திட்டுப் போகிறேன்; நாளையொரு விவக்ஷிதன் தோன்றி "இவனஞ்ஞனாயிருந்தானீ! என்ன கேட்பதில் இன்று நீ நினைத்தத்தைச் செய்துக்கொள்ளமாட்டாயோ" என்றார்.

சூ-ம். பாட்டு - நின்றவாறும்.

அஉ. (இவர் இவ்விஷயத்தில் படுகிறபாடெல்லாம்) இவரீடுபடுவது ஆஶ்ரிதார்த்தமான செயலுக்காகையாலே ப்ரசங்காத் அவனுஶ்ரிதார்த்தமாகசெய்யும் செயலுக்கு ஐதிஹ்யம். வடக்குநின்றும் போரப்பாடவல்லராயிருப்பா ரொருத்தர் "பெருமாளை திருவடி தொழவேணும்" என்றுவர, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் தீர்த்தத்தினன்றிரா, திருமாலையைப் பாடிச்சமைந்து பெருமாளை மத்தகஜங்களை யேத்துமாப்போலே யேத்திவசமாக்கி கணிசங்கொண்டு, "நாயன்றே, தேவர் திருவடிகளுக்குப் போர நல்லானொருத்தனெழுநூற்று காதமாறுண்டு தேவனா 'திருவடி தொழவேணும்' என்று வருகிறது; இவனை யழைத்துக்கொண்டு சம்பாவனை பண்ணியருளவேணும்" என்ன, பெருமாளும் "அப்படியே செய்கிறோம்" என்று திருஉள்ளமாய் அருளப்பாடிட்டு திருப்புன்னைக்கீழ் நின்று அவர்நின்ற விடத்தளவும் செல்ல நாலுகோல் தறை திருக்கைத்தலத்திலே யெழுந்தருளி விண்ணப்பஞ் செய்வார்களை யெல்லாமருளப்பாடிட்டு "வாரிகொள் இவன்வந்த தூரத்துக்கெல்லாம் போருமோ நாமிவனுக்குச் செய்ததரம்" என்று திருவுள்ளமானார்.

அங. (இப்படியேயித்யாதி) அநுகூலரானவனைப்போலே ஸாபராதரான நம்மை அங்கீகரிக்கக்கூடுமோ வென்ன; புருஷகாரபலத்தாலே கூடுமென்னுமதுக்கு ஐதிஹ்யம் சங-வது ஐதிஹ்யத்தைப் பார்ப்பது.

சூ-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—வைகல்.

உ-ம். பாட்டு - காதல்.

அச. (திருவடிகளிலே விழுந்தாலுண்டாப்போலே தாரகமாயிருக்கும்) என்னுமத்துக்கு ஐதிஹ்யம். "மதித்தான் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் ஸ்ரீபாதத்தே தலைப்பட தெண்டனிட்டவன்று எனக்குண்டு பசிகெட்டாப்போலேயிருக்கும்" என்றருளிச்செய்வர் ஜீயர்.

சூ-ம். பாட்டு - போற்றி.

அரு. (ஆர்த்தத்வனி செவிப்படும்படி யுயரப்போற்றி யென்கிறாள்) என்று ஆழ்வார் அருளிச்செய்ததுக்கு சம்வாதம். பிள்ளையமுதனார் திருவிருந்தவனாமார்வனை "இப்பதத்துக்கு பட்டரருளிச் செய்ததென்" என்றுகேட்க, "'தன்னார்த்தியவற்றின் செவியிலே படும்படி யுயரச்சொல்லுகிறாள்', என்றருளிச்செய்தார்" என்ன, "நெய்தல் நிலத்தில் புன்னைபடர்ந்தன்றே கிடப்பது, இங்கனே சொல்லக் கூடுமோ" என்ன, அவன்பட்டர்பாடேவந்து "இங்கனே

பணித்தார்” என்ன, “இவ்வர்த்தத்துக்கு நிர்ணயகம்—இசையாயிற்று ; அதுபோற்றியென்று — உயரச்சொல்லி யிருக்குமோ ! தாழச்சொல்லியிருக்குமோ!” என்றருளிச்செய்தார்.

உ-ம். திருவாய்மொழி—மின்னிடைமடவார்.

க-ம். பாட்டு - மின்னிடைமடவார்.

அரு. (த்வயகூரஸ்திவத்யாதி) அஹங்கார மமகாரங்கள் விஞசகர மென்னு மதுக்கு ஐதிஹ்யம். “மாமகா:பாண்டவாஶ்சைவ” என்கிறவிடம் திற்குச் சிரியாத்தான் சொல்லும்படி “என்னுடையவர்க ளென்றும் பாண்டவர்களென்றும் பிரித்தான், அதிறே விஞசபர்யந்த மாக்கிவிட்டது” என்று.

௩-ம். திருவாய்மொழி—நல்குரவும்.

ப்ரவேஶம்.

அஎ. (இப்படி தாழநின்றவன் ஸர்வேஸ்வரனென்கிறுர் என்று, பிள்ளான் பணிக்கும் என்றருளிச்செய்வர்) அதாகிறது ‘யாவையும் யாவரும் பிழையாமல், பிணக்கி’ என்று கீழே ப்ரஸ்துதமான ஸர்வேஸ்வரத்வத்தை அருளிச்செய்கிருனென்று, “இதிலே யொருவாசி தோற்றபட்ட ரருளிச்செய்வர்” என்று ஜீயரருளிச்செய்வர்.

ச-ம். திருவாய்மொழி—குரவை.

கூ-ம். பாட்டு - கலக்க.

அஅ. (வலக்கையித்யாதி) இவ்விடத்தை பட்டரருளிச் செய்யாநிற்கச் செய்தே கஞ்சனூரில் வண்டுவனைப் பெருமாளிருந்தவர், “‘மால்வண்ணனை மலக்குநாவுடையேன்’ என்னவமையாதோ, ‘வலக்கையாழி யிடக்கைச் சங்கமிவையுடை’ என்கிற விதுக்கு தாத்பர்யமென்” என்ன; “சோளேந்திரசிங்கனை யுளுக்காக்கப் பண்ணுகிறே னென்கிறுர் காண்” என்றருளிச்செய்தார். சோளேந்திரசிங்கனை உளுக்காக்க பண்ணுகிறேனென்றது, அவிக்ருதமான வஸ்துவை விக்ருதமாக பண்ணவல்ல நாவீருடையவ னென்றபடி, உளுக்காக்கவென்றது இருக்கும்படி யென்றபடி ; அதாவது மதித்தோடுகிறவனையை படுத்துக்கொள்ளச்சொன்னல் படுத்துக்கொள்ளும்படி யென்றபடி; சோளேந்திரசிங்கனுவது பெருமாளுடையவானை. “வலக்கையாழி” என்கிறவிடத்தில் ஶங்கசக்ர விஶிஷ்டனுனவாகாரம் சொல்லிற்றொழிய பெருமை சொல்லிற்றில்லையே யென்ன (சர்வாதிகேத்யாதி) (சோளேந்திரசிங்கனை) என்றவாக்யத்தாலே பலிதம்.

ரு-ம். திருவாய்மொழி—துவளில்.

ப்ரவேஶம்.

அகூ. (இவளங்கேபுக்க முடியவமையும்) இங்கே ஸ்ரீநளர்வார்த்தையை நினைப்பது. ஸ்ரீவானரவீரர்கள், "மலையைக்கொண்டு கடலை அணைசெய்கை சம்பாவிதமோ" என்ன; ஸ்ரீநளர் "பெருமாள் காடே வெழுந்தருளுகையும், பிராட்டியை ரக்ஷஸ்ஸபஹரிக்கையும், பெருமாள் சோகிக்கையும் சம்பாவிதமோ; எதாகிலும் வருமவை தப்பாதிறே" என்றார்.

கூ0. (குடிஸ்வபாவமன்றிக் கேதைவகல்பித மாகையாலும் தவிரவொண்ணுதென்னுமத்தை) ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார். (பிராட்டியித்யாதி) "கல்பித மனதிக்ரமணீயம்" என்றதுக்கு சம்வாதம். (ஸ்ரீநளரித்யாதி) "இதுக்கு பெரியஜீயர் காலந்துடங்கி சம்ப்ரதாயமில்லை ஆனாலும் ராமாநுஜம்பிள்ளை அருளிச்செய்வதோ ரர்த்தமுண்டு என்றருளிச்செய்வர், அதாவது சமுத்திரராஜன் தோன்றினவளவிலே "விஶ்வகர்மாவின் மகனான நளன் சேதுபந்தனத்துக் கென்று கல்பிதனாயிருக்கிறான், அவனைக்கொண் டென்பக்கலிலே சேதுபந்தனம்பண்ணிக்கொள்ளும்" என்று சொல்லிப்போனவளவிலே பெருமாள் திருவடிகளிலே நளன்வந்து சேவித்து "சமுத்ரராஜோக்தி சத்தியமோநான் சேதுபந்தனம் பண்ணவல்லேன்" என்றுசொன்ன வார்த்தையை நினைப்பதென்றபடி.

உ-ம். பாட்டு - குமிறும்.

கூக. (தடுமாறுகிற வவஸ்தை) என்றதுக்கு சம்வாதம் - ராஜகோஷ்டியிலே "உகும், இறும்" என்று சிலர் பொருள்சொல்ல விக்ரமசிங்கனென்பா னொருவன் "அங்கனல்ல கன்றைக் கடக்கக் கட்டிவைத்தால் முலைக்கண் கடுத்துப் பசுவலமர்ந்து படுமாப்போலே, உள்ளோடுகிற க்லேசம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற விவளுக் கிதுவார்த்தையோ" என்றான்.

ரு-ம். பாட்டு - குழையும்.

கூஉ. (மழைபெய்தா லொக்கும் கண்ணநீரினொடு) கண்டவனந்தரம் கண்ணநீர் வெள்ளமிடுகிறதற்கு ஐதிஹ்யம். மணக்கால் நம்பிகள் ஆளவந்தாரை பெரியபெருமாள் பக்கலிலே கொண்டுபோய் திருவடிகளைக்காட்டி "உபாய மிதுக்குமேலில்லை, இவ்விஷயத்தை யிப்போதே சாக்ஷாத்கரிக்கவேணும்," என்ன, கண்ட வனந்தரம் கண்ணும் கண்ணநீருமா யிருந்தா ரென்று ப்ரசித்தமிறே.

௭-ம். திருவாய்மொழி—உண்ணுஞ்சோறு.

ப்ரவேசம்.

௯௩. கள்வன் கொல்லிதாயார்க்கேவ்யசனுதி சயமென்னுமத்தை ஆப்த சம்வாத முகேனதரிசிப்பிக்கிறர். ஆளவந்தார் கோஷ்டியிலே "உண்ணுஞ் சோற்றிற் பிராட்டிக்கோ, கள்வன்கொல்லி பிராட்டிக்கோ? அஞ்சவேண்டுவது" என்று கேட்க, "இருவராய்ப்போனவர்களுக்கு வயிறெரிய வேணுமோ, தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெரிய வேண்டுவது" என்றிருந்த முதலிகள் சொல்ல "அங்கனன்று காணுங்கோள் இருவராய் போனவர்க ளாகையாலே இருவர்க்கு மஞ்சவேணும், தனியே போனவளுக் கோருபாய முண்டோ" என்றருளிச்செய்தார்.

௧-ம். பாட்டு - உண்ணுஞ்சோறு.

௯௪. (கண்ணும் கண்ணநீருமா யிருக்கிற விருப்பைக் கண்டுகொண் டிருக்கையே புருஷார்த்தம்) என்னுமத்தை ஆப்த சம்வாதத்தாலே த்ருடீகரிக்கிறர். நஞ்சீயர், "பிள்ளை திருநறையூரறையரோடே மூன்றுரு திருவாய்மொழி கேட்டேன், அதி லெனக்கொரு வார்த்தைகளும் போகாது; ஒரு திருவாய்மொழியை ப்ரஸ்தாவியா அவர் ஶிதிலராய் கண்ணும் கண்ண நீருமாயிருக்கு மிருப்பை நினைத்திருப்பன்" என்றருளிச்செய்வர்.

௯௫. (பகவத்குணநு சந்தான மேதாரகாதிகளா யிருக்கு மதுஸ்வரூப ப்ராப்தம்) என்னு மதுக்கு சம்வாதம். அநந்தாழ்வான் சோழகுலாந்தகனிலேக்ருஷி பண்ணியிருக்கிறனொரு ஸ்ரீ வைஷ்ணவனைக்கண்டு "உம்முடைய ஊரேது" என்று கேட்க, "என்னூர் திருக்கோளூர்" என்ன, "அங்குநின்றும் போந்ததேன்" என்ன, "தேஹயாத்ரா நடவாமே போந்தேன்" என்ன, "அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்க மாட்டிற்றிலேயோ, நிலைநின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயாகாதே" என்றானும்.

௯௬. (போகுமூரன்று) என்கிறதுக்கு சம்வாதம். எம்பெருமானர் தெற்கே யெழுந்தருளாநிற்க, எதிரே வருகிற ளொரு பெண்பிள்ளையைக் கண்டு "எங்கு நின்றும்" என்ன, "திருக்கோளூரில் நின்றும்" என்ன, "அவ்வூரில் புக்கபெண்களும் போகக்கடவரா யிருப்பர்களோ" என்றருளிச் செய்தார்.

௨-ம். பாட்டு - பூவை.

௯௭. (ஸ்ரீயபதியினுடைய திருநாமத்தையே சொல்ல வடைகிற வென் பெண்) ப்ரசங்காதை திஹ்யம். (ஊரும் நாடு மித்யாதி) "இவை தான் திருநாமத்தைச் சொல்லிற்றுன லாகாதோ" என்று பெற்

றிநம்பிள்ளையைக் கேட்க்க "அதுக்கு வ்யபிசாரமுண்டு 'பந்து ஹாதை' என்கிற விடத்தே தட்டுப் பிறக்கும்" என்ன, "அங்கனே யிறே" என்றிசைந்து போனார்.

கூ - ம். பாட்டு - காரியம்.

கூஅ. சிஷ்யர்களை பகவத் சம்பந்தங் கொண்டுத் தேஸ்யதா புத்திபண்ணி கொண்டாடுகிறதுக்கைதிஹ்யம். ஒருநாள் நம்பிள்ளையை, ஜீயர் கோஷ்டியிலேவைத்துப் போரக்கொண்டாடி யருளி, "'தன் சிஷ்யனைத் தான் கொண்டாடாநின்றான்' என்றிராதே கிடிகோள், 'கணபுரங்கை தொழும் பிள்ளையை பிள்ளையென் றெண்ணப் பெறுவரோ' என்று பண்டுசொன்னாறுமுண்டு கிடிகோள்" என்றருளிச்செய்தார்.

கூகூ. அம்முணியாழ்வான் தன் சிஷ்யனைத் தான் தெண்டனிடா நிற்குமாம்; "இதுவென்" என்றுகேட்க "அல்லாத வைஷ்ணவர்களை வ்ருத்தத்தாலே யறியவேணும், இவர்கள் நானறிய வைஷ்ணவர்கள் யென்றாதரிப்பன்" என்றான்.

அ - ம். திருவாய்மொழி—பொன்னுலகு.

க-ம். பாட்டு - பொன்னுலகு.

க00. (தன் சன்னிதியிலு மித்யாதி) தன்னையும் தன்னுடைமையையு மாஸ்ரிதரிட்ட வழக்காக்கி பக்தபராதந்திர னுகையாலே ஆழ்வாருக்கு கொடுக்கலாமென்னுமத்தை ஐதிஹ்ய முகத்தாலே தர்சிப்பிக்கிறார். அருளாளப்பெருமா ளெம்பெருமானுர் ஞேவிலே பிள்ளையுறங்கா வில்லிதாசனைக்கொண்டு ஆழ்வான் புக, "ஆழ்வான் பண்ணின நெஞ்சாறலாறுவது ஆளவந்தார் ஸ்ரீபாதத் தேறப்போனுலிறே" என்றவார்த்தையை நினைப்பது. இதினுலவருக்குக் கருத்து பெரியபெருமாள் சன்னதியிலே தேவரீர் சென்று "திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவேணும்" என்றொருவார்த்தை யருளிச்செய்தால் பெருமாள் கேட்டருளாரோ, அது செய்தருளாமையாலே வந்ததுக்கம் பரமபதத்திலேபோய் ஆளவந்தார்க்கு விண்ணப்பஞ் செய்தாலொழிந்து தீராதென்று. சுவாசார்யரான எம்பெருமானுரைவிட்டு "ஆளவந்தார்" யென்கிறதென் யென்ன; எம்பெருமானு ரிங்கே யெழுந்தருளி யிருக்கையாலே பரமாசார்யரான ஆளவந்தா ரென்கிறார்.

ரு-ம். பாட்டு - ஓடிவந்து.

க0க. (அற்றது பொருந்தும்படி) அற்றமாங்காய் பொருந்தும்படி. தர்மபுத்ராதிகள் வார்த்தை சொன்னுப்போலே சேராத வவனு முங்கள்

வார்த்தைபாலே நம்பக்கலிலே வந்து சேருமென்று இவ்வாக்கியத்துக்கு தாத்பர்யம். அற்றமாங்காய் பொருந்துகையாவது—க்ருஷ்ணனும் தர்மபுத்ராதிகளும் ஒருமாமரத்திலே யொதுங்க, அந்த மாமரத்திலே அர்ஜுனன் மாம்பழத்தை யெய்து விழவிட, அத்தை க்ருஷ்ணன் கண்டு "இதொரு ருஷிக்காஹாரமா யிருக்கும், அவன் சபிக்கப்புகுகிறான்" யென்ன, "ஆனாலது வொட்டும்படியென்" என்ன, "நீங்க ளுங்கள் ஸ்வபாவங்களைச் சொல்லுங்கோள், அது வொட்டும்" என்ன, எல்லாரும் தங்கள் தங்கள் ஸ்வபாவங்களைச் சொல்ல, த்ரௌபதியும் "ஷஷ்டோபி மமரோசதே" என்ன, அந்தமாம்பழமும் க்ரமத்திலே யொட்டிற்றென்ற வார்த்தை.

௯-ம். பாட்டு - என்மின்னு.

௧௰௨. (கிம்புனர் மத்விதோஜநः) என்கிற விடத்துக்குச் சொல்லுவ தொரு வார்த்தை யுண்டிறே; அருளாளப் பெருமா ளெம்பெருமானாருடைய வந்திமதசையிலே "திருவுள்ளத்தி லோடுகிறதென்" என்ன "ஒருபட்சி பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடி யென், என்று கிடந்தேன்" என்றார் யென்று. இதுக்கு கருத்தாகப் பிள்ளை யருளிச்செய்யும் வார்த்தை. "நாம் பண்ணினது சரணாகதி யாகையாலே பலத்தோ டவ்ய பிசாரியாக மாட்டாது. இனி சரண்யன் நீர்மையி லேற்றத்தாலே நமக்கொரு குறையில்லை யென்கிறது" என்று. அதாவது சரணாகதானுகூல்யாதிகளா லன்றிக்கே சரண்யமான கபோத குணாதிக்யத்தாலே பலசித்தியானாப்போலே, நம்முடைய வானுகூல்ய சங்கல்பாதிகளா லன்றிக்கே ஶரண்யகுணாதிக்யத்தாலே பலிக்குமென்று.

௧௦-ம். பாட்டு - வந்திருந்து.

௧௰௩. (உம்முடைய தேவாரமோ!) என்றதுக்கு தாத்பர்யம்; தேவாரமென்றுக்ருஹார்ச்சனையாய்; க்ருஹார்ச்சனை யெப்படி அர்ச்சகனுக்கு பரதந்திரமாயிருக்கும், அப்படி யிவளு மக்குபர தந்திரையன்றே; ஆகையாலே பிராட்டி பரிகரமான விவளை யிப்படி நோவுபடுத்தலாமோ வென்றபடி. "உம்முடைய தேவாரமோ" என்கிற விடத்திலே, விண்ணப்பஞ் செய்வார் தம்முடைய கைவாளையிலே யிருந்த தீர்த்த விக்ரஹத்தை "பாக்கு" யென்கிற புத்தியாலே யெடுத்துத் தம்முடைய திருமுத்தாலே கடித்தவாறே கடினமான படியைக்கண்டு "எம்பெருமான்" என் றறிந்து, மீளத் தம்முடைய திருக்கைச் செம்பில் ஜலத்தாலே யலம்பி, த்திருப்பரிவட்டத்திலேவைத்து, திருவொற்றியாடை சாத்தி, தாளத்தை யெடுத்து ஆழ்வா ரருளிச்செய்த பாட்டிலே யொருபாட்டை யிசைத்து,

மீளவுங் கைவாளையிலே கன்னவளரப்பண்ணி, இப்படிப் பலகாலும் அடைக்காயமுது செய்கிறதைக் கண்டொரு ஸ்ரீவைஷ்ணவர் பொருக்கமாட்டாமல், "இந்த வெம்பெருமானை அடியேனுக்கு ப்ரசாதிக்கவேணும்" என்ன, அவரும் "அங்கீகரித்தருள" என்று கொடுத்தருள, தம்முடைய திருமாளிகையிலே ஶாஸ்த்ரோக்தமானக்ரமத்திலே திருவாராதனம்பண்ணி அமுதுசெய்யப்பண்ண, அவ்வெம்பெருமா னவருடைய ஸ்வப்நத்திலே யெழுந்தருளி "ஆழ்வார் திருவாய்மொழியே தாரகமா யிருக்கிற, விண்ணப்பஞ் செய்வார் கைவாளையிலே யொதிங்கி அவருடைய வமுர்தமயமான திருப்பவளத்தில் ஸ்பரிஶமும் பெற்று, அவர் பாடுகிற வாழ்வாருடைய விசைமாலையையுங் கேட்டு, சுகத்திலே யிருக்கிற வென்னை யென்பாடு படுத்துகிறுய்" என்றருளிச்செய்ய, அவர்போர பயப்பட்டு இவர்கையிலே கொண்டுவந்து கொடுத்தாரென்கிற கதையை அருளிச்செய்வர்.

க0-ம். திருவாய்மொழி—உலகமுண்ட.

க-ம். பாட்டு - உலகமுண்ட.

க0ச. எம்பெருமானுடைய ரக்ஷகத்வ ப்ரதையி னெல்லையை யருளிச் செய்கிருர் (பாதகத்தின் சன்னிதியிலே யித்யாதி) சிறியத்தை பெரியது நலியாதபடி யெல்லாரையும் ரக்ஷிக்கு மவனன்றே வென்றபடி, பாதகத்தின் சன்னிதியிலே பாத்யம் ஜீவிக்கக் கூடுமோ வென்ன; "சுமுகனென்கிற சர்ப்பவிசேஷம் பெரிய திருவடிக் கஞ்சிவந்து சர்வேஶ்வரனை சரணம்புகுர 'இவனை நீரக்ஷி' என்று பெரியதிருவடி கையிலே காட்டிக்கொடுக்க, அவருமிவனை யொரு பாதை வாராதபடி ரக்ஷித்தான் என்று மஹா பாரதோக்தமான சுமுகன் கதையை யுட்கொண் டருளிச்செய்கிருர்.

ச-ம். பாட்டு - ஆவாவென்னுது.

க0ரு. (சதுர்தோபாயமான வீஶ்வரனையொழிய வேறுபாயமில்லை) என்கைக்கு சம்வாதமாக வைதிஹ்யம். நம்பிள்ளை ஜீயரை யொருநாள் "'பஞ்சமோபாயமென்று கொண்டொன் றுண்டு'யென்று சொல்லாநின்ருர்கள், நாட்டிலேயு மங்கனே யிருப்பதொன்றுண்டோ" என்று கேட்டருள "நானறிகிறிலேன்; இனி சதுர்தோ பாயந்தான் பகவானேயாயிருக்க வ்யோமாதீதஞ் சொல்லுவாரைப்போலே 'அவனுக்கு மவ்வருகே யொன்றுண்டு' என்கையிறே, அது நான் கேட்டறியேன்" என்றருளிச்செய்தார் "ஆனல், 'ஆவா' என்கிற பாட்டருளிச்செய்யும்போது, எனக்குத் தனியே யொருசாதனங் கண்டு தரவேணுமென்கிருர்' என்றருளிச்செய்கையாயிருக்குமே"

என்ன; "அதுவோ! அது உன் ப்ரதிபத்தியில் குற்றங்காண்; அதுக் இங்ஙனே காண்பொருள்—நீயுமுளையா யிருக்க நானிங்ஙனே யிழப்பதே யென்கிறார்காண்" என்றருளிச்செய்தார்.

௧0௬. (ப்ரபோ)சதுர்தோபாயம் ஈஸ்வரனென்றார்கீழ்; ஆனால் பிரபத்திகொண்டு கார்யமில்லையே யென்கிற சங்கையை பரிஹரிக்கைக்காக வோதைதிஹ்யம். நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே யாஸ்ரயித்தா னொருவன் "எம்பெருமானே யுபாயமாகில் ப்ரபத்தி கொண்டிங்குச் செய்கிறதொன்றுங் கண்டிலேன்" என்ன ; செவியைப்புதைத்து "நாதமுநிகள் துடங்கி யிவ்வளவும்வர நம்மாசார்யர்கள் பரமரஹஸ்யமாக உபதேசித்து ஓராண்வழியாய்கொண்டு போந்தவித்தை இதின்சீர்மையறியாத உனக்கு மஹாபாபியேனித்தை வெளியிடுவதே!" என்று திருமுடியிலே அடித்துக்கொண்டு திருப்பள்ளியறையிலே புக்கருளினார்.

௧0௭. (ஆவாவென்னாது) என்னதென்னென்ன, ஈஸ்வரனுக்கித்யாதி) ஈஸ்வரப்ரீத்யர்த்தமாக வன்றிக்கே பகவத்சம்பந்த முண்டாம் போதும் "அவா" என்னவேணுமென்று மத்தை யாப்த சம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். நஞ்சீயர் "ஒருவனுக்கு பரானர்த்தமசஹ்யமா யிருந்ததாகில், 'நமக்கு பகவத்சம்பந்த முண்டு' என்ற றுதியிடலாம்; 'அது ப்ராப்தம்' என் றிருந்தானாகில் 'நமக்கு பகவத்சம்பந்தமில்லை' என்று தனக்கே கைவாங்கவமையும்" என் றருளிச்செய்தார்

ஏ - ம். பத்து.

---

௧ - ம். திருவாய்மொழி—உண்ணிலாவிய.

ப்ரவேஸம்.

௧0௮. (அந்தரப்பட்டதென்றது) அநர்த்தப்பட்டதென்றபடி, இத்தை மஹாபாரத சித்தமான வைதிஹ்யத்தாலும் தரிசிப்பிக்கிறார். உதங்கன் க்ருஷ்ணன் பக்கலிலேவந்து "உனக்கிரண்டு திறத்தாரோடும் சம்பந்த மொத்திருக்கச்செய்தே பாண்டவர்களை யழியச்செய்யாதே துர்யோதனாதிகளையழியச்செய்தாய்; இப்படி பார்வுசெய்யப்போமோ" என்றாப்போலேயிருக்க வவன்சொல்ல, க்ருஷ்ணனுமவர்கள் குறைகளையெல்லாஞ் சொல்லி, "அவர்களுக்கு தர்மருசியில்லைகாண்" என்ன "நீபின்னை யவர்களுக்கு தர்மருசி யுண்டாக்கிக்கொடாதொழிவா னென்" என்றானிறே.

எ-ம். பாட்டு - ஒன்றுசொல்லி.

க௦கூ. (நீசெய்தவித்யாதி) மானசாநுபவத்தில் த்ருப்தனாகாதே "காணவேணும்" என்னும்படியான பாபத்தைப் பண்ணினேனென்று கருத்து. சிறுத்தொண்டனளவிலே ருத்திரன்வந்து "பிக்ஷைவேணும்" என்ன, "அப்படிசெய்கிறோம்" என்று சொல்ல, "உன்பிள்ளையை யறுத்து அந்தமாம்சத்தை யிடவேணும்" என்ன, "அப்படியே செய்கிறோம்" என்றான்; அந்த வவசரத்திலே அந்தப்பிள்ளை பள்ளிவாசிக்கிற விடத்திலே சற்று நித்திரைபண்ணி சொப்னங் கண்டு அந்த சொப்னத்தை வீட்டிலேவந்து "அப்பா அப்பா தர்சனங்கண்டேன்" என்றான்; "அதெது" என்று கேட்டான். "என்றலையையறுத் தொருத்தனுக்குக் கொடுக்கக்கண்டேன்"என்றான்; அப்படியே கேட்டிருக்கவும் தாயும் தமப்பனுமாக அந்தப் பிள்ளையை யறுத்து, "முகத்தை நறுக்காமல் கண்டுகொண் டிருக்கலாம்" என்று விசாரித்து அடுப்புக் கிடையிலே பொகட்டுவைத்து மற்ற மாம்சத்தை விருந்திட்டார்கள்; அப்போதந்த ருத்திரன் இவர்கள் மனஸ்ஸை சோதிக்க "அட்டதிருக்கச் சுட்டமுகத்தைக் கொண்டுவா" யென்றான். அத்தையு மிட்டார்கள் யென்றுகதை.

உ - ம். திருவாய்மொழி—கங்துலும்.

ப்ரவேஶம்.

கக௦. ஆழ்வாருடைய வார்த்தியை ப்ரகாசிப்பிக்கிற வித்திருவாய் மொழியினுடைய வர்தத்தை கனாமேலே நிற்கிற அஸ்மதாதிகள் சொன்னால் விரசமா யிருக்குமென்றுமத்தை யாப்தசம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். பட்ட ரித்திருவாய்மொழி யருளிச்செய்யும்போதெல்லாம் "ஆழ்வார்ச் கோடுகிறதசை யறியாதே யவருடைய பாவ வ்ருத்தியு மின்றிக்கே யிருக்கிற நாமென் சொல்லுகிறோம்" என்று திருமுடியிலே கையை வைத்துக்கொண் டிருப்பர்.

ககக. (நெடுமூச்செறிவதென்றது) இவ்வவஸ்தையில் சுயத்தினத்திலி யிழியாதே அவன்கைபார்த்து இருக்குமதுக்கிரண்டுதாஹரண மருளிச்செய்வதாக வடிகொண் டெழுந்திருக்கிறார், (எல்லாவளவிலு மித்யாதி) இதுக்கு சம்வாதம் எக-ம். ஐதிஹ்யம் பார்க்க.

ககஉ. அகளங்க ப்ரம்ஹராயர் அடையவளைந்தான் செய்யாநிற்கச் செய்தே மதிள் போக்குகைக்காக விளையாழ்வா னகத்தை வாங்கப்புக, பட்டரத்தைக் கேட்டருளி "வாரீர்பிள்ளாய் நீர்செய்கிறமதிள் பெருமாளுக்கு ரக்ஷகமென் றிராதே கொள்ளீர்; இங்குகிடக்கிற நாலுகுடியுங்காணும் பெருமாளுக்கு ரக்ஷை; ஆனபின்பு நீர்செய்கிறவையெல்லாம் மழகிது, 'இவையெல்லாம் நாம் செய்கிறோம்'

என்றிராதே 'பெருமாள் செய்விக்கிறார்' என்றிரீர், உமக்கு நல்வழிபோக வுடலாங்காணும்" என்றருளிச்செய்தார்.

ரு-ம். பாட்டு - சிந்திக்கும்.

ககந. சரமதசையில் பிறக்கும் தெளிவுக்கு மஞ்சவேணுமே. தேறினது பயாவஹமென்கைக் காப்தசம்வாதம். (உய்ந்தபிள்ளை டாடும்போது) "கெட்டேன், இவள் 'தேறும்' என்பதே" என்று ஜீயரருளிச் செய்வாராம்.

கூ-ம். பாட்டு - .என்றிருமகள்.

கககச. (விசிஷ்டத்திலித்யாதிவாக்யத்வயத்தாலே) "விசேஷணும்சத்திலே" என்கிற விதுக்காப்த சம்வாதம். அனந்தாழ்வான் தன்பெண்பிள்ளையை "என்திருமகள்" என்று திருநாமம் சாத்தினான். பட்டர் பெருமாளுக்கு "அடியேனை 'ஸ்ரீதனமாக பிராட்டிக்கு வந்தவன்' என்று, திருவுள்ளம்பற்றவும், நானும் 'இவளொங்கள் நாய்ச்சியாருக்கு நல்லர்' என்று அவ்வழியே 'அழகியமணவாளப் பெருமாள்' என்று நினைத்திருக்கவுமாகவேணும்" என்று வேண்டிக்கொண்டார்.

கக-ம். பாட்டு - முகில்வண்ணன்.

கககரு. (அடியடையாதாள் போலிவலனுகி யடைந்தனள்) என்றவிடத்திலே "திருமலையிலும் அண்ணன் சந்நிதியிலே ஸ்ரீபாஷ்யம்கேட்க எழுந்தருளின வளவிலே வழிதப்பி மிறுக்குப்பட்டு தேவரீர் க்ருபையாலே யொருபடி விடைகொண்டேன், என்ன, அண்ணனு முகந்தருளி "அடியடையாதாள் போலிவளனுகி யடைந்தனள்' என்றாழ்வா ரருளிச்செய்தபடியே பெருமாளை சேவிக்க பெற்றீரோ' என்றருளிச்செய்தார்" என்று ப்ரசாதிப்பர்.

ந - ம். திருவாய்மொழி—வெள்ளைச்சுரிசங்கு.

க-ம். பாட்டு-வெள்ளைச்சுரிசங்கு.

கககசா. (வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தி) என்கையாலே சதுர்புஜத்வம்தோற்றுகிற தென்று விவக்ஷித்து அதுக்கு சம்வாதம். நிலாத்துக்குறி பகவர் ப்ரஶ்னத்துக்குபட்டர் பரிஹரித்த வார்த்தையை அருளிச்செய்வ ரொன்றபடி. நகூ-ம். ஐதிஹ்யத்தைப்பார்க்க.

எ-ம். பாட்டு - பேணாயில்.

ககஎ. (தீபோநேத்ராதுரஸ்யே வப்ரதிகூலாஸி மேத்ருடம்) ராவணவதாநந்தரோத்ருஷ்டாந்த பலத்தாலே பிராட்டிக்கு நைர்தோஷ்யந்தோற்றுகிற தென்கைக்கு பரமாசார்ய சம்வாதம். "நேத்ரதோஷத்தாலே வர்தது போக்கி தீபதோஷத்தாலே வந்ததன்று" என்று.

ரு-ம். திருவாய்மொழி—கற்பார்.

ப்ரவேசம்.

கக௮. ஆழ்வா ளொருகால் இத்திருவாய்மொழி யடங்கலும் ராமாவதார விஷயமாக்கி நிர்வஹித்தாலும். அதுக்கடி ஆயிரத்தி லொன்றும் கடலில் குளப்படியும்போலே பெருமாளுடைய குணத்திலேக தேசங்களிறே அல்லாத வவதாரங்கள் எல்லா வற்றிலுமுள்ள தென்று.

௬ - ம். பாட்டு - கேட்பார்கள்.

கககூ. திட்டின சிசுபாலனுக்கு மோக்ஷமுண்டாகையாலே நாமும்திட்டினால் நமக்கும் மோக்ஷமுண்டேயென்ன; "அது புருஷார்த்த மன்று" என்னு மத்தையாப்த சம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். ஆள வந்தார் "சிசுபாலன் பெற்றிலன்காண்" என் றருளிச்செய்வர். "அதுவென்னென்னில் இதுக்கடியாகச்சொல்லலாவ தொருசாதன மிவன்கையி லில்லாமையாலே; நாட்டை நலியாமைக்கு கொற் றவன் வாசலுக்குள்ளே சுழற்றியெறிந்தா னத்தனைகாண்" என் றருளிச்செய்வர்.

கக-ம். பாட்டு - தெளிவுற்று.

க௨0. (தொங்கிற்றே) த்ருடமாயிருந்ததோ—"இப்படி யிருக்கிற வர்ஜுன னுக்கு ப்ராப்திசித்தியாதிருந்த தகர்யப்ரயோஜனத்வமில்லாமை" என்னு மத்தையாப்த சம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். பாரத சமரத்திலே நின்று அர்ஜுனனை நோக்கி "நான் சொன்னவிது உனக்குத் தொங்கிற்றே, எதிரே போந்ததோ" என்ன "ஸ்திதோ ஸ்மி" என்ன, அவன் "ஆனால் நங்காரியஞ் செய்யப்பார்த்ததென்" என்று கேட்க "(கரிஷ்யேவசனம்தவ) தேவரீரோவினவடிமை செய்யக்கடவேன்" என்றானிறே. "அர்ஜுனன் தான் எம்பெரு மானைப் பெற்றானோ யில்லையோ" என்று நம்பிள்ளை ஜீயனைக் கேட்க, "உமக்கதுகொண்டுகார்யமென், இது சொன்னவன் சர்வ சாதாரணனாகில் பகவத்க்தியென்னு மிடம் நிஸ்சிதமாகில் தந்தா முடைய கர்மானுகூலமாகவும் ருச்யனுகூலமாகவும் பெறுகிறார் கள், பெற்றவர்களை யாராய்ந்து பார்த்து அத்தாலேயன்றே நாம் பற்றப்பார்க்கிறது" என் றருளிச்செய்தார்.

கூ - ம். திருவாய்மொழி—பாமரு.

ப்ரவேசம்.

க௨க. இந்தத் திருவாய்மொழியி லோடுகிற வார்த்திப்பேச்சுக்கு நிலமன் றென்னு மத்தையாப்த சம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். "அம் மங்கியம்மாள் 'இத்திருவாய்மொழி பாடக்கேட் டனுபவித்துப்

போருமிதுக்கு மேற்பட இதிலோடுகிற வார்த்திக்கு நம்மால் பா சுரமிட்டுச் சொல்லப்போகாது' என்று பணிக்கும்" என் றருளிச் செய்வர்.

௯-ம். திருவாய்மொழி—என்றைக்கு.

௨-ம். பாட்டு - என்சொல்லி.

௧௨௨. ஸ்ரீகீதைக்கும் திருவாய்மொழிக்கு முண்டான வாசியையாப்த சம் வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். நம்பி திருவழுதிநாடுதாசர், "ஸ்ரீ கீதைபோவா னொருவன் சந்நியாசதஸ்ஸிலேவந்து கண்டால், பின்னை யிவனுக் குழக்கரிசியை கொடுப்பித்து விடுமித்தனைபோக் கி அங்கவர்க ளுள்ளிடங்கொடார்கள்; திருவாய்மொழி யப்யசித் தா னொருவின்னப்பஞ் செய்வான் சென்றால், சர்வேஸ்வரனும் க்ராமத்திலுள்ளாரும் புறப்பட் டெதிர்கொண்டு தங்க ளிருப்பி டத்தை யொழிச்சு அவனுக்குக் கொடுத்தாதரியா நிற்பர்கள்" என்று ப்ரசாதிப்பர்.

௩-ம். பாட்டு - ஆமுதல்வன்

௧௨௩. ஜகத்தையெல்லாம் திருத்தும்போது அதுக்குத்தக்க ஞானமுடைய னாக வேணுமிறே; ஆகையாலே தமக்கு மயர்வரமதிநல மருளின படியை "தற்றேற்றி" என்றதற் கர்த்தமாக வருளிச்செய்கிறார். என் பக்கலிலே தன் ஸ்வரூபாதிகளை தெளியப்பண்ணி யென்னு தல். இங்கே யருளிச்செய்யும் வார்த்தை. "திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன்பின் சோபானத்திலே ஆளவந்தா ரெழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக வெழுந்தருளி நிற்கிறவனைக்கண்டு 'ஆமுதல்வனிவன்' என் றருளிச்செய்தாராம்" என்று.

௪-ம். பாட்டு - அப்பனை.

௧௨௪. (என்னாகியே) என்பக்கலிலே தானாய். இவ்விடத்துக் கெம்பாரருளிச் செய்யும்படி. "தான் பாடினானாகில் நிரவத்யமாய் தலைக்கட்டும், நான் பாடினேனாகிலும் வருந்தி யொருபடிதலைக்கட்டும். என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச் செய்தேயும் என்னோட் டை ஸ்பரிசத்தால் வந்ததோஷம் தட்டாதபடி கவிபாடிதலைக் கட்டினான்" என்று.

௧௦-ம். திருவாய்மொழி—இன்பம்.

ப்ரவேசம்.

௧௨௫. (நினைத்திருக்கும் ஸ்வபாவனாயிருந்தான்) தனக்கு வகுத்தவென்றது தன் ஸ்வரூபத்துக்கு ப்ராப்தமான வென்றபடி. இவ்விடத்திலே

"ஒரு க்ருஹஸ்தனானவன் தேடிக்கொண்டுவந்த பதார்த்தத்தை க்ருஹிணியானவள் அத்தை நன்றாக பாகம்பண்ணி பறிமாறினால் அது தானே யவனுக்கு சந்தோஷ ஹேதுவாகிறாப்போலே" என்றருளிச்செய்வர்.

ரு-ம். பாட்டு - மலரடி.

க௨ச. ஆழ்வார் பக்கலிலே விசேஷகடாக்ஷம் பண்ணுகையாவது. இவனை யிடுவித்துத் திருவாய்மொழியை பாடுவித்துக் கொள்ளுகை. எல்லாருமிருக்க இவரிடத்திலே விசேஷகடாக்ஷம் பண்ணினதுக்கு த்ருஷ்டாந்தம். (பஹூநாமநேக மஹாத்மநாமந்தமவைக்ஷத) முதலிகளெல்லாரு மிருக்கச்செய்தே திருவடிபக்கலிலே விசேஷ கடாக்ஷம் பண்ணினாப்போலே யாயிற்று, பலருமுண்டாயிருக்க விவனை விஷயீகரித்தபடி.

க௨எ. "க்ரிமிகண்டன் விஷ்ணுத்ரோஹி யாகையாலே விஷ்ணு ப்ரதிமைகளை யெடுத்துப்பொகடவிசாரிக்க அவனுக் கிஷ்டரானவர்கள், 'சமந்த்ரகமாக ப்ரதிஷ்டித்த ப்ரதிமைகளை யழியச்செய்யி லுனக்கு மரணம்வரும்' என்ன, அவன், 'ப்ரதிஷ்டித்த ப்ரதிமைகளில் தைவத்தை யுத்வாஸனம்பண்ணி யழியச்செய்வோம்' என் றுபக்ரமித்துத் ததனுகுணமாக 'அத்ருஶ்யாஞ்சன மிட்டுக்கொண்டு உத்வாஸனம் பண்ணு' என்று, ஒரு ப்ராம்ஹணனை நியோகிக்க, அவனும் உகந்தருளின நிலங்களிலேபோய் அத்ருஶ்யாஞ்சன மிட்டு உத்வாஸனம்பண்ண அதடியாகவவனும் கடலிலே யெடுத்துப்பொகடுகிறான்" என்னுமத்தை எம்பெருமானார் திருச்செவி சாற்றியருளி "இத்தேசத்தைவிடாதே நோக்கிக்கொண்டு கிடந்தோம், இவ்விடத்துக்கு மழிவுவரும்படி அசுரவர்க்கம் மேலிடாநின்றது, மேல் செய்யவடுப்பதென்?" என்று பெரியநம்பிக் கறிவிக்க; "நான் பெருமாளுடைய திருவெல்லையிலே யொரு ப்ரதக்ஷிணம் வரும்படியாக உம்முடைய சிஷ்யர்களிலே யொரு வனைப்போர விடுவது" என்ன, "அதுக்காவாரார்" என்ன "என்பின்னே போராநின்றால் 'ஒருவன்பின்னே போகாநின்றேன்' என்று தன்னெஞ்சிற்படாதே, சாயைபோலே யென்னைப் பின் செல்வானொருவனாக வேணும்" என்ன, "அதுக்காவாரார்" என்ன "ஆழ்வானைப் போகவிடலாகாதோ" என்றாராம். பலமுதலிக ளுண்டாயிருக்க ஆழ்வானை ப்ரசாதிதாப்போலே.

அ-ம். பத்து.

ங-ம். திருவாய்மொழி—அங்குமிங்கும்.

கக-ம். பாட்டு - உரையாவெந்நோய்.

கஉஅ. இப்பாட்டருளிச் செய்கிறபோது "நம்பிள்ளை திருநகரி சேவித்தாரோ" என்று ப்ரசங்கமாக "திருவணை சேவித்தவர் திருநகரி சேவியாததில்லை" என் றருளிச்செய்தார். "நம்பிள்ளை திருவணைசேவிக்க வெழுந்தருளினவிடத்திலே திருப்புல்லாணி திருமொழியைப் பரக்க உபந்யசியாநிற்க, அந்தை நஞ்சீயர் கேட்டருளிமீண்டு நம்பிள்ளை தம் ஸ்ரீபாதத்திலே புகுந்தவளவிலே 'பிள்ளாய் நீர் திருவணைக்குப் போன திவ்வளவு மலையெறிந்ததே' என்ன, 'துறையறியாதவ னிழிந்தா லலையெறியாதோ' என் றருளிச்செய்தார்" என்று அஸ்மதா சார்யோக்தம்.

ச-ம். திருவாய்மொழி—வார்கடா.

க-ம். பாட்டு - வார்கடா.

கஉகூ. (கேஶேஷ்வாக்ருஷ்ய விகளத்க்ரீடமவநீதலே)என்றதுக்கு ப்ரயோஜனத்தை யாப்தசம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். "ராஜத்ரோஹிகளைக் கொல்லும்போது ராஜசின்னங்களை வாங்கிக்கொல்லுமாப்போலே, தான் கொடுத்தமுடியை வாங்கிக்காண்கொன்றது" என்று அம்மங்கி அம்மாள் பணிப்பர்.

ரு-ம். பாட்டு - அல்லதோர்.

கஙo. (அநந்யப்ரயோஜனரித்யாதி) பகவத் ப்ரதிபக்ஷங்களை யழியச்செய்கைக்கு அபிசாரம் பண்ணினவர்களுண்டோ வென்ன, எம்பெருமானாரைப்போலே யாயிற்ற ஊரில் ப்ராம்ஹணரும். க்ருமிகண்டன் வியாஜத்தாலே மேல்நாட்டுக் கெழுந்தருளின வெம்பெருமானார் பதினொரு சம்வச்சர மெழுந்தருளியிருந்த பின்பும் அவனுடைய வாயுஸ்ஸுமாளக் காணமையாலே அவனுக்குச் சரீரவிஶ்லேஷம் பிறக்கும்படி திருவேங்கடமுடையானை யதிதேவதையாக பண்ணிக்கொண்டு அபிசாரகர்மம் பண்ணாநிற்க, இரண்டுமூன்று நாள் செல்லாநிற்கச் சுருள் நாறுகிற படியைக்கண்டு, 'இனியவன் போனான் சுருள்நாறிற்று, விடு' என் றருளிச்செய்ய; அந்நாளிலே 'வேங்கி' யென்பா னொருவனுடைய வாசற்காரன், அவன் கழுத்திலே தன் சொட்டையைக்கொண்டு குத்த, அக்கழுத்திலேபுழுத்து அவனுக்குச் சரீரவிஶ்லேஷம் பிறந்தது' என்றுபதேச பரம்ப

ராப்ராதமாகச் சொல்லிக்கொண்டு போருவதொரு கதையுண்டு; அத்தை யிங்கே ஸூசிப்பிக்கிறார்" என் றருளிச்செய்வர்.

எ-ம். திருவாய்மொழி—இருத்தும்.

க-ம். பாட்டு - இருத்தும்.

கருக. (அழைத்தேற்றுயித்யாதி) என்று விசேஷிக்கிற ஆழ்வாருடைய ஹார்த்தபாவத்தை யாப்த சம்வாதத்தாலே தர்சிப்பிக்கிறார். "இவன் பிரணயித்வத்தை யறியாதே தாழ்த்தானாகவும் நாமபிநிவிஷ்டராகவும் நினைத்து கூப்பிட் டென்னகார்யஞ் செய்தோமென்கிறார் காண்" என்னும்பிள்ளான்.

அ - ம் திருவாய்மொழி—கண்கள்சிவந்து.

உ-ம். பாட்டு - அடியேனுள்ளான்.

கருஉ. ஆத்மாவுக்கு க்யாநாநந்தாதிகளும் நிருபகமாயிருக்க சேஷத்வத்தை நிருபகமாக வருளிச்செய்ததுக்கு சம்வாதம். (திருக்கோட்டியூரித்யாதி) "'க்யாநாநந்த மயஸ்த்வாத்மா சேஷோஹிபர மாத்மந:' என்றும் 'தாஸபூதா:'என்று மித்யாதிகளாலே க்யாநாநந்தங்களும் சேஷத்வமும் ஆத்மாவுக்கு நிருபகமாகச் சொல்லாநின்றது; இதிலே அந்தரங்க நிருபகமேது" என்று எம்பெருமானார் திருவோலக்கத்திலே ப்ரஸ்துதமாக சர்வக்கியரா யெழுந்தருளியிருக்கச் செய்தேயும், "இத்தை ஆசார்ய முகேனவெளியிடவேணும்" என்று பார்த்து திருக்கோட்டியூர் நம்பி சந்நதிக்கு "ஆழ்வான், இத்தைப் பெற்றுவாரும்" என்று வரக்காட்டியருள; அவரு மெழுந்தருளி நம்பியை சேவித்து, இந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்து ஆறுமாசம் சேவித்திருக்க, அவரிரங்காமையாலே "எம்பெருமானார் சந்நதியிலேபோய் சேவித்து வருகிறேன்" என்று போகப்புக, அவனையழைத்து "ஆழ்வான், மயர்வறமதிநலமருளப்பெற்ற வாழ்வார்தானே, 'அடியேனுள்ளான்' என்றபடி கண்டாயே!" என் றருளிச்செய்ய "க்ருதார்த்தனானேன்" என் றெழுந்தருளினா ரென்றபடி.

---

௯ - ம். திருவாய்மொழி—கருமாணிக்கமலை.

ப்ரவேசம்.

கருரு. (ப்ரீதிபாரவஸ்யத்தாலே அன்யாபதேசம்) என்கிறதுக்கு ஆப்தசம்வாதம். "ப்ரீதியில் அன்யாப தேசமுள்ளது இத்திருவாய்மொழி யொன்றுமே" என் றாழ்வான் நிர்வஹிக்கும்படி.

௩௦-ம். திருவாய்மொழி—நெடுமாற்கடிமை.

ப்ரவேசம்.

௧௬௪. "பாகவத சேஷத்வ மனுஷ்டானபர்யந்தமாக வுள்ளவர்களுக்குச் சொன்ன விந்திருவாய்மொழி ரசிக்கும்" என்று யிதினுடைய சீர்மையை யாப்தசம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். அம்மணியாழ்வான் சோழராஜ்யத்தினின்றும் வந்தநாளிலே பட்டர் கண்டருளி "நீ ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போரவடிமைசெய்து போந்தாயென்று கேட்டோம். உன் ப்ரக்ருதிக்குச்சேர நெடுமாற்கடிமையைக் கேள்" என் றருளிச்செய்தாராம். பகவத்சேஷத்வத்தைப்பற்ற பாகவத சேஷத்வத்துக் கதிசயமேதென்ன (ஈஸ்வரசேஷமித்யாதி) ப்ரமித்தென்றது - ஐஸ்வர்யாதிகளைக் கண்டு ப்ரமித் தென்றபடி "ததீயர்க்கு க்ரயவிக்ரயார்ஹம்" என்னு மதுக்கு ப்ரமாணாந்தரம் (தத்பக்திகினேத்யாதி) "ஸ்வஸ்வப்ர பாவமதி வேலமபுத்திய மாமேருலக்ஷ்மீ சஹாயகுண மங்களபங்க லக்ஷ:| தத்பக்திகின மனசாம்க்ரயவிக்ரயார்ஹோவாரிப்ரதாரித இவந்வரிதோபபூவ."

௬-ம். பத்து.

௧-ம். திருவாய்மொழி—கோண்டபெண்டிர்.

ப்ரவேசம்.

௧௬௫. இத்திருவாய்மொழிக்கு சங்கதி யருளிச்செய்வாராக கீழ்த்திருவாய்மொழியிலே வேண்டுவன உண்டாயிருக்க "சயமே யடிமைதலை நின்றார்" என்றும், "நீக்கமில்லா வடியார்" என்றும், "கோதிலடியார்" என்றும், இம்மூன்று சந்தைகளையு மெடுத்தது அவற்றிற் சொன்ன வர்த்தத்துக்கு த்ருஷ்டாந்த பூதரான ராமாயண புருஷர்கள் மூவரையுஞ் சொன்னதுக்கு ஆப்தசம்வாத மருளிச்செய்கிறார். "ஆப்பான் திருவழுந்தூரறைய ரருளிச்செய்யுமது, பரமாப்ததமம்" என்கைக்காக அவர் பகவத்சம்பந்தம் பண்ணிக்கொண்டதும் ஆர்த்தஸ்ரவணம் பண்ணினதும், ஆழ்வானோடே யென்கிற ரிதில் முதல்வாக்யத்தாலே. (ஆப்பானித்யாதி) அழகியமணவாளப்பெருமாள் திருவழுந்தூரறைய ரென்றுயிற்று அடியில் திருநாமம்; இது உபசாரப்பேர் என்றளிச்செவ்வர். "வுபசாரப் பேர்" யென்றது வ்யவஹார நாமமென்றபடி.

௩-ம் பாட்டு - பொருள்கை.

௧௬௬. "என்னே யென்பாருமில்லை" என்றதுக்கு அர்த்தாந்தரம் விவக்ஷித்து அதுக்கு சம்வாதம் காட்டுகிறார். பிள்ளைதிரு நறையூரறையர்

"ஒருவனுக்கிட்டொருவன் வெறிவியருவது அவனாலே சமுர்த்த ஞானவனிவனே, 'என்' என்னுதல், இவன் க்ருஹத்திலே வந்தொருநாள் கால்கழுவிப்போதல் செய்ய, அவ்வளவாலே 'இன்று னின்னுனுக்கு பந்துவாகாதே !' என் றிவ்வளவுகொண்டு ஜீவிக்கலாயிருந்தால் அவ்வளவுஞ் செய்வாரில்லை" என்றுபணிப்பர், அன்றிக்கே ஏகார்த்தமேயாய்" "என்னேயென்பாரு மில்லை" என்றதின் சரமாவதிக்கு சம்வாத மாகவுமாம்.

எ-ம். பாட்டு - மற்றொன்றில்லை.

கநஎ. (குற்றமன்று) கீழ்ச்சொன்ன நன்மைகளாவன சர்வோபாயங்களிலும் அதிகதமமாய், ப்ரதிபத்திக்கு விஷயமுமாய், சுலபமுமாய், சர்வாதிகாரமுமாய், அனுயாசமுமாய், உக்திநிரபேக்ஷமான, விவ்வாநுகூல்யங்கள். உக்தார்த்தத்துக்கு சம்வாதம் (யோவசாதயித்யாதி) இதெந்த சுலோகத்திலே யென்ன "ப்ராதர்தேவேதி க்ருஷ்ணேதிகோவிந்தேதிச ஜல்பதாம் மத்தியான்ஹேசாபராஹ்ணேச யோவசாதஸ்ஸ உச்யதாம்" அவசாதம், துக்கம்.

உ - ம். திருவாய்மொழி—பண்டைநாள்.

க-ம். பாட்டு - பண்டைநாள்.

கநஅ. (தாமரைக்கண்களால் நோக்காய்) என்று சொன்னபாசுரத்தை இதில்லாத வஸ்மதாதிகள் சொன்னலவன் திருஉள்ளஞ்சீறுகைக் குடலாயிருக்கு மென்னுமத்தை யாப்தசம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். பிள்ளைத்தேவப்பெருமாளரையர், "உன் தாமரைக்கண்களால் நோக்காய் நோக்காய்" என்று பலகாலுஞ்சொல்ல ஆழ்வாரொழுந்திருந்து, "பிள்ளாய் நீயிங்ஙனே திருவுள்ளம் புண்படும்படி பலகாலும் நிர்பந்திக்கிறதென் அழகியமிடற்றைத் தந்தாராகில், நல்லபாட்டைத் தந்தாராகில், பிள்ளைகளையு மைஸ்வர்யத்தையும் தந்தாராகி லென்செய்யாதாராக நீரிங்கனே கிடந்துபடுகிறது" என்றருளிச்செய்தாராம். ஆழ்வாரென்றது அவர் திருதமப்பனுரான ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரைய ரென்றபடி.

ச-ம். பாட்டு - புளிங்குடிக்கிடந்து.

கநகூ. (தெளிந்தவென்சிந்தை) என்றபதத்தை கடாக்ஷித்தாப்த சம்வாதம். பட்டர் திருநாராயண புரத்திலே வெறுப்பிலே "தேவர் ஸ்வாதந்திரியமெல்லாங் காட்டினாலுங் பின்னையும் பண்ணின விஸ்வாசத்தில் குலைத்தலின்றிக்கே யிருக்கும்படி எலும்புரமுடைய வெம்பெருமானார்போல்வார் பக்கல்செய்யுமத்தை எலியெலும்பனானவடியேன் பக்கலிலும் செய்வதோ 'மஹாவிஸ்வாஸ பூர்வகம்' என்கிறபடியே, ஏதேனு மொன்றுவந்தாலும் 'இங்குத்தைக்கொன்று வருவதாய் வந்ததன்று இதுக்கடி நம்முடையபாபம்' என்று

பண்ணின விஸ்வாசம் குலையாதார் விஷயத்திலே செய்யுமத்தை இத்தாலே ஹேதுவாக நெஞ்சுநெகிழும்படி யிளநெஞ்சர் பக்க லிலுமத்தைச் செய்யக்கடவதோ'' என்றாராம், திருநாராயண புரத்தில் வெறுப்பாவது எம்பெருமான் திருமேனிக் கழிவுவந்து பின்னை திருநகையூரறையரும் பரமபதத்துக் கெழுந்தருளுகை யால் வந்ததுக்கம். க்ருமிகண்டன்காலத்திலே உகந்தருளின நிலங் களுக்கெல்லா மழிவுவரும்படி பண்ணிக்கொண்டு பாகவதோத் தமரான வாழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் திருநயனங்களுக்கு ஹானிபிறக்கும்படியாக்கி அவ்வள வன்றிக்கே பெரியநம்பியும் திருநாட்டுக் கெழுந்தருளும்படியாக்கி பரிவரான தம்மையுமங் கிருக்க வொட்டாதபடி தேசாந்தரத்தே யகலவடித்து பின்னையும் "பாபீஹுதாயு:' என்னும்படியே அவனை நெடுங்கால மிருக்கும் படி பண்ணுகையிறே யிவன் ஸ்வாதந்திரியமெல்லாங் காட்டுகை யாவது.''

அ-ம். பாட்டு. எங்கள்கண்முகப்பே.

கசo. (யதாக்யானமித்யாதி) அறிந்தவறிந்த வளவுகளிலே சொல்லுகையாவ தென்னென்ன (அதாவதித்யாதி) இந்த ப்ரசங்கத்திலே ஐதிஹ்யம். வங்கிபுரத்து நம்பிபெருமாளைசேவிக்க வெழுந்தருளின வளவிலே இடைச்சிக ளண்டையிலே சேவித்தாராய், அத்தையாண்டான் கண்டருளி "ப்ராப்பியமான ஸ்ரீவைஷ்ணவசமுதாய மிருக்க அவ ர்க ளண்டைக் கெழுந்தருளுவானென்'' என்ன; நாமல்பம் விரக மாயிருப்போம், 'இவர்க ளொன்றுமறியாத கொச்சைக ளாகை யாலே 'யஞ்சாரமோனபஶ்யதி' என்கிறபடியே ஈஸ்வரனுடைய கடாக்ஷமிவர்களிடத்திலே பள்ளமடையா யிருக்குங்காணும்' என் றங்கே யிருந்தேன்'' என்ன; "அவர்கள் சொன்னதேது, தேவரீர் அருளிச்செய்ததேது'' என்றாண்டான்கேட்க; "'பாலுண்பீர், பழ முண்பீர், பொன்னாலே பூணுநூலிடுவீர், நூறுபிராயம் புகுவீர், அழுத்தவிரட்டை யுடுப்பீர்' என்கிறவிது அவர்கள் சொன்னவார்த்தை, 'விஜயஸ்வ, விஜயீபவ' என்று நான்சொன்னவார்த்தை'' என்று நம்பியருளிச்செப்ய; "அங்கேபோயும் முறட்டு சம்ஸ்கிரு தம் விட்டீரில்லையே, எங்கே யிருந்தாலும் நாம் நாங்காணும், இங்கேளழுந்தருளீர்'' என்றாண்டான் அருளிச்செய்தவார்த்தை.

௯-ம். திருவாய்மொழி—ஓராயிரம்.

க-ம். பாட்டு - ஓராயிரம்.

கசக. (சர்வாதித்திய மித்யாதி) திருநாமத்தைப்பேசி அவர்கள் தஞ்சமாக நினைத்திருப்பர்களென் னுமதுக்கு சம்வாதம் - கோயிலாத்

தான் குமாரர்க்கு பட்டர் திருநாமம்சாத்தினன்; அந்த குமாரர் பரமபதத்துக்குப்போக, அவன் பட்டர் சந்நிதியிலே வந்து க்லேசப்பட "நீ 'நம்முடைய திருநாமம் சாற்றின பிள்ளை போனான்' என்றன்றோ துக்கிக்கிறது, அதுக்கு துக்கிக்கவேண்டா அந்த திருநாமமுடையநா மிருந்தோமோ!" என்று பட்டர், தம்மைப் போலே விக்ரஹத்தை யேறியருளப்பண்ணி ப்ரசாதித் தருளினார்.

ரு - ம். பாட்டு - மனமே.

கசஉ. திருத்துழாய்மாலை சாத்திக்கொண்டிருக் குமதுக்கு ஆப்த சம்வாதம். நஞ்சீயர் திருமுளை திருநாளிலன்று புனமேவிய பூந்தண்டுழாய் "என்ற விப்பாட்டெல்லா மனுசந்தித்து அர்த்தாநு பவத்தால் வந்த பாவனு ப்ரகிர்ஷத்தாலே திருவீதி சோதனார்த்தம் சேனை முதலியார் புறப்பட்டு அருளின கையார் சக்கரத்துக்குப் பெருமாள் புறப்பாடாக திருவுள்ளம்பற்றி மற்றைநாள் திருக்கொடியாழ்வான் புறப்பாட்டிலே ஸ்மரித்து "'நேற்று புறப்பட்டபடியிறே புனமேவிய பூந்தண்டுழா யலங்கலினமேது மிலானுகையாவது' என்றருளிச் செய்தார்" என்று நம்பிள்ளை யருளிச்செய்தாரொன்று கண்டுகொள்வது.

ச - ம். திருவாய்மொழி—மையார்.

ச - ம். பாட்டு - உறுவதிது.

கசரு. (ஸ்வரூபம் பகவத் பாரதந்திரியம்) என்றறிந்தால் சீரியப்ரயோஜனம் கைங்கரியமிறே, என்னுமதுக்கு சமவாதம். "ஆத்மாபி மாநாநுகுண புருஷார்த்தவ்ய வஸ்தயா । பகவத் பாரதந்த்ரியாதிப்ரபுத்தஸ்ய சுகாயதே" என்று பிள்ளை யருளிச்செய்த வசனத்தை யருளிச்செய்வர்.

கசச. (ஸ்வரூபமித்யாதி) பகவத் பாரதந்திரியமென் றறிந்தால் சீரிய ப்ரயோஜனம் கைங்கிரியம்; என்னுமதுக்கு சம்வாதம். "ஆத்மாபி மாநாநுகுண புருஷார்த்தவ்ய வஸ்தயா । பகவத் பாரதந்திரியாதி ப்ரபுத்தஸ்ய சுகாயதே" என்று பிள்ளை யருளிச்செய்த வசனத்தை யருளிச்செய்வர்.

கo-ம். பாட்டு - அடியான்.

கசரு. (அருள்பெறுவா ரடியாரிரோ) புத்ரர்களுக்கு இத்யாதி வாக்யத்தாலே "புத்ரர்களைப் பற்றவு மடியாரோ யிவனுக் காப்தர்" என்னு மதுக்கு சம்வாதம். ஆழ்வான் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயித்த பிள்ளை யகளங்க ப்ரம்மராயர் பட்டரிடத்திலே யபசாரப்பட அது நிமித்தமாகக்கோயிலை விட்டுபட்டர் திருக்கோட்டியூரிலே யெழுந்

தருள, "இருகைமதவாரணம்" என்கிறவனை பட்டர் திரு உள்ளத்தாலே விஷயீகரித் திருப்பாரென்னு மந்தைப்பற்ற சமாதானம் பண்ணவேணுமென்று அந்தத் திருவெள்ளைக்காரனை வரக்காட்டினுரென்று சிலவத்யா ஹரித்துக்கொண் டன்வயித்துக் கொள்வது.

ரு - ம். திருவாய்மொழி—இன்னுயிர்.

க-ம். பாட்டு - இன்னுயிர்.

கசரு. (குணக்யானத்தாலே) என்கிருர். இத்திருவாய்மொழியாலே "முமுக்ஷுவுக்கு விஷயதரிசனம் பாதகம்" என்னு மிடஞ்சொல்லுகிறது. "இந்த திருவாய்மொழி எம்பெருமானுர்க்கு உகப்பாயிருக்கும்" என்று, அந்தப்ரசங்கத்தாலே ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர்கதையை ப்ரசாதிப்பர்.

---

௬ - ம். திருவாய்மொழி—உருகுமால்.

ப்ரவேஶம்.

கசஎ. (அப்ராப்தியு மென்றது) ப்ரத்யக்ஷ சமாஞகாரமானசானுபவமன்றிக்கே ஸ்ம்ருதி மாத்ரத்தால்வந்த வ்யசனமும் கிடக்கச்செய்தே யென்றபடி. யத்வா, இவ்வாக்யம், கீழே "குணக்யானத்தாலே தரித்தார்" என்றதுக்குச்சேர சங்கத்யந்தரமாய் இன்னுயிர்ச் சேவலில் வ்யசனமும் கிடக்கச்செய்தே யென்னுதல். இதுக்கு சம்வாதம். "அப்ரீதிகர் பேத்யாதி" இதுக்கு ஆளவந்தா ரருளிச்செய்யும் சந்தை "அப்ரீதி கர்ப்பகுணனு சந்தானம்" என்று அன்வயிப்பது.

அ - ம். திருவாய்மொழி—அறுக்கும்வினை.

க-ம். பாட்டு - அறுக்கும்வினை.

கசஅ. (குறுக்குமித்யாதி) "குறுக்குமென்று - அத்தேசபாஷை" என்றதுக்கு சம்வாதம். எம்பெருமானுர் திருவடித்தொழ வெழுந்தருளாநிற்க, "திருநாவாய் யெத்தனையிடம்போரும்" என்று யெதிரே வருகிருர் சிலரைக் கேட்டருள "குறுக்கும்" என்ருர்களாய் அத்தைக் கேட்டு "இப்பாஷையாலே யருளிச் செய்வதே ஆழ்வார்!" என்று போரவித்தரா யருளினுர்.

கூ-ம். திருவாய்மொழி—மல்லிகை.

ப்ரவேஶம்.

கசகூ. (இது மாலைப்பூசல்) என்று மத்தை ஆப்த சம்வாதத்தாலே தரிஸிப் பிக்கிறுர். (பெற்றிஇத்யாதி) பெற்றியென்று, இன்று பிள்ளைபாடு விநோதமென்னென்று கேட்டவாறே என்றபடி - பெற்றியென் கிறவர், நஞ்ஜீயர் ஸ்ரீ பாதத்திலவர்; நம்பிள்ளைக்கு ஸப்ரம்ஹ சாரி, நம்பி திருவரங்க நாராயணதாச ரென்கிறவர். நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே ஜன்மசித்த நைச்சிய முடையரா யிருப்பா ரொரு ஸ்ரீவைஷ்ணவர். இக்கதைதான் நம்பிள்ளை தம்முடையதிருப்பவ ளத்தாலே வடக்குத்திருவீதிப்பிள்ளைக்கு அருளிச்செய்தது; ஆகை யாலிறே (என்பக்கலிலே) என்றது. அங்கே சென்றுரா யென்றது, பெற்றிபக்கலிலே சென்றுரா யென்றபடி. எல்லாரும் ரசிக்கும் படி ரசோக்திகளையிட்டு வ்யாக்யானஞ் செய்தருளுகையாலே (விநோதம்) என்கிறுர். (விநோதம்) இத்யத்ர, "வேதஶாஸ்த்ர விநோதேன காலோகஸ்ச்சதிதீமதாம்" இதிச "நமாமிதௌ மாதவசிஷ்ய பாதௌ" இதிசாநுசந்தேயம். "அறுக்கும் வினை சாற்றினோம்" என்று நம்பி திருவரங்க நாராயணதாஸர் அருளிச் செய்தவாறே பெற்றி "நாளை மல்லிகை கமழ்தென்றலும் மாலைப் பூசலு மென்னுய்" என்று பணித்தாராம் இத்யர்தஃ.

கூ-ம். பாட்டு - ஊதும்.

கருO. (தாழ்ந்தசெயலுமித்யாதி) "அது" என்கிறதற்கு பொருள் நமக்குச் சொல்லப்போகா தென்னுமத்தை ஆப்த சம்வாதத்தாலே தரிசிப் பிக்கிறுர். (எம்பாரித்யாதி) எம்பார் இவ்விடத்தே வந்தவாறே மோருள்ளதனையுஞ் சோறேயோ, தேசிகருங் கூடப் பாசுரமிட் டுச் சொல்லமாட்டாதே "அது" என்னுநிற்க மத்யஸ்தரான நாம் இதுக் கென்ன பாசுரமிட்டுச் சொல்வது என்றருளிச் செய்தா ராம். சஅ - வது. ஐதிஹ்யம் பார்க்க.

கO - ம். திருவாய்மொழி—மாலைநண்ணி.

ப்ரவேஶம்.

கருக. அவிவேகிகளுக் கன்றே மனஸ்ஸு கலங்கும் விவேகிகளுக்குக் கலங் குமோவென்ன (நாட்டாரித்யாதி) அதாவது புரூரவாயென்கிற ராஜா ஊர்வசி சாலோக்யத்துக்கு சாதனுனுஷ்டானம் பண் ணிப் பெற்றுன் என்கிற கதையை அனுசந்திப்பது. அதாவது, புரூரவா யென்கிற ராஜா வேட்டைக்குப் புரப்பட்ட விடத்தி லே சாபோபஹதையாய்க்கொண்டு ஊர்வசி பூமியிலேவந்து சஞ்சரியாநிற்க, இவனவளைக்கண்டு "ஸ்ரீயாகவேணும்" என்றபே

ருக்க, "நான்சொன்னபடி செய்தாயாகி லப்படியேசெய்கிறேன்"
என்று அவள்சொல்ல, "அதாவதேது" என்ன, "எப்போது மென்
சமீபத்திலே யிரண்டு ஆட்டுக்குட்டியை கட்டிவைக்கவேணும்,
வெளியிலே நக்னனாய் என்முன்னே யிருக்கவொண்ணாது, இருந்தா
யானால் அப்போதே விட்டுப்போகிறேன்" என்றுசொல்ல, "அப்படி
யே செய்கிறேன்" என்று சிரகாலமவளோடே சம்ஶ்லேஷித்துக்
கொண்டு நிற்கிறவளவிலே, இவளுக்கும் சாபமோக்ஷம் பிறந்து
இந்திரனுடைய ஆஜ்ஞையாலே இவளை அழைத்துக்கொண்டுபோ
வதாக கந்தர்வர்கள்வந்து, ஒரு ராத்திரியிலே இவளுமவனுமாகக்
கூடியிருக்கிறவளவிலே அவளுடைய புடவையையும் அந்த ஆட்
டுக்குட்டிகளையும் அபகரித்துக்கொண்டுபோக, ஆட்டுக்குட்டிகள்
போகையாலே மிகவுந் துக்கிதையாய் மீட்டுக்கொண்டு வரச்சொல்
ல, அவன்போகாதே வெறுமனேயிருக்க, "உன்னை புருஷனென்
றிருந்தேன், நீயு மென்னைப்போலே ஸ்த்ரீயானாய்" என்று க்ஷேபோ
க்தியைப்பண்ண, அவனுமந்த நக்னவேஷத்தோடே புறப்பட,
அவ்வளவிலே ஒருமின்மின்ன, அந்தவெளியாலே அவனைக்கண்டு
"வெளியிலே என்முன்னே நக்னனாயிருந்தாய்" என்றுசொல்லி
அந்தராஜாவைவிட்டு சொர்க்கத்திலே போனாள்; அநந்தரம் அந்த
ராஜா ப்ராந்தனாய்க்கொண்டு அந்த வேஷத்தோடே சஞ்சரியாநி
ற்க, இவனுடைய வ்யசனத்தைக்கண்டு ஊர்வசிமீளவும்வந்து "துக்
கப்படவேண்டா, உன்னாலே யுண்டானகர்ப்பம் யென்வயற்றிலே
யிருக்கிறது ஒருவருஷம் சென்றவாறே ஒருபிள்ளை பிறக்கும்,
அந்தபிள்ளையையும் உனக்குக் கொடுத்து உன்னோடே யொரு
நாள் சம்ஶ்லேஷிக்கிறேன்" என்று சொல்லிப்போய், ஒருவரு
ஷம் சென்றவாறே திரும்பவந்து பிள்ளையையுங்கொடுத்து ஒரு
நாள் சம்ஶ்லேஷித்திருந்து மீளவும் சுவர்கத்துக்குப் போம்போ
து அவளோடேகூடவந்த கந்தர்வர்கள் அந்த ராஜாவைப்பார்த்து
"உனக்குவேண்டின தொருவரத்தைக் கேட்டுக்கொள்" என்ன
"எனக்கு ஊர்வசி சாலோக்யம் வேணும்" என்ன, அவர்கள் ஒரு
அக்நியைக்கொடுத்து "இத்தால் யாகம்பண்ணினதே உண்டானால்
தச்சாலோக்யம் பெறலாம்" என்றுசொல்லிப் போனார்கள்; அந்த
ராஜாவும் அந்தஅக்நியைக் கொண்டுவாராநிற்க பழயப்ராந்தி தலை
யெடுத்து ஒரு அரசின்கீழே அந்த அக்நியைவைத்து மறந்துபோ
ய் தன்பட்டணத்துக்குவந்து, மீளவும் நினைத்து அரசடியிலே செ
ல்ல, அந்தஅக்நியானது ஶமீவ்ருக்ஷரூபமாய்க் கொண்டு அந்த அர
சோடே கூடியிருக்க, அதிலே யொருகொம்பை முறித்துக்கொண்
டுவந்து கடைந்து அக்நியை யுண்டாக்கி அந்த அக்நியாலே யாகத்
தைப்பண்ணி ஊர்வசி சாலோக்யத்தை அடைந்தானும்.

உ - ம், பாட்டு - கள்ளவிழும்.

கருஉ. ஆஸ்ரயிக்குமவன் ப்ரேமத்தையே பார்க்குமத்தனை த்ரவ்யதாரதம்யம் பாரானென்பதற்கு ஐதிஹ்யம். ௩கூ - ம். ஐதிஹ்த்தைப் பார்க்க.

க0 - ம். பத்து.

உ-ம். திருவாய்மொழி—கெடுமிடர்.

ப்ரவேஸம்.

கருந. பண்டைநான்துடங்கி பலதிருப்பதிகளைச் சொல்லுகைக்கு ஹேதுதமக்கு பரமபதமணித்தாகையாலே யென்னுமத்தை ஆப்தசம்வாதத்தாலே தரிசிப்பிக்கிறார். "ஒருநற்சுற்றம்" "என்கிறதிருமொழியிலே பலதிருப்பதிகளையு மருளிச்செய்த விதுக்குகருத்தென்" என்று ஜீயர் பட்டரைக்கேட்க, "பிறந்தகத்தில் நின்றும் புக்கத்துக்குப்போம் பெண்பிள்ளைகள் பந்துக்களிருந்தவிடமெங்கும் கண்டு வினவப்போமாப்போலே ப்ராப்பிய பூமிஅணித்தானவாறே திருப்பதிகள் தோறும்புகுகிறார்என் றருளிச்செய்தார்.

க-ம். பாட்டு - கெடுமிடர்.

கருச. (திரும்பேல்மின்) அதிக்ரமியாதே கொள்ளுங்கோள் "மறந்தும்புறந்தொழாமாந்தர்" என்றவிடத்திலே "பெருமாள் ஒருநாள் கிழக்கேபுறப்பட்டருளின வளவிலே மழைவர, கீழையூராலயத்திலே யெழுந்தருள, எம்பெருமானாரும் முதலிகளும் புறம்பே மழையிலே நனைந்துகொண் டிருக்கிறவளவிலே ஒருவன்வந்து "பெருமாள் உள்ளேயெழுந்தருளினர் தேவரீரு முள்ளே யெழுந்தருளவொண்ணாதோ" என்ன, "கெடுவாய், மஹாராஜாவேஸ்யாகமனம்பண்ணினால் அவன்மஹிஷியும் பரபுருஷகாமினி யாகலாமோ" என்று எம்பெருமானா ரருளிச்செய்தார்". என்கிறவைதிஹ்ய மருளிச்செய்வர்.

கருரு. (யமவஸ்யதைக்கஞ்சவேண்டா) என்னுமதுக்காப்த சம்வாதம். ஒருதிருவேட்டையிலே பட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாகவிருக்க, "சந்த்யையானது" என்று சிலர் விண்ணப்பஞ்செய்ய; நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்றொருநாளும் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழநின்றோ மென்றால் இதுக்குற்றமாக யமன்கேட்கவோ, ராஜாவிருந்து நாட்டுக்கணக்கு கேட்டுக்கொடுவாராநின்றால் ராஜாவுக் கந்தரங்கனா யிருப்பானொருவன் பேனா வாசித்தால் "ஓங்காண் அதுகிடக்க மேற்சொல், என்றால் பின்னை

யொருகாலமும் அப்பேரொடுத்துவாசிக்கப் பெறுதுகாண்” என்று
ராம்.

உ - ம். பாட்டு - இன்றுபோய்.

கருசு. (குன்றுநேர்மாடம்) அவன்பக்கலிலேபோய் கைங்கரியம் பண்ணி நினைக்கிறவர் ஊரிலே மாடங்களை வர்ணிக்கிறது. அவனோடாதி இதுவும் போக்யமாகையைப் பற்றவென்று விவக்ஷித்து இதுப் ராப்யமென்னு மதுக்கு ஐதிஹ்யம். பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் உள்ளேபுக்கு ப்ரதக்ஷிணம் பண்ணாநிற்க, நான் சேவித்துப்போனேன், அல்லாதாரெல்லாம் விரைந்து சடக்கென வாரா நிற்க இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையுங் கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வருகிறபடியைக்கண்டு ‘அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்கச்செய்தே இவர்களான வாசியிருந்தபடியென்’ என்றிருநதேன் என்றருளிச்செய்வர்.

கருஎ. ஸ்தாவரங்கள் உத்தேஶ்ய மென்பதற்கு ஆப்தசம்வாதம். பிள்ளைஜநநாத ப்ரமஹராயர் திருமுடிக்குறையிலே மரம்வெட்டுவியாநிற்க எம்பாரருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. எஎ - ம். ஐதிஹ்யம் பார்க்க.

கருஅ. ஆச்சான் திருவாலிநாடுதாசர் நல்லன சிலசுருவன் பாக்குகளை பட்டருக்குக் கொடுவந்து கொடுத்தாராய் அவற்றைக்கண்டு “இவை இருந்தபடியென் திருவருள் கமுகிநின்றும் வந்தவையோ” என்றருளிச்செய்தாராம்.

ரு - ம். பாட்டு - புண்ணியம்.

கருகூ. (திருநாமம் சொல்லுகைக்கு அதிகாரிசம்பத்தி வேண்டா) என்னுமதுக்கு ஆப்தசம்வாதம். ஜீயர்பட்டரை “திருநாமம் சொல்லும்போது ப்ரயதனாய்க்கொண்டு சொல்லவேணுமோ” என்று கேட்க, “கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறொரு உவட்குழியிலே முழுகிப்போகவேணுமோ, மேலுண்டான நன்மையைத் தருகிறவிது அதிகாரி சம்பத்தியையும் தரமாட்டாதோ” என்றருளிச்செய்தாராம்.

கசூ0. (கார்யகரமாகாதிருக்கிறது வாசனையின்கனம்) என்கிறதற் காப்தசமவாதம். ஒருசெட்டியை “இவன்தமிழுக்கு தேசிகனாயிருக்கும்” என்று பட்டருக்குக் காட்டினார்களாய்! “உனக்கு ஏதேனும் அபேக்ஷை யுண்டாகில் கேட்கலாகாதோ” என்ன! சிலர் காண்கிற தேஹத்துக்கவ்வருகு ஆத்மாவுமில்லை, தர்மா தர்மங்களுமில்லை,

ஈஸ்வரனுமில்லை', என்றிருகின்றார்கள், சிலர் 'இத்தேஹமஸ்தா ஸ்திரம்' என்று இதின் தோஷத்தை தரிசித்து 'அவ்வருசே ஸ்திரமா யிருப்பதொன்றை பற்றவேணும்' என்றிருகின்றார்கள், விஷயமொன்றாயிருக்க இவ்விரண்டு பரிமாற்றமும் நடக்கிறபடி யெங்கனே?" என்ன; "'மமமாயா துரத்யயா' என்றும் 'மாயாமே தாந்தாந்திதே' என்றும் சொல்லுகிறபடியே, பாக்யவான்களுக் கிதினுடைய தோஷதரிசனத்தைப் பண்ணிக்கழித்துக் கொள்ளு கைக்கும் பாக்யஹீநர்க்கு இதிலேபோக்யதா புத்திபண்ணி அநர் த்தப்படுகைக்கு முடலாம்படி கர்மாநுகுணமாக இத்தை இடை யெடுத்துக்காணு மீஸ்வரன் பண்ணிற்று" என்றருளிச்செய்தார். இடையெடுத்து - நிறுத்து.

அ-ம். பாட்டு - கடுவினை.

கசுக. (அறிவுடையாரித்யாதி) செவிசீபாய்ந்து கிடப்பர்களென்றது—வித்த ராயிருப்பர்களென்றபடி. இவ்விடத்திலே கலிகாலசோழன் உம் பளங்காய்கதையை யருளிச்செய்வர்.

கூ-ம். பாட்டு - நாமுமக்கு.

கசுஉ. (அவன்போனலித்யாதி) அதாவது மதிப்பன்தலையில் கிடவாமையா லே பரிமாற்றமறுமென்றபடி. இதுக்காப்தசம்வாதம். இதுக்கு பட்டரருளிச் செய்ததாக பரிஜையப்பர் "ஒருமதிப்பன் தலையில் கிடவாத வன்றுகொள்வார் கொடுப்பாரின்றியே எளிவிலையனுய்ப் போம்". (தஸ்மாத்வாம்சோதயாம்யஹம்) ஆகையாலேகாண் உன் னைத்வரிப்பித்து "அவன்பக்கலிலே போய்கேள்" என்று சொல் லுகிறது.

ங-ம். திருவாய்மொழி—வேய்மரு.

ங - ம். பாட்டு - வீவநின்.

கசுங. பிரிந்தவிஷயந்தான், முடியவுமொட்டாது, தரித்திருக்கவுமொட்டாது; அர்ஜ்ஜுநன் பின்பிருந்து யெளிவரவுபட்டாப்போலே,— அதா வது க்ரஷ்ணனேடே கூடியிருந்து, பீஷ்மாதிகளை ஜயித்து, பின் பு க்ருஷ்ணன் தன்னுடைச்சோதிக்கெழுந்தருளின வநந்தரம், அர் ஜ்ஜுநன் க்ருஷ்ணனுடைய ஸ்ரீகள் பதினாயிரம் பேரையும் கூட்டிக்கொண்டு போகச்செய்தே, பலயிடையர்கள்வந்து அந்தப் பெண்களை அபஹரித்துக்கொண்டுபோக, அப்போது காண்டீவத் தை எடுக்க அது எடுக்கப்போகாமல் துக்கப்பட்டகதையை நினை ப்பது.

௪-ம். திருவாய்மொழி—சார்வே.

ப்ரவேஸம்.

க௯௪. "பீடுமின்முற்றம்" பக்திபரமென்று முன்பு சொன்னதுக்கும் ப்ரபத்திபரமென்று இப்போது சொன்னதுக்கும் ஆப்தசம்வாதம் அருளிச்செய்கிருர். (ஆளவந்தாரித்யாதி) ஆளவந்தா ரருளிச்செய்ததாக திருமாலையாண்டான் பணிப்பது. ப்ரபத்தி விஷயமாக வாய்த்து "வீடுமின்முற்றம்" உடையவரு மப்படியே ப்ரபத்தி விஷயமாக வருளிச்செய்து கொடுபோந்து, பாஷ்யமருளிச் செய்தபின்பு, "ரஹஸ்யோபாயத்தை வெளியிடவொண்ணுது" என்று வீடுமின் முற்றத்தையும் பக்திவிஷயமாக்கி யருளிச்செய்தார்.

௯-ம். திருவாய்மொழி—அருள்பெறுவார்.

க-ம். பாட்டு - அருள்பெறுவார்.

க௯௫. இவனு ஸ்ரீதபரதந்த்ரன் என்னுமதுக்கு ப்ரமாணம் (ததாநுஜாநந்த மித்யாதி) ஸ்லோகத்துக்குஅர்த்தத்தை ஆப்தசம்வாதத்தாலே தரிசிப்பிக்கிருர். "இதுபட்டர்தாமே அருளிச்செய்ய நான்கெட்டேன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்தார். ஈஸ்வரன் தன்னுடைய ஸ்ருஷ்ட்யாதி பாரமெல்லாவற்றையு மிவர்பக்கலிலே வைத்து தானும் பிராட்டிமாருமாக விருக்கிறவளவிலே இவரறிவித்தத்தைத் திருக்கண்களாலே அநுமதி பண்ணுவனென்றிறே இந்தஸ்லோகத்தில் தோற்றுகிறது. இவரங்குப் போகைக்கு ஹேதுவையும் இவரங்குப்போனல் இவனைக்காண்கை யுகப்பாகையால் போக விக்னமாகா தென்கிறத்தையும் ஆப்தசம்வாதமுகேன தரிசிப்பிக்கிருர். சேனமுதலியார் சட்டையும் மயிர்கட்டும்கையும் பிரம்புமாய்வந்து புகுரப்புக்கவாறே நாய்ச்சிமாரும் தானுமாய் ஸ்வைரமாகவிருக்கிறவது தவிர்ந்து நாய்ச்சிமாரும் ஸிம்ஹாசனத்தி லொரு மூலைகளிலேயொதுங்க தானும் சவிநயமாக விருக்குமாய்த்து வ்ருத்தசாமந்தனைகண்ட ராஜாக்களைப்போலே "இவர்தாமும் இவ்விருப்புக்குத் தண்ணீர் துரும்பாக வொண்ணுது" என்று ஜகன்னிர்வாஹத்துக்கு வேண்டுவதைப் பாசுரப்பரப்பற விண்ணப்பஞ்செய்வராய்த்து. பிராட்டிமாரோடிருக்குமதிலு மினிதா யிருக்குமிறே, அவனுக்கிவர் தம்மைக்காண ப்ரியேணவிறே. "இன்னனை ப்ரம்ஹாவாக்கவேணும் இன்னனை மாற்றவேணும்"என்று வேணுமவற்றைச் சுருங்க விண்ணப்பஞ்செய்வர்! "ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லா மப்படியே" என்று கண்களாலே மேலெழுத்திட்டுக்கொடுக்கும். இவ்வார்த்தையருளிச்செய்தபோது கிடாம்பி ஆச்சானேடு அல்லாதாரோடு வாசியறக்குமிழி நீருண்

டது ஆச்சான்ருன் பட்டர்க்கு ஸ்நேஹித்திருக்கும்போர. இளையாழ்வான், ஆச்சானை, "பட்டர்தம்மை ஆஸ்ரயித்தவர்களிற் காட்டிலும் நீர்தாழ அநுவர்த்திப்பானென்" என்றுகேட்க, "நீ அன்று கண்டிலைகாண் எம்பெருமானார் பட்டர்கையிலே புஸ்தகத்தைக் கொடுத்து திருமுன்பே யொருஸ்லோகத்தை விண்ணப்பஞ்செய்வித்துத் திருப்பிரம்புக்குப் புறம்பாகக்கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, 'நம்முடையாரடங்கலும் நம்மை நினைத்திருக்குமாப்போலே இவனை நினைத்திருங்கோள்' என்றருளிச்செய்தார்."

கO-ம். திருவாய்மொழி—முனியே.

எ-ம். பாட்டு - கோலமலர்ப்பாவைக்கு.

கரு௬. பிராட்டிபக்கல் ஸ்நேஹாதிசயத்தாலே அவள் பரிக்ரஹமான வென்பக்கலிலே அதிப்ரவணனுயிருக்குமென்னுமதுக்கு சம்வாதம். பட்டர் சரமதசையிலே அருளிச்செய்தவார்த்தை "ரஹஸ்யத்தின்படியாயிருந்தபடி கண்டதே இப்பாட்டை நம்முடையார் த்வயத்தோடே யநுசந்திப்பது" என்றபடி.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஜீயர் திருவடிகளேசரணம்.

அண்ணன் திருவடிகளேசரணம்.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஆசார்ய ஹ்ருதயசாரசங்க்ரஹம்.

அநுபந்தம்.

(க.)

பகவத்விஷய நிர்வாஹங்கள்.

க-ம் பத்து.

க-ம். திருவாய்மொழி—உயர்வற.

க-ம். பாட்டு - உயர்வற.

க. (துயரறு) "துயரறுக்கும்" என்று முன்புள்ளமுதலிகள் அருளிச்செய்யும்படி - சமஸ்ததுக்காபநோதந ஸ்வபாவமான திருவடிகள் - சகலாத்மாக்களுடையவும் துக்கத்தைப் போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள். "துயரறுசுடரடி" என் றெம்பெருமானா ரருளிச்செய்யும்படி. "வ்யசநேஷு மநுஷ்யாணும் ப்ருஶம்பவதிதுஃகிதஃ" என்றால் துக்க நிவ்ருத்தியு மவனதாயிருக்குமிறே. இவர் துயரறத்தான் துயர் தீர்ந்தானயிருக்கை. இத்தால் இவர் மயர்வற அவன் துயரற்றபடி.

உ-ம். பாட்டு - மனனகம்.

உ. (எதிர்நிகழ்கழிவினுமினனிலன்) "திரள வொப்பில்லையாகில் ஒருவகையாலே தான் ஒப்புண்டோவென்னில், அதுவு மில்லையென்கிறது" என்று நிர்வஹிப்பாரு முண்டு; அங்கனன்றிக்கே, பட்டர் "சாதர்மிய த்ருஷ்டாந்த மில்லையென்றது முன்பு, வைதர்மிய த்ருஷ்டாந்த மில்லை என்கிற திங்கு" என்று.

உ - ம். திருவாய்மொழி—வீடுமின்முற்றவும்.
ப்ரவேசம்.

௩. இத்திருவாய்மொழி தன்னை, ஆளவந்தார் அருளிச்செய்தாராக திருமாலையாண்டான் ப்ரபத்திவிஷயமாக்கி நிர்வஹித்துக்கொண்டுபோந்து, எம்பெருமானாரு மப்படியே யருளிச்செய்து கொண்டுபோந்து, பாஷ்யந் தலைக்கட்டினபின்பு பக்திவிஷயமாக வருளிச்செய்துக் கொண்டு போருவர்; பின்பு எம்பெருமானாரு மப்படியே யருளிச்செய்தார்.

சு-ம். பாட்டு - பற்றிலனீசனும்.

ச. (பற்றிலையாய்) நீயும் பற்றிலையாய் - நீயும் பற்றையுடையையாய். சங்கத்தையுடையையாய். (அவன் முற்றிலடங்கே) "அஹம்சர்வம் கரிஷ்யாமி" என்கிறபடியே அவனுடைய வெல்லா கைங்கர்யத்திலு மன்வயி. அதவா, பட்டரருளிச்செய்யும்படி "(பற்றிலனீசனும்) 'வாசுதேவோ ஸிபூர்ண:' என்கிறபடியே சமஸ்த கல்யாண குணாத்மகனாய் க்யானாநந்தா மலஸ்வரூபனாய் திரைமாறின கடல்போலே ஈஸிதவ்யரான நித்யசூரிகளையுடையனாய் பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிறவனும் அவர்கள்பக்கல் பற்றுடையவனல்லன்.

---

௩ - ம். திருவாய்மொழி—பத்துடையடியவர்.
உ-ம். பாட்டு - எளிவருமியல்வினன்.

ரு. (நிலைவரம்பில) "இன்னவவதாரம் இன்ன சேஷ்டிதமென்றில்லை" என்று பூர்வாசாரியர்கள் நிர்வாஹம். பட்டர் இவ்விரண்டையும் நிலையில்லாமையிலே கொண்டு, "இனிவரம் பில்லாமையாவது - அவதரித்தெளியனாய் நின்றநிலை தன்னிலே பரத்வந்தோற்ற நிற்கிலும்நிற்கும்" என்று.

க௦-ம். பாட்டு - துயக்கறு.

சு. (பெருநிலமித்யாதி) "மனோவாக்காயங்களாலே அனுபவிக்கப் பெற்றேனென்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும்படி. "இவற்றாலே அனுபவிக்கப் பாரிக்கிறார்" என்று ஜீய ரருளிச்செய்யும்படி.

சு - ம். திருவாய்மொழி—அஞ்சிறை.
உ - ம். பாட்டு - என்செய்ய.

எ. (இனம்) என்றவித்தை இன்னம் என்றாக்கி - "எங்களபிமதம் பெறுகைக்கெங்கள் பக்கலொரு நன்மையில்லாத பின்பும் தாழ்க்குமித்தனையோ! என்கிறாள்" என்று பிள்ளை திருநறையூரறையர் பணிக்கும்படி.

௬-ம். பாட்டு - விதியினல்.

அ. (கள்வர்க்கு) "வஞ்சகர்க்கு" என்று திருமாலையாண்டான் நிர்வஹிக்கும்படி. எம்பெருமானர், "ஒன்றைநினைத் தொன்றைச் செய்வதற்கு" என்றருளிச்செய்வர்.

எ-ம். பாட்டு - என்பிழை.

௯. (அருளாததிருமாலார்க்கு) "நகஸ்சின்னபராத்யதி யென்பாரும் அருகேயிருக்க எங்கள் குற்றம்பார்த்து அவள்பக்கல் முகம்பெற விருக்கிறரே!" என்று நஞ்ஜீய ரருளிச்செய்யும்படி. "நானிப்படி நோவுபட வேண்டுகிறது - அவனுக்கவள் முகங்கொடுத்து அங்கே அவக்ருதையிறே யென்று இன்னதாகிருள்" என்று பிள்ளான் பணிக்கும்படி.

க0. (திருவடியின் தகவினுக்கென்பிழைத்தாள்) "தேவரீர் க்ருபைக்குத்தண்ணீர் துரும்பாக யேதேனும் ப்ரதக்ஷண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ" என்று நம்பிள்ளை யருளிச்செய்யும்படி.

௧௦-ம். பாட்டு - நாடாத.

கக. (நாடாதமலர்நாடி) "ஆத்மபுஷ்பத்தைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு. அங்கனன்றிக்கே, ஜீயர், "'எண்டிசையுமுள்ளபூக்கொண்டு' என்கிறபடியே, தேடவரிய புஷ்பங்களெல்லாந் தேடி" என்றருளிச்செய்வர்.

ரு-ம். திருவாய்மொழி—வளவேழுலகின்.

உ-ம். பாட்டு - நினைந்து.

கஉ. (நினைந்தவெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய்) "நினைத்தல் - கலத்தலும், கூடலுமாய், சதவஸ்தமாய்த் தன்னுடனே கூடிக்கிடக்கிற சகல பதார்த்தங்களுக்கும் காரணமாய்" என்று பிள்ளையமுதனர் நிர்வஹிப்பர். அன்றியே இப்படி தன் திருவுள்ளத்தாலே விஷயீகரிக்கப்பட்ட சகல பதார்த்தங்களுக்கும் காரணமாய்.

கக-ம். பாட்டு - மாலே.

க௩. (பாலேதமிழர்) பால்போலே யினிய தமிழையுடையவர்கள். (இசைகாரர்) இயலுக்கிசைய விசையிடவல்லர்கள். ஸ்ரீ மதுரகவிகளையும் நாதமுனிகளையும்போலே யிருக்குமவர்கள். (பத்தர்) பகவத்குணனுபவத்தி லிவர் தம்மைப்போலே "காலாழும்நெஞ்சழியும் கண்சுழலும்"என்றிருக்குமவர்கள். ஆழ்வானேருருவிலே, "ஸ்ரீபராங்குச நம்பியை - பாலேதமிழ ரென்கிறது. இசைகாரரொன்கிறது - ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையறை. பத்தரொன்கிறது-பிள்ளையுறங்கா வில்லிதாஸனா" என்று பணித்தானும். "பாலேதமிழ

ளென்கிறது-முதலாழ்வார்களை. இசைகாரனென்கிறது-திருப்பாணு ழ்வாரை. பத்தனென்கிறது - பெரியாழ்வாரை" என்று ஆளவந்தா ரருளிச்செய்வர்.

சு - ம். திருவாய்மொழி—பரிவதில்.

உ - ம். பாட்டு - மதுவார்.

கச. (புகைபூவே) "செதுக்கையிட்டுப் புகைக்கவமையும், கண்டகாலியிட வுமமையும்" என்று பட்ட ரருளிச்செய்யும்படி. இத்தை பட்டர் அருளிச்செய்தவாறே "'நகண்டகாரிகாபுஷ்பம் தேவாயவினிவே தயேத்' என்னுநின்றதே" என்றுநஞ்ஜீயர்கேட்க, "'அவனுக்கா காது' என்கிறதல்ல 'பரிக்கிறவாஸ்ரிதன்கையிலே முட்பாயும்'என் றதுக்காக தவிர்த்ததுகாணும்" என் றருளிச்செய்தார். "அப்ரா க்ருத த்ரவியம்வேணும்" என்றிருந்தானாகில் ஸ்ரீவைகுண்டத்தி லிரானோ. "ஸ்ரீவராஹநாயனாருக்கு முத்தக்காசை யமுதுசெய் விப்பது" என்று கிடந்ததாய், "இதென்னமெய்ப்பாடுதான்!" என்று நஞ்ஜீயர்போ ரவித்தராயருளினர்

எ-ம். திருவாய்மொழி—பிறவித்துயர்.

ரு-ம். பாட்டு - ஆயர்.

கரு. (அவரால் புடையுண்ணும்) "மரத்தாலேயோ ரடியடிப்பார்கள்போலே காணும்" என்று பட்டரருளிச்செய்யும்படி.

எ - ம். பாட்டு - யானொட்டி.

கசு. (பின்னையானொட்டுவேனோ) "எப்ரகாரத்தாலு மிறேன்" என்னுமாகில், பின்னை, நா னவன்போக்கை யிசைவேனோ. என்னுடைய கர்ம பாரதந்த்ரியம்போலே அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ரியத்துக்கு மேதேனும் கண்ணழிவுண்டோ; என்னிசைவின்றிக்கேயிருக்க, அவனாலே போகப்போமோ. அன்றியே,"நான்தொங்குவேனோ" என்று பிள்ளான் பணிக்கும்படி.

அ - ம். திருவாய்மொழி—ஒடும்புள்.

கஎ. (இத் திருவாய்மொழிதான்) "சர்வேஸ்வரனுடைய வைஸ்வர்யத்தைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு; அன்றிக்கே, "ஈஸ்வரத்வ லக்ஷ ணஞ் சொல்லுகிறது"என்பாருமுண்டு; அன்றிகே, "கீழே, 'பாடி யிளைப்பிலம்' என்றார், அப்படியே பாடி யனுபவிக்கிறார்" என்பா ருமுண்டு, "ஆர்ஜவகுணம் சொல்லுகிறது" என்று பட்டரருளிச் செய்யும்படி.

௯-ம். திருவாய்மொழி—இவையும்.

௭-ம். பாட்டு - தோளிணை.

௧௮. (தோளிணையித்யாதி) பட்டர், "வீரராயிருப்பார் முற்பட வாயுதத்துக் கிடுவர்கள், அப்படியே திருத்தோள்களுக் கிட்டான். ப்ரணயிக ளாயிருப்பார் அனந்தர மபிமத விஷயத்துக்கிடுவர்கள். அப்படியே பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயில் கட்டணத்துக்குக் கொடுத்தான்; ஆயுதத்துக்கு மபிமதவிஷயத்துக்கு மிட்டால், பின்னைத்தான் நாம் விநியோகங்கொள்ளு மிந்தனையிறே; ஆகையாலே தான் சூடினான்; சேஷம்பின்னையடியாரிறே கைக்கொள்ளுவார், ஆகையாலே திருவடிகளுக்குச் சாத்தினான்; ஆபத்துக் குதவுவா ரடியாரிறே, தளர்ந்து முறிந்தும் சகட வசுரருடல் வேறாப்பிளந்து வீயப்பொருவா ரடியாரிறே; நம்முடைய வாபத்துக்களுக்குத் திருவடிகளே துணையானாப் போலேகாணு மவனுடைய வாபத்துக்களுக்கும் திருவடிகளே துணையானபடி" என்றருளிச்செய்வர்.

௧௦-ம். திருவாய்மொழி—பொருமாநீள்.

௧௯. (கீழிற்றிருவாய்மொழியில்) "பிறந்தசர்வாங்க ஸம்ஸ்லேஷத்தை அனுசந்தித்து நிர்வ்ருதராகிறார்" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. கீழிற்பிறந்த சர்வாங்க ஸம்ஸ்லேஷத்தை யனுசந்தித்து பட்டரருளிச்செய்வதோ ரேற்றமுண்டு. அதாவது - கீழில் திருவாய்மொழியி லுன்மஸ்தகமாகப் பிறந்த ஸம்ஸ்லேஷரசத்தை அனுசந்தித்து நிர்வ்ருதராகிறார்யென்று.

௨-ம். பத்து.

௧-ம். திருவாய்மொழி—வாயுந்திரை.

௭-ம். பாட்டு - தோற்றோம்.

௨௦. (தோற்றோமித்யாதி) கீழு மேலும் போருகிறபடியொழிய சப்தஸ்வாரஸ்யத்தைப்பற்ற எம்பெருமானா ரருளிச்செய்து போருவதொன்றுண்டு; அம்மங்கி யம்மாளு மத்தையே நிர்பந்தித்துப்போரும். அதாகிறது - தான், பிரிவாற்றாதா ரனேகர் கூடக்கட்டிக்கொண்டு கூப்பிடாநிற்க, இருள்வந்து முகத்தை மறைக்க, அத்தைப்பார்த்து, ஆற்றாமைக்குப் போக்குவிட்டு தரிக்கவொட்டாதே நீ வந்து நலியக்கடவையோ வென்கிறாள்.

உ - ம். திருவாய்மொழி—திண்ணன்வீடு.
ப்ரவேஶம்.

உக. "(மூவாமுதல்வா) யென்று காரணத்வம் ப்ரஸ்துதமாகையாலே அந்த காரணத்வத்தை உபபாதிக்கிறார்" யென்று பணிக்கும்பிள்ளான்.

ரு-ம். பாட்டு - ஏறனை.

உஉ. "(ப்ரமஹாதிகள்) யெப்போதும் திருமேனியைப்பற்றி யிருப்பர்களோ"என்று நஞ்ஜீயர் பட்டரைக்கேட்க; "ஓரோராபத்துகளிலே திருமேனியிலே யிடங்கொடுக்கிறான், அன்னீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்க ளத்தையே வாய் புலற்றுகிறார்க ளத்தனையிறே" என்று அருளிச்செய்தார்.

ரு - ம் திருவாய்மொழி—ஊனில்வாழ்.

க-ம். பாட்டு - ஊனில்வாழ்.

உரு. (தேனும்பாலு மித்யாதி) இதுக் காளவந்தார் அருளிச்செய்தாராக திருமாலையாண்டான் பணிக்கும்படி-"ஏகஜாதீய த்ரவ்யங்கள் தன்னிலே கலந்தாப்போலே" என்று. அதாவது - தேனும்தேனுங் கலந்தாப்போலவும், பாலும்பாலும் கலந்தாப்போலவும், நெய்யும்நெய்யும் கலந்தாப்போலவும், கன்னலும்கன்னலும் கலந்தாப்போலவும், அமுதும் அமுதும் கலந்தாப்போலவும் என்று. அங்கனன்றியே, எம்பெருமானார் அருளிச்செய்யும்படி, இவற்றை - ரஸவத்பதார்த்தங்களுக்கெல்லா முபலக்ஷணமாக்கி - "தானும் நானுமான கலவிக்குள்ளே யெல்லா ரஸங்களும் பிறக்கும்படி சம்ஶ்லேஷித்தோமென்கிறார்" என்று.

ரு - ம். பாட்டு - அறியா.

உச. ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான்பணிக்கும்படி-"'அறிவுநடையாடாத தசையிலே சம்பந்தக்யானத்தைப் பிறப்பித்து; பிறந்த க்யானத்தை அழிக்கக்கடவதான தேஹசம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய்' என்கிற இழவாலே சொல்லுகிறார்" என்றும். இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "முன்னிற்பாட்டுக்களும் பின்னிற் பாட்டுக்களும் ப்ரீதியோடேநடவாநிற்க, நடுவே யப்ரீதி தோற்றச்சொல்லுமது சேராது, ஆனபின் பிங்கனேயாமித்தனை 'அறியாமா மாயத்தடியேனை - அறியாக்காலத்துள்ளே யடிமைக்கணன்பு செய்வித்து - வைத்தாயால்' என்கிறார்" என்றித்தையு மொரு உபகாரமாக்கி அருளிச்செய்தார்.

சா - ம். பாட்டு - சேர்ந்தார்.

உரு. (திண்மதியை) முன்பே சேர்ந்திருக்குமவர்களுக்கு திண்ணியதான மதியை கொடுக்குமவனை. அம்பரீஷன், தபஸ்ஸு பண்ணுகிற்க, சர்

வேஶ்வரன் இந்திரவேஷத்தை தரித்துக்கொண்டு சென்று, "உனக்கு வேண்டியவற்றை வேண்டிக்கொள்" என்ன, "நான் உன்னையாராதிக்கு மவகல்லேன்காண், என்னை சமாதிபங்கம் பண்ணாதே போகவல்லையே, உன்னைக் கும்பிடுகிறேன்" என்று னிறே. கஅங-வது ஐதிஹ்யம் பார்ப்பது.

ச-ம். திருவாய்மொழி—ஆடியாடி.

க-ம். பாட்டு - ஆடியாடி.

உசு. (மல்கி) மிக்கு. (கிமர்தம்தவநேத்ராப்யாம் வாரிஸ்ரவதிஶோகஜம்) "அனந்த்ராஶ்ருவுக்கு யோக்யமான கண்களாலே ஶோகாஶ்ருப்ரவஹிக்கிறது ஆர்குடிவேரற" என்று பட்ட ரருளிச்செய்யும்படி ; அன்றிக்கே, பிள்ளான், "ஆனைச் சேதநராக்கக்கொண்டு" என்று பணிக்கும்.

உஎ. (எங்கும் நாடிநாடி) "தன்கொய்சகமுட்படப் பாராநின்றாள்" என்று பட்ட ரருளிச்செய்யும்படி அதுக்குக் கருத்து - "கண்ணனென்னைக் கலையானே" என்று அவனிருந்த ப்ரதேஶமாகையாலே.

ங-ம். பாட்டு - இரக்கம்.

உஅ. (அரக்குமெழுகும்) என்கிற விரண்டையும் - நெஞ்சுக்கொன்றும் இவள் தனக்கொன்றுமாக்கி நிர்வஹிப்பர், பிள்ளைதிருநறையூரறையர். நெஞ்சுமிவடனக்குகை யடைப்பாகையாலே இவடனக்கே இரண்டையுமாக்கி யருளிச்செய்வர் பட்டர்; "விஷ்ணுநாஶத்ருஶோவீர்யே" என்கிறபடியே எல்லாமிவள் தன்படிக்கு த்ருஷ்டாந்தமாக வேண்டும்படியிறே யிவள் தன்னிலை ; அக்னிக்குள்ளே புகில் கரிந்துபோம், கடக்கவிருக்கில் வலிக்கும், அக்னிசகாஶத்திலே யுருகாநிற்குமிறே; முடிந்து பிழைக்கவும் பெறாதே, தரித்திருக்கவும் பெறாதே நோவுபடும்படி பண்ணுவீரோ !.

ரு-ம். பாட்டு - இவள்.

உகூ. (தவளவண்ணர் தகவுகளே) "சுத்தஸ்வபாவரான வும்முடைய தகவுகளெங்கே போயிற்றின" என் றெம்பாரருளிச்செய்யும்படி. அன்றிக்கே, பட்டர், "உம்மைப்போலே நாலு ஶிஷ்டர்களமையுமிறே அபலைகள் குடிகெட" என்றார்.

ரு-ம். திருவாய்மொழி—அந்தாமத்தன்பு.

க-ம். பாட்டு - அந்தாமத்தன்பு.

கூ0. (அந்தாமமித்யாதி) "'அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ' என் றிவராசைப்பட்டபடியே, நித்திய சூரிகளோடே

வந்து கலந்தான்" என்று ஆளவந்தா ரருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி. ஆனால், அவர்களை "ஆழிநூலாரம்" என்றே சொல்லுவதென்னில்; சின்மயராயிருக்கச்செய்தே பாரதந்த்ரிய சித்திக்காக தங்களை அமைத்துவைக்கிற யித்தனையிறே. அங்கனன்றிக்கே, எம்பெருமானார் அருளிச்செய்யும்படி - "இவரோடு சம்ஸ்லேஷிப்பதற்குமுன்பு அவனோடொக்க இவையுமனுஜ்வலமாய் அசத்சமமாய் இவரோடு கலந்தபின்பு உஜ்வலமாய் சத்தைப் பெற்றபடிசொல்லுகிறது" என்று; கல்பகத்தருவாடினால் அதில் பூவும் தளிரும் வாடுமிறே.

உ - ம். பாட்டு - திருவுடம்பு.

௩க. (திருவுடம்புவான்சுடர்) "'ஈஸ்வரனுக்கு விக்ரஹமில்லை, விபூதியில்லை' என்கிறவர்கள் முன்பே, ஆப்ததமரான இவர் 'திருவுடம்புவான்சுடர்' என்னப்பெறுவதே! 'ஈஸ்வரனுக்கு விக்ரஹமில்லை, குணமில்லை' என்கிறவர்கள் பண்ணிவைக்கமாட்டாத பாவமில்லை; அவர்களை அனுவர்த்தித்து அதுகேட்க விராதபடி பெருமாள் நமக்குப் பண்ணின உபகாரமென்" என் றருளிச்செய்வர் ஜீயர்.

க௦-ம். பாட்டு - ஆணல்லன்.

௩உ. (ஆணல்லனித்யாதி) நாட்டில்காண்கிற ஆண்களின்படி யல்லன், அப்படியே ஸ்ரீகளின்படியு மல்லன், உபயோகயோக்ய மல்லாத நபும்சக பதார்த்தத்தின்படியு மல்லன். என்று இப்படிபட்டர் அருளிச்செய்தவாறே, ஒருதமிழன், "ஜீயாநாட்டில் காண்கிற மூன்றின்படியுமல்லனாகில் சொல்லிற்றாகிறது வஸ்து, சூன்யமோ பின்னை" என்று கேட்க, பட்டரும், "பிள்ளையியலறிவுக்கு போந்திருந்த தில்லையோ!, ஆணல்லன் பெண்ணல்லள் அல்லாவலியுமல்லது என்றதில்லையே, 'அல்லன், அல்லள்,' என்கையாலே - 'புருஷோத்தமன்' என்று சப்தந்தானே தோற்றுவிக்கிறதில்லையோ" என்றருளிச்செய்தார். "ஆணல்லன், பெண்ணல்லன்" என்கிறவித்தால் - சஜாதீய விஜாதீய நிஷேதம் பண்ணினபடி.

சு - ம். திருவாய்மொழி—வைதந்தா.

ப்ரவேஸம்.

௩௩. (இத்திருவாய்மொழி) "ப்ரணயப்ரீத் யநுசந்தானங்காணிது" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி.

எ-ம். திருவாய்மொழி—கேசவன்றமர்.

ப்ரவேஸம்.

௩ச. எம்பார் இத்திருவாய்மொழி அருளிச்செய்யப்புக்கால், "ஸ்ரீவைஷ்ணவனானே னென்கிறார்" என்பராம்; வைஷ்ணவத்வசின்னமிறே

"திருத்வாதசநாமம்". ஆழ்வாருடைய நெடுமாற்கடிமையும், எம்பெருமானுடைய நெடுமாற்கடிமையும் இரண்டாயிற்று நெடுமாற்கடிமை; அதில் எம்பெருமானுடைய நெடுமாற்கடிமை யித்திருவாய்மொழி.

ச-ம். பாட்டு - கோவிந்தன்.

௰௪. (தேவும்) தேவுமென்கிறது - ஐஶ்வர்யத்தை. தன்னையென்கிறது-ஆஶ்ரிதபார தந்திரியத்தை; அதிரேதானதன்மை; என்று சிலர் சொல்லுவர்கள். பட்டர், "சீரானதன்மையாகிறது - ஆஶ்ரிதபாரதந்திராகை" யென்று.

ரு-ம். பாட்டு - விட்டிலங்கு.

௰௫. திருமாலையாண்டானோடே எம்பெருமானார் திருவாய்மொழி கேட்டருளுகிறநாளில், பாட்டுக்கள்தோறுஞ் சிலவார்த்தைகளை யருளிச்செய்து "இது அர்த்தமானாலோ" யென்றால், "இது விஶ்வாமித்ர ஸ்ருஷ்டி, ஆளவந்தார் அருளிச்செய்யக்கேட் டறியேன்" என்று பணிக்குமாம் ஆண்டான்; ஆண்டான் "இப்பாட்டுக்கு விஶ்வாமித்ர ஸ்ருஷ்டி வேண்டாவாயிருந்ததீ" என்ன, "இப்பாட்டால்— தன் அவயவ சவுந்தரியத்தாலே என்னைத் தனக்காக்கினான் யென்கிறார்" என் றருளிச்செய்தருளினாராம். அதுவுங் கிடக்க, பட்டரருளிச்செய்வ தொன்றுண்டு - "ஆழ்வாரையு மாழ்வார் பரிகரத்தையும் விஷயீகரித்து, அத்தாலே திருமேனியிற்பிறந்த ஔஜ்வல்யத்தைச் சொல்லுகிறது" என்று.

சு - ம். பாட்டு - சிரீதரன்.

௰௬. (இராப்பகலித்யாதி) இவர் "பக்திபரவச ராகையாலே இவருடைய தேஹயாத்திரையிருக்கும்படி" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி. அன்றிக்கே, பட்டர் "மரியதீவினை மாளவென்கிற விடத்தளவும் - ஆடியாடியி லிவர்க்சோடின தசையாய், இன்பம் வளரவென்கிற இது - அந்தாமத்தன்புதுடங்கி, கேசவன்றமரளவும் வரவுண்டான ப்ரீதியைச் சொல்லுகிறது" என்று.

அ - ம். திருவாய்மொழி—அணைவதரவணை.

ப்ரவேஶம்.

௰௭. இத்திருவாய்மொழிதன்னை - "ஈஶ்வரத்வஞ் சொல்லுகிறது" என்று நிர்வஹிப்பாருமுண்டு; "மோக்ஷப்ரதத்வஞ் சொல்லுகிறது" என்று பட்ட ரருளிச்செய்யும்படி. இவை தான் ஒன்றை ஒன்றுவிட்டிராது, ஈஶ்வரனாயிற்று மோக்ஷப்ரதனுமவன்; மோக்ஷப்ரதனும்போது ஈஶ்வரனாகவேணும்.

கூ - ம். திருவாய்மொழி—எம்மாவீடு.

ப்ரவேசம்.

ரூக. எம்பார் இத்திருவாய்மொழி யருளிச்செய்யப் புக்கால், இருந்தவர்களை "யார்" யென்று கேட்டுக் கதவுகளையு மடைப்பித்து ரஹஸ்யமாக வாமருளிச்செய்வது.

க-ம். பாட்டு - எம்மாவீடு.

சO. (எம்மாவீட்டுத்திறமும்செப்பம்) ஒருதமிழன் "எம்மாவீட்டுவிகல்பமும் செவ்வியவாம்" என்றான். அந்தபக்ஷத்திலே, வீட்டுவிகல்பமாவது —சாலோக்ய சாருப்ய சாமீப்ய சாயுஜ்யமென்கிறவை. செவ்விய வாகையாவது — சாலோக்யாதிகளெல்லாம் இம்மோக்ஷத்திலே யுண்டாகை.

உ - ம். பாட்டு - ஈதே.

சக. (ஞானக்கைதா) இங்கே எம்பார்க்கு ஆண்டான் அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அதாவது, "ஒருகிணத்திலே விழுந்தவனுக்கிரண்டுபேர் கைகொடுத்தால், எடுக்குமவர்களுக்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே; அப்படியே யாகிறது" என்று.

ச-ம். பாட்டு - எனக்கே.

சஉ. (தனக்கேயாக வென்னைக்கொள்ளுமீதே) "என்று ப்ரார்த்திப்பானேன் திருவுள்ளமானபடி செய்கிறான் என்றிராதே" என்றுபிள்ளை திருநறையூரறையர் எம்பாரைக்கேட்க; "அதுகேளீர்; முன்புபிரிந்தன்று, பின்பு பிரிவுக்கு ப்ரசங்கமுண்டாயன்று, இரண்டுமின்றியிருக்க திருமார்விலேயிருக்கச்செய்தே, "அகலகில்லேன், அகலகில்லேன்" என்னப்பண்ணுகிறது விஷயஸ்வபாவமிறே; அப்படியே ப்ராப்யருசி ப்ரார்த்திக்கப் பண்ணுகிறது" என்றருளிச்செய்தார்.

அ-ம். பாட்டு - எக்காலத்து.

சரு. (எக்காலமித்யாதி) இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்யும்படி—"இனிக்கூறிட வொண்ணாதபடி சிறுகூறான அத்யல்ப காலத்திலும், நீ சுவாமியான முறைதப்பாதபடி என் ஹ்ருதயத்திலேவந்து புகுரப்பெறில், மற்றெக்காலத்திலும்-இதொழிந்த யெல்லாகாலத்திலும், யாதொன்றும் வேண்டேன், பின்னையிதுதானும் வேண்டேன்.

சச. (அக்காரக்கனி) "அக்காரம் - வ்ருக்ஷமாய், அதுக்கோட்புக்கு பழுத்த பழம்போலே, நிரதிசயபோக்யனானவனே. அக்காரக்கனியென்கிறவிது - அவர்களுக்கு சர்வவித போக்யங்களும் தானே யென்னுமிடத்துக்குபலக்ஷணம் (உன்னையானே) இப்படி நிரதிசயபோக்ய

ருண உன்னை, உன்சுவடறிந்த நான், எக்காலத்தெந்தையாயென்
னுள் மன்னில் மற்றெக்காலத்திலும் யாதொன்றும்வேண்டேன்.”
இத்தை எம்பெருமானார் கேட்டருளி, “இது பொருளழகியது;
இவ்வாழ்வாருடைய ப்ரக்ருதிக்குச்சேராது, பெறிலும் பெறுதொ
ழியிலும் சிறுகக் கோலமாட்டார்; இங்ஙனேயாகவேணும்” என்
றருளிச்செய்வர். “(எக்காலத்தித்யாதி)எல்லாக்காலத்திலு மெனக்
கு சேஷியானநீ, நான் சேஷமான முறைதப்பாமேவந்து என்
ஹ்ருதயத்திலே புகுரப்பெறில், எக்காலத்திலும் - இக்காலமெல்
லாவற்றிலும், (மற்று-யாதொன்றும் வேண்டேன்) பின்னை யிதொ
ழிந்த மற்றொன்றையும் நான் வேண்டேன்.”

௧0-ம். திருவாய்மொழி—கிளரொளி.

ப்ரவேசம்.

௪௫. “கீழ்எம்மாவீட்டிலே நிஷ்கர்ஷித்த ப்ராப்யம் பெறுகைக்கு திருமலை
யை ஆஶ்ரயிக்கிறார்” என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராக
திருமாலை யாண்டான் பணிக்கும்படி. எம்பெருமானார், “அங்க
னல்ல, இவர் பாட்டுத்தோறும் ‘ஒல்லை, ஒல்லை’ என்றும் ‘காலக்
கழிவுசெய்யேல்’ என்றும்-த்வரிக்கப்புக்கவாறே, நமக்கு மறிவித்
து நாமுமிவர் காரியஞ்செய்யக்கடவதாக வறுதியிட்டால், ‘சரீரச
மனந்தரம் பெறுதப்பாது’ என்றறுதி யிட்டிருக்கலாயிருக்க, இவ
ரிப்படித் வரிக்கிறது இச்சரீரத்தோடே நாமடிமைகொள்ள வே
ணுமென்றுபோலே யிருந்தது; இனி யிவர்க்கு ‘நாம்நினைத்தபடி
பரிமாறுகைக் கேகாந்தமான தேசமேதோ’ என்று ஞாலத்தூடே
நடந்துழக்கிப்பார்த்து வரச்செய்தே ‘இவ்விடம் சாலவேகாந்த
ஸ்தலமாயிருந்தது’ என்று, திருமலையிலே சன்னிதிபண்ணியருளி,
‘நாமுமக்கு முகந்தருகைக்காகவந்து நின்றோம், நீரிங்கே வந்து
நினைத்தவகைகளெல்லாம் பரிமாறி அநுபவியும்,’ என்று தெற்குத்
திருமலையிலே நிற்கிற நிலையைக் காட்டிக்கொடுக்க, இவருமத்தை
அநுசந்தித்து; பகவான் ப்ராப்யனானால் அவன்வர்த்திக்கும் தேச
மும் ப்ராப்யமாகக் கடவதிறே. அத்தாலே திருமலையோடு, அத்
தோடு சேர்ந்த அயன்மலையோடு, புறமலையோடு, திருப்பதியோ
டு போம்வழியோடு, ‘போகக்கடவோம்’ என்று துணியும் துணி
வோடு வாசியற ப்ராப்யாந்தர்கதமாயநுபவித்து இனிய ராகிறார்”
என்று.

௪ - ம். பாட்டு - கருமவன்.

௪௬. (கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே) “இது நம்மாற்செய்துதலைக்
கட்டப்போமோ திருமலையை ஆஶ்ரயிக்குமதொழிய” என்றிங்
ஙனே ஆழ்வானொருருவிலே பணித்தானும்; அங்கனும் நிர்வஹிக்க

டவது. அன்றிக்கே, "கருமவன்பாசம் கழிக்கைக்காகவும், உழ ன்றுய்கைக்காகவும்," என்றிங்ஙனே எம்பெருமானு ரருளிச்செய் யும்படி.

எ-ம். பாட்டு - நலமென.

சஎ. (மலமறு) சந்திரபதத்துக் கவ்வருகேவளர்ந்து நிற்கையாலே, அவன் போம்போது சிகரங்களிலே தேய்ப்புண்ணு சாணையிலே யிட்டாப் போலே களங்கமரு நிற்குமென்னுதல்; அன்றிக்கே, "திருமலை யாழ்வார் தாம் ஜ்யானலாபத்தை யுண்டாக்குவர்" என்று பிள் ளான்வார்த்தை.

கூ-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—முடிச்சோதி.

அ-ம். பாட்டு - மாகுண.

சஅ. (மாகுண) "கீழ்பாட்டில் - ருத்ரன் துடக்கமானு ரோத்தமாட்டார்க ளென்றதாய், இப்பாட்டில்-அவன்றனக்குங்கூட ஜனகனை ப்ரம் ஹாஸ் தோத்ரம்பண்ணினுல் அதுவு முனக்கவத்யமாம்" என்பா ருண்டு. "அவனையும் - கீழ்பாட்டிலே சொல்லிற்ருய், இதில்— உபயபாவனையுமுடைய இவனைப்போலன்றியே கேவலம் ப்ரம்ஹ பாவனையேயா யிருப்பானொரு ப்ரம்ஹாவை யுத்ப்ரேக்ஷித்து, அவனேத்தினுலும் தேவர்க்கவத்யமா மித்தனையன்றே வென்கி ருர்" என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

கூ-ம். பாட்டு - மழுங்காத.

சகூ. (மறையாதே) யென்றவிதுக்கு "மறையும், மறையும்" என்று சிற்றுட் கொண்டான் வார்த்தை.

உ-ம். திருவாய்மொழி—முன்னீர்ஞாலம்.

ப்ரவேஶம்.

ருO. பட்டர்திருக்கோட்டியூரிலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே, சீராமப் பிள்ளை; "இவர் பரத்வானுபவத்தை யாசைப்பட்டு நோவுபடுகைக் குக் காரணமென்" என்று கேட்க; "பரவ்யூஹ விபவங்களோடு, அர்ச்சாவதாரத்தோடு வாசியற தர்மைக்யத்தாலே விஷயமெங்கு மொக்க பூர்ணமாயிருக்கும்; குறைந்து தோற்றுகிறவிடம் ப்ரதி பத்தாக்களுடை ப்ரதிபத்தி தோஷத்தாலே" என்று அருளிச் செய்தார். இதை இத்திருவாய்மொழி ப்ரவேஶத்தில் பரக்கக் காணலாம்.

௧-ம். பாட்டு - முன்னீர்ஞாலம்.

௫௧. (ஆக்கையின்வழியுழல்வேன்) "தெப்பத்தை நோக்கிப்போய் பெருமாளை அநுபவிக்கலாயிருக்க, "சரீரம்பாங்கன்று" என்று நீர்வாய்க்காலே போய் கடலிலே புகுவாரைப்போல், இதரவிஷய ப்ராவணயத்துக்குடலாக்கி அனர்த்தத்தை விளைத்துக்கொண்டேன்" என்றூர் எம்பார்.

௫௨. (இனிவந்து கூடுவனே) "இனிவந்து கிட்டுகை என்றொரு பொருளுண்டோ வென்று நிராசரானிரூர்" என்று முன்புள்ள முதலிகள்; எம்பெருமானார் "நிராசரானால் பின்னை முடிவாரொருவர்; 'ஒன்பதாம்பாட்டில் - நிராசராக, பத்தாம்பாட்டில்—அவன் வந்து சமாதானம்பண்ணினானாக வமையும்" என்றருளிச்செய்வர்.

௮-ம். பாட்டு - மேவுதுன்பம்.

௫௩. (ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன்) "நிதித்யாசிதவ்யஃ" 'என்கிறபடியே அனவரத பாவனைபண்ணி யுன்னை சாக்ஷாத்கரிக்க விரகு பார்த்திலேன். என்று எம்பார் அருளிச்செய்யும்படி.

௧௦-ம். பாட்டு - தலைப்பெய்.

௫௪. (அலைப்பூணுண்ணும்) இவனுக்கிவ் வருகேநசை கிடக்கையாலே அதிங்கேயிசிக்க அவர்க ளங்கே யிசிக்கபடும் க்லேசத்துக்கோ ரவதியில்லையிறே "அவ்வல்லல்"என்னு மித்தனை, த்ருஷ்டாந்த மில்லை. அதெல்லாங் காணக்காணவிட்டுக் கடக்ககிற்க. "அத்தோடு சஜாதீயமானவல்லல்" என்று எம்பா ரருளிச்செய்வது. அவ்வோ பாதிக்லேசம் போருமாயிற்று பகவத் விஸ்லேஷத்தாலே வருமதிவர்க்கு. அன்றிக்கே "பகவத்லாபமேயானபின்பு யமவஶ்யதையும் வந்ததேயன்றேவென்று அந்த யமவஶ்யதை போம்படியாக" என்று ஆண்டான் நிர்வஹிக்கும்படி.

---

௯ - ம். திருவாய்மொழி—ஒழிவில்காலம்.

௧-ம். பாட்டு - ஒழிவில்காலம்.

௫௫. ஆழ்வார் திருவரங்கப்பெருமா ளரையர் இத்திருவாய்மொழிப் பாடப்புக்கால், "ஒழிவில்காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்", என்று இங்ஙனே நெடும்போதெல்லாம் பாடிமேல் போகமாட்டாதே அவ்வளவிலே தலைகட்டிப்போவராம்.

௪ - ம். பாட்டு - ஈசன்.

௫௬. (பாபிஷ்டஃ) இதுதா னுருவச் செல்லும்படி யாயிற்று மேன் மேலனக்காரியம் பார்ப்பது. பாபத்திலே யாயிற் றூன்ற வடியிட் டிருப்பது. "இது ஆளவந்தார் அருளிச்செய்ததே யாகிலும் நானென்

வாயாலிப் பாசுரம் சொல்லமாட்டேன்" என்னு மநந்தாழ் வான். நீசனேன் நிறைவொன்றுமிலேன்-அநுத்மகுணமே யென் பக்கலிலே யுள்ளது, ஆத்மகுணங்க ளொன்றுமில்லை. "என் தன்மையும் நிறைவில்லாமையுமிறே நாணிவ்வார்த்தை சொல்லிற்றென்கிறார்." என்பராம் பிள்ளை திருநறையூரறையர். அவர்கள் சத்தை யுண்டாக்குகைக்காக அவர்களோடே கலந்தான், தன் சத்தைப் பெறுகைக்காக என்னோடேவந்து கலந்தான். ப்ராதம்யத்துக்கும் பழிக்கும் செங்கல் சீரைக்கும் ஜீவனம் வைப்பாரோபாதி அவர்கள்பக்கல்; நெஞ்சு முடம்பும் தந்ததெனக் கென்கிறார். அன்றியே, "'எனக்கு தன்பக்கலிலே சங்கமுண்டாம்படி பண்ணினனென்கிறார்' என்று நிர்வஹிப்பாரு முண்டு" என்றருளிச் செய்வர்.

சா-ம். பாட்டு - வேங்கடம்.

ருள. "கடங்கள், மெய்ம்மேல் வினைமுற்றவும், வெம்-நசிக்கும்" "என்றிங்கனே ஆளவந்தா ரருளிச் செய்யும்படி. இத்தை எமபெருமானார் கேட்டருளி "யிதுக்கு வேதாந்தத்தில் சொல்லுகிற கட்டளையிலே பொருளாக வமையாதோ" என்றிங்கனே யருளிச்செய்வர். அதாவது "உத்தர பூர்வாகையோ ரஸ்லேஷ விநாஸௌ' என்றும் 'ஏவம் ஹாஸ்யஸர்வே பாப்மாநஃ ப்ரதூயந்தே" என்றும் சொல்லுகிறபடி.

ருஅ. (தாங்களித்யாதி) அதிகாரி வைலக்ஷண்யமும் வ்ருத்தி வைலக்ஷண்யமும் தோன்றும்படி "தாங்கள் தங்கட்கு" என்றிங்கனே யூன்றிச் சொல்லுமாம் அனந்தாழ்வான்.

சு - ம். திருவாய்மொழி—புகழும்.

சா - ம். பாட்டு - மாலென்கோ.

ருகூ. (மாலென்கோ) "ஆஸ்ரித விஷயத்தில் வ்யாமுக்த னென்பேனோ" இப்பாசுரத்தைச் சொல்லா, "இதந்தேநாத பஸ்காய" என்னும் வ்யாமுக்த னென்பேனோ. "இதந்து தேகுஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி" என்றவோபாதி, "இதந்தேநாத பஸ்காய" என்றதுவும் முன்னே சொல்லிக்கொள்ளவிறே யடுப்பது; அங்கனன்றிக்கே, முந்தரசொல்லி, பின்னே "இதந்தேநாத பஸ்காய" என்றுனிறே. "இது தனக்கடியென்" என்று ஜீயர்பட்டரைக்கேட்க; "த்ரௌபதி, குழலைவிரித்துக் கிடக்கையாலே அது முடிக்கைக்காக, செய்வதறியாமையாலே மூலையில் கிடந்தானை முற்றத்தே யிட்டான்; பின்னை அர்தத்தின் சீர்மையை யநுசந்தியா, 'ஆரதிகாரிகளாகச் சொன்னோம், கைப்பட்ட மாணிக்கத்தை கடலிலே யிட்டோம்,' என்று, 'பதன்பதன்' என்றுங்காணும்" என்றருளிச்செய்தார்.

கo-ம். பாட்டு - யாவையும்.

சுo. (துவிசேரிந்யாதி) ஆவியுண்டு - ப்ராணாஸ்ரயமான சரீரம். அத்தோடு சேர்ந்திருந்துள்ள, உயிருண்டு. ஆத்மா-அதின்பக்கலந்த சரீரகதமான டால்ய, யௌவனாதிக ளொன்றுது மொருசம்பந்தமு மில்லையாம் படியாக வநுசந்திக்கிற வநுசந்தானமானது அந்தாத்மாவுக்குக் கூடாகின்ற பின்பு, அப்பொரு ளவனையுங் கூட தட்டில்லை. இக்கனன்றிக்கே, "இதுக்குவேறேயு மிரண்டுபொருள் சொல்லுவர்கள்" என்றருளிச்செய்வர்—அவன் பக்கலிலே பக்தியுண்டாகிலவனைக் கிட்டலாமென்றும், புறம்புண்டான-உபாயாந்தரங்களிலுண்டான பற்றடையவிட்டு அவனையே பற்றி லவனைக் கிட்டலாமென்றும். அன்றியே அந்தி மப்ரத்யய முண்டாமாகி லவனைக் கூடலா மென்றுமாம். இத்தை எம்பெருமானுர் கேட்டருளி, "இந்-வ்யாப்தியைச் சொல்லிநின்றபின்பு, இனி - வ்யாப்ய வஸ்துகதமான தோஷங்கள் வ்யாபகனுனவனுக்கு தட்டாதென்னுமிடமவஸ்யம் சொல்லவேணும், ஆனபின்பு இத்தையே சொல்லிற்றாக வமையும்" என்றருளிச்செய்வர்.

ரு-ம். திருவாய்மொழி—மொய்ம்மா.

க-ம். பாட்டு - மொய்ம்மா.

சுக. (எம்மானை) "இதென்ன நீர்மை" பட்டரிவ்விடத்தை யருளிச் செய்யா நிற்கச்செய்தே மேலேயு மியலைச் சொல்லப் பண்ணி "அவன் நூராயிரஞ் செய்தாலும் விக்ருதராகா திருக்கும் நாமே வேணும்; நமக்கொரு ஆபத்துண்டானு லிருந்தவிடத்திலே யிருக்க மாட்டாதே விக்ருதநாம் போதுமவனே வேணும்" என்றருளிச் செய்தார்.

சு-ம். பாட்டு - வம்பவிழ்.

சுஉ. (தம்பிறப்பாலித்யாதி) வைஷ்ணவர்கள் நடுவே இவர்கள் சரீர பரிக்ரஹம்பண்ணிற் றென்ன ப்ரயோஜனத்துக்காக. "திருப்புன்னைக்கீழே ஒருவரிருக்குமிடத்திலே நம்முதலிகள் பத்துப்பேர் கூட நெருக்கிக்கொண் டிருக்கச்செய்தே, க்ராமணிகள், மயிரொழுந்த பிசல்களும் பெரியவடிவுகளும் மேலே சுற்றின விரட்டைகளுமாயிடையிலே புகுந்து நெருக்குமாப்போலேகாண்" என்று பிள்ளைப்பிள்ளை.

எ-ம். பாட்டு - நீர்மை.

சுரு. (உத்தமர்கட் கென்செய்வாரோ) ஈஸ்வரன், தன்னையும் தன்விபூதியையும் ததீய சேஷமாக்கியிறே வைப்பது, ஆயிரத்தளியிலே (க்ரிமிகண்டன் பட்டணம்) ராஜா விருக்கச்செய்தே பெரிய நம்பியையும் ஆழ்வானையும் நலிந்தானுய், ஆழ்வான் மடியிலே சாய்ந்து

கிடக்கச்செய்தே பெரியநம்பி திருநாட்டுக்கு யெழுந்தருளினர்; அவ்வளவிலே "ஒருவருமில்லாதாரை ப்ரதிபத்திபண்ணக் கடவோம்" என்று திரிகிறார் சிலர் அங்கேவந்து ஆழ்வானைக்கண்டு "ஒருவனுண்டிறே" என்று போகப்புக, ஒருவரையும் மொரு குறைசொல்லி யறியாதவன், "வாரீர்கோள் மாணிகாள், வைஷ்ணவனுமாய் ஒருவனுமில்லாதா னொருவனைத்தேடி ப்ரதிபத்தி பண்ண விருக்கிறிகளோ நீங்கள்; ஈஶ்வரனு மீஶ்வர விபூதியும் வைஷ்ணவனுக்கு கிஞ்சித் கரிக்க விருக்க, வைஷ்ணவனுமாய் அறைவையுமா விருப்பா னொருவனை நீங்களெங்கே தேடுவீர்கோள்" என்றானும்.

சா-ம். திருவாய்மொழி—செய்யதாமரை
அ-ம். பாட்டு - துயரமே.

சுசு. (அன்றிமற்றிலேன் தஞ்சமாகவே) இவ்விடத்தை பட்டர் அருளிச்செய்யாநிற்க, ஜீயர் "இவர் புக்கவிடமெங்கு மிப்படியே சொல்லுவர், இவர்க்கிது பணியிறே" என்ன, "இவர் மற்றோரிடத்தில் தலை நீட்டுவது பாவனத்வத்தைப்பற்ற, இவர் தஞ்சமாக நினைத்திருப்பது சக்ரவர்த்தித் திருமகனையே"என்றருளிச்செய்தார்; "'பாவனஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ' என்கிறதில்லையோ இவரையும்" என்னில், "அவனுமிவரோ டொத்தா னொருத்தனிறே, இவர் 'போக்யவஸ்து வேறில்லை' என்றிருக்குமோபாதி, அவன் 'பாவனத்வத்துக்கு மிவரொழிய வேறில்லை' என்றிருப்பா னொருவனாயிற்று." பட்டர் ராமாவதாரத்தில் பக்ஷபாதத்தாலே யருளிச்செய்யு மதுகேட்கைக்காக, சிறியாத்தான் "பெருமாளுக்கெல்லா வேற்றங்களு மருளிச்செய்ததேயாகிலும் பாண்டவர்களுக்காக கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோன க்ருஷ்ணனுடைய நீர்மையில்லையே சக்கரவர்த்தித் திருமகனுக்கு" என்ன, "அதுவோ!, பெருமாள் தூதுபோகாமையன்று காண், இக்ஷ்வாகு வம்ஶ்யரைத் தூதுபோக விடுவாரில்லாமைகாண்" என்றருளிச்செய்தார். "அவ்வவதாரத்தி லிழவு தீருகைக்காக விறேக்ருஷ்ணனாயவதரித்துத் தூதுபோயிற்று," அவனே பின்னோர் தூதாதி மன்னர்க்காகிப் பெருநிலத்தா ரின்னார் தூதனென நின்றானிறே; பாரதந்த்ர்ய ரசமனுபவிக்கைக்காக போந்தபின் 'இதிலொன்று குறைந்ததாகிறது' என்றிருக்குமே."

கூ-ம். பாட்டு - தஞ்சமாகிய.

சுரு. (அவனிவனென்கிறார்) "அங்குத்தைக் குகர்தருளினவிடத்தை விபூதியாக நினையாதே, இங்குத்தைக் கவ்விடத்தை விபூதியாக நினையுங்கோள்." என்றுபணிக்குமாண்டான்.

எ-ம். திருவாய்மொழி—பயிலும்.

ப்ரவேசம்.

சுசு. (தத்பக்தைர்வாஸமாகம) என்கிறவிடத்தில், "வா" என்றத்தை-அவதாரணத்திலேயாக்கி, "உத்தேஸ்யம்தானே இங்கே ஸித்திக்கும் காண்" என்றெம்பெருமானு ரருளிச்செய்தவார்த்தை.

சுஎ. (கச்சதா) இதுக்கெம்பெருமானுர் "பயிலுஞ் சுடரொளியிலும் நெடுமாற் கடிமையிலும் "சொல்லுகிற வர்த்தத்தை ஸ்ரீபரதாழ்வான் அனுஷ்டித்துக் காட்டினுன்" என்றருளிச்செய்வர்; இவ்வர்த்ததுக்கடி திருமந்திர மாயிற்றிறே, அதுமூலமாக வநுஷ்டிக்கவே இதிற் சொன்னத்தைச் செய்ததாமிறே.

கo-ம். பாட்டு - அடியார்ந்த.

சுஅ. (அடியாரித்யாதி) "இப்படி வைஷ்ணவர்களை விரும்பினுல் இது லௌகிகரோடு சேராதிருந்ததாகில் ஆழ்வார் விரும்பினத்தை விஸ்வஸித்தோ மாகிறோம்" என்று ஜீயரருளிச்செய்யும்படி.

அ - ம். திருவாய்மொழி—முடியானே.

ப்ரவேசம்.

சுகூ. (குஹேநஸார்த்தம் தத்ரா வஸ்திதோஸ் மிதிவஸாந் பஹூந்) "ஸ்ரீகுஹப் பெருமாளோடே நிற்க, காலம் நெடுகுவானேன்" என்று மிளகாழ்வான் கேட்க, "ஸ்மாரக சந்நிதியில் ஆற்ருமை யிரட்டிக்குமிறே" என்று அருளிச்செய்தாராம்.

கூ - ம். திருவாய்மொழி—சொன்னுல்.

கூ-ம். பாட்டு - வாய்கொண்டு.

எ0. (நின்றுநின்றே) "இப்படி முழுக்கக்கொடுத்தாலும் 'இவனுக்கு நாமொன்றும் செய்யப்பெற்றிலோம்' என்று 'ருணம் ப்ரவ்ருத்தமிவமே' என்று திருவுள்ளத்தாலே மிறுக்குப்பட்டு நிற்கும்" என்று நம்மாசார்யர்கள் நிர்வஹிக்கும்படி. ஒருதமிழன் "அடைவடைவேதருஞ்சொன்னவற்றை" என்றுன்.

ச - ம் பத்து.

க - ம். திருவாய்மொழி—ஒருநாயகம்.

ரு - ம். பாட்டு - பணிமின்.

எக. (பணிமின்திருவருளென்னு மஞ்சீதப்பைம்பூம் பள்ளி அணிமென்குழலார்) என்று ஸ்ரீகளோடேசேர்த்து நிர்வஹிப்பார்கள் முன்புள்ள

முதலிகள்; பட்டர், அங்கனன்றிக்கே, "பணிமின்திருவருள்" என்கிறவித்தை - (இன்பக்கலவியமுதுண்டார், என்கிறவர்க ளோடே சேர்த்தருளிச்செய்வர்.

கூ - ம். பாட்டு - படிமன்னு.

எஉ. (குடிமன்னுமின் சுவர்க்கமெய்தியும்) "இதுக்குமாள்பற்றுவதே!"என்று பட்டர் அருளிச்செய்வர்.

உ-ம். திருவாய்மொழி—பாலனாய்.

ப்ரவேஶம்.

எங. "'இவ்வொருநாயக' மருளிச்செய்தவரோகிடிகோள் 'சூழ்விசும்பணிமுகிலு' மருளிச்செய்தார், இத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவுள்ளம் பற்றுங்கோள்" என்று பிள்ளையருளிச்செய்வர். அதாவது இது ப்ரத்யக்ஷிக்கிருப்போலே இச்சரீர சமநந்தரமதுவுங் காணவன்றோ நாம் புகுகிறது இனியெத்தனை நாளென்று.

ங - ம் திருவாய்மொழி—கோவைவாயாள்.

ப்ரவேஶம்.

எச. (சர்வேஶ்வரனுடைய "பாலனாயேழுலகு' — இது தனக்கு மூன்று படியாக நிர்வஹிப்பர்கள் நம்முதலிகள் — எம்பார், "'அம்புலியம்மானைப் பிடித்துத்தரவேணும்' என்றழுத ப்ரஜைக்கு தேங்காயைக் கொடுத்து அழுகையை யாற்றுவானைப்போலே, வேறொரு குணவிஷ்காரத்தைப்பண்ணி யநுபவிப்பிக்க வநுபவிக்கிறார்" என் றருளிச்செய்வர். திருமலைநம்பி, "ஒருவன் ஒன்றை யபேக்ஷித்தால், அவனுமது செய்வானாகத் தலைதுலிக்கினால், பெற்றானாய்ப்பின்பு பின்னிலிழவு தோன்றும்படி யன்றிருப்பது; ஆகையாலே, அவனும் 'அப்படியே செய்கிறோம்' என்னக் கீழ் விழவை மறந்து எல்லாம்பெற்றாரா யநுபவிக்கிறார்" என்று; ஸ்ரீ கௌசலையார், பெருமாள்வனத்துக் கெழுந்தருளுகிறபோது "ஏகபுத்ராயான நானும்மைப் பிரிந்திருக்கமாட்டேன், கூடப்போமித்தனை" என்ன, "ஆச்சீ, நீர்சொல்லுகிற விவைதர்மஹானிகிடீர்" என்று முகத்தைப்பார்த் தொருவார்த்தை யருளிச்செய்ய, இழவைமரந்து மங்களாஶாஸநம்பண்ணி மீண்டாளிறே; க்ருஷ்ணன் "மாஶுச:" என்றொரு வார்த்தை யருளிச்செய்ய, அர்ஜ்ஜுநன் "ஸ்திதோஸ்மிகதஸந்தேஹ:" என்று தரித்தானிறே. பட்டர், "காலத்ரயத்தி லுள்ளத்தையு மிப்போதே பெறவேணுமென்று மிடாய்தத விவர்க்கு அப்படியே அநுபவிக்கலாம்படி,

காலசக்கரத்தா னாகையாலே காலோபாதியைக் கழித்து, வர்த்தமான காலத்திற்போலே அநுபவ யோக்யமாம்படி காலத்தை யொரு போகியாக்கிக்கொடுக்க வநுபவிக்கிறார்'' என் றருளிச் செய்வர்.

௯-ம். பாட்டு - ஏகமூர்த்தி.

எ௫. (ஆவியல்லல்மாய்த்ததே) உன் திருவுள்ளத்திலுண்டான வல்லல் ஒருபடி நசிக்கப்பெற்றதே. இத்தலையை ஒருபடிகணாமரஞ் சேர்த்து நீக்ருதக்ருத்யனானாயே!. அன்றிக்கே, என்னாவியானது நிர்துக்கமாயிற்றென்றுமாம். அதவா, ஏகமூர்த்தியென்று—பரத்வத்தைச்சொல்லி, இருமூர்த்தியென்று - வ்யூஹத்தைச்சொல்லி, வாசுதேவ சங்கர்ஷணர்களை நினைத்து, மூன்று மூர்த்தியென்று - ப்ரத்யும்நனைசொல்லிற்றாய், பலமூர்த்தியென்று - விபவங்களைச் சொல்லிற்றாய், ஐந்துபூதமா யிரண்டுசுடராயென்று - இன்னார் ஸ்ருஷ்டிக்குக்கடவர், இன்னார் பாலனத்துக்குக் கடவர், என் றிப்படியாலே சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாருமுண்டு.

அ-ம். பாட்டு - என்னதாவி.

எ௬. (உன்னதென்னதாவியு மென்னதுன்னதாவியும்) என்னுடையவாவி யுன்னது, உன்னுடையஆவி யென்னது. என் ஸ்வரூபம் நீயிட்டவழக்கு, உன்ஸ்வரூபம் நானிட்டவழக்கு. இவ்விடத்தை ஆளவந்தார் அருளிச்செய்யா நிற்கச்செய்தே இருந்தமுதலிகளிலே சிலர், "இவ்வாத்மாவின் ஸ்வரூப மவனிட்டவழக்கென்றால் கூடுமே, அவன் ஸ்வரூப மிவனிட்டவழக்காகையாவதென்" என்றுகேட்க, "இவன் 'தன்னை அவனுக்காக்குவன்' என்றவன்று, கர்மம்தகையவுங்கூடும், 'இவன் ஸ்வரூப மவனிட்ட வழக்காக்கக்கூடுமோ' என்றிதிலே காணும் சந்தேஹிக்கவேண்டுவது" என்றருளிச்செய்தார்.

௪-ம். திருவாய்மொழி—மண்ணையிருந்து.

௧-ம். பாட்டு - ஒன்றிய.

எஎ. (நெடுமாலே வாவென்றுகூவும்) "வடிவில் பெருமையைக்கண்டவாறே, 'ஜகத்தையடைய தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொள்ளும்படி பெரிய வடிவையுடைய திருஉலகளந்தருளின சர்வேஶ்வரன்' என்று நினைத்து, இங்கனே வாராயோவென்றழைக்கும்" என்று பிள்ளான்பணிக்கும்; அங்கனன்றிக்கே, ஜீயர் "மலைபேரமாட்டாதே, பலகால்வர்ஷிக்கையாலே யழுக்கற்றுப் பசுகுபசுகு என்றிருக்குமே; அத்தைக்கண்டு, 'அவன்சாபராதனாகையாலே லஜ்ஜித்து, வந்து கிட்டமாட்டாமையாலே பச்சைப்பிடாத்தையிட்டு

முட்டாக்கிட்டு நிற்கிருன்' என்று, ஆனைக்கூட்டத்துக்குக் கதவிடு லன்றே உமக்கு லஜ்ஜிக்கவேண்டுவது, இங்கனே போரீரொன்று நின்றுள்" என்று.

ரு - ம். திருவாய்மொழி—வீற்றிருந்து.

க-ம். பாட்டு - வீற்றிருந்து.

எஅ. (வெம்மாமிளந்தான்றன்னை) "ஆற்றல்மிக்காளும்படி சொல்லுகிறது" என்று பட்டரருளிச்செய்யும்படி; "ஆற்றல்மிக்காளு மம்மானு றொன்றுல், இன்னுனென்கிறது" என்று அம்மங்கியம்மாள் நிர் வஹிக்கும்படி.

சு-ம். பாட்டு - கரியமேனி.

எகூ. (கரியவித்யாதி) கறுத்த நிறத்தாலேவந்த வழகுக்குமேலே அதுக்கு பரபாகமான திருக்கண்களிலே அஞ்சனத்தை யிடுமென்றுமாம். அன்றிக்கே, "கரியென்று - ஆனையாய், அத்தால் நினைக்கிறது - குவலயாபீடமாய்; குவலயாபீடமானது, அம்மேனியிலே - அழ கிய திருமேனியிலே, வெளிய - சீற, அத்தை, நீறுசிறிதேயிடும்- பொடியாக்கும்" என்றொருதமிழன் நிர்வஹித்தான்.

எ - ம். பாட்டு - என்றுமொன்ருகி.

அ0. (தன்றனக்கின்றிநின்னை) எம்பெருமானுர் தெற்கே யெழுந்தருளுகிற நாளிலே ஆளவந்தார்மகனுர் சொட்டைநம்பி ப்ரஸாதித்தவார்த் தை - "தன்றனக்கென்றது-தானுனதனக்கென்றபடி. ஒருவகைக் கொப்பின்றிக்கே யிருக்கிறது பரத்வத்திலல்ல, 'அத்மாநம்மாநு ஷம்மந்யே' என்கிறபடியே - அவதரித்து மனிச்சே றிட்டுக்கொ ண்டு நிற்கிற நிலையிலே" என்றுராம்.

அ-ம். பாட்டு - நமக்கும்.

அக. (லோகநாதஃபுராபூத்வா சுக்ரீவந்நாதமுச்சதி) கிடைப்பது கிடையா தொழிவது, இச்சியாநின்றுர். "சுக்ரீவம்ஶரணங்கதஃ" "'ஸ்ரீவிபூ ஷணுழ்வானைப் புகுரவொட்டேன்' என்றுர் மஹாராஜர், 'இவன் புகுராவிடில் நாமுளோமாகோம்' என்கிறுர் பெருமாள், இப்படி யிருவரும் விப்ரதிபத்திபண்ணின விதுக்குக்கருத்தென்" என்று ஜீயர்கேட்க; "இருவரும் 'சரணுகதரானவர்களை விடோம்' என்று விப்ரதிபத்தி பண்ணுகிறுர்கள்காணும்" என்று பட்டரருளிச்செய் தவார்த்தை. "சுக்ரீவம் சரணங்கதஃ" என்றத்தை நடத்தப்பார்த் தார் மஹாராஜர், "ராகவம்சரணங்கதஃ" என்றத்தை நடத்தப் பார்த்தார் பெருமாள்.

அ௨. (சொன்மாலைகள்) "சர்வேச்வரன் 'ஆழ்வீர், நம்மை யொருகவிசொல்லும்'என்றால், அப்போதே கவிசொல்லிச் சமையும்படியாக வல்லவெனக்கென்கிறார்'' என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி; அங்கனன்றிக்கே, பட்டர்'' என்றுமியே தப்புதலின்றித் தன்னைக்கவிதான்சொல்லி' என்கிறபடியே-சர்வேச்வரன் கவிபாடுகையாலே கவிபாடத்தட்டில்லை; அவனங்கீகரித்துத் திருக்கண்களாலே குளிரக்கடாக்ஷித்து, 'நீயொரு கவிசொல்லும்' என்றால் ப்ரீதியாலே யுடைகுலைப்படாதே தரித்து நின்றுசொல்ல வல்லேனெனவெனக்கு" என்றருளிச்செய்வர்.

---

௬ - ம். திருவாய்மொழி—தீர்ப்பாரை.

ப்ரவேசம்.

அ௩. (ராவணன் மாயாசிரஸ்ஸைக்காட்டினபோது பிராட்டியுமல்லாதஸ்திரீகளோ பாதிசோகித்துக் கண்ணநீர்விழ விட்டிருந்தாளாயிருந்தது; இதுக்கடியென், இதுகேட்டபோதே முடியவன்றோ ப்ராப்தம்'' என்று ஜீயனைக்கேட்க; அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே "மெய்'' என்றே சோகித்தாள்; த்யானமின்றியிலே ஜீவிக்கைக்குஹேது அவருடைய சத்தையாகையாலே உளளாயிருந்தாள்; இவ்வர்த்தம் மெய்யாகில் சத்தையுமில்லையாம்'' என்றருளிச்செய்தார்.

௨-ம் பாட்டு - திசைக்கின்றதே.

அ௪. மோஹதசையிலே திருநாமோச்சாரண முண்டானால் தரிக்கலா மென்பதற்கு சம்வாதம். ஆய்ச்சிமகனுடைய அந்திமசமையத்திலே பட்டர் "அறிய'' என்றெழுந்தருளி யிருந்தாராய், தம்மையறியாதே கலங்கிக்கிடக்கிற படியைக்கண்டு, பெருமாளுக்கிவர் சிநேஹித்திருக்கும்படியை அறிந்திருக்கையாலே, மெள்ளச்செவியிலே யூதினாப்போலே "அழகிய மணவாளப்பெருமாளேசரணம்'' என்றாராம்; அநந்தரம் அதிலேயுணர்த்தி யுண்டாய்நெடும்போதெல்லாம், "அழகிய மணவாளப்பெருமாளே சரணம்'' என்று திருநாட்டுக்கு நடந்தாராம்.

௩-ம். பாட்டு - இதுகாண்மின்.

அ௫. (மிக்கசீர்த்யாதி.) அநந்ய ப்ரயோஜனரான ஸ்ரீவைஷ்ணவர்களிட்ட திருத்துழாயில் பரிமளத்தை வண்டுகொண்டுவந் தூதுமாகில். இப்படி ஜீயரருளிச்செய்தவாறோ, "'துளவின்வாசமே' என்னவமையாதோ, 'மிக்கசீர்த்தொண்டர்'என்கிற விவ்விசேஷணத்துக்குக் கருத்தென்'' என்று நான்கேட்டேன்; "இவள்தான் நோவுபடுகிறது 'அத்தலைக்குப் பரிவரில்லை' என்றாயிற்று, 'அங்கே அநந்ய

ப்ரயோஜனர் பரிமாறுகின்றார்கள்' என்றவாறே உறங்காத கண்ணுமுறங்கும், பழையநிறமும் வருங்காண்'' என்றருளிச்செய்தார்.

எ-ம். பாட்டு - அணங்குக்கு.

அசு. (உணங்கலித்யாதி) ஜீவன சாதனமான வ்ரீஹியானது நசித்துப்போம் படிக்கீடாக, அத்தைத்தின்கிற கழுதையினுடைய உதட்டின் வ்யாபாரங் கண்டிருந்தாலென்ன ப்ரயோஜனமுண்டு; அப்படியே இவளைக்கொண்டு ஜீவிக்கவிருக்கிற நீங்கள் இவள்விநாசத்தைப் பலிப்பிப்பதான தேவதாந்தர ஸ்பரிசமுடையார் வ்யாபாரங் கண்டிருக்கிற வித்தாலென்ன ப்ரயோஜனமுண்டு. ப்ரயோஜனமில்லாமையேயன்று விநாசமேபலிப்பது. அன்றிக்கே, ஐயன்திருக்குருகைப் பெருமாளரையர் நிர்வஹிக்கும்படி. "உணங்கல்கெட - இவளுடைய உணங்குதல் கெட. இவளிளைப்புத்தீர - கழுதென்று து- பேய். கழுத்தை - பேயை. உதடாட்டம் கண்டென்பயன். நீங்களாடும் கள்ளும் ப்ரார்த்தித்துக்கொடுக்க, அத்தை அதுவினியோகங் கொள்ளும்போது அதினுடைய உதடாடுகிறத்தை கண்டிருக்கிறத்தாலென்ன ப்ரயோஜனமுண்டு'' என்று "கழுதுபேயும்பரனும்'' என்றுனிறே.

கக-ம். பாட்டு - தொழுதாடி.

அஎ. (தொழுதாடித்தூமணி வண்ணனுக்காட்செய்து நோய்தீர்ந்த) என்றதுக்கு அம்மங்கியம்மாள் பணிக்கும்படி-மோஹித்த வளல்பமாச்வஸித்தவாறே 'மோர்க்குழம்பு குடித்தாள், தரித்தாள், கண்விழித்தாள், வார்த்தை சொன்னாள், என்பர்களிறே; அதுபோலே காணும்'' என்று.

எ-ம். திருவாய்மொழி—சீலமில்லா.

அ-ம். பாட்டு - கண்டுகொண்டு.

அஅ. (நின்திருப்பாதங்கள்மேல்) "த்வத் பாதபங்கஜ பரிக்ரஹதன்ய ஜன்மா பூயாசம்'' என்கிறதுக்கு ஆளவந்தார் வார்த்தை. "அழகிது, வருத்த விஷயத்திலே யாகப்பெற்றிலோம்'' என் றருளிச்செய்தார்.

அ - ம். திருவாய்மொழி—ஏறனும்.

உ - ம். பாட்டு - மணிமாமை.

அகூ. (அணிமானத் தடவரைத்தோள்) அணியென்று- ஆபரணம். மானமென்று-அளவு. "'சர்வபூஷண பூஷார்ஹா:' என்கிறபடியே ஆபரணத்துக் காபரணமான தோள்'' என்று ஜீயர் அருளிச்செய்வர். "அணியென்று-அழகாய், மானமென்று - பெருமையாய், அணிபெருகியதோள்'' என்றொரு தமிழன்.

கூ௦. (அடியனே) சுமரிருந்து போகாமே. பரதந்திரஜன்மமாயிருக்க வகுத்தவனுக் குறுப்பன்றிக்கே போகாமே. இங்கே யருளிச்செய்யும் வார்த்தை - எழுந்தருளி யிருக்கிற மடத்திலே ஸ்ரீவைஷ்ணவர்க ளமுதுசெய்யாநிற்க, ஆச்சான் தண்ணீரமுது பரிமாறுகிறவர், ஒருவர்க்கே சாயாநின்று பரிமாறினார்; அத்தை யுடையவர்கண்டு ஓடிவந்து முதுகிலேமோதி, "நேரேநின்றன்றோவுடோ பரிமாறுவது" என்றார்; என்ன, ஆச்சான் "பணிமானம்பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" என்று பணித்தான்.

கூக. (கவராத) வடிவிற்சுவட்டை யறிவித்து என்னை அநுபவிப்பியாநாகில், பவ்யமான நெஞ்சா லெனக்கென்ன கார்யமுண்டு. ஜீயர் இவ்விடத்திலே அருளிச்செய்வ தொருவார்த்தையுண்டு - "'பூசுஞ்சாந் தென் னெஞ்சமே' என்கிறபடியே அன்றப்படியே இத்தை விரும்பினவன் னின்றிப்படியே யுபேக்ஷிக்கையாலே, 'நாயகன் வரவு தாழ்த்தான்' என்று அவன்முன்னே சாந்தைப் பரணியோடே யுடைப்பாளைப்போலே, 'என்னெஞ்செனக்கு வேண்டா' என்கிறாள்" என்று.

அ-ம். பாட்டு - வரிவளையால்.

கூஉ. ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கும் ருக்மிணிப் பிராட்டிக்கு முண்டான விடாய்தனக் கொருத்திக்கு முண்டாகையாலே, அவர்களிருவரும் பெற்றபேற்றை நானொருத்தியு மொருகாலே பெறவேணுமென்கிறாள். "இதுபட்ட ரருளிச்செய்ய நான்கேட்டேன்" என்று பிள்ளையருளிச்செய்வர்.

கூ-ம். பாட்டு - மேகலையால்.

கூ௩. (மேகலையால் குறைவில்லா) "உசைக்குக் கூறையுடை யழகியதாயிருக்கும்போலேகாண்" என்னுமாம் வங்கிப்பொரத்துநம்பி.

கூ-ம். திருவாய்மொழி—நண்ணாதார்.

ப்ரவேஶம்.

கூச. (உடம்புவேண்டா, உயிர்வேண்டா) என்றவிடத்தில் எம்பார் "உன்னைப் பிரிந்திருந்து படுகிற க்லேசத்தி னளவல்ல உன்னை யொழிய புறம்பே பேறுமிழவுமாயிருக்கிற ஸம்சாரிகள் நடுவேயிருக்கிற விருப்பால் படுகிற க்லேசம், இத்தை தவிர்த்தருளவேணு மென்கிறார்" என்றருளிச்செய்வர். ஆழ்வான் அங்கனன்றிக்கே, "'பரமபதத்தில் அயர்வறு மமரர்க ளடிமைசெய்ய பெரியபிராட்டியாரும் நாமுமாக வ்யாவ்ருத்தமாக விருக்கிற விருப்பைக்காட்டித் தந்து அங்

கேயும்முடைய நெஞ்சு ப்ரவணமாம்படி பண்ணினோமாகில், இ யுமக்கு பேற்றுக்குக்குவா லுண்டோ, நாம் செய்யவேண்டுவதென் என்ன, இவையிரண்டையும் அநுசந்தித்து தரித்து க்ருதார்த் ராய் தலைக்கட்டுகிறார்" என்று பணிக்கும். இவற்றை பகவத் விஷய ப்ரவேசத்தில் பரக்கக்காணலாம்.

உ - ம். பாட்டு - சாமாறும்.

கூரு. (ஏமாறிக் கிடந்தலற்றும்) ஏவென்று-ஏக்கமாய், மாறுகை - தவிருகையாய், ஏங்காதே கூப்பிட்டென்னுதல்; அன்றியே, "ஏமாற்றம்" என்று-ஒருசொல்லாய், அதாவது-துக்கமாய், துக்கித்துக் கிடந்து கூப்பிட் டென்னவுமாம். "ஏவென்று—தெவு; ஏமாறுகை—தெளிவழிவை" என்று "கலங்கிக் கூப்பிடா நிற்பர்கள்" என்று பிள்ளையமுதனார் பணிப்பர்.

கO - ம். திருவாய்மொழி—ஒன்றுந்தேவும்.

உ-ம். பாட்டு - நாடிநீர்.

கூசு. (அவன்மேவியுறைகோயில்) "பரமபதத்திலும் சம்சாரிகள் படுகிற க்லேசத்தை யநுசந்தித்துத் திருவுள்ளத்தில் வெறுப்போடேயாயிற் றெழுந்தருளியிருப்பது" என்று பட்டரருளிச்செய்ய, "ஆச்சானும் பிள்ளை யாழ்வானு மித்தைக்கேட்டு 'பரமபதத்திலேயாநந்த நிர்பரனாயிருக்கிற விருப்பிலே திருவுள்ளத்திலே ஒரு வ்யசனத்தோடே யிருந்தானென்கை உசிதமோ' என்றார்கள்" என்று "பண்டிதர்" என்கிறவர்வந்து விண்ணப்பஞ்செய்ய, "'வ்யசநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவதிதுঃகிதঃ,' என்றதுகுணப்ரகரணத்திலேயோ துக்க ப்ரகரணத்திலேயோ, என்று கேட்கமாட்டிற்றிலீரோ; இது குணமாகில், 'குணம்' என்று பேர்பெற்றவற்றில் அங்கில்லாத தொன்றுண்டோ" என்று பட்டர் அருளிச்செய்தார்.

ச-ம். பாட்டு - பேசநின்ற.

கூஎ. (ஓரவம்பறைதல்) மஹாபலி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலேவந்து, "ராஜ்யமடைய வொளிமழுங்கி வாரா நின்றது, என் பலமும் குறைந்து வாராநின்றது, இதுக்கடியென்" என்ன, "நீ சர்வேச்வரன் பக்கல் பண்ணின வபராதத்தாலேகாண்" என்ன, "கோயம்விஷ்ணுঃ" என்றாப்போலே சில அநுத ரோக்திகளைப் பண்ண; என்தலையையறுத்து என்கையிலே தந்தாயாகில் "என் பேரன்பண்ணின வுபகாரம்" என்றிருக்கலாயிற்று, என்முன்பே பகவன்னிந்தையை பண்ணினாய் நீராஜ்ய ப்ரஷ்டனாவாய் என்று

சபித்துவிட்டான். இந்தை இப்படியே பட்டர் அருளிச்செய்த வாறே, "ப்ரக்ருதிபுருஷ விவேகம்பண்ணி யிருக்கிற விவன் ஆத்மாவுக்கு சங்கோசம் வருமென்றை பாரியாதே 'ராஜ்யப்ரஷ்டாஸ்த்ராபத்' என்றானென்" என்று கேட்க, "நாயை தண்டிக்கையாகிறது அமேத்யத்தை விலக்குகையன்றோ, பாம்பை விலக்குகை யதுக்கனபி மதமன்றே; இவனுக்கநிஷ்டம் செய்கையாவதிதிறே" என்றருளிச்செய்தார்.

எ-ம். பாட்டு - ஓடியோடி.

கூஅ. (இமௌஸ்ம) என்று தாழநிற்க வல்லானிவனேயிறே. "யாதவர்கள் முடிவிலேவந்தவாறே வாட்கோரையை யிட்டொருவரை யொருவரெறிந்து முடிந்துபோனார்கள்" என்று கேட்டவாறே, "க்ருஷ்ணனிவர்கள் விஷயமாக பாங்கிதி பத்மநிதி துடக்கமான வற்றைக் கொடுவந்து கொடுத்துச் செய்யாதனவில்லை, பின்னையும் முடிவிலே வந்தவாறே யிப்படியேயா யிருந்தது; 'நம்முடைய பகவத் ஸமாஶ்ரயணத்துக்கும் பலமங்கனே யாகிறதோ' என்றஞ்சியிருந்தோம்" என்ன, "அங்கனாகாது, அஞ்சவேண்டா, அவர்கள் 'இவனென்தோழன், மைத்துனன்,' என்று தேஹஸம்பந்தத்தைக் கொண்டு விரும்புகையாலே யவர்களுக்கு தேஹாவதியாய் விட்டது; நாம் ஸ்வரூப க்யானத்தாலே, 'நித்யனான வாத்மாவுக்கு வகுத்த பேறுபெறவேணும்' என்று பற்றுகையாலே பேறும் யாவதாத்மபாவியா யிருக்கும்" என் றருளிச்செய்தார்.

ரு-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—கையார்சக்கரம்.

க-ம். பாட்டு - கையார்சக்கரம்.

கூகூ. (மித்ரபாவேந) என்கிற ஶ்லோகத்திலே எம்பார், "சர்வக்கியனுக்கொரு அக்கியானமும் விஸ்ம்ருதியும், சர்வஶக்திக்கொரு அஶக்தியுமுண்டு" என்றருளிச்செய்வர்.

ச-ம். பாட்டு - என்கொள்வன்.

க00. "'பொய்யேகைம்மைசொல்லி' என்றும், 'சிலகூத்துச்சொல்ல' என்றும், 'உள்ளன மற்றுளவாட்புறமே சிலமாயஞ்சொல்லி' என்றும்-பகவத் விஷயத்திலேயும் பொய்சொல்லிப் போந்தேனென்றார்; 'இப்படி பொய்யனுகைக்கு நிபந்தனமேது' என்று பார்த்தார், ப்ரக்ருதி சம்சர்க்கமாயிருந்தது; 'மெய்யேபெற்றொழிந்தேன்', 'கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்' என்றவற்றை மறந்தார்; இந்த ப்ரக்

ருதி சம்பந்தத்தாலே இதர விஷயங்களிலே ப்ரவணமான மனஸ்ஸை அவற்றில் நின்றும் மீட்டு உன்பக்கலிலே ப்ரவணமாம்படி பண்ணி, தேஹத்திற் காட்டில் ஆத்மாவை பிரியவநுசந்திக்கைக் குக்ஷமனுகிறிலேன், நீயே யென்விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக்கொண்டருளவேணு மென்கிறார்" என்று பட்ட ரருளிச்செய்யும்படி. அன்றிக்கே, "'கண்டுகொண்டுய்ந் தொழிந்தேன்' என்றார், அது - ஞானநு சந்தானமான காட்சியாயிருந்தது; காட்சிக்கனந்தரம் பாஹ்ய சம்ஸ்லேஷா பேக்ஷை பிறந்துகையை நீட்டினார், கைக்குளகப்படக் கண்டிலர், அத்தாலே தளர்ந்து; இதுக் கடிதேஹ சம்பந்தமா யிருந்தது, இத்தைக் கழித்துக் கொள்ளுகைக் கீடாயிருப்பதொரு சாதனானுஷ்டான க்ஷமனுகிறிலேன் பக்திபார வஶ்யத்தாலே, ஆனபின்பு நீயே யென் விரோதியைப் போக்கி யுன் திருவடிகளிலே யழைத்துக் கொண்டருளவேணு மென்கிறார்" என்று நிர்வஹிப்பாருமுண்டு.

எ-ம். பாட்டு - அம்மான்.

கoக. (யானார்)நித்யசம்சாரிகளுக்கு மிவ்வருகாயிருந்தேன் நான். பிள்ளையமுதனார், "அம்மானாழிப்பிரான்" என்று மேலேகாட்டி, "யானார்" என்று குறையச்சொல்லிக் காட்டுவர்.

கூ-ம். பாட்டு - ஆவார்.

கoஉ. "(திருச்சக்கரம் சங்கினோடும் - அடியேனோடுமோனன் என்று) கையில் ஆழ்வார்களோடு பொருந்தினப்போலே என்னோடே வந்து கலந்தான் என்கிறார்"என்று ஆளவந்தா ரருளிச்செய்தாராக திருமாலையாண்டான் பணிக்கும்படி. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இங்கனே யாகவடுக்கும் - கூராராழி வெண்சங்கேந்தி-வாராய்- என்றுயிற் றிவ ராசைப்பட்டிருப்பது, ஆசைப்பட்டபடியே திவ்யாயுதங்களோடே வந்து கலந்தா னென்கிறார்" என்றருளிச்செய்தருளும்படி.

உ-ம். திருவாய்மொழி—பொலிகபொலிக.

ப்ரவேஶம்.

கoரு. "ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயைக்காண்கைக்காக நித்யசூரிகளிங்கேவர, அவர்களைக்கண்டு மங்களாஶாசனம் பண்ணுகிறார்" என்று இத்திருவாய்மொழியை ஆளவந்தா ரருளிச்செய்தாராக திருமாலையாண்டான் பணிக்கும்படி. "நண்ணுதார் முறுவலிப்பவிலே - சம்சாரிகள் படுகிற க்லேசத்தை யனுசந்தித்து, அதுக்கு பரிஹாரமாக, ஒன்றுந்தேவிலே - பகவத் பரத்வத்தை யுபபாதித்துத் திருத்த, அத்தாலே திருந்தி சம்சாரபரமபதவி பாகமற்று

அங்குள்ளாரு மிங்கே வரலாம்படி யிருக்கிற விருப்பைக்கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்" என்று இங்குள்ளார் பக்கலிலே ப்ராதான்யம் தோற்ற எம்பெருமானு ரருளிச்செய்யும்படி.

க-ம். பாட்டு - பொலிகபொலிக.

க0௪. (பொலிக பொலிக பொலிக) "முற்பட பகவத்ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம்பண்ணி, பின்னை பாகவதஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணவேண்டாவோ பெரியாழ்வாரைப்போலே" என்ன; அப்படியே யன்றோ செய்தது, வீற்றிருந் தேழுலகிலே - பகவத் ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணினார் கண்டீரோ; பின்னை யிதிலே-பாகவத ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்" என்று ஜீய ரருளிச் செய்தார். பரமாசார்யரான விவரைப் பின்சென்றாரித்தனைகாணும் பெரியாழ்வாரும்.

௩-ம். பாட்டு - திரியும்.

க0ரு. (பெரிய கிதயுகம்பற்றி) கலிகாலாதிகளால் வ்யவஹிதமல்லாத ஒரு போகியான க்ருதயுகத்தை யுடைத்தாய். அன்றிக்கே, ஆப்பான் "ஆதி ஸ்ருஷ்டியில் க்ருதயுகத்தைக்காண் சொல்லுகிறது" என்பராம்.

௩-ம். திருவாய்மொழி—மாசறுசோதி.

ப்ரவேஶம்.

க0௬. "ராவணன் மாயாசிரஸ்ஸைக் காட்டினபோது, இதர ஸ்ரீகள் அஹ்ருதயமாக வழுமாப்போலே தன்னாற்றாமையாலே கூப்பிட்டு, இவ்வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பானேன்" என்று பட்டரைச் சிலர்கேட்க, "க்யாநுக்யானங்களன்று ஜீவன நிமித்தம், அத்தலையில் சத்தையாயிற்று ; அதுக்கழிவில்லாமையாலே யிருந்தாள்" என்றருளிச்செய்தார்.

ரு-ம். பாட்டு - கடியன்.

க0எ. (அவனென்றேகிடக்கும்) இதுக்கு பிள்ளான் பணிக்கும்படி-"இத்தோஷங்க ளவ னிவனன்றே" என்று ; அவன் கடியனென்றால், அவன் கடுமை யிப்போதே காணவேணும் ; கொடியனென்றால், அவன் கொடுமையிப்போதே காணவேணும் ; அவன் துஷ்ப்ராபனென்றால், அவன் துஷ்ப்ராபனானபடியை யிப்போதே காணவேணும்; அவன் சர்வஸ்வாபஹாரியென்றால், அவன் சர்வஸ்வாபஹாரம் பண்ண, நானிழந்திருக்கக் காணவேணும்; அவன் துர்ஜ்ஞேயனென்றால், அவன் துர்ஜ்ஞேயதை யிப்போதே யறியவேணு மென்றாம். அன்றிக்கே (அவனென்றே கிடக்கும்) என்னெஞ்சுக்கு மாயாவாத ருசியுண்டாகிலு மறியேன். அதாவது-விஶேஷணம்சத்தில் தாத்பர்ய மின்றிக்கே விஶேஷ்யத்துக்கு அவ்வருகறிகிறதில்லை.

சு - ம். பாட்டு - அன்னையென்.

க0அ. (வலையுள்-அகப்பட்டேன்) அப்போது வானதில்லன்றிக்கே, அவனெம்மனைக்குறித்து நோக்கின நோக்கிலும் ஸ்மிதத்திலுமன்றோ நானகப்பட்டது. ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் வலையாக அபிநயித்துப்பாடாநிற்க, திருக்கண்களை காட்டியருளினாரெம்பெருமானார்; "கமலக்கண்ணனென்னும் நெடுங்கயிறு" என்னக்கடவதிறே அனுகூலம்போலேயிருந்து தப்பாதபடி அகப்படுத்திக்கொள்ளும் நோக்கிலே அகப்பட்டேன்.

எ - ம். பாட்டு - வலையுள்.

க0கூ. (தலையிலித்யாதி) இத்திருவாய்மொழியை ஆழ்வான் ராஜேந்திரசோழனில் சந்தியர் சதஸ்ஸிலே நிர்வஹியாநிற்க, ஆமருவி நிரைமேய்த்தான் நம்பியாரென்று நூறுவயஸ்ஸு போந்திருப்பாரொருவர் நடுங்க நடுங்க வெழுந்திருந்து நின்று, "ஆழ்வான், தலைமகள் தலையாலே வணங்கப்பெறுமோ" என்ன "பெறும், சிஷ்டாசார முண்டுகாணும்; ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் அநுஷ்டித்தாள் காணும்" என்றருளிச்செய்தார்.

கக-ம். பாட்டு - இரைக்கும்.

கக0. (இரைக்குங்கருங்கடல்வண்ணன்) அநந்தாழ்வான் பணித்தானாக நஞ்சீயர்வந்து பட்டருக்கு, "'சாபமானய' என்றபோது கடல்கீழ் மண்கொண்டு மேல் மண்ணெறிந்தாப்போலே யாயிற்று, இவள் 'மடலூர்வன்' என்று துணிவைக்கேட்டு அவன் தன் சர்வாதிசத்வம் கலங்கினபடி" என்றருளிச்செய்தார்.

சு - ம். திருவாய்மொழி—ஊரெல்லாம்.

சு - ம். பாட்டு - பின்னின்ற.

ககக. (இன்னின்ற நீளாவிகாப்பாரார்.) முடியவேண்டு மளவிலே நூறே பிராயமாயிருக்கிற விவ்வாத்ம வஸ்துவை முடித்து நோக்குவாரார். "அச்சேத்யோய மதாஹ்யோயம்" என்கிற வசனத்தைக் கொண்டு நின்று வழக்குப் பேசாநின்றதாயிற்று ஆத்மவஸ்து. இத்தை முடித்து நம்மை நோக்குவாரென்கிறதென்று இப்படி முறுகச்சொன்னது தன்னை, ஒருதமிழன் இச்சப்தத்துக்கு தாத்பர்யமாக யிட்டு வைக்கிறான் "பிரிவிலும் முடியாத வென்னுயிர்ப்பகையைநீக்கி, என்னை நோக்குவாரார்" என்று.

எ - ம். பாட்டு - காப்பாரார்.

ககஉ. (சேட்பாலவித்யாதி) மிக்கநெடுமையை ஸ்வபாவமாக வுடைத்தானகல்பமாய்க்கொண்டு செல்லுகிற, கங்குல்வாய் - ராத்ரியிடத்து.

தமிழாசாரியன் என்று நம்பூருக்கு ஆகஸ்தியரே பாதியாயிருப் பானொருவன், "செல்கின்ற காலகத்து" என்று வ்யாக்யானம் பண்ணிவைத்தான்.

சு-ம். திருவாய்மொழி—கடல்ஞாலம்.

எ-ம். பாட்டு - உற்றார்கள்.

ககங. (உற்றார்களை அழிப்பேனும்) அவர்களுக்கு ப்ரயோஜநாந்தரங்களிலே ருசியுண்டாகில், அந்த ப்ரயோஜநங்களைக் கொடுத்து எல்லாக் கலிகின்று மகற்றுவேன் நானேயென்னும். அன்றிக்கே, ஆண்டான் பணித்தானாக இளையபெருமாள், "அவர்களை சவுந்தர்யாதிகளாலே அழிப்பேனும் நானேயென்றுநின்றாள்" என்றருளிச்செய்வர்.

சு-ம். பாட்டு - கொடியவினை.

ககச. (கொடியானிலங்கை செற்றேனேயென்னும்) இவ்விடத்தில், "கொடியானென்கிற விடம் - திருத்தாயார் வார்த்தைகாண்" என்றருளிச் செய்வர் ஜீயர், எதிரிகளை யிவளொன்றாக மதித்திருந்தாளாகாமைக்கு; அவனாலே ஆவிஷ்டையிறேயிவள்.

எ-ம். திருவாய்மொழி—நோற்றநோன்பு.

க0-ம். பாட்டு - ஆறெனக்கு.

ககரு. (ஆறெனக்கித்யாதி) "ஆறென்று-வழி. வழியென்று-உபாயம். 'எவ்வாறு நடந்தனை,' 'இப்பொய்கைக் கெவ்வாறு வந்தாய்' என்னக் கடவதிறே. பேறென்று-உபேயம். உபாயோபேயங்க ளிரண்டும் முன்திருவடிகளே யாம்படி பண்ணித் தந்தாயே" என்று பிள்ளான் பணிக்கும். "இவை இரண்டாலும்-உபாயத்தையே சொல்லுகிறது" என்று பட்டரருளிச்செய்வர். (நின்பாதமே) நின்பாதமேயென்கிற விடத்தை - இங்கே அன்வயித்து, பேபதமாக்கி நிர்வஹிப்பர் ஆப்பான் திருவழுந்தூரரையர்.

அ-ம். திருவாய்மொழி—ஆராவமுதே.

ரு-ம். பாட்டு - அழுவன்.

ககசு. (ஆகாசத்தை நோக்கி) "என்னுடைய நிராலம்பனத்தையைப் பார்த்து" என்றாண்டான் வார்த்தை. அன்றிக்கே, "ககநாஸக்தலோசந:" என்று கொண்டு கண்களிலக்கிற் றைக்கமாட்டாதபடி யாயிற்று சென்றற்றபடி.

கூ - ம். திருவாய்மொழி—மானேய்நோக்கு.

ப்ரவேஶம்.

கசஎ. (திருவல்லவாழிலே நான் நினைத்தபடியே போய்ப்புகுப் பரிமாற வல்லேனே யென்று அவர்களுக்குச் சொல்லுகிறுளா யிருக்கிறது.) "இதுதான் நானனுபவித்தேன்" என்று ஜீயரருளிச்செய்வர்-பட்டர் திருவடிகளை யாஶ்ரயித்துப் பின் பொருகால் மேல்நாட்டுக் கெழுந்தருளி மீண்டு பெரியத்வனையோடே "திருநாளுக்குதவ வேணும்" என்றுவர, திருக்கரம்பன் துறையளவிலே வந்தவாறே அசிந்திதமாக ஆறு பெருகிக்கிடக்க; இராத்திருஞள் எழுந்தருளி இங்குண்டான சம்ப்ரமங்களெல்லாம் செவிப்படுவது, வந்து புகுரப்பெருதொழிவதாய்க்கொண்டு "போரநோவு பட்டோம்" என்றருளிச்செய்வர்.

க-ம். பாட்டு - மானேய்நோக்கு.

கசஅ. (மானேய்நோக்குநல்லீர்) "நான் திருவல்லவாழிலே போய்ப் புகும்படி உங்கள்கண்ணுலே குளிரநோக்கி ப்ரசாதிக்கவேணு மென்கிருள்" என்று பிள்ளான்பணிக்கும்.

கசகூ. (ப்ராமாணிகனுக்கு ப்ரதிபத்தியுண்டு) என்கைக்கோளா திஹ்யம். நல்லான் பட்டர் ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்து, நெடுங்காலம் சேவித்து, பின்பு அந்திமதசையிலே பட்டரொழுந்தருளி, "என்னினைத்திருந்தாய்" என்ன, "'ஒருசர்வசக்தி யுபகரிக்கும்போது இங்கனே கனக்கவாகாதே யுபகரிக்குமது' என்று நினைத்திருந்தேன்" என்ன, "அதுவென், உன்தேசத்தை விட்டு பந்துக்களை விட்டு நெடுந்தூரம்போந்து இங்கனே நோவுபட்டுத் திருவடி சேரக்கிடந்தாயாகி லிங்குபகாரமென்" என்ன, "தேசாந்தரத்திலே யிருந்து அப்ரசித்தனுய் விழுந்துபோகக் கடவவென்னை இவ்வளவு மழைப்பித்து, உம்முடைய திருவடிகளை ஆஶ்ரயிக்கப் பண்ணி ருசியை விளைப்பித்து, இத்தேசத்திலே யும்முடையகண்வட்டத்திலே சரீரவியோக முண்டாம்படி பண்ணினுனே" என்ன, "ஆனாலும், தானுக வபிமானித்த சரீரம் போகாநிற்க நீயிங்கன் நினைத்திருந்ததென்கொண்டு" என்ன, "ப்ரமாணங்கொண்டு நினைத்திருந்தேன்" என்ருன்.

ச-ம். பாட்டு - நிச்சலும்.

கஉ௦. (நிச்சலும் தோழிமீரித்யாதி) "மாசறு சோதிதுடங்கி இவ்வளவும் வரஹிதஞ் சொல்லுகிற நீங்களென்ன ப்ரயோஜனம் பெற்றிகோள்" என்று பிள்ளான்.

கஉக. (பலவும்) பா. "'(நீள் - கமுகும்) என்றாற்போலே, பலவும் - தெங்கும், வாழைகளும்,' என்று (பச்சிலை நீள் என்கிறத்தை-அவற்றிலையும்) உயர்ந்தபின்னை கூட்டும்படி காணும்" என்று ஜீயரருளிச்செய்வர்.

க0-ம். பாட்டு - தொல்லருள்.

கஉஉ. (கலியன்) உகப்பு. அன்றிக்கே ஸ்வாபாவிகக்ருபையாலுண்டான சுக்ருதத்தாலே யவனைக்கண்டு திருநாமங்களைச் சொல்லக் கூடவற்றோ வென்னுதல். "'நா, நீரற்றிருக்கை பாபபலமிறே, நா நீருண்டாயித்திருநாமம் சொல்லவல்லோமே யென்கிறாள்' என்று அம்மங்கியம்மாள் வாக்யார்த்தமாகச் சொல்லும்" என்றருளிச்செய்வர்.

க0-ம். திருவாய்மொழி—பிறந்தவாறு.

ப்ரவேசம்.

கஉ௩. "'ஆஸ்ரிதனை வாழ்விக்கவு மநாஸ்ரிதனை யழியச்செய்யவும் அடியிட்டப்படி வளர்ந்தருளின க்ருஷ்ணவதாரத்தையு மனுசந்தித்து மிகவும் சிதிலரான விவர்; தரித்து நின்றுன்னை யனுசந்திக்க வல்லேனாம்படி பண்ணியருள வேணுமென்று அவனை சரணம் புகுகிறார்' என்றாழ்வான் பணிக்கும். அன்றியே, 'விஸ்லேஷ சமயத்திலேயுன் குணங்கள் புத்திஸ்தமாய்க்கொண்டு மிகவும் நலிய, அத்தாலே நெருக்குண்டு நோவுபடுகை தவிர்ந்து, உன் திருவடிகளிலே வந்து சேர்ந்துன்னைக் கிட்டியனுபவிக்கும்படி பண்ணியருள வேணுமென்று அவனைக் குறித்தருளிச் செய்கிறார்' என்று எம்பாரருளிச்செய்யும்படி. அங்கனன்றிக்கே, சர்வேஸ்வரன் க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம் பண்ணி திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான்' என்று கேட்டு, 'அங்கேயதாமனோரதம் நமக்கும் கலந்து பரிமாறலாம்' என்று தெற்குத் திருவாசலாலே சென்று புக, 'இப்போது இங்கனே வடக்கிற் திருவாசலாலே புறப்பட்டு தன்னுடைச் சோதியேற வெழுந்தருளினான்' என்று கேட்டு விழுந்து கிடந்து கூப்பிடுகிறார்' என்று பிள்ளான் பணிக்கும்."

உ-ம். பாட்டு - வதுவை.

கஉச. "இப்பாட்டில் மூன்றர்த்தம் சொல்லாநின்றது, அதாவது-அனுகூல ஸம்ஸ்லேஷமும், பிரதிகூல நிரசனமும், மத்யஸ்த ரக்ஷணமுமான இவற்றை-அது விது வுது என்கிறது" என்னும் பிள்ளான்.

ச-ம். பாட்டு - கள்ளவேடத்தை.

கஉரு. (வெள்ளநீரித்யாதி) இதுக்காளவந்தார் அருளிச்செய்ததாக திருமாலையாண்டான் பணிக்கும்படி - "ப்ரம்ஹ ருத்ரர்கள் நடுவே நின்ற

தொரு முதல்களவுண்டு அத்தைச் சொல்லுகிறது” என்றாயிற்று. அதாவது-ருத்ரனையும் தன்னையும் சமமாகச் சொல்லலாம்படி த்ரிமூர்த்தி மத்யஸ் திதியை சொல்லுகிறதென்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, “அழகியது, ஆகிலு மத்தனை தூரம் தேடி போகவேணுமோ, இவன்றன் விஷயத்திலே முன்பு பண்ணின உபகாரத்துக்கு ஓரளவுண்டோ, இதுதானே வமையாதோ” என்றருளிச் செய்தார்.

சூ-ம். பாட்டு - நின்றவாறும்.

கஉசூ. (நின்றவாறு மிருந்தவாறுங் கிடந்தவாறும்) என்றாழ்வார் பாடாநிற்க, “இவை யெல்லாம் தொட்டிலிலே” என்றருளிச்செய்தார் எம்பெருமானார். தொட்டிற்பழுவைப் பிடித்துக்கொண்டு நிற்கும்படியும், தரித்து நிற்கமாட்டாமை விழுந்திருக்கும்படியும், அதுதான் பொறுக்கமாட்டாமை சாய்ந்துக்கிடக்கும்படியுஞ் சொல்லுகிறது.

சூ - ம். பத்து.

க - ம். திருவாய்மொழி—வைகல்.

ப்ரவேசும்.

கஉஎ. உருத்தோரும் இத்திருவாய்மொழி யருளிச்செய்யப் புக்கவாறே ஜீயரருளிச்செய்யும் வார்த்தை - “பாண்டவர்கள் கார்யத்துக்காகத் தன்னை யொக்கி அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கூடத்திரியச் செய்தேயு மவர்கள் பட்ட வ்யசனமெல்லாம் படுகிறார்காணு மிவரும்; அவர்கள்தான் ஒரு தர்மாபாசமுண்டுயென் றிருக்கையாலே வ்யசனப் படுகிறார்கள், இவர்க்கதுவு மின்றிக்கே யிருக்க என்செய்யப் படுகிறார்” என்றருளிச்செய்வர்.

க - ம். பாட்டு - வைகல்.

கஉஅ. (குருகினங்காள்-கைகள் கூப்பிச் சொல்லீரென்று க்ரியை.) பண்டை முதலிகள், “பத்தாம்பாட்டிலே-ப்ரணய ரோஷந்தோற்றச் சொல்லுகிறாள்” என்று நிர்வஹிப்பர்கள். “பாட்டுத்தோறும் - கிலாந்தோற்றச் சொல்லுகிறாள்” என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

கο - ம். பாட்டு - வேறுகொண்டு.

கஉகூ. (சில வண்டுகளைக்குறித்து அவரித்தலையில் சத்தையுமில்லையென்றிருப்பர், அவளுமுளளென்று சொல்லுங்கோளென்கிறாள்) என்று ஆளவந்தார் அருளிச்செய்வர். “இத்தலை இல்லையாகி லத்தலை யுண்டாகக்கூடாது; ‘பெண்பிறந்தார் காரியமெல்லாஞ் செய்தோம்’ என்று க்ருதக்ருத்தியரா யிருக்கிறவருக்கு, ரக்ஷியவர்க்கத்திலே

நாளு மொருத்தி யுண்டென்று சொல்லுங்கோ ளென்கிறாள்” என்று எம்பெருமானார் அருளிச் செய்வர்.

க௩0. (என்னையுருளையென் மின்களே) இன்னமும் நோவுபடுகிறாருண்டென்று சொல்லுங்கோள். ஆளவந்தார் அருளிச்செய்த தாகத்திருமாலையாண்டான் பணிக்கும்படி. “‘இத்தலையைப் பிரிந்தாரிலிருப்பாரில்லை’ என்றிருக்கையாலே வாராதொழிந்தாரத்தனை, இத்தலையில் சத்தையுள்ளமையை யறிவியுங்கோள்” என்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, “அழகிது; ஆகிலும், ‘இன்றியமையாமை’ என்று தமிழரதொரு ப்ரவாதமுண்டு; அதாகிறது - ஒரு தலையுண்டானால் ஒருதலை யின்றிக்கே யிராது; இரண்டு தலையுமுண்டாதல், இரண்டு தலையு மின்றிக்கே யொழிதல் இத்தனையாயிற்று. அதில், தாமுளராகையாலே இத்தலையுமுண்டென்கை நிச்சிதம்; ஆனபின்பு ப்ரதிகூலித்தாரை கிழங்கெடுத்துப் பொகட்டு அநுகூலித்தார் தலையிலே முடியை வைத்து க்ருதக்ருத்தியராய், ‘இனி கர்த்தவ்யசேஷமில்லை’ என்றிருக்கிறவருக்கு, இன்னமும் ரக்ஷியவர்க்கமொன் றுண்டென்று சொல்லுங்கோள்” என்று.

உ-ம். திருவாய்மொழி—மின்னிடைமடவார்.

ப்ரவேசம்.

க௩க. இத்திருவாய்மொழி தன்னை பூர்வாசாரியர்கள், “பகவத்விஷயத்தில் சாபத்னியம் தோற்றவார்த்தை சொல்லுகை சேஷத்வ லக்ஷணமன்று, வளவேழுலகிற் படியாலே அயோக்யதாநுசந்தானம் பண்ணுகிறார்” என்று நிர்வஹிப்பர்கள். இத்தை பட்டர்கேட்டு, “என்சொன்னாரானார்கள்; இவருக்கு பகவத்விஷயத்திலுண்டான ருசிக்குப் ப்ரகாசக மித்திருவாய்மொழியாயிருக்கும், இதுக்குவேறே யொரு வழியிடுவதே, ஆனபின்பு இதுவே பொருளாமித்தனை” என்றருளிச்செய்தார்.

க-ம். பாட்டு - மின்னிடைமடவார்.

க௩உ. (நம்பீ) முகப்பழக்கமின்றிக்கேயிருந்தது. முதலியாருமாயிராநின்றீர், கடுகப்போகப்பாரும். “கண்டகாட்சி புல்லெழுந்து போனபடியிறே இவளிங்கன் சொல்லுகிறது” என்று பெரியமுதலியார்வார்த்தை.

உ-ம். பாட்டு - போகுநம்பி.

க௩௩. (இன்ன மென்கையகத் தீங்கொருநாள் வருதியே லென்சினந்தீர்வனே) என்றித்தை உய்ந்த பிள்ளை பாடாநிற்கச்செய்தே, காலாலே யுதைப்பது கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக் காட்டி

ஞர்; இத்தை எம்பார் கேட்டருளி, "அங்கனன்று, அது பின்னைப்பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்துக்கிடந்தன்றோ; ஆனபின்பு அதன்று பொருள்" என்று முகத்தைத் திரியவைத்துக் காட்டினர். "நீயகல நின்றுபண்ணினவை யல்லாமுன் சன்னிதியிலே யுன்னைப்பண்ணுவே னென்கிறாள்" என்றருளிச்செய்தார். எம்பார்தாம் பாஹ்ய விஷயங்களில் ருசியில்லாமையாலே பதார்த்தக்யான மின்றிக்கே இருப்பர், இப்படியிருக்கையாலே "'ஸ்ரீகளுக்கு அசாதாரணமான சின்னங்க ளெங்கனே யிருக்கும்படி' என்று சிங்கப்பிரானை கேட்டருளினர்" என்று ப்ரசித்தமாயிருக்கும்; இப்படி யிருக்கிறவர் தாம் மின்னிடை மடவாரருளிச்செய்யப் புக்கால் "இந்த சன்னியாசி பிரட்டுபாடத் துடங்கினர்" என்பராம் பிள்ளையுறங்கா வில்லிதாசர். இவருடைய பகவத்விஷயத்தி லவகாஹன மிருக்கும்படி. ஒரு க்ஷுத்ர விஷயத்திலே நாலுநாள் வாசனை பண்ணினர்கள் போரவிதக்தராயிராநின்றார்கள், அவ்வளவல்லவிறே சமஸ்தகல்யாண குணாத்மகனோடே நெடுநாள் வாசனைபண்ணினர்க் கிருக்கும்படி. எம்பார் "ஈச்வரன் முன்னேவந்து நின்றாலும் 'வா' என்பாரையுங் கிடையாத சம்ஸாரத்திலே அவன் அல்பம் தாழ்த்தா னென்னு 'போ' யென்பாரைப் பெறுவதே" என்பர்.

௬-ம். பாட்டு - குழகி.

கந௪. (கழகமேறேல்நம்பி) அவர்கள் முன்னமானாராகிடுக எறட்டுக் கொள்ளாத தெங்களுக்கு பரமோ. நீர் முன்ன மெங்களோலக்கத்தில் புகுராதே கொள்ளும். இவ்விடத்தே பட்டரருளிச்செய்வ தொரு வார்த்தையுண்டு-"சமஸ்தகல்யாண குணாத்மகனாய் உபய விபூதி யுக்தனாய் சர்வாதிகனாய் சர்வநியந்தாவாயிருக்கிற சர்வேச்வரன், நாலிடைப் பெண்களிருந்தவிடத்தே புக்கல்லது நிற்கமாட்டாத செல்லாமைவிளைய, அவர்கள் 'நீயிங்குப் புகுராதேகொள்' என்ன விலங்கிட்டாப்போலே பேரவுந் திரியவு மாட்டாதே தடுமாறி நின்றான், என்கிற சவுசீல்யம் (தங்களையு மிவர்களையு மொழிய) யாரறிந்துகொண்டாட வ்யாசாதிகள் எழுதியிட்டு வைத்துப்போனர்களோ" என்றருளிச்செய்வர்.

அ-ம். பாட்டு - பிணக்கி.

கந௫. இப்பாட்டை ஜீய ரருளிச்செய்யாநிற்கச் செய்தே ஆப்பாநிருந்தவர் "இவர்க ளிவனைக் கடந்துபோனர்களாகிற்ச்செய்வதென்" என்று கேட்க, "அதார் காரியம், 'பின்னை யிரண்டத் தொன்று சித்திக்கும்' என்றன்றோ அவன்றான் கிடந்தது" என்றருளிச்செய்தார். நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான், கடந்துபோனர்களாகில் சம்ச்லேஷார்த்தமான க்ருஷிதலைக் கட்டிற்றாகிறது.

௩-ம். திருவாய்மொழி—நல்குரவும்.

௨-ம். பாட்டு - கண்டவின்பம்.

௧௩௬. நல்லாரும் நம்பி ஸ்ரீசேனாபதி தாசருங்கூடத் திருமலைக்குப் போகாநிற்க ஸ்ரீசேனாபதிதாசர் தண்டையிட்டு ஆற்றையடிக்க, நல்லார், "அர்த்தகாம நிமித்தமான த்வேஷமித்தோ டின்றிக்கேயிருக்க நிர் நிபந்தனமாக ஈஶ்வர விபூதியை நலிவதே" என்ற வார்த்தையை நினைப்பது.

௯-ம். பாட்டு - என்னப்பன்.

௧௩௭. (தன்னொப்பாரில்லப்பன்) சிலர்க்கொன்றை யுபகரிக்கு மிடத்தில் தன்னோடொக்க வுபகரிக்க வல்லாரில்லாதபடியான மஹோபகாரகன். இதுக்கு ஜீயரருளிச்செய்யும்படி-"மின்னிடை மடவாரிலே-அவன்வந்து மேல்விழ, நீயெனக்கு வேண்டாவென்று நான் தள்ளத்தள்ள; நீ யுனக்கு ஹிதமறிந்தாயோ, நானுனக்குவேணுங்காண் என்று தன்னையெனக்குத் தந்தவன்" என்று.

௪-ம். திருவாய்மொழி—குரவை.

௪-ம். பாட்டு - நோவவாச்சி.

௧௩௮. (நோவவாச்சி யுரலோடார்க்க விரங்கிற்றும்) ஜீயரிப்பாட்டை யியலருளிச்செய்யப் புக்கால் "'நோவ" என்றருளிச்செய்யு மழகுகாணும் நோவவென்கிறார் காணுமாழ்வார் - தன்திருமேனியிலே கயிறுறுத்தினாற்போலே" என்று நம்பிள்ளை யருளிச்செய்வர். ஒரு த்வேஷமுண்டாய் கட்டுகிற ளல்லளிறே, சிநேஹகார்யமான கோபமாகையாலே சிநேஹமுள்ளவளவு மிடைநிற்குமிறே கோபமும்.

௫-ம். பாட்டு - வேண்டித்தேவர்.

௧௩௯. (பிறந்ததும் வீங்கிருளவாய்) "மத்யராத்ரோ அகிலாதாரோ ஜாயமானே ஜநார்த்தநே" என்னும்படியிறே. "இவனும் விழுக்காடறியாதே யகப்பட்டுக் கொடுநின்றான், கம்ஸபயமும் ப்ராப்தமாயிராநின்றது, இருளாலேயிறே நாம்பிழைத்தது, இனி யிவ்விருளை ஶரணம் புகுமித்தனையிறே" என்று பிள்ளையுறங்கா வில்லிதாசர் பணிப்பராம். ஊரெல்லாந் துஞ்சியில் கூற்றமான விருளிவர்க்கிப் போதாதரத்துக்கு விஷயமாயிற்றிறே.

௮-ம். பாட்டு - நீணிலத்தொடு.

௧௪௦. (அப்பன்றன் மாயங்களே காணும் நெஞ்சுடையேன்) "'முடியானேயிற் கரணங்களையுடைய வாழ்வா ராகையாலே, நெஞ்சுதானே நினைக்கவும் வற்றாய்க் காணவும்வற்றாயிருக்கும், என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச்செய்வர்.

க0 - ம். பாட்டு - மண்மிசை.

கசுக. (உத்தமம்) கம்ஸாதிகள், துர்யோதநாதிகளால் வருமச்சமின்றியே, தனக்குப் பரிவரானவர்களிருக்கிற நிலத்திலேபோய்ப் புகப்பெற்றபடி. ஒரு தீர்த்தத்தினன்று நாயிறுபோது ஆண்டானும் எம்பாரும் தங்களிலே சந்தித்து, "'அஹங்கார மமகாரதூஷதராயிருப்பார் பத்துக்கோடிபேர் நடுவே, அதிசுகுமாரமான திருமேனியைக்கொண்டு பத்துநா ளெழுந்தருளி, நிரபாயமாகப் புக்கருளப்பெற்றபடி கண்டதே' என்று, ஒருவனையொருவர் தெண்டனிட்டுத் தழுவிக்கொள்ளாநிற்க, ஜீயர்கண்டேன்" என்றருளிச்செய்வர்.

ரு - ம். திருவாய்மொழி—துவளில்.

ப்ரவேஶம்.

கசுஉ. "இத்திருவாய்மொழி-ஆழ்வார் ப்ரக்ருதி சொல்லுகிறது" என்று நம் முதலிக ளெல்லாரும் போரவிரும்பி யிருப்பர்கள்.

கூ - ம். பாட்டு - இரங்கி.

கசுங. (மரங்களு மிரங்கும்வகை) எம்பாரை "மரங்களு மிரங்கக்கூடுமோ" என்று கேட்க, "இதருளிச் செய்தவன்று துடங்கி எத்தனை பாவசுத்தி யில்லாதார்வாயிலே புக்கதென்று தெரியாது; இங்ஙனே யிருக்கச்செய்தே யமகிய மாதிக்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான பருகைப்போலே நெகிழாதே யிருக்கிற நெஞ்சுகளு மின்றழிகிறபடி கண்டால் சமகாலத்தில் மரங்களிரங்கச் சொல்லவேணுமோ" என்றருளிச்செய்தார்.

எ-ம். திருவாய்மொழி—உண்ணுஞ்சோறு.

ரு-ம். பாட்டு - மேவி.

கசுச. (கண்டு) இங்கேயிருந்து மானசானுபவ மாத்ரமாய் க்லேசப்பட்டவள், கண்ணரக்கண்டு. "பிள்ளை திருநறையூரறையரும் பட்டருமாக உள்ளே ப்ரதக்ஷணம் பண்ணுகிற்க, இட்டவடிமாறி யிடமாட்டாதே கண்களாலே பருகுவானைப்போலே பார்த்து வாழ்ந்துகொண்டு போகிறபடியைப் பின்னேநின்று கண்டனுபவித்தேன்" என்று நஞ்ஜீய ரருளிச்செய்வர்.

கசுரு. ஆச்சானு மாண்டானுமாக கிழக்கே நடக்கிறபோது, திருப்பேருக்குக் கிழக்குப்போகவும் மாட்டாதே யேறித் திருவடிதொழவும் மாட்டாதே, திருப்பேர் நகரான் கோயிலைப் பார்த்துக்கொண் டிருந்தார்களாம்.

கசஎ. (ஆவியுள்குளிர) இவ்விடத்தை பட்டரருளிச்செய்யா நிற்கச்செய்தே மேலெழ வருளிச்செய்தாராய் சீராமப்பிள்ளை யிருந்தவர் "ஜீயா, எம்பாரருளிச்செய்யும்போது 'ஆவியுள்குளிர' என்று முகந்து கொண் டருளிச்செய்யும்படி கேட்டறிகை யில்லையோ" என்ற ருளிச்செய்தார்.

அ - ம். திருவாய்மொழி—பொன்னுலகு.
ப்ரவேசம்.

கசஎ. "(சொல்லவைத்தனளே) என்றது - செல்லுகையிலே யொருப்பட்டா ளென்றதாய், முட்டப்போகாமல் கிடந்து ஐகரஸ்யம் பற்றாசாக தூதுவிடுகிறாள்" என்று பட்டர்.

கசஅ. பலபாட்டுகளிலும் "இதுவோ தக்கவாறு" என்கையாலே- "ஆந்ருஸம் ஸயம்பற்றாசாக தூதுவிடுகிறாள்" என்று பிள்ளான்பணிக்கும்படி. "பன்னிரண்டாண்டு தண்ணீர் துரும்பறக் கலந்துபிரிந்த பிராட் டியைப்போலே அங்கே புக்குநெடுங்கால மவனை யனுபவித்துப் பிரிந்து தூதுவிடுகிறாள்" என்று பிள்ளான். "புறப்பட்டவள் முடி யப்போகமாட்டாதே நகரோபவனத்திலே கிடந்து தூதுவிடுகி றாள்" என்று பட்ட ரருளிச்செய்யும்படி.

க-ம். பாட்டு - பொன்னுலகு.

கசகூ (ஆளீரோ) உங்கள்கார்யமே செய்ய வொண்ணாது என்கார்யமும் செ ய்யவேணும். இவள்கார்யம் செய்கையாவது-இவற்றை யாளுகை யிறே. "இவள்தானுபய விபூதியையுங் கொடாநின்றா ளாகில், அவன்வந்தால் தானுமவனு மெங்கே யிருப்பது" என்ன ; "இக் குருவி காட்டினவிடத்தே" என்று அநந்தாழ்வான் வார்த்தை.

கரு0. (நன்னலப்புள்ளினங்காள்) "குணஸ்தவ்யய்யேவஸோபகா:" என்னு மவனும் புறம்பான னுங்களைப்பார்க்க "உங்கள் தரத்துக்கிதோ ரறுகும் தாளிப்பூவுமிறே" என்பராம் பிள்ளையமுதனார்.

உ-ம் பாட்டு - மையமர்.

கருக. (மெய்யமர்காதல்) "தம்மைப்போலே பொய்யுமாய் நிலைநில்லாத கா தலன் றெங்கள்தென்று சொல்லுங்கோள்" என்று பிள்ளான் பணிக்கும். அன்றிக்கே, மெய்யமர்காதல் - ஆத்மானு பந்தியான காதல். மெய்யென்று-ஆத்மாவாய், ஆத்மாவோடே பொருந்தின காதலென்னுமாம்.

௩-ம். பாட்டு - ஓடிவந்து.

கருஉ. (ஓடிவந்து) "பிராட்டியைக்கண்ட ஹர்ஷம், நடுவில் மதுவனமன் றாகில் ராஜபுத்ரர்கள் முதுகோடேபோம்" என்று பட்டரருளிச் செய்வர்.

க௦-ம். பாட்டு - வந்திருந்து.

கருங. (என்னை) அச்சேர்த்தியிலே அடிமைசெய்ய வாசைப்பட்டவென்னை. இப்படி துர்க்கதையாகு ளிவளென்று. "இவள் வைவர்ண்யத்தை தன்னுடம்பிலே காட்டவும் வற்றாகாதேயிவை" என்று ஜீயரருளிச்செய்வர். அன்றிக்கே, உம்முடைய தேவாரமோ!; இவளந்தःபுர பரிகரமன்றோ வென்னுங்கோள்.

கூ - ம். திருவாய்மொழி—நீராய்.

ங-ம். பாட்டு - ஞாலத்து.

கருச. (ஞாலத்தூடேநடந்தும்) அஉ-வது. ஐதிஹ்யம்பார்க்க.

க௦ - ம். திருவாய்மொழி—உலகமுண்ட.

எ-ம். பாட்டு - அடியேன்மேவி.

கருரு. (திருவேங்கடத்தெம்பெருமானே) பட்டர், "நித்தியத்திலே, 'அமுது செய்யப் பண்ணும்போது ஸ்தோத்திரத்தை விண்ணப்பஞ்செய்வது' என்ன; என்னஸ்தோத்திரத்தை விண்ணப்பஞ் செய்வது" என்ன, "'அடியேன் மேவியமர்கின்றவமுதே', 'பச்சைமாமலை போல் மேனி', என்கிற பாட்டுகள்போலே யிருக்குமவற்றை விண்ணப்பஞ்செய்வது" என்றருளிச்செய்தார்.

அ - ம். பாட்டு - நோலாதாற்றேன்.

கருசு. (நோலாதித்யாதி) "'காக்கைவாயிலும் கட்டுரை கொள்வர்' என்றுண்டோ" என்று பட்டரருளிச்செய்வர்.

க௦-ம். பாட்டு - அகலகில்லேன்.

கருஎ. (உறைமார்பா.) "'ஒருநாள் பட்டர், பிள்ளை அழகியமணவா ளரையருக்குத்வயமருளிச் செய்கைக்காக 'எல்லாரும் போங்கோள்' என்ன, நஞ்ஜீயரு மெழுந்திருந்துபோய், 'நம்மை 'இராய்' என்றருளிச்செய்திலர்' என்று வெறுத்திருக்க, அப்போதே 'ஜீயரெங்குற்றார்' என்று கேட்டருளித் தேடியழைத்து கூடவைத்துக்கொண்டிருந்து த்வயத்தை யருளிச்செய்யாநிற்கச்செய்தே அப்போதருளிச்செய்தவார்த்தை" என்று ஜீயரருளிச்செய்வர் - "இவ்வாத்மவஸ்து சேஷமாகில் அவன்சேஷியாகில் இங்குபிராட்டி சம்பந்தத்தால் செய்கிறதென்" என்று கேட்க, "அதிருக்கிறபடி கேளீர்; ராவணனுக்கும் காகத்துக்கும் சம்பந்தமு மனுஷ்டானமுமொத்திருக்க; இனி ராவணன் சாபத்தாலே கிட்டமாட்டாதிருப்பதொன்றுண்டிறே, அங்கனன்றிக்கே ஜனனிபக்க லபராதத்தில்

கைநொடாநிற்க, தலைகொண்டு தப்பினானிறே, அவள்சந்நிதி யுண்டாகையாலே. அவள்கடக்க விருக்கையாலே ராவணன் தலை யறுப்புண்டான்.

எ-ம் பத்து.

க-ம். திருவாய்மொழி—உண்ணிலாவிய.

ப்ரவேசம்.

கஅஅ. பிள்ளை திருநறையூரறையர் "இப்பாட்டுக்களில் பூர்வார்த்தமடைய- புலியின்வாயிலே யகப்பட்ட ப்ரஜைதாய்முகத்திலே விழித்துக் கொண்டு புலியின்வாயிலே கிடந்து நோவுபடுமாப்போலேயா யிரு க்கிறது" என்று பணிப்பர்.

க-ம். பாட்டு - உண்ணிலாவிய.

கஅகூ. (எண்ணிலாப்பெருமாயனே) எண்ணிறந்தசெயல்களைச் செய்யவற் றாய் நீவேண்டாதாரைச் சிறையிட்டு நலியக்கடவதான ப்ரக்ருதி யை பரிகரமாகவுடையவனே. அன்றிக்கே, "எண்ணிறந்த மஹாச் சர்யமான குணங்களையுடையவனே" என்று பிள்ளான் பணிக் கும்படி.

உ-ம். திருவாய்மொழி—கங்குலும்.

௩-ம். பாட்டு - வட்கிலள்.

ககூ0. (வட்கிலளிறையும்) இதுக்கு - ஜீயரருளிச்செய்வது - "இவள்முடிந் தாள்" என்று.

ரு-ம். பாட்டு - சிந்திக்கும்.

ககூக. (திருவரங்கத்துள்ளாயென்னும்) "பெருமாளே யென்னும்" என்று ஜீயர். அவ்வூரில் சம்பந்தங் கொண்டுபோலேகாணு மவனையும் விரும்பிற்று.

எ-ம். பாட்டு - பாலதுன்பங்கள்.

ககூஉ. "ஆஶ்ரிதரை வாழ்விக்கையு மநாஶ்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப் போது விபரீதமாயிற்றே உம்முடைய படியென்கிறாள்" என்று பிள்ளான்.

ககூ௩. (என்னுடைக்கோமளக்கொழுந்தே) கலக்கப்பொறாத மார்தவத்தை யுடையவள் பிரியப்பொறுக்குமோ. "தசைமுறுகினால் வைத்தியர் கண் முகம்பாராதாப்போலே மகளவஸ்தையைக்கண்டு தளர்ந்து பெரியபெருமாள் முகம்பாராதே வார்த்தைசொல்லுகிறாள்" என் றருளிச்செய்வர்.

கசுசு. (கொழுந்து) உபக்ரம் தேட்டமானவளவிலே தனாயிலே படரவிடுவே தே. "பதிஸம்யோக ஸுலபம்வய:." இப்பாட்டி லொருதலைகட் டின்றிக்கே யிருக்குமிதுக்குக்கருத்து - "'பரிஹரிக்கு மெல்லைகழிந் தாள், நாமிவர்க்குச் சொல்லுவதென்' என்று தன்னிலே நோவு படுகிறாள்" என்று வங்கிபுரத்து நம்பிபணிக்கும்.

கூ-ம். பாட்டு என்றிருமகள்.

கசுரு. (சேர்மார்பனே.) ரஹஸ்யத்தில் நித்தியயோகத்தைச் சொல்லு கிறது. அவளொருக்ஷணம் பிரியவிருக்கி லன்றோ வெனக்குப் பேறுதாழ்க்கவேண்டுவது. "பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய் யுமவை கேட்கைக்காக நஞ்ஜீயரை அழைத்தருளித் தாமமுது செய்யாநிற்கச்செய்தே, இத்திருவாய்மொழி இயலை கேட்டரு ளாநிற்க இப்பாட்டளவிலே வந்தவாறே 'என்திருமகள் சேர்மார் பனேயென்னு யென்னுடை யாவியே யென்னும்' என்றியலைச் சேர்த்தருளிச்செய்ய, அத்தைக்கேட்டு கையையுதறி 'ஸ்ரீரங்க நாதா' என்றணையிலே சாய்ந்தருளினார்பட்டர்" என்றருளிச்செய் வர். "அப்போது திருமேனியிலே பிறந்த விக்ருதியைக்கண்டு 'இவருக்கு பகவத்ப்ராப்த்தி அணித்தாகிறதோ' என் றஞ்சியிருந் தேன்" என்று ஜீய ரருளிச்செய்வர்.

க0-ம். பாட்டு - முடிவிவள்.

கசுசு. (மூவுலகித்யாதி) "மூவுலகாளியே, கடிகமழ்கொன்றைச் சடையனே, நான்முகக் கடவுளேயென்னும் - வடிவுடை வானோர்க்குத் தலைவ னேயென்னும்" என்று திருமாலையாண்டான் வையதிகரண்யமாக் கி நிர்வஹிக்கும். என்னுமென்னுமது - என்னுமவனுய். எம்பெரு மானார் கேட்டருளி, சாமானாதிக ரண்யத்தாலே யருளிச்செய் தருளினார்-த்ரைலோக்யத்துக்கும் கடவனான விந்திரனுக்குமந்தர் யாமியாய் நின்று அவனுடைய வதிகாரத்தை நிர்வஹிக்கிறவனே யென்னும்; பரிமளத்தை யுடைத்தான கொன்றையை ஜடையிலே யுடைய ருத்திரனுக் கந்தர்யாமியாய்நின்று அவனுடைய பதத்தை நிர்வஹிக்கிறவனே யென்னும்; அவர்களோ டிவ்வருகுள்ளாரோடு வாசியற வெல்லாருக்கும் நிர்வாஹகனாயிருக்கிற சதுர்முகனாகிற தே வதைக் கந்தர்யாமியானவனே யென்னும். (வடிவுடையித் யாதி) பகவதனுபவத்தால்வந்த ஹர்ஷம்வடிவிலே தோற்றும்படி யிருக்கிற நித்யசூரிகளுக்கு நாதனானவனே யென்னும். வடிவுடை வானோர் தலைவனே என்றத்தோடு மூவுலகாளியே என்றத்தோ டு, கடிகமழ்கொன்றைச் சடையனே என்றத்தோடு, நானமுகக் கடவுளே என்றத்தோடு வாசியற்றிருக்கிறதாயிற் றிவர்க்கு மயர் வற மதிநலம் பெறுகையாலே. விசேஷணம்சத்தில் பரியவசிக்கு

மவரல்லரே. சர்வ நிர்வாஹகனென் றுணர்ந்திருக்கு மவராயிற்று இவர்.

௧௬எ. (அடியடையாதாளித்யாதி) "ஜீவிட்டானாப் போலேயிருந்து ; கடுக முடிந்து கொடுநின்றாள்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; "அப் போது மேல் ப்ரபந்தம் நடவாது. ஆகையாலே, திருவடிகளை கிட்டாதாளைப்போலேயிருந்து க்ரமத்திலே கிட்டிக்கொண்டு நின் றாள்" என்று அருளிச்செய்யும்படி. இதுதான் - மாநசாநுபவத் திலே யொருவைசத்யத்தைச் சொன்னபடி.

௧௧-ம். பாட்டு - முகில்வண்ணன்.

௧௬அ. (முகிலித்யாதி) "பெரியபெருமாள் திருவடிகளிலே - திருவாய்மொ ழியாயிரமுஞ் சொல்லிற்று ; 'திருமோகூர்க் கீர்த்தபத்து' 'திரு வேங்கடத்துக் கிவைபத்து' என்று பிரித்துக்கொடுத்தவித்தனே ; பெருமாள் திருப்பலகையி லமுதுபடியிலே மற்றைத் திருப்பதி கள் நாயன்மாருக்கு மளந்து கொடுக்குமாப்போலே" என்று பிள்ளை யருளிச்செய்வர்.

௩-ம். திருவாய்மொழி—வெள்ளைச்சுரிசங்கு.

ப்ரவேஶம்.

௧௬௯. "நீங்கள் சொல்லுகிறவற்றால் ப்ரயோஜன முண்டாகமாட்டாது, நாமவன் பக்கலிலே யபஹ்ருத சித்தையானேன், ஆனபின்பு நானே போகே ணுகாமே நீங்களென்னோடுடன்பட்டு அங்கே கொடுபோ ய்ச் சேர்க்கப்பாருங்கோள்" என்று தனக்குப்பிறந்த துணிவை யவர்களுக்கு அறிவித்துச் சொல்லுகிறதாயிருக்கிறது. அங்கநன் றிக்கே பிள்ளான் பணிக்கும்படி - "'(முகில்வண்ணனடியே - இவ ளணுகியடைந்தனள்' என்றதாகையாலே) ஸமாத்வாத பரதத்ரா ஹம்' என்கிறபடியே பெரியபெருமாளோடே சிரகால முன்மஸ்த கரசமான சம்ஶ்லேஷம்ப்ரவ்ருத்தமாய், பிரிந்து கூடா விடிலி ரண்டுதலைக்கு மழிவு வருமளவாச்சுதாய் ; இனி யெல்லாவள வினு மொரு நீராகக் கலக்கிறது தர்மியிரண்டும் கூடியிறே, ஆகை யாலே பிரியாவிடில் தர்மிலோப பர்யந்தமாகப்புக ; இவ்வளவில், நாயகனான விவனிரண்டுதலையும் ஜீவிக்கப்பார்ப்பா னொருவனா கையாலே பிரிவைப்ர சங்கிக்க, இவளும் விஶ்லேஷத்தில் வா சனையில்லாதா ளொருத்தியாகையாலே, 'கலவியிலே யொருவ கையோ' என்று கொண்டு இவளு மனுமதிபண்ண அவனுமவ் வேட்டை நிமித்தமாகப் புறப்பட, இவளும் திருவணுக்கன் திரு வாசலி லளவு மொருப்படுத்திமீள ; எல்லா வளவிலும் பிரிவுதன் காரியம் செய்தன்றி நில்லாதிறே ; அனந்தர மிவள் நோவுபடப்

புக, இத்தைக்கண்ட தோழிமாரும் தாய்மாரும் 'உனக்கோடுகிற தென்' என்று கேட்க, 'ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் காட்டிலே கூடப்போய் அவரிருந்தவிடம் நின்றவிட முஸாவின விடந்தோ ரும் கூடவிருந் தனுபவித்தாப்போலே, நானு மவனிருந்தவிடத் தேபோய் புக்கல்லது நில்லேன்' என்ன, 'உனக்கிது தலைமைக் குப் போராது நீ சொல்லுகிறவை வார்த்தையன்று' என்ன அவ ர்களை 'நீங்கள் நிரோதிக்கிறத்தால் பெற்றதென், நான் போகை தவிறேன், நீங்களே என்னைக் கொடுபோய் விடுங்கோள்' என்ன, அவர்கள் 'அதுக்கு நாங்கள் வழிப்படோம்' என்ன, ஆகில் நானே யாகிலும் போகதவிரே னென்கிறாள்" என்று.

க-ம். பாட்டு - வெள்ளைச்சுரிசங்கு.

களO. (நெஞ்சினூடே) நஞ்ஜீயர் கோயிலுக் கெழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக்கண்டு "ஈஶ்வரனுக்கு ஸ்வரூப வ்யாப்தியேயோ, விக்ரஹ வ்யாப்தியுமுண்டோ" என்று கேட்க, "பாஷ்யகாரர் தோற்றச் செய்துகொண்டு போந்ததுஸ்வரூப வ்யாப்தியாயிருக் கும், ஆகிலும் எம்பாரொருநாள் 'உபாஸகானுக்ரஹார்த்தமாக வா ஶரிதருடைய நெஞ்சிலே விக்ரஹத்தோடே வ்யாபித்திருக்கும்' என்றருளிச்செய்யக் கேட்டேன் என்று பணித்தான்.

உ-ம். பாட்டு - நானம்.

களக. (நானக்கருங்குழல்) ஒருதமிழன் "நானமென்று - குழலுக்கு விஶே ஷண மாகையாலே, நாவிபோன்றகுழல்" என்றான். அத்தால் நினைக்கிறதும் - பரிமளத்தை.

ச - ம். திருவாய்மொழி—ஆழியெழ.

ப்ரவேஶம்.

களஉ. (தேவகுமாரரூபம்) அதுகிடக்க, இவனாயே நீதான் "காடேறப் போக" என்கிறது. "இவர்க்கு மவ்வளவேயோ" என்று சிறியாத் தான் கேட்க, "'கண்ணெச்சிலாம்' என்று தரம் போராதானா யொப்பாகச் சொல்லி ருஷிகரிபூசுகிறான்" என்றார்.

க-ம். பாட்டு - ஆழியெழ.

களங. "கீழே 'கண்ணபிரானுக் கென்பெண்ணை தோற்றேன்' என்று கொ ண்டு-இத்தலையில் தோல்விக் கெதிர்தலையானவத் தலையில் விஜ யங்களை யனுசந்திக்கிறார்" என்று பிள்ளை திருநறையூரறையர் பணிக்கும்படி.

களச. "மஹாமதிஃ என்றது-மதிகேட னென்கிறபடியோ" என்றார். பிள்ளை தாம்பெருமாள் யெழுந்தருளும்போது "எங்கேனுமொரு சலனம்

பிறக்கில் கப்ராணனை விடமாட்டேன்" என்று சொட்டையை யுரிப் பிடித்துக்கொண்டு சேவிப்பராம். நம்முதலிக ளிதைக்கண்டு இவரை "மஹாமதிகள்" என்றழைப்பர்கள்.

ச-ம். பாட்டு - நாளுமெழ.

கஎரு. (அப்பூரளியெழு) உள்ளி-சப்தம் எழுவென்றது-தோற்றமென்றபடி. அன்றியே "இவற்றை உதிர்ந்தகிற போதை த்வனிகாண்' என்றம்மாள்பணிக்கும்படி" என்றருளிச்செய்வர்.

ரு-ம். திருவாய்மொழி—கற்பார்.

கஎசா. "பட்டர் ராமாவதாரத்திலே போரபக்ஷ பதித்திருப்பர்" என்று அவரருளிச்செய்யுமது கேட்கைக்காக சிறியாத்தா னொருநாள் "பெருமாளுக் கெல்லாநன்மைக ளுண்டாகிலும், கழுத்திலே யோலை கட்டி 'தூதுபோ' என்னபோன க்ருஷ்ணனை நீர்மையில்லையே" என்ன "அந்தங்கனல்லகாண், கழுத்திலே யோலைகட்டி 'தூதுபோ' யென்பாரில்லாமை தவிர்ந்தா ரத்தனைகாண்" என்றருளிச்செய்தார்.

சூ-ம். திருவாய்மொழி—பாமரு.

கo-ம். பாட்டு - ஏற்றரும்.

கஎஎ. (கூற்றியல் கஞ்சனைக்கொன்று) மஞ்சத்திலே நிற்கிற கம்சனை முகம் கீழ்ப்பட விழவிட்டுக் கொன்று பொகட்டானாயிற்று. இயல்வு-ஸ்வபாவம். "ராஜத்ரோஹிகளைக் கொல்லும்போது ராஜசின்னங்களை வாங்கி கொல்லுவானைப்போலேகாண்" என்று அம்மாள்.

எ-ம். திருவாய்மொழி—ஏழையர்.

சூ-ம். பாட்டு - உய்விடம்.

கஎஅ. (உய்விடமித்யாதி) "அபலைகளை நலியுமாப்போலே அசுரராக்ஷசர்களுக்கும் சிநேஹத்தை விளைத்து பாதகமாகா நின்றது" என்றொருதமிழ னிட்டுவைத்தா னென்றத்தை ஜீயர்கேட்டருளி, "இப்பொருளழகிது, ஆனாலும், அபக்ஷதர்மம் - அசுரராக்ஷசர்களுக்கும் பாதகமாகா நின்றதென் றிப்போதிது சொல்லுகை தேட்டமன்றிறே, ஆனபின்பு அது வேண்டா" என்றருளிச்செய்தாராம்.

அ-ம். திருவாய்மொழி—மாயா.

உ-ம். பாட்டு - அங்கண்மலர்.

கஎகூ. (அங்கண் மலரித்யாதி) "கீழிற்றிருவாய்மொழியில் 'விள்கின்ற பூந் தண்டுழாய் விரைநாறவந்து' என்று சொன்னத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான்பணிக்கும்.

ச-ம். பாட்டு - கள்ளவிழ்.

கஅ0. (கள்ளவிழ்த்யாதி) "கீழிற்றிருவாய்மொழியிலே - 'சூழவுந்தாமரை நாண்மலர்போல்வந்து தோன்றும்' என்றத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான்பணிக்கும்.

எ-ம். பாட்டு - துயரங்கள்.

கஅக. (சுடர்நீண்முடியாய்) "'முற்றவிம் மூவுலகும் விரிகின்ற சுடர்முடிக் கே யொற்றுமைகொண்டது' என்றது பின்னாட்டுகிறது" என்று பிள்ளான்.

கூ - ம். திருவாய்மொழி—என்றைக்கும்.

க - ம். பாட்டு - என்றைக்கும்.

கஅ௨. (என்சொல்லி நிற்பனோ) "க்ருஷ்ணத்வை பாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும், கோஹ்யந்ய : புண்டரீகாக்ஷாந் மஹாபாரத க்ருத்பவேத்" என்றாப்போலே யிருக்கிறதாயிற்று. இதுக்கு ஆளவந்தா ரருளிச்செய்யும்படி - "சர்வேஶ்வரன் செய்யப்புக்கா வரியது மொன்றுண்டோ" என்றும். அங்க னன்றிக்கே, எம்பெருமானார், "இவர் தாம் சொன்னாராகிலு மொருபடி போகச் சொல்லித் தலைக்கட்டுவர், அவனும் தானே சொன்னானாகில் நிரவத்தியமாகத் தலைக்கட்டும்; சிறு ப்ரஜை யெழுத்திடப்புக்கால் தானே யேதேனு மொருபடியிட்டுத் தலைக்கட்டும், பிதாவாதலு பாத்யாயனாதல் இடப்புக்கால்தானே யெழுத்தாயிருக்கும்; அங்கனன்றிக்கே, இவன்கையைப் பிடித்திடுவிக்கப் புக்கவாறே, இவனோரிடத்தேயிழுக்க அவனோரிடத்தே யிழுக்கக் குதறிக்கொட்டியாய் ரூபமழிந்து சிதறிப்போம்; அப்படியே, என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடா நிற்கச்செய்தேயும் என்னால் வரும் தோஷம் தன் பக்கல் ஸ்பரிசியாதபடி பாடுவித்தா னென்கிறார்" என்று.

ச-ம். பாட்டு - அப்பனை.

கஅ௩. (என்னாகியே) என்பக்கலிலேதானாய். இவ்விடத்துக் கெம்பாரருளிச் செய்யும்படி - "தான்பாடினானாகில் நிரவத்தியமாய்த் தலைக்கட்டும், நான்பாடினேனாகிலும் வருந்தி யொருபடி தலைக்கட்டும், என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச் செய்தேயு மென்னோட்டை ஸ்பரிசத்தால் வந்ததோஷம் தட்டாதபடி கவி பாடித் தலைக்கட்டினான்" என்று.

கூ-ம். பாட்டு - திறத்துக்கு.

கஅச. (தன்னையுறப்பலவின் கவிசொன்ன) என்றதுக்கு ஜீயரருளிச்செய்யும் படி-"'யதோவாசோநிவர்த்தந்தே'என்று வேதங்கள்மீண்ட விஷ

பத்தை மறுபாடுருவச்சொன்ன” என்று. அன்றிக்கே, பிள்ளான் பணிக்கும்படி - “சர்வேஶ்வரனுக்குச் சாலவுற்றமென்கிறார்” என்று.

க0-ம். திருவாய்மொழி—இன்பம்.

சு-ம். பாட்டு - வாய்க்குங்கொல்.

கஅரு. (எனக்கு நன்குநிலைக்கப்பெற) அங்குப்போய் அநுபவிக்கவேண்டா, இங்கேயிருந்து நெஞ்சாலே அங்குத்தை பரிமாற்றங்களை அநுசந்திக்கப் பெறவமையும். முற்காலத்திலே இடையாற்றுக்குடி நம்பி யென்பாரொருவருண்டு, அவர் திருநாட்கள் தோறும் பெருமாளை வந்து சேவித்துப்போருவர், மறித்துத் திருநாள் வருந்தனையும் அது தன்னையே போதுபோக்காக ஸ்மரித்துக்கொண் டிருப்பாராயிற்று; ஒருநாளொரு திருநாளில் வ்ருத்தாந்த மநுசந்தியாநிற்கச் செய்தே, “அமுதுசெய்கைக்குப் போதுவைகிற்று” என்றார்களாய், “ஆகில்வருகிற திருநாளணித்தாகிறது” என்றாராம். அவர் நூறுவயஸ்ஸு புகுகையாலே பலஹானிபிறந்து திருமுளைத் திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக் குதவவந்து புகுரப்பெற்றிலர், பெருமாளும் தேடியருளிக்காணுமை, “நம்மிடையாற்றுக் குடியான்வந்திலன், நங்கண்ணுலமல்லவோ!” என்று திருவுள்ளமானாராம். அவர் தாமாராந் திருநாளிலே சேவித்திருக்கச்செய்தே, “நாமுனக்குச் செய்யவேண்டுவதென்?”என்று கேட்டருள, “தேவரீர் தந்தருளின சரீரத்தைக்கொண்டுபோரக் காரியங்கொண்டேன், இனி போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடி போரஜறித்தது” என்ன, “வாராய்மெய்யே யிளைத்தாயாகி லிங்கனேயிரு” என்றருளிச்செய்தார்; பெருமாள் நடுவிற் றிருவாசலுக்கவ்வருகே யெழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக் கெழுந்தருளினார்.

அ-ம். பாட்டு - அன்றிமற்றொன்று.

கஅசு. (ஆனையின்நெஞ்சிடர் தீர்த்தபிரான்) இதுக்கு பட்டரருளிச்செய்யும்படி - “ராஜபுத்திரனைச் சிறையிலே யிட்டுவைத்தால், கைக்கூட்டனுக்கும் பாலுஞ்சோறு மிடுவாரைப்போலேகாண்” என்றும்.

க0-ம். பாட்டு - சிந்தை.

கஅஎ. இதுதா னிருக்திமாத்ரமாய் உம்முடைய நெஞ்சுபரமபதத்தை விரும்பினதோவென்ன; “அத்தை, என்னினைவுக்கு வாய்த்தலையிலேயிருக்கிற சர்வேஶ்வரனைக் கேட்டுக்கொள்வது” என்றிங்கனே யருளிச்செய்வர் ஜீயர். அன்றிக்கே, பிள்ளான், நீர் “திருவாறன் விளையே ப்ராப்யம்” என்றிருக்கிறீர், ஈஶ்வரன் ஸ்வதந்த்ரநன்

ன்றே, அவன் பரமபதத்தைத் தரிலோவென்ன; "அவன் சர்வக்ஞனல்லன்றே, அறியாறே, வென்கிறார்" என்று, "புருஷார்த்தப்ரதநன்றே, புருஷனர்த்தித்ததத்தை யன்றே கொடுப்பது".

௧௧-ம். பாட்டு - தீர்த்தனுக்கு.

௧அஅ. (நல்கியுனைப்பர் தந்தேவியருக்கு) ஓடமேற்றிக் கூலிகொள்ளும் தசையாகிறது - பகவத்விஷயத்தில் சையிங்சர்யம் பண்ணும்பொது யெடுத்து கைநீட்டுகையிறே. சரமஸ்லோகம் ரக்ஷித்துக்கொண்ட வளவுபோலே யிருக்குமளவுகளிலே யென்றபடி.(அதாவது-உடையவர், திருக்கோட்டியூர் நம்பிதமக்கத்யந்த ரஹஸ்யமாக உபதேசித்த சரமஸ்லோகத்தை தெற்காழ்வார் திருமுன்பே யெடுத்து கைநீட்டினவர்களுக்கு, அவர்கள் விஷயத்திலே யுகப்பிலே அருளிச்செய்தாரிறே; அத்தைச் சொல்லுகிறது.)

அ-ம். பத்து.

௩-ம். திருவாய்மொழி—அங்குமிங்கும்.

௧௧-ம். பாட்டு - உரையா.

௧அ௯. (தவிரவருள் நீண்முடியானை) இதுபோம்படிக் கிடாவருளும் ஸ்வபாவனை உபயவிபூதிநாதனை. "இவர் பயம்போம்படி 'உம்முடைய வபேக்ஷிதம் செய்கிறோம்' என்று, ஸிரஃகம்பனம் பண்ணினான்போலேகாண்" என்றம் மங்கியம்மாள்.

ரு-ம். திருவாய்மொழி—மாயக்கூத்தர்.

௨-ம். பாட்டு - காணவாராய்.

௧௯0. (நன்னாடு) அனந்தக்லேஶபாஜன மாகையாலே விபரீதலக்ஷணையாதல், விஷயானுபவத்தாலே களித்துவர்த்திக்கும் தேசமென்னுதல். பிள்ளான், "எம்பெருமானைப்பெற் றனுபவிக்கும் நாடுகாண்" என்னுமாம், "இல்லையாகில் கூப்பிடார்களோ" என்று.

ரு-ம். பாட்டு - சொல்லமாட்டேன்.

௧௯௧. (அல்லலித்யாதி) "உன்னைக்காட்டாதே யருமைப்படுத்தப் பார்த்தாயாகில், நாட்டார் 'தண்ணிது' என்கிற வஞ்ஞானம்வருவ தோருபாயமேதோ" என்றருளிச்செய்வர் பட்டர்; இப்போது மறந்து பிழைக்கலா மென்னுமதத்தாலே. "திருவடிகளென் ஹ்ருதயத்திலே ப்ரகாசியாநிற்க, துக்காத்மகமா மஞ்ஞானம்வருகைக் குபாயமுண்டோ" என்னுமம்மாள்.

கக-ம். பாட்டு - எங்கேகாண்கேன்.

ககஉ. (அத்தன்றூறு கைச்சடகோபன்) "'உபநிஷத்தடந்து மாம்ஸர்வேவ்யா நய!' என்கிறபடியே, இவ்வாத்மைக் கெல்லாமாடல் கொடுத்த வாழ்வார்" என்றுளவந்தார் நிர்வாஹம்.

கூ-ம். திருவாய்மொழி—எல்லியும்.

கக-ம். பாட்டு - சோலை.

ககங. (பாலோடமுதன்னவாயிரம்) பாலோடமுதன்ன-இப்பத்தென்னுதல். வாச்ய வாசகங்களுடைய சேர்த்தியிருக்கிறபடி. பாலென்கிறது-சோலைத்திருக் கடித்தானத்துறை திருமாலை; அமுதென்கிறது-சடகோபன் சொல்லென்கிற வாசகத்தை. இது-ஆளவந்தார் நிர்வாஹம்.

எ-ம். திருவாய்மொழி—இருத்தும்.

ரு-ம். பாட்டு - அருள்தான்.

ககச. (இதுவல்லாலித்யாதி) இதுக்கு திருமாலையாண்டான் பணிக்கும்படி-"நாட்டாரைச்வர்யங்களில் தலையாகச் சொல்லுவது - த்ரைலோக்யைச்வர்யத்தையிறே; அதுவு மெனக்கொரு சரக்கல்லவென்கிறார்" என்று. எம்பெருமானாரருளிச்செய்யும்படி - "என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்தெழுந்தருளியிருக்கிற விருப்பொழிய வீற்றிருந் தேழுலகந்தனிக்கோல் செல்லவிருக்கு மிருப்பையும் தனக்கைச்வர்யமாக நினைத்திருக்குமோ வென்று பார்த்தால், அதுவுமொரு சரக்காக நினைத்திருக்கிறிலன்" என்று.

கூ-ம். பாட்டு - வயிற்றிற்கொண்டு.

ககரு. (மதியாலே) "இவன்படியை யறிந்துகொண்டே னென்கிறார்" என்னுமம்மாள். அன்றிக்கே, "மதி: - அநுமதி:" என்றாக்கி, "அநுமதி மாத்ரத்தாலே" என்பர் பட்டர். அதாவது-அவன்புகுகிற யிடத்தில் விலக்கிற்றில னென்கை.

அ-ம். திருவாய்மொழி—கண்கள்சிவந்து.

ப்ரவேசம்.

ககசு. இத்திருவாய்மொழியில் முதலிரண்டு பாட்டாலே-தன்னை யனுபவிப்பித்து அனந்தரம் ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்தானாயிருக்கும். அதுக்கடியென் னென்னில்; "வஸ்துதான் ஸ்வாச்ரயமாயல்லதிராமையாலே ஆச்ரயமான தன்னைக்காட்டி பின்னை ஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுக்கிறான்" என்பாருமுண்டு. அன்

றிக்கே, "'ஸ்வரூப மிருக்கும்படியைக்காட்டித்தர வாருமென்று விசையார்' என்று தன்னை முற்படக் காட்டிக்கொடுக்கிறான்" என்பாருமுண்டு. "இரண்டளைப்பாட்டாலும் - இருத்தும் வியந்திற் கலவி பின்னாட்டுகிறது" என்பாரு முண்டு.

ரு-ம். பாட்டு - நின்ற.

கசுஎ. "கீழ்பகவத் ப்ரகாரமாக வாத்மாவ னுசந்திக்கப்பட்டது; இதுக்கு மேல் 'எம்பெம்மானோடு' என்கிற பாட்டளவும் கேவலாத்ம ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது" என்றெம்பா ரருளிச்செய்யும்படி. ஆண்டான், "ப்ரகாரமான வேஷத்திலே சொல்லுகிறது" என்னும்.

அ - ம். பாட்டு - எய்த்தார்.

கசுஅ. (நல்லுறைப்பு) நல்லவாய்ப்பு. அல்லாதபோது செய்ததெல்லாம் வ்யர்த்தம். ஆண்டான்பணிக்கும்படி - "'நின்றவொன்றை யுணர்ந்தேனுக்கு' என்னும் பாட்டுத்துடங்கி, நிஷ்க்ருஷடாத்மானு சந்தானமாத்ரமே யன்றிக்கே பகவத்சேஷத்வ பர்யந்தமாக வனுசந்திக்கிறது; இப்பாட்டில் - 'எம்பெம்மானோ டொத்தே சென்றங்குள்ளங்கூடக் கூடிற்றாகில்' என்கிறவந்திம ஸ்ம்ருதியும் எம்பெருமான் தனக்கு சேஷமாக வ்வாத்ம வஸ்துவை நினைத்திருக்குமாப்போலே இவனுமவனோடொத்து அவன் நினைவோடொத்து அத்தசையிலே சேஷத்வானு சந்தானம் கூடுமாகில் நல்லவாய்ப்பு" என்று.

கூ - ம். திருவாய்மொழி—கருமாணிக்கமலை.

ரு - ம். பாட்டு - புகழும்.

கசுகூ. (எங்கும்திகழுமித்யாதி) "'கையுமாயுதமுமாய் பொருத்தமிருந்தபடியென்' என்று சத்துருக்கள் புகழும்படியைச் சொல்லுகிறது" என் றெம்பெருமானார் அருளிச்செய்யும்படி.

க0-ம். திருவாய்மொழி—நெடுமாற்கடிமை.

ரு - ம். பாட்டு - உறுமோ.

உ00. (சிருமாமனிசராய்) வடிவுசிறுத்து ப்ரபாவம் கனத்திருக்குமவர்கள். "சிறுமைபெருமையாகிற விருத்ததர்ம த்வயத்துக்கு யேகதர்மியில் சமாவேசங்கூடினபடி யெங்கனே" என்றுபட்டர்பால்யத்திலே ஆழ்வானைக்கேட்க, "நம்மோடொக்க 'அன்னபானாதிகள் தாரகம்' என்னலாய் பகவத்விஷயத்திலவகாஹனம் பார்த்தால் 'நித்யசூரிகளோ டொப்பர்கள்' என்னலாயிருக்கிற ஆண்டான், அருளாளப்பெருமாள், 'ஸ்ரீகோவிந்தப்பெருமாள், இவர்கள்காண் சிறுமாமனிசராகிறார்கள்" என்று பணித்தான்.

கக-ம். பாட்டு - நல்லகோட்பாடு.

உ0க. (கொண்டவித்யாதி) திருவனந்தபுரத்துக்குச் சாத்தாக போகாநிற்கச்செய்தே, திருக்கோட்டியூரிலே செல்வநம்பிதிருமாளிகையிலே போய்புக்கார்களாய்நம்பி தாம் அசந்நிஹிதராயிருக்க, நங்கையார், நூறுவிந்துக் கோட்டைக்கிடக்க அவற்றைக் குத்தி ஸ்ரீவைஷ்ணவர்களை யமுதுசெய்யப்பண்ணிவிட, பிற்றைநாள் நம்பிவந்து "அவைசெய்ததென்" என்ன, "பரமபதத்திலே விளைவதாக வித்தினேன்" என்றாளாம். "தொண்டனூர்நம்பி, எச்சான்" என்று சில மஹாபுருஷர்களுண்டிறே, பாகவதசேஷத்வமேயாத்மாயாய் போந்தவர்கள், அவர்கள்படியேயாகப் பெறுவர்கள்.

கூ-ம். பத்து.

க-ம். திருவாய்மொழி—கொண்டபெண்டிர்.

அ-ம். பாட்டு - வாழ்தல்கண்டீர்.

உ0உ. (மாயவநித்யாதி) "இந்தமாயவநடிபரவுகை, சூதுசதுரங்கத்தோபாதி காலக்ஷேபமாக்குகிற புன்மையில்லாதவர்கள்" என்றுபட்டர்.

உ-ம். திருவாய்மொழி—பண்டைநாள்.

க-ம். பாட்டு - பண்டைநாள்.

உ0ங. (நின்கோயில்சீய்த்து) திருக்கண்ண மங்கையாண்டான், அங்கேயொரு திருமகிழடியிலே யிருந்து, சருகைதிருவலகிடாநிற்க, கூடவாசித்து நாஸ்திகனாயிருப்பானொருவன், "பகவானுபாயம், நாமனங்ய ப்ரயோஜநர், இப்போதிந்த க்லேசத்துக்குப் பலமென்" என்ன! திருவலகிட்டவிடத்தையும், இடாதவிடத்தையுங்காட்டி, "இவ்விடமு மவ்விடமு மிருந்தபடி கண்டாய்க்கு 'ஒருபலமில்லை' என்று தோற்றியிருந்ததோ" என்றான்.

ச-ம். பாட்டு - புளிங்குடிகிடந்து.

உ0ச. (நீகாணவாராயே) எங்நெதிரே யுன்னழகுகாண வரவேணும். பிள்ளையழகிய மணவாள வறையனாப் பெருமா ளொருநாளருளப்பாடிட்டு, "நாமிங்கனே நடக்கிறோம், நீயிதுக்கிடாக ஆடிக்காண்" என்ன! "தம்பிரானே, என்னுலன்னடைக்கீடாக வாடப்போமோ, (கானகம்படியுலாவி யுலாவியித்யாதி) தேவருடைய குழலோசையைக் கேட்டவாறே, பாடல்தவிர்ந்தார்கள், தேவருடைய ஸ்வாபாவிகமான நடைக்குத் தங்களுடைய ஶிக்ஷாபலத்தா லுண்டான ஆடல் தவிர்ந்தார்கள்; சுருக்குக்கைகொடு கூழ்துழாவி அடியேன் தேவர்திருமுன்னே ஆடவல்லேனே" என்றாராம்.

கூ - ம். பாட்டு - வீற்றிடங்கொண்டு.

உ0ரு. (இதனுளுமிருந்திடாய்) "சாய்ந்தருளின வழகுபெரிய பெருமாள் பக்கலிலே காணலாம்; நின்றருளினவழகு, நம்பெருமாள் பக்கலிலே காணலாம்; இருப்பிலுண்டானவழகு, பெரியபிராட்டியார் பக்கலிலே காணலாம்" என்று பட்டரருளிச்செய்வர்.

ரு - ம். திருவாய்மொழி—ஓராயிரம்.
ப்ரவேஸம்.

உ0சு. ப்ரணவார்த்தமும், நமஸ்ஸப்தார்த்தமும், வ்யாபகத்வமும், அவ்யாபகத்வமும், அல்லாதவ்யாபக மந்திரங்களிலு முண்டு; அதில் தாமாதரித்தருளிற்று திருவஷ்டாக்ஷரமென்று மிடத்தை ஓராயிரத்தாலே யருளிச்செய்கிறார். இது நடுவில் திருவீதிப்பிள்ளை யருளிச்செய்யும்படி.

கூ - ம். பாட்டு - தொழுது.

உ0எ. இப்படி சுலபனான உன்திருவடிகளிலே கிட்டிப்பெற்றாலும், ஆஸ்ரயணத்தில் ஆபிமுக்யத்திலே சந்துஷ்டனா முன் ஸீலவத்தையை யனுசந்தித்து, ஒரு ப்ரவ்ருத்திபண்ண க்ஷமனாகிறிலே னென்கிறார். அன்றிக்கே, "இங்கனே யொருமூன்றுபாட்டுத் தம்முடைய வயோக்யதையைச் சொல்லுகிறார்" என்பாருமுண்டு; அதில்லையிறே கண்கள் சிவந்துக்குப் பின்பிவர்க்கு. "இத்தலையாலே யொன்றை யர்த்தித்துப் பெருகை மிகையாம்படியா யிருக்கிறவனுடைய வுபாயபாவத்தைச் சொல்லுகிறார்" என்பாருமுண்டு. "இவை யெல்லாமல்ல, அவன் சன்னதியில் க்ரமத்தில் பரிமாற வொண்ணாதபடி யழிக்கு மவனுடைய ஸீலகுணத்தைச் சொல்லுகிறது" என்று நம்முடையவர்கள் நிர்வஹிக்கும்படி.

சு - ம். திருவாய்மொழி—மையார்.
ரு-ம். பாட்டு - அழைக்கின்ற.

உ0அ. (நண்ணாதொழியேன்) அவனைக் கிட்டாதொழியில் நான்தரியேன். இது ஆய்த்தான் நிர்வாஹம்.

சு - ம். பாட்டு - கருத்தேயுன்னை.

உ0கூ. (தேவர்கட்கெல்லாம்விருத்தா) "இனியவ்வருகில்லை" என்னும்படி யுயர்ந்தவர்களுக்கு மவ்வருகானவனே. தலைமகனையும் தலைமகளையும் "கிழவனும் கிழத்தியும்" என்று தமிழர்சொல்லக் கடவர்களிறே.

ரு - ம். திருவாய்மொழி—இன்னுயிர்.

௯ - ம். பாட்டு - அவன்கையதே.

௨௰. (நலஞ்செய்திலளா) உயிரை யிங்கேவைத் துங்களுக்குபகரிக்க பாக்யம் பண்ணிற்றிலேன். "அவனைப்போலே பிரிவுக்குச் சிளையாதபடி பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன்" என்று பிள்ளான் பணிக்கும்.

௧௦ - ம். பாட்டு - எழநணணி.

௨௧௧. (தழைநல்லவிந்யாதி)ஈச்வர விபூதிஸமூர்த்தமாகவேணுமென்கிறாள். "தான்தாம் முடியகினைப்பார் (நாடுவாழ்க) என்பாரைப்போலே சொல்லுகிறாள்" என்று ஆளவந்தார் நிர்வாஹம்; "நான்பட்டபாடு நாடுபடாதொழியவேணும்" என்று எம்பெருமானார்; "நான் முடிய என்னூர்த்திகண்டு நோவுபடாதே லோகமடங்கப் பிழைக்குமாகாதே!" என்று பட்டர்.

---

௬ - ம். திருவாய்மொழி—உருகுமால்.

௨-ம். பாட்டு - நினைதொறும்.

௨௧௨. (ஆட்செய்யும்நீர்மை) "(நானுனக்கு ஆட்செய்யும்நீர்மை) என்பானென், 'நீயெனக்காட்செய்யும் நீர்மை' என்னுமல்?" என்ன; "இச்சொலவையு மிழப்பரோ பாவியார்!" என்றெம்பார்.

௬-ம். பாட்டு - என்கண்ணன்.

௨௧௩. (புன்கண்மை) பேகணிப்பு. பொல்லாநோக்கை யுடைத்தாயென்கை. "மீளவுயிர்ப்பெய்து" என்றுய்த்து நிர்வஹிப்பது. "'இதுதான் ஶப்தந்தோடே சேர்ந்திருக்கிறதில்லை, இந்தஶ்ருதமான அர்த்தத்தோடே ஶப்தத்தையுஞ் சேர வசிப்பிக்கும்படி யெங்கனே?' என்று விசாரியா நிற்கச்செய்தே, 'கோதான விதுதிரியவும் புன்கண்மையெய்தும்போது மீளவு முயிர்பெய்ததாக வேணுமிறே, அர்த்தஸ்வபாவத்தாலே தன்னடையே வரும்' என்று நான் சொன்னேன், ஜீயர் போரப்ரீதரா யருளினார்" என்றருளிச்செய்வர்.

௯ - ம். பாட்டு - ஆருயிர்.

௨௧௪. (ஆருயிர்பட்டதென துயிர்பட்டது?) நான் பட்டபாட்டை நித்யஸூரிகளிலேதான் பட்டாருண்டோ?. பகவத்குணங்களுக்கு அபூமியாயிருக்கிற சம்ஸாரத்திலே நான் பட்டபாட்டை நித்யவிபூதியிலேயுள்ளவர்கள்தான் பட்டார்களோ வென்கிறார். "இங்கு எனதுயிர்பட்டது அங்கு ஆருயிர்பட்டது?" என் றெம்பெருமானார். "எல்லாரும் குணாநுபவமாகிற் பண்ணுகிறது இவர்க் கிவ்வாசி கூடினபடியென்" என்று நான்கேட்க, "ந வோடையான ஸ்ரீக்கு பர்த்தாவினுடைய கரஸ்பரிஶம் பட்டவாறே வேர்ப்பது விடுவ

நாமாப்போலே, இவரனுபவத்திற்புதிய ராகையாலே வருகிறது காணும்" என்று ஜீயர் அருளிச்செய்தார்.

அ - ம். திருவாய்மொழி—அறுக்கும்வினை.
ப்ரவேஶம்.

௨கரு. பெரியமுதலியார், ப்ராப்ய சித்தியில் த்வரையாலே எப்போது மித் திருவாய்மொழியை யனுசந்தியா நிற்பர்; ஆகையாலே, யித்தை "பெரிய முதலியார் திருவாய்மொழி" என்றுயித்துச் சொல்லுவது. அதவா, "விட்ட தூதர்கள் தாழ்த்தார்களென்று தாமே யவன் வர்த்திக்கிறதே ஸத்தேறப்போக வொருப்படுகிறார்" என்பாருமுண்டு.

அ-ம். பாட்டு - அருளாது.

௨கசு. (தென்திருநாவாயென்தேவே - தெருளேதரு) என்று க்ரியை; அன்றிக்கே, "மருளே யின்றியுன்னை என்நெஞ்சத் திருத்தும் தெருளே தருதென் திருநாவா யென்தேவே - அருளாதொழிவாய், அருள்செய்தடியேனைப் பொருளாக்கி யுன்பொன்னடிக் கீழ்ப் புகவைப்பாய், திருவுள்ளமானபடிசெய்" என்றும் பிள்ளான் பணிக்கும்.

கூ - ம். திருவாய்மொழி—மல்லிகை.
ப்ரவேஶம்.

௨கஎ. "ப்ராப்ய வஸ்துவை பெறும்படியை மனோரதித்தார் கீழ்த்திருவாய்மொழியிலே; மனோரத சமநந்தரம்பெறக் காணாமையாலே, திருவாய்ப்பாடியி லுள்ளார் க்ருஷ்ணனைப்பிரிந்து ஒருராத்திரி பட்ட வ்யசனத்தை இவ ரொருத்தரும் படுகிறார்" என்றாளவந்தா ரருளிச்செய்யும்படி. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "முன்பே ஆற்றாமையாலே தற்பற்றிருக்கிறவ ராகையாலே அத்தனையாடல் கொடுக்கைக்கு வேண்டு மாஶ்ரயம் போராது ஆனபின்பு அவனைப் பிரிந்தொரு சந்த்யையிற் பட்டனவைப் படுகிறார்" என்றருளிச்செய்வர்.

க0 - ம். திருவாய்மொழி—மாலைநண்ணி.
ரு-ம். பாட்டு - தொண்டர்.

௨கஅ. (திருக்கண்ணபுரத்தண்டவாண நமரர் பெருமானையே) "ப்ரதிமாஸ்வட்ர புத்தாநாம்" இதுக் காளவந்தா ரருளிச்செய்யும்படி - "அம்மேட்டிலு மேறிப் பாயாநின்றால் தேசிகருக்குச் சொல்லவேணுமோ" என்று.

க0-ம். பத்து.

உ-ம். திருவாய்மொழி—கெடுமிடர்.

ப்ரவேஶம்.

உக௯. "'ஒரு நற்சுற்றம்' என்கிற திருமொழியிலே பல திருப்பதிகளையு மருளிச்செய்த விதுக்குக் கருத்தென்" என்று ஜீயர்பட்டரைக் கேட்க, "பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்துக்குப் போம் பெண் பிள்ளைகள் பந்துக்க ளிருந்தவிட மெங்கும்கண்டு விடைகொள்ளு மாப்போலே, ப்ராப்யபூமி அணித்தானவாறே திருப்பதிகள்தோ றும் புகுகிறார்" என்றருளிச்செய்தார்.

அ-ம். பாட்டு - கடுவினை.

உஉ0. (பாதமித்யாதி) திருவடிகளைக் காணும்படியாக "வரிவா ளரவினணைப் பள்ளிகொள்கின்ற கரியான் கழல்காணக் கருதும் கருத்து" என் றிருக்குமென்னு டொருகுடற்றுக்குடை யாரடங்கலும் போகப் பாருங்கோள். திருவத்யயனம்பாடாநிற்க, இத்தைக் கேட்டருளி, ஆளவந்தார் "நமக் காழ்வாரோடே யொரு சம்பந்தமுண்டாக வேணும்" என்று, அப்போதே ஸ்ரீ பாதத்தை யுடையானைக் கூட் டிக்கொண் டெழுந்தருளினர்.

௩-ம். திருவாய்மொழி—வேய்மரு.

ச-ம். பாட்டு - தொழுத்தையோம்.

உஉக. (தொழுத்தையோம் தனிமையும்) பஞ்சலக்ஷம் குடியிற் பெண்களும் கூடிப்படுகிற தனிமையிறே. தொழுத்தையோ மென்றும் அடி ச்சியோமென்றும் - தாங்கள் தோற்ற தோல்விதோற்றச் சொல் லுகிறார்கள். (துணைபிரிந்தார் துயரமும்) துணைபிரிந்தானென்று- உன்னைப் பிரிந்தானென்றபடி. "துணையை யென்றால் த்விஷ்டமா யன்றுகாணிருப்பது" என்னு மாச்சான்.

உஉஉ. (பசுக்களையே விரும்பி) பிள்ளையமுதனார், "ஒரு பசுவின்காலிலே முள்பாய்ந்தால் இடையன் தலைகாண் பீக்கொள்ளுவது" என்ப ராம்.

கக-ம். பாட்டு - செங்கனிவாய்.

உஉ௩. (இவையும் பத்தவற்றின் சார்வே) அவையென்கிறது-கீழிற்றிருவாய் மொழிகளையாய், "அவற்றிருகே இதுவு மொரு திருவாய்மொ ழியே!" என்று ஆச்சரியத்திலே யாக்கியாய்த்து ஜீயரருளிச்செய் ததும் வ்யாக்யானம் பண்ணிற்றும். அன்றிக்கே, (இவையும் பத் தவற்றின் சார்வே) கீழிற்றிருவாய்மொழிகளுக்குச் சொன்ன பல மிதுக்கும் பலமென்ற தாகவுமாம். அன்றிக்கே, அவையென்

கிறது - "மங்கையராய்ச்சியராய்ந்தமாலை" என்கிறவற்றையாய் ; இவையுமவற்றோடொக்கும்.

ச - ம். திருவாய்மொழி—சார்வே.
ப்ரவேஶம்.

உஉச. (பிள்ளான் ஒருருவிலே) "'நீ பசுமேய்க்கப் போகவேண்டா' என்றாள், 'ஆகில்தவிர்ந்தேன்' என்றான், இவன்றன்னை சுலபநில்லைகிடீர், இவன் பக்தி லப்யனென்னு மிடம் நிஶ்சிதமென்கிறார்" என்று பணித்தான்.

ரு - ம். திருவாய்மொழி—அருள்பெறுவார்.
க-ம். பாட்டு - அருள்பெறுவார்.

உஉரு. (அது நமது விதிவகையே) "அது நம்முடைய பாக்யானுகுணமாக விறே" என்று இதுக்கு பூர்வர்கள் நிர்வஹிக்கும்படி. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இத்திருவாய்மொழியில் மேலோடுகிற ரசத்தோடு சேராது, நாம் விதித்தபடியே செய்வாரு யிருந்தா னென்கிறான்" என்றருளிச்செய்வர்.

ரு-ம். பாட்டு - வானேற.

உஉசு. (நரகத்தை நகுநெஞ்சே) பிள்ளை அழகிய மணவாளப் பெருமாளரையர் க்ரந்தியைப்பார்த்துச் சிரித்துச்சொன்ன வார்த்தையை நினைப்பது. அதாவது - பரமபதத்துக்குப் போகிற சமயத்திலே "உன்னை வென்றேன்" என்று அதாவது சம்சாரத்தைப்பார்த்துச் சிரிக்கைக்குஹேது அவனை அண்டைகொண்ட பலமென்று திருவுள்ளம்பற்றி, அத்தை சகிதர் ஸனமாக வருளிச்செய்கிறார்.

எ - ம். திருவாய்மொழி—செஞ்சொல்.
க-ம். பாட்டு - செஞ்சொல்.

உஉஎ. (ஆட்செய்மின்) "ஆழங்காலிலே யிழிந்தமிழ்ந்துவார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமாப்போலே, கொண்டைக் கோல்நாட்டுகிறார்" என்று சிற்றாள்கொண்டான். உடையவர், "இன்னுருயிரொன்னுமையாலே அவனுயிராக் காத்தாட்ச் செய்யுங்கோள்" என்றருளிச்செய்வர்.

ரு - ம். பாட்டு - நண்ணுவசுரர்.

உஉஅ. (யானுய்த்தன்னைத்தான்பாடி) நம்பி திருவழுதி நாடுதாசர், "அருள் கொண்டாடும்" என்கிற பாட்டிலே, "ஸ்ரீகீதையை அப்யசித்தானொருவன் சந்த்யாஸதஸிலே சென்றால் பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து விஶ்வஸிக்க மாட்டாமையாலே 'புரந்திண்ணையிலேகிட' என்பர்கள்; திருவாய்மொழி கற்றான் ஒருவின்

ணப்பஞ் செய்வான் சென்றால் சர்வேஶ்வர னகப்படப் புறப்பட்டெதிர்கொண்டு அகமொழித்துக்கொடுத்து அமுதுபடியும் பெரித்துவிட்டு சத்கரிப்பர்கள்" என்றாராம். "பண்டேபரமன் பணித்த" என்று இவர் அங்கீகரிக்கையாலே அந்த ஸ்ரீகீதை தானு வீறுபெற்றதிறே.

---

௮ - ம். திருவாய்மொழி—திருமாலிருஞ்சோலை.

௩-ம். பாட்டு - பிடித்தேன்.

௨௨௯. (மடித்தேனித்யாதி) எம்பெருமானார், உலாவியருளுகிறவர் முடியப் போகாதே நடுவே மீண்டருள, எம்பார் கதவை யொருச்சரித்து, "திருமாலிருஞ்சோலை யாகாதே திருவுள்ளத்தி லோடுகிறது" என்ன ; "ஆம், அப்படியே" என்றருளிச்செய்தார்.

௯-ம். பாட்டு - இன்றென்னை.

௨௩௦. (உணர்த்தலுற்றேனே) இதுக்கொரு மறுமாற்ற மருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளத்திலே படும்படி விண்ணப்பஞ் செய்ய வேண்டி யிராநின்றேன். இப்படி யிவர் முடியத் துடர்ந்தவாறே பெருங்கடல் மண்டினாைப் போலே போக்கற்றான். "இதுக்கு ஈஶ்வரன்சொன்ன உத்தரமென்" என்று ஜீயர்பட்டரைக் கேட்க ; "'இவர் தலையிலே யொருபட்டியை யேறிட்டு நெடுநாளிழந்த நாம் சொல்லுவதென்' என்று லஜ்ஜாவிஷ்டனாய் காலாலே தறையைக்கீறிகிற்கு மித்தனைபோக்கி வேறுத்தரமுண்டோ" என்றருளிச்செய்தார்.

---

௯ - திருவாய்மொழி—சூழ்விசும்பு.

௪ - ம். பாட்டு - எதிரெதிர்.

௨௩௧. (எதிரெதிரித்யாதி) இவ்விடத்தில் ௩௭ - வது ஐதிஹ்யத்தைப்பார்க்க.

௧௧ - ம். பாட்டு - வந்தவர்.

௨௩௨. (அந்தமில்பேரின்பத்து) அநந்தக்லேஶ பாஜனத்துக்கு யெதிர்தட்டிறே ; சம்சாரத்தில் சுகமென்று ப்ரமிக்கு மித்தனை, துக்கமே யுள்ளது. பாண்டும் ருகமாயிருந்த ருஷியின்மேலே அம்பைவிட, "சம்சாரத்தி லாயிரம் கூற்றிலொரு க்ஷணமாய்த்து சுகமுள்ளது, அத்தனையும் புஜிக்கவொட்டிற்றிலையே" என்றானிறே.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

அண்ணன் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ஆசார்ய ஹ்ருதயசாரசங்க்ரஹம்.

அநுபந்தம்.

(௪)

பகவத்விஷய நிஷ்க்ருஷ்ட அர்த்தவிஶேஷங்கள்.

௧. ஸ்வபக்ஷத்தை ஸ்தாபிக்கவே பரபக்ஷம், நிரஸ்தமாமிறே; நெற்செய்யப்புற்றேயு மாப்போலே.

௨. ஸ்வரூபாநுசந்தானத்துக் கீடாயிருக்கிற திருமந்திரத்தினுடைய வர்த்தாநுசந்தாநம் மோக்ஷசாதநம்.

௩. சக்ரவர்த்தித்திருமகன் திருவவதரித்தபின்பு வானரஜாதி வீறுபெற்றாப்போலேகாணும், ஆழ்வார்கள் அவதரித்து திர்யக்ஜாதி வீறுபெற்றபடி.

௪. கடகருடைய ஆத்மகுணத்தோபாதிருபகுணமு முத்தேஶ்யம்.

௫. ஈஶ்வரன் ஆஶ்ரிதஸ்பரிஶமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரியான்.

௬. யோக்யனுக்கு அயோக்யதை சம்பாதிக்கவேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை சம்பாதிக்கவேண்டா; ஆகையால் ஈஶ்வரோபாயம் சர்வாதிகாரம்.

௭. நாம் ஆழ்வானை அனுபவிக்கும்போது செருப்புவைத்துத் திருவடிதொழப்புக்காப்போலே யாக வொண்ணாது.

௮. அவன்விடுவது, புத்திபூர்வம் ப்ராதிகூல்யம் பண்ணினுனை - கைக்கொள்ளுகைக்கு மித்ரபாவ மமையும்.

௯. ஆஶ்ரிதரிலே யொருவனுக்குச்செய்ததும், தனக்குச் செய்ததாக நினைத்திராதவன்று பகவத் சம்பந்தமில்லை.

௧௦. அம்மிதுணையாக ஆரிழிகையிறே, இவனைவிட்டு உபாயாந்தரத்தைப் பற்றுகை.

௧௧. ப்ராப்யா பாசங்களிலும், ப்ராபகா பாசங்களிலும், நெகிழ்ந்து அவனையொழிந்த வெல்லாவற்றாலும் ஒரு ப்ரயோஜனமின்றிக்கே யிருக்கவேணும்.

௧௨. பரமசேஷியைக் கண்டார், த்வார சேஷிகளளவில் நில்லார்களிறே.

௧௩. அவன் தானே காட்ட ஆழ்வார் கண்டாப்போலே காண்பார்க்குகாணலா மித்தனையல்லது ஸ்வயத்நத்தாற்காண்பாற் கறியப்போமோ.

௧௪. ஆஸ்ரயணீயவனே; ப்ரஹ்மருத்ரர்கள் ஆஸ்ரயணீயரல்லர்.

௧௫. முக்தரும் நித்யரும் தாங்களுமானந்தித்து அவனையும் ஆனந்திப்பிப்பார்கள், பத்தர் தாங்கள் ஆனந்தியாதே அவனை ஆனந்திப்பிப்பார்கள்.

௧௬. சர்வேஸ்வரன் த்ரிவித சேதனரையும் ஸ்வரூபாநுரூபமாக அடிமை கொள்ளாநின்றான்.

௧௭. விரோதிகளைப் போக்கி, உஜ்ஜீவிப்பிக்கையிறே, அவதாரங்களுக்கு ப்ரயோஜனம்.

௧௮. கர்மசம்ஸ்ருஷ்டரான சேதனர்க்கு, கர்மசம்பந்த மற்றாலநுபவிக்குமுன், திருமேனியிலே நெஞ்சைவைக்கப் போகாதிறே.

௧௯. சேஷவஸ்துவுக்கு சேஷத்வம் நிரூபகமானால், நிரூபகத்தை யொழிய நிரூப்யசித்தியில்லை.

௨௦. பாரதந்திரிய ரசமறிவார்க்கு "ஸ்வாதந்திரிய மனர்த்தம்".

௨௧. ப்ராப்திபலமாய் வருமதிறே கைங்கர்யம்.

௨௨. சேஷிக்குத் தேஸ்யமானது சேஷபூதனுக்குத் தேஸ்யமாகச் சொல்லவேணுமோ.

௨௩. கரணங்களுக் கடைத்தகாரியங்கள் கொள்ளவே, ஸ்வரூப விரோதியாய்வந்தேரியானவை தன்னடையே போம்.

௨௪. குணங்களுக்குப் பிரித்து ஸ்திதியாதலுபலம்பமாத லில்லாதாப்போலே, விபூதிக்கு மவனையொழிய ஸ்திதியாதலு பலம்பமாதலில்லை.

௨௫. கர்மநிபந்தனமான வாகாரம் ஸ்ம்ருதிவிஷய மாகாதபடியான பாகம் பிறந்தால், ததீயமாயே தோற்றியெல்லா மோக்க வனுபாவ்ய மாகவிருக்கும்.

௨௬. வைஷ்ணவ சந்தானத்திலே பிறந்தார்க்கு, ஈஸ்வரமர்மங்கள் தெரியுமிறே.

௨௭. மனுஷ்ய ஜன்மத்துக்குப் பலம், பகவத் சமாஸ்ரயணமா யிருக்க, அதில்லாதார் மனுஷ்யரோயல்லர்.

௨௮. ப்ராதிகூலஸ்ய வர்ஜநமேயிறே வேண்டுவது.

௨௯. ஒருசிறையை விஸ்வஸித்து, ஆறுமாசத்துக்கு வேணும் சோரும் தண்ணீரும் யேற்றிக்கொண்டு, கடலிலே யிழியாநின்றான்; அவ்வோபாதி விஸ்வாஸமாகிலும் வேண்டாவோ, பகவத் விஷயத்தைப் பற்றுவார்களுக்கு.

௩0. ப்ராப்யத்தில் ப்ரதமாவதி, பகவத்சேஷத்வத்தளவிலே நிற்கை; சரமாவதி, பாகவத சேஷத்வளவிலே வருகை.

௩க. பிராட்டி அசோகவனிகையிலே, பிரிந்திருந்தாப்போலே யிருக்கிறது காணும், ஸ்வரூபக்யானம் பிறந்தவாறே, உடம்புடனிருக்கு மிருப்பு.

௩உ. சேஷிக்கினியதான வழியாலேயிறே; சேஷபூதனுக் கினியதாவது.

௩௩. மிதுனமாய்க் கலவாநின்ற விரண்டுதலைக்கு முள்ளரசம், சேஷசேஷிகள் பரிமாற்றத்திலு முண்டிறே.

௩ச. அவனுக்கினியதாய் அவ்வழியாலே தனக்கினியதாகையிறே, சேஷபூதனுக்குவாசி.

௩ரு. பகவத் விஷயத்திலே ஓரடிவாராநின்றவாறே, பரக்ருஹத்திநின்றும் ஸ்வக்ருஹத்திலே புகுந்தாப்போலேயிருக்கும். வேறே - சிலனைபற்றி யரிகேயிருக்கிலும், கழியப்போயிற்றதா யிருக்குமிறே.

௩சு. ப்ராப்திதேசம் நித்யசூரிகளிட்ட வழக்காயிருக்கும்.

௩எ. கர்மவஶ்யன் பிறவிக்கெல்லைகாணு நின்றோம்; அகர்மவஶ்யன் பிறவிக்கெல்லைகாண்கிறிலோம்.

௩அ. கர்மத்துக்கவதியுண்டு; அநுக்ரஹத்துக்க வதியில்லை.

௩௯. பலாபிசந்திரஹிதமாக தானதர்மத்தை யனுஷ்டித்து, எம்பெருமானை யுத்தேஶ்ய மாக்காதே, பலாபிசந்தியுக்தமாக வநுஷ்டித்துஸ்வர்க்காதி போகங்களைபற்றினல், நிலைநில்லாது.

ச0. சேஷபூதன்பற்றுவது சேஷியினுடைய திருவடிகளிறே.

சக. அவ்யக்தத்தினுடைய வ்யக்ததசையிறே, மஹானாகிறது.

சஉ. சாத்விகமாயும், ராஜசமாயும், தாமசமாயும், மூன்று வகைப்பட்டிறே அஹங்காரந்தா னிருப்பது.

ச௩. சாத்விகாஹங் காரகார்யம் ஏகாதஶேந்திரியங்கள், தாமசாஹங்காரகார்யம் ப்ருத்வியாதிபூதங்கள், இரண்டுக்கு முபகாரகமாய் நிற்கும் ராஜசாஹங்காரம்.

சச. கிட்டினாற்கு சாம்யாபத்தியிறேபலம்-

சரு. முக்தர்பஞ்ச விம்ஶதிவார்ஷகரா யிருப்பர்களிறே; நிரந்தர பகவதனுபவத்தாலே.

சசு. க்ஷுத்ரவிஷயங்களை அனுபவிக்கப்புக்கால், அவை அல்பாஸ்திரத்வாதி தோஷ துஷ்டமாகையாலே, அனுபவிக்குங் காலமும் அல்பமாயிருக்கும்.

சஎ. அநுபாவ்யவிஷயம் பரிச்சின்னமாகையாலே, காலமுமனந்த காலமாயிருக்கும்.

௪௮. மாதாபிதாக்கள் ப்ரஜைகளில் குறைவாளர் பக்கலிலேயிறே, யிரங்குவது.

௪௯. தெளிவிசும்பாகையாலே அந்நிலந்தானே சொல்லுவிக்கும்; இருள் தருமாஞாலமாகையாலே, இன்னிலமத்தை தவிர்ப்பிக்கும்.

௫௦. பகவன் நாமசங்கீர்த்தனமும் பாகவதஸஹவாசமும் சத்தயாதாரகம்.

௫௧. முன்பு முகந்தோற்றாதே நின்றானாகிலும், ஆபத்து வந்தவாறே முகங்காட்டி ரக்ஷிக்குமவனாயிற்று. அவனிப்படி யிருப்பானொருவனாகையாலே ஸ்வாராதன்.

௫௨. தான் ரக்ஷிக்குமிடத்தில், இத்தலையி லாநுகூல்யத்துக்கு ஸூசகமான அப்ரதிஷேதமேயாயிற்று வேண்டுவது.

௫௩. தேவதாந்தர ஸ்பரிச முடையாருடைய ஸ்பரிசத்துக்கு, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பாதரேணுவைக் கொண்டுபரிஹரிக்கப் பாருங்கோள்.

௫௪. பகவத் விஷயத்தில் பண்ணின அஞ்சலிமாத்ரமும் "சரண்யன் நீர்மையாலே மிக்கை."

௫௫. இங்கிருக்கும் நாளைக்கு புருஷகாரமாக முமுக்ஷுக்களுண்டு; அங்குத்தானே நித்யசூரிகளுண்டிறே.

௫௬. ஒருவன் வைஷ்ணவனாகையாவது — இது, "சர்வேஸ்வரன் ரக்ஷகன்" என்றொருவன் பக்கலிலே ஒருவார்த்தைக் கேட்டுவிட்டு.

௫௭. "கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதல்" என்றிறே யிருப்பது "ஸ்வரூபமிது" என்றறிந்தால், ஸ்வரூபானுரூபமான வ்ருத்தமும், அதுக்கு விரோதியானவற்றைக் காற்கடைகொள்ளுமதுவு மில்லையாகில், ஞானம் பிறந்ததில்லையா மித்தனையிறே. இதில்லையாகில், ஆழ்வார்கள் போனவழியி லன்வயித்திலனுமத்தனையிறே.

௫௮. நாராயண சப்தத்துக்கு உபாயத்வோப யோகியான வாத்சல்யாதிகளும், உபேயத்வோப யோகியான சேஷித்வாதி குணங்களுமர்த்தம்.

௫௯. ஸ்ருஷ்ட்யாதிகளில் சத்யசங்கல்பனாயிருக்கும், ஆஸ்ரித விரோதிகளளவில் அசத்ய சங்கல்பனாயிருக்கும்.

௬௦. ஆஸ்ரித விரோதிகளை தனக்கு விரோதிகளாகக்கொண்டு வழக்குபேசுமவன்.

௬௧. எம்பெருமானார் தர்சனஸ்தரி லெத்தனையேனுங் கல்வியில்லாத ஸ்த்ரீப்ராயரும் தேவதாந்தரங்களை அடுப்பிடுங்கல்லோ பாதியாக நினைத்திருக்கிறது.

சுஉ. "மோக்ஷபலம் சித்திக்கவேணும்" என்றிருக்கிறவர்கள், க்ஷுத்ரதே வதைகளைப் பின்செல்லார்களிறே.

சுங. "கருடத்வஜன், கருடவாஹனன்" என்று சொல்லப்படு மவனாயிற்று மோக்ஷப்ரதனாவான்.

சுச. "காரணந்துத்யேய:" என்கிற படியே ஜகத்காரண வஸ்துவேயிறே, உபாஸ்யமாவது.

சுரு. மோக்ஷப்ரதனுமாய், ஸர்வ நியந்தாவுமான ஸர்வேச்வரனுக்கு, அடி மைபுகுவதுவே, கர்தவ்யம்.

சுசு. செய்யவேண்டுவ தொன்றில்லை, அவனுடைமையை அவனுக்காகவிசை யவமையும்.

சுஎ. அவன் கொடுத்த உபகரணங்களைக்கொண்டு அப்ராப்த விஷயங்களி லே போகாதே "தந்தநீகொண்டாக்கினை" என்கிறபடியே, வகு த்த விஷயத்துக்கே சேஷமாக்கிக்கொண்டு கிட்டுகை.

சுஅ. ஏகாந்த போகத்துக்காகப் போந்தபிராட்டி, அசோக வனிகையிலே யிருந்தாப்போலே தோற்றுநின்ற தாயிற்று, ஸ்வரூபக்ஞானம் பிறந்தபின்பு, தேஹத்திலேயிருக்கிற விருப்பு.

சுகூ. திறந்துகிடந்த வாசல்தோறும் நுழைந்துதிரியும் பதார்த்தம்போலே, கர்மாநுகுணமாக தேவாதி சரீரங்கள்தோறும் ப்ரவேசித்துத் திரி யும் - ஆத்மா.

எ0. பக்திமானுக்கும் பக்தியுண்டு; ப்ரபன்னனுக்கும் பக்தியுண்டு. ருசியை யொழிய ப்ரபத்தி பண்ணக்கூடாதே.

எக. பக்திமானுடைய பக்திவைதமாய் வருமது. ப்ரபன்னனுடைய பக்தி ருசிகார்யமாயிருக்கும். பக்தி பரனுக்கு சாதனரூபமா யிருக்கும். இவனுக்கு தேஹயாத்ராசேஷமாயிருக்கும்.

எஉ. பக்திமானுக்கு பல ச்ரத்தையில்லாதபோது தவிரலாயிருக்கும். ப்ர பன்னனுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமாய் வருமதாகையாலே, யொரு காலும் தவிராதாயிருக்கும்.

எங. அவன் குண நிபந்தனமன்று அவனோட்டை சம்பந்தம், சத்தாப்ரயுக் த்தமென்கை.

எச. பகவத்விஷயத்திலோ ரடிவரநின்றவர்கள் ச்லாகநீயர்.

எரு. அத்தலையாலேவருமதொழிய தாந்தாமொன்றை யாசைப்படுகையுங் கூடபழி.

எசு. உடையவனே நங்காரியத்துக்குக் கடவன்.

எஎ. வஸ்துவுக்கு குணத்தாலேயிறே உத்கர்ஷம்; அந்தகுணதிக்ய மெங்கே யுண்டு அங்கேயிறே யேற்றம்.

௭௮. ஶேஷபூதன் ஸ்வரூபம் பெற்றடிமை செய்கை, ஶேஷிக்குப் பேறிறே.

௭௯. ஸ்வநிகர்ஷம் சொல்லுகை க்ஞானகார்யம்; "ஈஶ்வரோஹம்" என்றிருக்கை அக்ஞானகார்யம்.

௮௦. தீர்த்தங்களிலே வர்த்திக்கிற சத்வங்களுக் குபாபம்போகிறதில்லையிறே, க்ஞான மில்லாமையாலே.

௮௧. அனுஷ்டானம் சாதனமாகாது.

௮௨. நிஷித்தாசரணம் நமக்கு ரக்ஷகமன்று.

௮௩. விஹிதாசரணமும் நமக்கு ரக்ஷகமன்று.

௮௪. திருவடிகளில் கைங்கர்யமே யாத்ராயாகப் பெறவேணுமென்று, வாக்யசேஷமாய் கிடக்கிறது.

௮௫. நூராயிரம் வரியெழுதிக் கிடந்தாலும் அவற்றில் போகாதே தாத்பர்யத்தை க்ரஹித்திருக்குமவர்கள் "மாதவன் பேர்சொல்லுவதே யோத்தின் சுருக்கு" என்றிருக்குமவர்கள்.

௮௬. த்வரித்திலராகில் அவன் வைலக்ஷண்யத்தில் க்யானமில்லையாகக் கடவது, இங்கே கால்பாவிற்றாகில் சம்சாரத்தில் தண்மை யில்க்யானமில்லையாக கடவது.

௮௭. ஈஶ்வரனைப்பற்றின ஆற்றத்தாலே உபாயாந்தரங்களை நெகிழுகையொழிய நாஸ்திக்யத்தாலே விடுமன்று; அது விஷயாந்தர ப்ரரவண்ய ஹேது.

௮௮. களவு வெளிப்படுகையிறே ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையாவது.

௮௯. பரத்வம்போலே வேதம். அவதாரம்போலே யிதிஹாஸ புராணங்கள், அர்ச்சாவதாரம்போலே திருவாய்மொழி.

௯௦. கிண்ணகத்தி லிழிவார் தேசிகரைக் கைப்பிடித்துக்கொண் டிழியுமாப்போலே, பெரியபெருமாளை அனுபவிக்கும்போது பிராட்டியைக் கூடக் கொண்டாயிற்றிழிவது.

௯௧. சேஷத்வ மாத்மாவுக்கு ஸ்வரூபமானால், தேஹமதுக்கு விரோதியாய் நிற்கும் நிலைகுலைந்தது.

௯௨. சேஷவஸ்துவின் வ்யாபாரமடைய சேஷிதனக் கடிமையாக நினைத்திருக்கிறபடி.

௯௩. அவதாரகாலத்தி லுதவாதார்க்கு மிழக்கவேண்டாதபடியிறே கோயில்களிலேவந்து கண்வளர்ந் தருளுகிறது.

௯௪. உகந்தருளின நிலங்களிலே மெய்யே ப்ரதிபத்தி விளைந்தார்க்கு, அங்குள்ளவை யெல்லா முத்தேஶ்யமாய் தோற்றுமிறே.

௯௫. அப்ராக்ருத ஸமஸ்தானத்தை யிதரச ஜாதியமாக்காநிற்பது, தன் ஜன்மத்தை அனுசந்தித்தாருடைய ஜன்மங்கள் போம்படியா யிருப்பது.

௯௬. ஒரு ப்ரயோஜனத்துக்காக போவார்க்கன்றோ அதுகொண்டு மீளவ வது; தன்னையே ப்ரயோஜனமாக பற்றிப்போவார்க்கு மீள வி குண்டோ; இப்படியேயிறே பகவத் ப்ராவண்யமுடையார்படி.

௯௭. அனந்த சாயித்வம் சர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷண மாகையாலே ச வாதிகனே சரண்யனென்கிறது.

௯௮. ஆசார்யன் வார்த்தைகேட்டு தரித்தல், அவனபிமானத்தாலே த த்தலொழிய வேறொன்றில்லை.

௯௯. ஸ்வரூபாந்தர் கதையான க்ருபைக் கழிவில்லையிறே. அது சத்தை யுள்ளதனையும் விலை செல்லுமிறே.

௧00. நம்மாசாரியர்கள் வ்யாபக மந்திரங்கள் மூன்றிலும், த்வயத்தையே யாதரிப்பர்கள்.

௧0௧. பிரிவில் குணானுசந்தானம்பண்ணி தரிக்கலாம்; அவன் சன்னிதியி லவ னையொழிய அனைக்ஷணமு முகம்மாறியிருக்கு மதுக்கு மேற்பட முடிவில்லை.

௧0௨. தந்தாமை யறியாவிட்டாலாப் தர்வாயிலே கேட்டறியவேணும்.

௧0௩. ஆர்த்தனுக்கன்றோ பல ப்ராப்தியுள்ளது.

௧0௪. புருஷகார முன்னாகத் தன்பக்கல் புகுந்தார்க்குத் தன்திருவுள் மிறங்கும்.

௧0௫. ஸம்சாரி முக்தனானவனுடைய லீலோபகரணமும், போகோபக ணமும், சமமாய் தோற்றக்கடவது. ஆகாந்தரமான ஸ்ம்ருதியி லேயே, ததீயத்வாகாரத்தாலே நித்ய விபூதியோடொக்கத் தே ற்றுமத்தனை.

௧0௬. ஸ்வரூபம் விசதமானால் "நான்" என்னவுமாய் "அடியேன்" எ னவுமாய்க் காணுமிருப்பது.

௧0௭. அபிமத விஷயத்தைப் பிரிந்தால், கண்டதெல்லா மதுவாய் தோற் மிறே.

௧0௮. சேஷி யொருவனானால் சேஷவஸ்துக்களெல்லா மொரு மிடராயி க்குமிறே; ஒருவனுக்குப் பலவடிமை யுண்டானால் தங்களிலெ லாரு மொத்திருப்பர்களிறே க்ருதசங்கேதிகளாய்.

௧0௯. தன்னையொழிந்த வஸ்துக்க ளெல்லாவற்றுக்கும் கோடி விகாரத்தை ப்பண்ணி, அவிக்ருதனா யிருப்பா னொருவனிறே ஈஶ்வரன்.

௧௧0. வஸ்து சத்பாவங்கொள்ளும்போது விஸேஷணம் வ்யாவர்த்தகம யல்ல திராது, ஒன்றுக்கொன்று விசேஷணமாம்போது அன்னி யோகவ்ய வச்சேதம்பண்ணிக் கொண்டல்லது விஸேஷணமா மாட்டாது.

௧௧௧. முக்தனுக்கு லீலாவிபூதி ததீயத்வாகாரத்தாலே யுத்தேஸ்யமாக நின்றதிறே.

௧௧௨. உறங்கினுலுங்கில் பரரக்ஷணத்துக் கூடலாயிருக்கும்; உணர்ந்திருந்தானுகிலு மப்படியே.

௧௧௩. சக்ரவர்த்தித் திருமகனுக்கு வில்லுங்கைவந்திருக்கு மாப்போலேயாயிற்று, க்ருஷ்ணனுக்குக் குழல்கைவந்திருக்கும்படி.

௧௧௪. கனத்தாருண்டாயிருக்கச் செய்தேயும், பாரமில்லையிறே அஹங்கார ஸ்பரிஸமுடையா ரில்லாமையாலே.

௧௧௫. சேஷிக்குபாயபாவம் ஸ்வரூபாநு பந்தியானபின்பு சேஷபூதனுக்கும் ப்ராவண்யம் ஸ்வரூபாநு பந்தியாகக்கடவதிறே.

௧௧௬. ப்ராப்தவிஷய ப்ராவண்யம் ஸ்வரூபமாகையாலே அவத்யகரமன்று ஸ்லாக்யமா மித்தனை.

௧௧௭. ஜீவபரர்களிருவருக்கு மபஹதபாப்மத்வாதிக ளுண்டாயிருக்கச்செய்தே ஜீவாத்மாவுக்கு ஹேயமுண்டாய் பகவ தநுக்ரஹத்தாலே கழியும், பரமாத்மாஹேய சம்சர்க்கா அநர்ஹனுயே யிருக்கும்.

௧௧௮. நீர்மைக்கெல்லையான திருமலை ஆஸ்ரயணீய ஸ்தலம், மேன்மைக்கெல்லையான பரமபதமநுபவ ஸ்தானம்.

௧௧௯. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநு சந்தானம்பண்ணிறல், போய்புக்கல்லது நிற்கவொண்ணுது.

௧௨௰. நம்முதலிகள் குருபரம்பரா முன்னுக த்வயானுசந்தானம் பண்ணுகிறது.

௧௨௧. சிஷ்யனுக் காசார்யானு வர்த்தனம் பண்ணலாவது அவன் தேஹ பரிக்ரஹம் பண்ணியிருக்கிற நாளிலேயிறே, பின்புள்ள தெல்லாம் பகவதனுபவத்திலே அன்வயிக்குமிறே யிவருக்கும்.

௧௨௨. தேஹாத்மாபி மானியானபோது தேஹத்திலே அஹம்புத்தியைப்பண்ணும், "தேஹாத்த்வ்யதிரிக்த மொன்றுண்டு" என்றறிந்தபோது ஆத்மாவிலே அஹம்புத்தியைப்பண்ணும் தன்னை பகவத்சேஷபூதனுக அநுசந்தித்தபோது தன்னை ததீயசேஷத்வ பர்யந்தமாக அனுசந்திக்கக்கடவன்.

௧௨௩. திவ்யமங்களவிக்ரஹமும், விக்ரஹ குணங்களும், திவ்யாத்மஸ்வ ரூபமும், ஸ்வரூபகுணங்களும் நித்யமுக்தர்க்கு ப்ராப்ய மானுப்போலே, முமுக்ஷுவாய்ப்ர பன்னனுன விவ்வதிகாரிக்கு த்வயசரீரமே ப்ராப்யமா யிருக்குமிறே.

௧௨௪. பகவத்விஷயத்திலே நெஞ்சைவைத் தனுபவிக்கையே யாத்ரையானவனுக்கு அன்யபரனுனவ னுப்பாகப் போருமோ.

௧௨௫. ஆகிஞ்சின்யமும் ஸ்வரூபமும் ப்ரபத்திக்கு பரிகரமிறே.

கஉசு. இருவருமான சேர்த்தியிலேயிறே இவனடிமைசெய்வது, அச்சேர்த்தி தன்னையேயிறே யிவனுபாயமாகப் பற்றுகிறதும். இத்தால் சொ லிழ்றுகிறது நித்யப்ராப்யத்வமிறே. நித்யாபூர்வ விஷயமிறே நித்யப்ராப்யமாக வல்லது.

கஉஎ. இவனுடைய வபராதகாலம் பார்த்திருந்து ப்ரதிபத்தி பண்ணுகைக் கவனுக் கவசரமில்லை, அவள்கூட விருக்கையாலே.

கஉஅ. வெறுமையும், ஸ்வரூபமும், இரண்டும் ப்ரபத்திக்கு பரிகரமிறே.

கஉகூ. அதிகாரிஸ்வ ரூபமாவது அநந்யகதித்வமும், ப்ராப்யருசியும், ஸ்வரூப ப்ரகாசமும் என்கிற விவையிறே.

கநO. த்ரிவித சேதநனையும் மாத்ருத்வ ப்ரயுக்தமாக நியமிக்கும். ஈஸ்வரனை ப்ரணயித்வ நிபந்தனமாக நியமிக்கும்.

கநக. இவர்களை தனித்தனியே பற்றினர்க்கு ஸ்வரூப விநாசமிறே, "மிது நமேயுத்தேஸ்யம்" என்றிருப்பார்க்கு ஸ்வரூபோஜ்ஜீவனமிறே.

கநஉ. "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்றதிறே நிலைநின்ற ஸ்வ ரூபம். அநுவர்த்தமானதிறே பரமார்த்தமாவது.

கநந. ஈஸ்வரனை யொழிந்தா ரடங்கலும், தாங்களுளரானபோது ரக்ஷக ராக வபிமானித்து, ஆபத்துவந்தவாறே இவர்களைக் காட்டிக்கொ டுத்து தந்தாமைக்கொண்டு தப்புவர்கள்.

கநச. சர்வாவஸ்தையிலும் தன்னையழிய மாறியாயினு மாஸ்ரிதரக்ஷணம் பண்ணுவான் சர்வேஸ்வரன்.

கநரு. ஆஸ்ரிதன் தப்பினலும் தான் பொருத்து ரக்ஷிப்பன்.

கநசு. பெருமாளை யொழிய செல்லாமைபிறந்து வ்யதிரேகத்தில் முடிந்த சக்ரவர்த்திநிலை - சிநேஹம்.

கநஎ. "நில்" என்ன "குருஷ்வ" என்னும்படியாய் முறையறிந்து பற்றின விளையபெருமாள்நிலை - பக்தி.

கநஅ. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணமொரு தலையானல்தான் தன்னைப் பேணுதேநோக்கு மாஸ்ச்சர்ய பூதனுனவனுடைய திருவடிகளை யல்லது பற்றுவரோ.

கநகூ. ஸ்ரவண மனனங்கள்தான் தரிசனசமா னுகாரத்தளவும் சென்று நிற்குமிறே.

கசO. த்யான பரராயிருப்பார், த்யேயவஸ்துவைவிட்டுப் புரம்பே போவ ரோ?

கசக. தாமசபுருஷர்களோட்டை சஹவாசம் சர்வேஸ்வரனுக்குத்யாகஹே து, சத்வநிஷ்டரோட்டை சஹவாசமவனுக்கு ஸ்வீகாரஹேது.

கசஉ. நித்யசூரிகள் திரளிலே அவ்வோலக்கத்தின் நடுவேயிருக்கு மிருப் பைக் காண்கையிறே, ப்ராப்ய மாகிறது.

